425aKa
N22

175860



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# தாயுமானசுவாமிகள் பாடல்.

மருத்துவசிரோமணி

ம. சு. முருகேச முதலியார்.

சென்னை

கணேச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1922.

விலை ரூ. 1-4-0.

தமிழ்நாடு ஆவண. காப்பகம்
சென்னை-600 008
நூலகம்

175860
594.81108
3010
A25x1C00



சிவமயம்.

ஸ்ரீ

# தாயுமானசுவாமிகள்

## சரித்திரச்சுருக்கம்.

அமிர்தையொத்த அன்னைப் பெருக்கும் இன்தமிழ் நாட்டின் உட்பிரிவுகளிலொன்றில் ஏற்றம்பெற்றவையென ஒளிரும் சோழமண்டலம் திருமறைக்காட்டின்கண் சற்றேறக்குறைய 300 ஆண்டுகளுக்குமுன் திரிசிரபுரத்தை ஆட்சி மண்டலத் தலைநகராகக்கொண்டாண்ட விஜய ரகுநாத சொக்கலிங்க நாயகரிடம் முக்கிய அரசுரிமைக் காரியங்களிலொன்றையேற்று மிக்க திறமையுடன் நடாத்திய கேடிலியப்பபிள்ளை தெய்வபக்தியிலும் கல்வி கேள்விகளிலும் மிகச் சிறந்தவர்.

இவர், தமக்குரிய ஒரே புத்திரனாகிய சிவச்சிதம்பரப்பிள்ளையென்பவரை, புத்திரப்பேறில்லாத் தன் தமையன் வேதாரண்யப்பிள்ளைக்குக் கொடுத்துவிட்டுத் தமக்கோர் புத்திரனுண்டாகுமாறு திரிசிரபுரமேவிய தாயுமானேசுரனைப் பிரார்த்தித்துவந்தனர். கடவுட்டிருவருளால் ஒரு புத்திரனும் பிறந்தனன். அப்பிள்ளைக்குத் தாம் வழிபடுங்கடவுட் பெயரையே சூட்டினர். இது காரணம்பற்றி இவரது இரண்டாம் புத்திரன் "தாயுமானவன்" எனப்பட்டான்.

இவர் இளமையிலேயே தென்மொழி வடமொழி இலக்கிய இலக்கண நூற்களையும், சைவசார்பான பற்பல நூற்களையும் ஐயந்திரிபறக் கற்று, கற்றவளவில் நிற்காமல் அநுபவபூர்வகமாயும் உலகோர் நற்கதியடையும் வண்ணமும் நடத்திக்காட்டிய அறிஞராக விளங்கினர்.

தேகத்தின்பயன் திடம்பட ஈசனைக் காண்பதற்கேயென்னும் சத்தியமொழியை இவர், கைப்பற்றியவராதலால், திரிபதார்த்தங்களின் உண்மை இலக்கணங்களை ஐயந்திரிபற

எடுத்துக்காட்டும் ஞானசாரியனை அடையவேண்டுமென்னும் பேரவல்கொண்டிருந்தனர். இவரது அதிதீவிர பக்குவத்திற்கேற்பத் திருமூலர் மரபில்வந்த மௌனதேசிகரால் ஞானோபதேசம்பெற்று தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் நிஷ்டைகூடிவந்தனர். இவரது அநுபவ ஞானத்தாலும் உபதேசக்கிரமத்தாலும் வைதிக சைவ சுத்தாத்வித சித்தாந்தமே உண்மை நிலையென [illegible]ர்ந்தனர். இக்கொள்கை இவரது நூலின்வாயிலாக நன்கறியலாம்.

இதுநிற்க, இவர் தந்தை உயிர்துறந்தனர். அரசன் வேண்டுகோளால் தந்தந்தையின் தொழிலை மேற்கொள்ள நேரிட்டது. ஆயினும், சிறிதுகாலத்திற்குள் இவரது பெருமையையுணர்ந்த அரசன், இவரை ஊழியத்தினின்றும் நீக்கி, நிஷ்டாபரராக இருப்பதற்குரிய உதவியைப் புரிந்துவந்தனர். அரசனும் சிவபதமடைந்தனர். அரசியால் இவர் அரசாட்சித் தலைவராகவிருக்க வேண்டப்பட்டும் அதனைப் பொருட்படுத்தாது அந்நகரைவிட்டு விலகித் தேவையம்பதியில் தங்கினரெனத் தெரியவருகிறது.

இத்தருவாயில் தன் தாயாதிகள் இவரை மணம்புரியும்படி வற்புறுத்தி மணத்தை முடித்தனர். கனகசபாபதி என்கிற ஒரு புத்திரனைப்பெற்று இவர் மனைவியார் சிவபதமடைந்தனர்.

இவர், தன் ஞானசாரியராகிய மௌனகுருவின் தரிசனம் மறுபடியும் கிடைக்கப்பெற்று துறவுபூண்டு பற்பல ஸ்தலங்களுக்குச் சென்று தரிசித்து இராமநாதபுரம் அடைந்து ஏகாந்தத்தன்மையின் இன்மையையடைந்து அகண்ட பரிபூரணாகார சிற்சுகோதய சின்மய பிரகாசராய் விளங்கிவந்து, சாலிவாகன சகாப்தம் கருஅக சுபகிருதுவருஷம் தைமாதம் திங்கட்கிழமை விசாகநட்சத்திரத்தில் சிவத்துடன் இரண்டறக்கலந்தனர்.

சிவமயம்.

## நூலினுட்பிரிவு.


அகவல் ... 221
அகிலாண்டநாயகி ... 150
ஆகாதோவென்கண்ணி ... 211
ஆகாரபுவனம்—சிதம்பர ரகசியம் ... 69
ஆக்குவை ... 144
ஆசையெனும் ... 106
ஆரணம் ... 96
ஆனந்தக்களிப்பு ... 217
ஆனந்தமானபரம் ... 34
இல்லையோவென்கண்ணி 213
உடல்பொய்யுறவு ... 127
எங்குநிறைகின்றபொருள் 46
எடுத்ததேகம் ... 141

என்னாட்கண்ணி. 190

அடியார்வணக்கம் ... 192
அருளியல்பு ... 193
அறிஞருரை ... 204
அன்பர்நெறி ... 203
அன்புநிலைமை ... 202
ஆனந்தவியல்பு ... 200
குருமரபின்வணக்கம் ... 191
தத்துவமுறைமை ... 195
தன்னுண்மை ... 197
தெய்வவணக்கம் ... 190
நிலைபிரிந்தோர் கூடற்குபாயம் ... 207
நிற்குநிலை ... 205
பொருளியல்பு ... 199
மாதரைப்பழித்தல் ... 194
யாக்கையைப்பழித்தல். 193

எனக்கெனச்செயல் ... 112
செற்றவந்நிலை ... 139
கல்லாலின் ... 154
கருணாகரக்கடவுள் ... 23
கற்புறுசிந்தை ... 144
காடுங்கரையும் ... 141
காண்பேனோவென்கண்ணி. 208
சச்சிதானந்தசிவம் ... 52
சித்தர்கணம் ... 28
சிவன்செயல் ... 102
சிற்சுகோதயவிலாசம் ... 64
சின்மயானந்தகுரு ... 12
சுகவாரி ... 39
சொல்லற்கரிய ... 99
தந்தைதாய் ... 151
தன்னை ... 141
தன்னையொருவர் ... 104
திடமுறவே ... 142
திருவருள்விலாசப் பரசிவ வணக்கம் ... 1
தேசோமயானந்தம் ... 58
தேன்முகம் ... 78
நல்லறிவேயென்கண்ணி... 214
நினைவொன்று ... 83
நின்றநிலை ... 216
பராபரக்கண்ணி ... 158
பரிபூரணானந்தம் ... 3
பலவகைக்கண்ணி ... 214
பன்மாலை ... 80
பாடுகின்றபனுவல் ... 217
பாயப்புலி ... 119
பெரியநாயகிவிருத்தம் ... 150
பெற்றவட்கே ... 152
பைங்கிளிக்கண்ணி ... 186
பொருள்வணக்கம் ... 8
பொன்னைமாதரை ... 85
மண்டலத்தின் ... 117
மலைவளர்காதலி ... 145
முகமெலாம் ... 142
மௌனகுருவணக்கம் ... 18
வண்ணம் ... 222
வம்பனேன் ... 101
வேண்டாவோவென் கண்ணி. ... 213



தாயுமானசுவாமிகள்.

23 MAR 1922

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தாயுமானசுவாமிகள் பாடல்.

## திருவருள் விலாசப் பரசிவ வணக்கம்.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அங்கிங் கெனாதபடி எங்கும் ப்ரகாசமாய்,
ஆனந்த பூர்த்தி ஆகி,
அருளொடு நிறைந்ததெது? தன்அருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி எல்லாம்
தங்கும்படிக் கிச்சைவைத்து, உயிர்க்குயிராய்த்
தழைத்ததெது? மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது? சமயகோடிகளெலாம்
தந்தெய்வம் எந்தெய்வம் என்று
எங்குந்தொடர்ந்து எதிர்வழக்கிடவும் நின்றதெது?
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளதெது? மேல்
கங்குல்பகல் அறநின்ற எல்லை உளதெது? அது
கருத்திற்கு இசைந்ததுவே
கண்டன எலாம்; மோன உருவெளியதாகவுங்
கருதி, அஞ்சலி செய்குவாம்.

ஊர் அனந்தம்; பெற்றபேர் அனந்தம்; சுற்றும்
உறவனந்தம்; வினையினால்

உடல் அனந்தம்; செயும் வினை அனந்தம்; கருத்
    தோ அனந்தம்; பெற்றபேர்
சீர் அனந்தம்; சொர்க்கநரகமும் அனந்தம்; நற்
    றெய்வமும் அனந்தபேதம்;
திகழ்கின்ற சமயமும் அனந்தம்; அதனால்; ஞான
    சிற்சத்தியால் உணர்ந்து,
கார் அனந்தங்கோடி வருஷித்தது என, அன்பர்
    கண்ணும் விண்ணுந் தேக்கவே,
கருதரிய ஆனந்த மழைபொழியு முகிலை, நம்
    கடவுளைத் துரியவடிவைப்
பேர் அனந்தம்பேசி மறை அனந்தம் சொலும்,
    பெரிய மௌனத்தின் வைப்பைப்
பேச அரும் அனந்தபத ஞான ஆனந்தமாம்
    பெரியபொருளைப் பணிகுவாம், (4)

அத்துவித வத்துவைச் சொற்பிரகாசத் தனியை,
    அருமறைகள் முரசு அறையவே
அறிவினுக் கறிவாகி ஆனந்தமயமான
    ஆதியை, அநாதி ஏக
தத்துவ சொரூபத்தை, மதசம்மதம்பெறாச்
    சாலம்ப ரகிதமான
சாசுவத புட்கல நிராலம்ப ஆலம்ப
    சாந்தபத வ்யோம நிலையை,
நித்தம் நின்மலசகிதம் நிஷ்ப்ரபஞ் சப்பொருளை
    நிர்விஷய சுத்தமான
நிர்விகாரத்தைத் தடத்தமாய் நின்றொளிர்
    நிரஞ்சன நிராமயத்தைச்
சித்தம் அறியாதபடி சித்தத்தில் நின்றிலகு
    திவ்ய தேஜோ மயத்தைச்
சிற்பர வெளிக்குள்வளர் தற்பரமதான பர
    தேவதையை அஞ்சலி செய்வாம்.

9

# பரிபூரணானந்தம்.

வாசா கயிங்கரியம் அன்றி ஒருசாதனம்
    மனோவாயு, நிற்கும் வண்ணம்
வாலாய மாகவும் பழகி அறியேன்; துறவு
    மார்க்கத்தின் இச்சைபோல
நேசானுசாரியாய் விவகரிப்பேன்; அந்த
    நினைவையு மறந்தபோது
நித்திரைகொள்வேன்; தேகம் நீங்கும்என எண்ணிலோ
    நெஞ்சந் துடித் தயருவேன்;
பேசாத ஆனந்த நிட்டைக்கும் அறிவிலாப்
    பேதைக்கும் வெகுதூரமே;
பேய்க்குணம் அறிந்திந்த நாய்க்குமொரு வழிபெரிய
    பேரின்ப நிட்டை அருள்வாய்!
பாசஅடவிக்குளே செல்லாதவர்க்கருள்
    பழுத்தொழுகு தேவதருவே!
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
    பரிபூரணானந்தமே! (1)

தெரிவாக வூர்வன நடப்பன பறப்பன
    செயற்கொண் டிருப்பனமுதல்,
தேகங்கள் அத்தனையும் மோகங்கொள் பௌதிகம்
    சென்மித்த ஆங்கிறக்கும்
விரிவாய பூதங்கள் ஒன்றோடொன்றாய் அழியும்;
    மேற்கண்ட சேடம் அதுவே;
வெறுவெளி நிராலம்பம் நிறைசூன்யம் உபசாந்த
    வேதவேதாந்த ஞானம்;
பிரியாத பேரொளி பிறக்கின்ற வருள்; அருள்
    பெற்றோர்கள் பெற்ற பெருமை;
பிறவாமை; என்றைக்கும் இறவாமை யாய்வந்து
    பேசாமை யாகும் எனவே,

பரிவாய் எனக்குநீ அறிவிக்க வந்ததே
பரிபாக காலம் அலவோ?
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே!

ஆராயும் வேளையில் பிரமாதி ஆனாலும்
ஐய ஒரு செயலும் இல்லை;
அமைதியொடு பேசாத பெருமைபெறு குணசந்த்ர
ஆம் என இருந்தபேரும்
நேராக ஒருகோடும் ஒருவேளை வரவந்து
நிறைவொன்றும் இல்லாயலே,
கெட்டுயிர்த்துத் தட்டழிந் தளறுவார் வசன
நிர்வாகர் என்றபேரும்;
பூராயமாய் ஒன்று பேசுமிடம் ஒன்றைப்
புலம்புவார்; சிவராத்திரிப்
போது துயிலோம்என்ற விரதியரும் அறிதுயில்
போலே இருந்து துயில்வார்;
பார்ஆதி தனிலுள்ள செயல்எலாம் முடிவிலே
பார்க்கின் நின்செயல் அல்லவோ?
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

அண்டபகி ரண்டமும் மாயா விகாரமே;
அம்மாயை இல்லாமையே
ஆமெனவும், அறிவும் உண்டு; அப்பாலும் அறிகின்ற
அறிவினை அறிந்து பார்க்கின்,
எண்திசை விளக்குமொரு தெய்வஅருள் அல்லாமல்,
இல்லை எனும் நினைவும் உண்டு; இங்கு
யான்என தறத்துரிய நிறைவாகி நிற்பதே
இன்பமெனும் அன்பும் உண்டு;
கண்டனவெலாம் அல்லவென்று கண்டனைசெய்து,
கருவி கரணங்கள் ஓய்



கண்மூடி ஒருகணம் இருக்கவென்றால் பாழ்த்த
கன்மங்கள் போராடுதே;
பண்டையுள கன்மமே கர்த்தா எனும் பெயர்ப்
பசுதம்கான் இச்சிப்பனே!
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே! (4)

சந்ததமும் எனதுசெயல், நினதுசெயல், யானெனும்
தன்மை நினையன்றி இல்லாத்
தன்மையால், வேறலேன்; வேதாந்த சித்தாந்த
சமரச சுபாவம் இதுவே;
இந்தநிலை தெளியநான் தெக்குருகி வாடிய
இயற்கைதிரு வுளம் அறியுமே!
இந்நிலையிலே சற்று இருக்கவென்றால், மடமை
இகல்சத்ரு வாகவந்து
சிந்தைகுடி கொள்ளுதே! மலமாயை கன்மம்
திரும்புமோ? தொடுவழக்காய்ச்
சென்மம்வருமோ எனவும் யோசிக்குதே மனது,
சிரத்தை எனும் வாளுமுதவிப்
பந்தமற மெய்ஞ்ஞான தீரமுந் தந்து, எனைப்
பாதுகாத்தருள் செய்குவாய்!
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே! (5)

பூதலயம் ஆகின்ற மாயைமுதல் என்பர் சிலர்;
பொறிபுலன் அடக்குமிடமே
பொருள் என்பர்சிலர்; சாணமுடிவென்பர்சிலர்; குணம்
போனவிடம் என்பர் சிலபேர்;
நாதவடிவென்பர்சிலர்; விந்துமய மென்பர் சிலர்;
நட்டநடுவே இருந்த
நாமென்பர் சிலர்; உருவமாமென்பர் சிலர்; கருதி
நாடில் அருவென்பர் சிலபேர்;

பேதமற உயிர்கெட்ட நிலைபம் என்றிடுவர் சிலர்;
பேசின் அருளென்பர் சிலபேர்;
பின்னு முன்னுங்கெட்ட சூனியமதென்பர் சிலர்;
பிறவுமே மொழிவர்; இவையால்,
பரதாசமாய் மனது சஞ்சலப் படுமல்லால்,
பரமசுக நிட்டை பெறுமோ?
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே! (6)

அந்தகாரத்தை ஓர் அகமாக்கி, மின்போல் என்
அறிவைச் சுருக்கினவர் ஆர்?
அவ்வறிவு தானுமே பற்றினது பற்றாய்
அழுந்தவுந் தலைமீதிலே
சொந்தமாய் எழுதப் படித்தது ஆர்? மெய்ஞ்ஞான
சுகநிஷ்டை சேராமலே
சோற்றுத் துருத்தியைச் சதமெனவும் உண்டுண்டு
தூங்கவைத்தவர் ஆர்கொலோ?
தந்தைதாய் முதலான அகிலப்பிரபஞ்சந்
தனைத்தந்தது எனது ஆசையோ?
தன்னையே நோவனோ! பிறரையே நோவனோ.
தற்கால மதைநோவனோ!
பந்தமானது தந்த வினையையே நோவனோ!
பரமார்த்தம் ஏதும் அறியேன்!
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே!

வாராததெலாம் ஒழிய, வருவன வெலாம் எய்த,
மனது சாட்சியதாகவே,
மருவநிலை தந்ததும், வேதாந்த சித்தாந்த
மரபு சமரசமாகவே
பூராய மாயுணர வகைமது தந்ததும்,
பொய்யுடலை நிலையென்றெனப்
போதநெறி தந்ததும், சாசுவத ஆனந்த
போகமே வீடென்னவே
நீரான மாயுருக உள்ளன்பு தந்ததும்,
நின்னதரு ளின்னு மின்னும்
நின்னையே துணையென்ற என்னையே காக்கவொரு
நினைவுசற் றுண்டாகிலோ,
பாராதி அறியாத மோனமே! இடைவிடாப்
பற்றாக நிற்க அருள்வாய்!
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே! (8)

ஆழி கரையின்றி நிற்கவிலையோ! கொடிய
ஆலமமு தாகவிலையோ!
அக்கடலின் மீதுவட வனல்நிற்க வில்லையோ!
அந்தரத் தகிலகோடி
தாழாமல் நிலைநிற்க வில்லையோ! மேருவும்
தனுவாக வளையவிலையோ!
சத்த மேகங்களும் வச்ரதா ரணையிற்
சஞ்சரித் திடவில்லையோ!
வாழாது வாழவே இராமனடி யாற்சிலையும்
மடமங்கை யாகவிலையோ!
மணிமந்த்ரம் ஆதியால் வேண்டுசித்திகள் உலக
மார்க்கத்தில் வைக்கவிலையோ!
பாழான என்மனங் குவியவொரு தந்திரம்
பண்ணுவ துனக் கருமையோ!
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே! (9)

ஆசைக்கோ ரளவில்லை, அகிலமெல் லாங்கட்டி
ஆளினும், கடன்மீதிலே
ஆணைசெல வேநினைவர்; அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்தபெரும்

நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்;
    நெடுநா ளிருந்தபேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
    நெஞ்சுபுண் ணாவர்; எல்லாம்
யோசிக்கும் வேளையில், பசிதீர உண்பதும்
    உறங்குவது மாகமுடியும்;
உள்ளதே போதும் நான்நானெனக் குளறியே
    ஒன்றைவிட் டொன்றுபற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல். மனதற்ற
    பரிசுத்த நிலையை அருள்வாய்!
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
    பரிபூர ணானந்தமே! 10

---

## பொருள் வணக்கம்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நித்தியமாய், நிர்மலமாய், நிட்களமாய், நிராமயமாய்,
    நிறைவாய், நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரியநிறை
    சுடராய், எல்லாம்
வைத்திருந்த தாரகமாய், ஆனந்த மயமாகி,
    மனவாக் கெட்டாச்
சித்துருவாய், நின்றவொன்றைச் சுகாரம்பப் பெருவெளியைச
    சிந்தை செய்வாம். (1)

யாதுமன நினையும் அந்த நினைவுக்கு நினைவாகி,
    யாதின் பாலும்
பேதமறநின்று உயிருக் குயிராகி அன்பருக்கே
    பேரா னந்தக்
கோதிலமு தூற்றரும்பிக் குணங்குறியொன் றறத்தன்னைக்
    கொடுத்துக் காட்டும்,



தீதில்பரா பரமான் சித்தாந்தப் பேரொளியைச்,
    சிந்தை செய்வாம். (2)

பெருவெளியாய், ஐம்பூதம் பிறப்பிடமாய்ப், பேசாத
    பெரிய மோனம்
வருமிடமாய், மனமாதிக் கெட்டாத பேரின்ப
    மயமாய், ஞானக்
குருவருளால் காட்டிடவும் அன்பனூற்கோத் தறிவாய்க்
    கொண்டப் பாலும்
தெரிவரிதாய், கலந்ததெந்தப்பொருள்? அந்தப்பொருளினையா
    சிந்தை செய்வாம். (3)

இகபரமும் உயிர்க்குயிரை, யான்எனதற் றவர்உறவை,
    எந்த நாளும்
சுகபரிபூ ரணமான நிராலம்ப கோசரத்தைத்,
    துரிய வாழ்வை,
அகம்கிழ வருந்தேனை, முக்கனியைக், கற்கண்டை,
    அமிர்தை, நாடி
மொகுமொகென இருவிழிநீர் முத்திறைப்பக், கரமலர்கள்
    முகிழ்த்து நிற்பாம். (4

சாதிகுலம், பிறப்பிறப்புப், பந்தமுத்தி, அருஉருவத்
    தன்மை, நாமம்,
ஏதுமின்றி, எப்பொருட்கும் எவ்விடத்தும் பிரிவறநின்
    றியக்கஞ் செய்யும்
சோதியை, மாத் தூவெளியை, மனதவிழ நிறைவான
    துரியவாழ்வைத்;
தீதில்பர மாம்பொருளைத், திருவருளை நினைவாகச்
    சிந்தை செய்வாம். (5)

இந்திரசா லங்கனவு கானலின் நீரென உலகம்
    எமக்குத் தோன்றச்,

சந்ததமுஞ் சிற்பரத்தால் அழியாத தற்பரத்தைச்
சார்ந்து வாழ்க!
புந்திமகிழ் உறநாளுந் தடையறஆ னந்தவெள்ளம்
பொலிக வென்றே
வந்தருளும் குருமௌனி மலர்த்தாளை அநுதினமும்
வழுத்தல் செய்வாம். (6)

பொருளாகக் கண்டபொருள் எவைக்கும்முதற் பொருளாகிப்,
போதமாகித்,
தெருளாகிக், கருதுமன்பர் மிடிதீரப் பருகவந்த
செழுந்தே னாகி,
அருளானோர்க் ககம்புறமென் றன்னாத பூரணா
னந்த மாகி,
இருள்தீர விளங்குபொரு ளியாதந்தப் பொருளினையாம்
இறைஞ்சி நிற்பாம். (7)

அருமறையின் சிரப்பொருளாய், விண்ணவர்மா முனிவர்சித்த
ராதி யானோர்
தெரிவரிய பூரணமாய்க், காரணங்கற் பனைகடந்த
செல்வ மாகிக்,
கருதரிய மலரின்மணம் எள்ளிலெண்ணெ யுடலுயிர்போல்
கலந்தெந் நாளும்
துரியவடி வாயிருந்த பெரியபொரு ளியாததனைத்
தொழுதல் செய்வாம். (8)

விண்ணாதி பூதமெல்லாம் தன்னகத்தி லடக்கி, வெறு
வெளியாய், ஞானக்
கண்ணாகக் கண்டஅன்பர் கண்ணூடே ஆனந்தக்
கடலாய், வேறொன்று
எண்ணாத படிக்கிரங்கித் தானாகச் செய்தருளும்
இறையே! உன்றன்



தண்ணாருஞ் சாந்தவருள் தனைநினைந்து காமலர்கள்
தலைமேற் கொள்வாம். (9)

விண்ணிறைந்த வெளியாய், என்மனவெளியிற் கலந்தறிவாம்
வெளியி னூடும்
தண்ணிறைந்த பொழுதாய்ச், சதானந்த மானபெருந்
தகையே! நின்பால்
உண்ணிறைந்த பேரன்பால் உள்ளுருகி, மொழிகுளறி
உவலகி யாகிக்
கண்ணிறைந்த புனலுகுப்பக், கரமுகிழ்ப்ப நின்னருளைக்
கருத்தில் வைப்பாம். (10)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆதியந்தம் காட்டாத முதலாய், எம்மை
அடிமைக்கா வளர்த்தெடுத்த அன்னைபோல
நீதிபெருங் குருவாகி, மனவாக் கெட்டா
நிச்சயமாய்ச், சொச்சமதாய், நிமலமாகி,
வாதமிடும் சமயநெறிக் கரிய தாகி,
மௌனத்தோர் பால்வெளியாய் வயங்கா நின்ற
சோதியை, என் னுயிர்த் துணையை நாடிக், கண்ணீர்
சொரிய, இரு கரங்குவித்துத் தொழுதல் செய்வாம். (11)

அகரவுயிர் எழுத்தனைத்து மாகி, வேறாய்
அமர்ந்ததென் அகிலாண்ட மனைத்து மாகிப்,
பகர்வனவெல் லாமாகி, அல்ல தாகிப்,
பரமாகிச், சொல்லரிய பான்மை யாகித்,
துகளறுசங் கற்பவிகற் பங்க ளெல்லாம்
தோயாத அறிவாகிச், சுத்த மாகி,
நிகரில்பசு பதியான பொருளை நாடி,
நெட்டுயிர்த்துப் பேரன்பால் நினைதல் செய்வாம். (12)

# சின்மயானந்தகுரு.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அங்கைகொடு மலர்தூவி, அங்கமது புளகிப்ப,
அன்பினால் உருகி, விழிநீர்
ஆறாக, ஆறாத முத்தியின தாவேச
ஆசைக் கடற்கண் மூழ்கிச்,
சங்கர! சம்புவே! சம்புவே! எனவுமொழி
தழுதழுத் திடவணங்கும்
சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்க னேனையும்
தண்ணருள் கொடுத் தாள்வையோ!
துங்கமிகு பக்குவச் சனகன்முதல் முனிவோர்கள்
தொழுதருகில் வீற்றிருப்பச்,
சொல்லரிய நெறியையொரு சொல்லால் உணர்த்தியே
சொரூபாநு பூதிகாட்டிச்,
செங்கமல பீடமேற் கல்லா லடிக்குள்வளர்
சித்தாந்த முத்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே!

ஆக்கையெனும் இடிகரையை மெய்யென்ற பாவிநான்,
அத்துவித வாஞ்சையாதல்,
அரியகொம் பிற்றேனை முடவன் இச்சித்தபடி
ஆகும்; அறிவவிழ இன்பம்
தாக்கும்வகை யேதிநாட் சரியைகிரி யாயோக
சாதனம் விடுத்ததெல்லாம்
சன்மார்க்கம் அல்ல; இவைநிற்க; வீன்மார்க்கங்கள்
சாராத போறிவதாய்
வாக்குமன மணுகாத பூரணப் பொருள்வந்து
வாய்க்கும் படிக்குபாயம்
வீருவித் துவட்டாத பேரின்ப மானசுக
வாரியினை வாய் மடுத்துத்



தேக்கித் திளைக்கநீ முன்னிற்ப தென்றுகாண்?
சித்தாந்த முத்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே! (2)
சின்மயா னந்தகுருவே!

ஒளியிய மிருக்க, நானென்கின்ற ஆணவம்
அடைந்திட் டிருக்க, லோபம்
அருளின்மை கூடக் கலந்துள் ளிருக்க, மேல்
ஆசா பிசாசமுதலாம்
வெவ்விய குணம்பல விருக்குமென் அறிவோடு
மெய்யனீ வீற்றிருக்க
[illegible]லோ, பூரணனெனும் பெயர்
விரிக்கிலுரை வேறுமுளதோ?
கவ்வுமல மாகின்ற நாகபா சத்தினால்
கட்டுண்ட வுயிர்கண்மூர்ச்சை
கடிதகல வலியவரு ஞானசஞ் சீவியே!
கதியான பூமிநடுவுள்
செவ்விதின் வளர்ந்தோங்கு திவ்யகுண மேருவே!
சித்தாந்த முத்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே! (3)
சின்மயா னந்தகுருவே!

ஐவகை யெனும்பூத மாதியை வகுத்து, அதனுள்
அசரசர பேதமான
யாவையும் வகுத்து, நல்லறிவையும் வகுத்து, மறை
யாதி நூலையும் வகுத்துச்,
சைவமுதலாம் அளவில் சமயமும் வகுத்து, மேல்
சமயங் கடந்தமோன
சமரசம் வகுத்தநீ உன்னைநான் அணுகவும்
தண்ணருள் வகுக்கவிலையோ?
பொய்வளரு நெஞ்சினர்கள் காணாத காட்சியே!
பொய்யிலா மெய்யர் அறிவில்

போதபரி பூரண அகண்டிதா காரமாய்ப்
போக்குவர வற்றபொருளே!
தெய்வமறை முடிவான பிரணவ சொரூபியே!
சித்தாந்த முத்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே! (4)

ஐந்துவ[illegible]ாகின்ற பூதபே தத்தினால்
ஆகின்ற வாக்கை, நீர்மேல்
அமர்கின்ற குமிழியென நிற்கின்ற தென்ன, நான்
அறியாத காலமெல்லாம்
புந்திமகி ழுறவுண் டுடுத்தின்ப மாவதே
போந்தநெறி என்றிருந்தேன்;
பூராய மாகநினை தருள்வந் துணர்த்த, இவை
போனவழி தெரியவில்லை;
வந்தநிலை பேசினும் இணங்கவிலை; அல்லால்
இறப்பொடு பிறப்பையுள்ளே
எண்ணினால் நெஞ்சது பகீரெனும், துயிலுறாது
இருவிழியு மிரவுபகலாய்ச்,
செந்தழலின் மெழுகான தங்கம், இவை யென்கொ
சித்தாந்த முத்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே! (5)

காரிட்ட ஆணவக் கருவறையில், அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போல்
கட்டுண் டிருந்தவெமை வெளியில்விட் டல்லலாம்
காப்பிட் டதற்கிசைந்த
பேரிட்டு, மெய்யென்று பேசும்பாழ்ம் பொய்யுடல்
பெலக்கவினை யமுதமூட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற
பெரியவினை யாட்டமைத்திட்டு,



ஏரிட்ட தன்சுருதி மொழிதப்பி நமனைவிட்டு,
இடருறவுறுக்கி இடர்தீர்த்து,
இரவுபக லில்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்துதுயில் கொளுமினென்று,
சீரிட்ட வுலகன்னை வடிவான எந்தையே!
சித்தாந்த முத்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே! (6)

கருமருவு குகையனைய காயத்தி னடுவுள்
களிம்புதோய் செம்பனையயான்
[illegible]க விருந்து,நீ ஞானவனல் மூட்டியே
கனிவுபெற வுள்ளுருக்கிப்
பருவம தறிந்து,நின் அருளான குளிகைகொடு
பரிசித்து வேதிசெய்து,
பத்துமாற் றுத்தங்க மாக்கியே பணிகொண்ட
பக்ஷத்தை என்சொல்லுவேன்!
அருமைபெறு புகழ்பெற்ற வேதாந்த சித்தாந்தம்
ஆதியா மந்தமீதும்
அத்துவித நிலையாய் என்னையாண் டுன்னடிமை
யானவர்கள் அறிவினூடும்
இருமருவு கல்லா லடிக்கீழும் வளர்கின்ற
சித்தாந்த முத்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே! (7)

கூடுத லுடன்பிரிதல் அற்று, நிர்த்தொந்தமாய்க்
குவிதலுடன் விரிதலற்றுக்,
குணமற்று, வரவினொடு போக்கற்று, நிலையான
குறியற்று, மலமுமற்று,
நாடுதலுமற்று, மேல் கீழ்நடுப் பக்கமென
நண்ணுதலு மற்று, விந்து

நாதமற்று, ஐவகைப் பூதபே தமுமற்று,
ஞாதுருவின் ஞானமற்று,
வாடுதலுமற்று, மேலொன்றற் றிரண்டற்று,
வாக்கற்று, மனமுமற்று,
மன்னுபரி பூரணச் சுகவாரி தன்னிலே
வாய்மடுத் துண்டவசமாய்த்
தேடுதலும் அற்றவிடம் நிலையென்ற மௌனியே!
சித்தாந்த முத்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே!

தீராத அருளெலாம் தந்தருள மௌனியாய்த்
தாயனைய கருணைகாட்டித்,
தாளிணையென் முடிசூட்டி, அறிவிற் சமாதியே
சாசுவத சம்பிரதாயம்
ஓராமல், மந்திரமு மொன்றாமல், முத்திநிலை
ஒன்றே டிரண்டெனாமல்,
ஒளியெனவும், வெளியெனவும், உருவெனவும், நாதமாம
ஒலியெனவும், உணர்வுறாமல்,
பாராது பார்ப்பதே எதுசா தனமற்ற
பரமஅநு பூதிவாய்க்கும்
பண்பென் றுணர்த்தி அதுபாராமல் அந்நிலை
பதிந்தநின் பழ அடியர்தம்
சீரா யிருக்கநினை தருள்வேண்டும் ஐயனே!
சித்தாந்த முத்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே!

போதமாய், ஆதிநடு அந்தமும் இலாததாய்ப்,
புனிதமாய், அவிகாரமாய்ப்,
போக்குவர வில்லாத இன்பமாய், நின்றநின்
பூரணம் புகவிட்டதா,



ஆதரவு வையாமல், அறிவினை மறைப்பதும்நின்
அருள்; பின்னும் அறிவின்மைதீர்த்து
அறிவித்து நிற்பதும்நின் அருள்; ஆகில் எளியனேற்
கறிவாவ தேதறிவிலா.
ஏதம்வரு வகையேது? வினையேது? வினைதனக்
கீடான காயமேது? தன்
இச்சா சுதந்தரஞ் சிறிதுமிலை; இகபரம்
இரண்டினுள் மலைவுதீரத்
நீதிலருள் கொண்டினி யுணர்த்திநினை யாள்வையோ!
சித்தாந்த முத்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே! (10)

பத்திநெறி நிலைநின்று நவகண்ட பூமிப்
பரப்பைவல மாகவந்தும்,
பரவையிடை மூழ்கியும், நதிகளிடை மூழ்கியும்,
பசிதாக மின்றியெழுநா
மத்தியிடை நின்றுமுதிர் சருகுபுனல் வாயுவினை
வன்பசி தனக்கடைத்தும்,
மௌனத் திருந்தும், உயர் மலைமுழைவு புக்கியும்,
மன்னுதச நாடிமுற்றும்
சுத்திசெய்தும், மூலப்ராணனொடு அங்கியைச்
சோமவட் டத்தடைத்தும்,
சொல்லரிய அமுதுண்டு அற்ப உடல் கற்பங்கள்
தோறும் நிலை நிற்கவீறு
சித்திசெய் தும்ஞானம் அலதுகதி கூடுமோ?
சித்தாந்த முத்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே! (11)

## மௌனகுரு வணக்கம்.

ஆசைநிக ளத்தினை நிர்த்தூளி பட உதறி,
ஆங்கார முளையை எற்றி,
அத்துவித மதமாகி, மதமாறும் ஆருக
அங்கையில் விலாழி ஆக்கிப்,
பாச இருள் தன்னிழல் எனச்சுளித்து, ஆர்த்து, மேல்
பார்த்துப் பரந்தமனத்தப்
பாரித்த கவளமாய்ப் பூரிக்க உண்டு, முக
படாமன்ன மாயையுறித்,
தேசுபெற நிலைவைத்த சின்முத்தி ராங்குசம்
செங்கைக் குளேயடக்கிச்,
சின்மயா னந்தசுக வெள்ளம் படிந்து, நின்
திருவருள் பூர்த்தியான
வாசமுறு சஞ்சார மீது, என்னை ஒருஞான
மத்தகசம் எனவளர்த்தாய்!
மந்த்ரகுருவே! யோக தந்த்ரகுருவே! மூலன்
மரபில்வரு மௌனகுருவே! (1)

ஐந்துவகை யாகின்ற பூதமுதல் நாதமும்
அடங்கவெளி யாகவெளிசெய்
தறியாமை அறிவாதி பிரிவாக அறிவார்கள்;
அறிவாக நின்றநிலையில்,
சிந்தை அறநில்லென்று சும்மா இருத்தி, மேல்
சின்மயா னந்தவெள்ளம்
தேக்கித் திளைத்துநான் அதுவா இருக்கநீ
செய்சித்ர மிகநன்றுகாண்!
எந்தைவட வாற்பரம குருவாழ்க! வாழ அரு
ளியநந்தி மரபுவாழ்க!
என்ற அடியார் மனமகிழ! வேதாகமத் துணிபு
இரண்டில்லை ஒன்றென்னவே



வந்தகுருவே! வீறு சிவஞான சித்திநெறி
மௌனஉபதேசகுருவே!
மந்த்ரகுருவே! யோக தந்த்ரகுருவே! மூலன்
மரபில்வரு மௌனகுருவே! (2)

ஆதிக்க நல்கினவர் ஆர்? இந்த மாயைக்கு என்
அறிவின்றி இடமில்லையோ?
அந்தரப் புஷ்பமும், கானலின் நீரும்ஓர்
அவசரத் துபயோகமோ!
போதித்த நிலையையும் மயக்குதே! அப்பப்பா
புக்க அருள் தோற்றிடாமல்
பொய்யான உலகத்தை மெய்யா நிறுத்தி, என்
புந்திக்குள் இந்த்ரசாலம்
சந்திக்குதே! இதனை வெல்லவும் உபாயநீ
தந்து அருள்வது என்றுபுகல்வாய்?
சண்மதஸ் தாபனமும் வேதாந்த சித்தாந்த
சமரசநிர் வாகநிலையும்
மா திக்கொடு அண்டப் பரப்பெலாம் அறியவே
வந்தருளு ஞானகுருவே!
மந்த்ரகுருவே! யோகதந்த்ரகுருவே! மூலன்
மரபில்வரு மௌனகுருவே! (3)

மின் அனைய பொய்யுடலை நிலையென்றும், மையிலகு
விழிகொண்டு மையல்மூட்டும்
மின்னார்கள் இன்பமே மெய்யென்றும், வளர்மாட
மேல்வீடு சொர்க்கமென்றும்,
பொன்னே அழி யாதுவளர் பொருளென்று போற்றி, இப்
பொய்வேட மிகுதிகாட்டிப்,
பொறையறிவு துறவீதல் ஆதிநற் குணமெலாம்
போக்கிலே போகவிட்டுத்,
தன்நிகரில் லோபாதி பாழ்ம்பேய் பிடித்திடத்,
தரணிமிசை லோகாயதன்

சமயநடை சாராமல், வேதாந்த சித்தாந்த
சமரச சிவாநுபூதி
மன்ன, ஒரு சொற்கொண்டு எனைத்தடுத் தாண்டு, அன்பின்
வாழ்வித்த ஞானகுருவே!
மந்த்ரகுருவே! யோக தந்த்ரகுருவே! மூலன்
மரபில்வரு மௌனகுருவே! (4)

போகம் இருக்கின்ற சாலையிடை வெண்டுவ
புசித்தற்கு இருக்கும்; அதுபோல்
புருஷர்பெறு தர்மாதி வேதமுடன் ஆகமம்
புகலும்; அதினாலாம்பயன்
ஞானநெறி, முக்யநெறி, காட்சி, அநுமானமுதல்
நானவிதங்கள் தேர்ந்து,
நான் நானெனக்குளறும் படைபுடை பெயர்த்திடவும்
நான்குசாதனமும் நேர்ந்திட்டு,
ஆனநெறி யாம்சரியை யாதிசோபானம் உற்று,
அநுபவாஷ சம்புபக்ஷம்
ஆமிரு விகற்பமும் மர்யாதி சேவையும்
அறிந்திரண் டொன்றென்னும் ஓர்
மானத விகற்பம் அறவென்று நிற்பது நமது
மரபென்ற பரமகுருவே!
மந்த்ரகுருவே! யோக தந்த்ரகுருவே! மூலன்
மரபில்வரு மௌனகுருவே! (5)

கல்லாத அறிவும், மேல்கோளாத கேள்வியும்,
கருணைசிறி தேதுமில்லாக்
காட்சியும், கொலைகளவு கள்காமமே மாட்சியாக்
காதலித்திடும் நெஞ்சமும்,
பொல்லாத பொய்ம்மொழியும், அல்லாது, நன்மைகள்
பொருந்துகுணம் ஏதுமறியேன்;
புருஷர்வடி வானதே அல்லாது, கனவிலும்
புருஷார்த்தம் ஏதும் இல்லேன்;



எல்லாம் அறிந்தநீ அறியாத தன்று, எனக்கு
எவ்வண்ணம் உய்வண்ணமோ!
இருளை இருள் என்றவர்க்கு ஒளிதாரகம்; பெறும்
எனக்குள் நின் அருள்தாரகம்;
வல்லான் எனும்பெயர் உனக்குள்ளதே இந்த
வஞ்சகனை ஆள நினையாய்!
மந்த்ரகுருவே! யோக தந்த்ரகுருவே! மூலன்
மரபில்வரு மௌனகுருவே! (6)

*கானகம் இலங்குபுலி பசுவோடு குலாவும்; நின்
கண்காண மதயானைநீ
கைகாட்ட வியாதையால் கெடிக்கு எனப்பெரிய
கட்டைமிக வந்திவருமே;
போனகம் அமைந்ததென அக்காம தேனுவின்
பொன்னடியில் நின்றுசொரியுமே;
புலிராசர் கவிராசர் தவராசன் என்று உனைப்
போற்றி, சயபோற்றி, என்பார்;
ஞானகரு ணாகர முகம்கண்ட போதிலே
நவநாத சித்தர்களும் உன்
நட்பினை விரும்புவார்; சுகர்வாம தேவர்முதல்
ஞானிகளும் உனைமெச்சுவார்;
வானகமும் மண்ணகமும் வந்தெதிர் வணங்கிடும்; உன்
மகிமையது சொல்ல எளிதோ!
மந்த்ரகுருவே! யோக தந்த்ரகுருவே! மூலன்
மரபில்வரு மௌனகுருவே! (7)

சுருதிசல பக்ஷணிகள் ஒருகோடி அல்லால்,
சகோரபட்சிகள்போலவே
தவளநில வொழுகமிர்த தாரையுண் டழியாத
தன்மையர் அனந்தகோடி,

* கால் + நகம் என்றும், கானகம் என்றும் பொருள் படும்.

இருவினைகள் அற்று இரவு பகலென்பது அறியாத
ஏகாந்த மோனஞானம்
இன்பநிஷ்டையர்கோடி, மணிமந்த்ர சித்திநிலை
எய்தினர்கள் கோடிசூழக்,
குருமணி இழைத்திட்ட சிங்காதனத்தின்மிசை
கொலுவீற்று இருக்கும் நின்னைக்
கும்பிட்டு அனந்தமுறை தெண்டனிட் டென்மனக்
குறையெல்லாந் திருவுள்ளம்
மருமலர் எடுத்துன் இருதாளை அர்ச்சிக்க, எனை
வாவென் றழைப்பதெந்நாள் ?
மந்த்ரகுருவே ! யோக தந்த்ரகுருவே ! மூலன்
மரபில்வரு மௌன குருவே !

ஆங்கார மானதுல வேடவெம் பேய்பாழ்த்த
ஆணவத் தினும்வலிது காண்
அறிவினை மயக்கிடும், நடுவறிய வொட்டாது
யாதொன்று தொடினும் அதுவாய்த்
தாங்காது மொழிபேசும், அரிகரப் பிரமாதி
தம்மொடு சமானம் என்னும்,
தடையற்ற தேரில்அஞ் சுறவாணி போலவே
தன்னில் அசையாது நிற்கும்,
சங்கார் எனக்குநிகர் என்ன ப்ரதாபித்து
இராவண காரமாகி
இதயவெளி எங்கணுந் தன்னரசு நாடுசெய்
திருக்கும், இதனொடு எந்நேரமும்
வாங்காமலா அடிமை போராட முடியுமோ?
மௌனோபதேசகுருவே !
மந்த்ரகுருவே! யோக தந்த்ரகுருவே! மூலன்
மரபில்வரு மௌனகுருவே!

பற்றுவெகு விதமாகி ஒன்றைவிட் டொன்றனைப்
பற்றியுழல் கிருமிபோலப்



பாழ்ஞ்சிந்தை பெற்றநான் வெளியாக நின் அருள்
பகர்ந்தும் அறியேன்; துவிதமோ
சிற்றறிவதன்றியும் எவரேனும் ஒருமொழி
திடுக்கென்று உரைத்தபோது
சிந்தைசெவி ஆகவே பறை அறைய உதாரவெந்
தீயநெஞ்சம் அளவளாவ
உற்றுணர உணர்வற்று உன்மத்த வெறியினர்போல
உளறுவேன்; முத்திமார்க்கம்
உணர்வதெப்படி? இன்பதுன்பஞ் சமானமாய்
உறுவதெப்படி ? ஆயினும்
மற்றெனக்கு ஐயநீ சொன்ன ஒரு வார்த்தையினை
மலையிலக்கென நம்பினேன்;
மந்த்ரகுருவே! யோக தந்த்ரகுருவே! மூலன் (10)
மரபில்வரு மௌனகுருவே!

---

## கருணாகரக்கடவுள்

நிர்க்குண ! நிராமய ! நிரஞ்சன ! நிராலம்ப !
நிர்விஷய! கைவல்யமாம்
நிஷ்கள! அசங்க! சஞ்சலரகித! நிர்வசன!
நிர்த்தொந்த! நித்த! முத்த!
தற்பர! விஸ்வாதீத! வ்யோம பரிபூரண!
சதானந்த! ஞான! பகவ!
சம்பு!சிவ! சங்கர! சர்வேச! என்று, நான்
சர்வகாலமும் நினைவனோ!
அற்புத! அகோசர! நிவர்த்திபெறும் அன்பருக்கு
ஆனந்த பூர்த்தியான
அத்துவித நிச்சய! சொரூபசாக்ஷாத்கார
அனுபூதி அனுபூதமும்
கற்பனை அறக்காண முக்கணுடன் வடநிழல்
கண்ணாடிருந்தகுருவே!

கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடும்
    கருணா கரக்கடவுளே! (1)

மண்ணாதி ஐந்தொடு புறத்துள கருவியும்,
    வாக்காதி சுரோத்ராதியும்,
வளர்கின்ற சப்தாதி மனமாதி கலையாதி
    மன்னுசுத் தாதியுடனே,
தொண்ணூற் றொடாறுமற் றுள்ளனவும் மௌனியாய்ச்
    சொன்னவொரு சொற்கொண்டதே,
தூவெளிய தாய் அகண்டானந்த சுகவாரி
    தோற்றும்; அதை என்சொல்லுவேன்!
பண்ணாரு மிசையினொடு பாடிப் படித்தருள்
    பான்மைநெறி நின்றுதவறாப்
பக்குவ விசேடராய் நெக்குநெக் குருகிப்
    பணிந்தெழுந் திருகைகூப்பிக்
கண்ணாறு கரைபுரள நின்ற அன்பரையெலாம்
    கைவிடாக் காட்சியுறவே!
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடும்
    கருணா கரக்கடவுளே! (2)

எல்லாமுன் அடிமையே; எல்லாமுன் உடைமையே;
    எல்லாமுன் உடையசெயலே;
எங்கணும் வியாபிநீ என்றுசொலும் இயல்பென்று
    இருக்காதி வேதமெல்லாம்
சொல்லான் முழக்கியது; மிக்க உபகாரமாய்ச்
    சொல்லிறந் தவரும்விண்டு
சொன்னவையு மிவை; நல்லகுரு வானபெரும்
    தொகுத்தநெறி தானும் இவையே;
அல்லாமல் இல்லையென நன்று அறிந்தேன்,
    அறிந்தபடி நின்றுசுகநான்
ஆகாத வண்ணமே இவ்வண்ணம் ஆயினேன்;
    அதுவும்நின தருள் என்னவே.



கல்லாத அறிஞனுக் குள்ளே உணர்த்தினை;
    கதிக்குவகை யேதுபகலாய்?
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
    கருணா கரக்கடவுளே! (3)

பட்டப் பகற்பொழுதை இருளென்ற மருளர்தம்
    பக்ஷமோ எனதுபக்ஷம்!
பார்த்தவிட மெங்கணும் கோத்தநிலை குலையாத
    பரவெளி யாக ஒருசொல்
திட்டமுடன் மௌனியாய் அருள்செய் திருக்கவும்
    சோராமல் ஆராகநான்
சிறுவீடுகட்டியதின் அடுசோற்றை உண்டுண்டு
    தேக்குசிறி யார்கள்போல
நட்டணைய தாக்கற்ற கல்வியும் விவேகமும்
    நன்னிலய மாக உன்னி
நான்,என்றும் நீஎன்றும் இரண்டில்லை என்னவே
    நடுவே முளைத்த மனதைக்
கட்ட அறியாமலே வாடினேன்; எப்போது
    கருணைக் குறித்தாவனோ!
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
    கருணா கரக்கடவுளே! (4)

மெய்விடா நாவுள்ள மெய்யர் உள் இருந்துநீ
    மெய்யான மெய்யை எல்லாம்
மெய்என உணர்த்தியது மெய்; இதற்கையமில்லை.
    மெய்யேது மறியாவெறும்
பொய்விடாப் பொய்யினேன் உள்ளத்திருந்துதான்
    பொய்யான பொய்யை எல்லாம்
பொய்யெனா வண்ணமே புகலவைத்தாய் எனில்,
    புன்மையேன் என்செய்குவேன்!
மைவிடா தெழுநீல கண்டகுருவே! விஷ்ணு
    வடிவான ஞானகுருவே!

மலர்மேவி மறையோதும் நான்முகக் குருவே!
மதங்கள்தோறும் நின்றகுருவே!
கைவிடாதே என்ற அன்பருக் கன்பாய்க்
கருத்தூ டுணர்த்துகுருவே!
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா காக்கடவுளே!

பண்ணேன் உனக்கான பூசை, ஒரு வடிவிலே
பாவித்து இறைஞ்ச ஆங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி; அப்
பனிமலர் எடுக்கமனமும்
நண்ணேன்; அலாமல், இருகைதான் குவிக்கவெனின்
நாணும்என் உளம் நிற்றிநீ;
நான்கும் பிடும்போது அரைக்கும் பிடாதலால்,
நான்பூசை செய்யன்முறையோ!
விண்ணே! விண்ணாதியாம் பூதமே! நாதமே!
வேதமே! வேதாந்தமே!
மேதக்க கேள்வியே! கேள்வியாம் பூமிக்குள்
வித்தே! அவித்தின்முளையே!
கண்ணே! கருத்தே! என் எண்ணே! எழுத்தே!
கதிக்கான மோனவடிவே!
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா காக்கடவுளே!

சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றின், அது
தான்வந்து முற்றும் எனலால்,
சகமீ திருந்தாலும் மரணமுண் டென்பது
சதாநிஷ்டர் நினைவதில்லை;
சிந்தையறி யார்க்கு ஈது போதிப்பதல்லவே;
செப்பினும் வெகுதர்க்கமாம்;
திவ்யகுண மார்க்கண்டர் சுகாதி முனிவோர்கள்
சித்தாந்த நித்யாலரோ



ஆநதாது தேவதைகள், பிரமாதி கடவுளர்,
இருக்காதி வேதமுனிவர்.
எண்ணரிய கணநாதர், நவநாத சித்தர்கள்,
இரவிமதி யாதியோர்கள்,
கந்தருவர், கின்னரர்கள், மற்றையர்கள் யாவரும்
கைகுவித் திடுதெய்வமே!
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே! (7

துள்ளுமறி யாமனது பலிகொடுத் தேன்; கர்ம
துஷ்டதே வதைகளில்லை;
துரியநிறை சாந்ததே வதையாம் உனக்கே
தொழும்பன் அன் பபிஷேகநீர்;
உள்ளுறையில் என்னாவி நைவேத்தியம்; ப்ராணன்
ஓங்குமதி தூபதீபம்;
ஒருகால மன்று இது, சதாகால பூசையாய்
ஒப்புவித் தேன்; கருணைகூர்
தெள்ளிமறை வடிகட்ட அமுதப் பிழம்பே!
தெளிந்ததேனே! சீனியே!
திவ்யரசம் யாவுந் திரண்டொழுகு பாகே!
தெவிட்டாத ஆனந்தமே!
கள்ளன் அறிவூடுமே மெள்ளமெள்ள வெளியாய்க்
கலக்கவரும் நல்லவுறவே!
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே!

உடல்குழைய, என்பெலாம் நெக்குருக, விழிநீர்கள்
ஊற்றென வெதும்பியூற்ற,
ஊசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே
ஒருறவும் உன்னி உன்னிப்,
படபடென நெஞ்சம் பதைத்துள் நடுக்குறப்,
பாடியாடிக் குதித்துப்,

பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
 பரப்பியார்த் தார்த்தெழுந்து
மடல்அவிழும் மலரனைய கைவிரித் துக்கூப்பி,
 வானே!அவ் வானில் இன்ப
மழையே! மழைத்தாரை வெள்ளமே! நீடூழி
 வாழியென வாழ்த்தி ஏத்தும்
கடல்மடை திறந்தனைய அன்பரன் புக்கெளிமை
 கல்நெஞ்ச னுக்கெளிமையோ!
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
 கருணா கரக்கடவுளே!

இங்கற்ற படிஅங்கும் எனவறியும் நல்லறிஞர்
 எக்காலமும் உதவுவார்;
இன்சொல்தவறார்; பொய்ம்மையாம் இழுக்குரையார்;
 இரங்குவார்; கொலைகள்பயிலார்;
சங்கற்ப சித்தர்அவ ருள்ளக் கருத்திலுறை
 சாட்சிநீ, இகபரத்தும்
சந்தான கற்பகத் தேவா யிருந்தே
 சமஸ்தவின் பமும் உதவுவாய்;
சிங்கத்தை ஒத்தேனைப் பாயவரு வினையினைச்
 சேதிக்க வருசிம்புளே!
சித்தா குலத்திமிரம் அகலவரு பானுவே!
 தீனனேன் கரையேறவே
கங்கற்ற பேராசை வெள்ளத்தின் வளர்அருள்
 ககனவட் டக்கப்பலே!
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
 கருணா கரக்கடவுளே!

---

## சித்தர்கணம்.

இக்கொடு நிகர்தரும் மனவேக மென்னவே
 சென்றோடி யாடிவருவீர்;



செம்பொன்மக மேருவொடு குணமேரு என்னவே
 திகழ்துருவன் அளவளாவி
உக்ரமிகு சக்ரதரன் என்ன நிற் பீர்; கையில்
 உழுந்தமிழும் ஆசமனமாய்
ஒரேழு கடலையும் பருகவல்லீர்! இந்த்ரன்
 உலகும்அபி ராவதமுமே
கைக்கெளிய பந்தா எடுத்துவிளை யாடுவீர்!
 கனவட் டத்தையெல்லாம்
கடுகிடை இருத்தியே அஷ்டகுல வெற்பையும்
 காட்டுவீர்! மேலுமேலும்
சித்திகளெலாம் வல்லநீர் அடிமைமுன்
 விளங்கவருசித்தியிலையோ!
வேதாந்த சித்தாந்த சமரசநல் நிலைபெற்ற
 வித்தகச் சித்தர்கணமே.

பாட்டளி துதைந்துவளர் கற்பகநல் நீழலைப்
 பாரிலிடை வரவழைப்பீர்!
பத்மநிதி சங்கநிதி இருபாரி சத்திலும்
 பணிசெயுந் தொழிலாளர்போல்
கேட்டது கொடுத்துவர நிற்கவைப்பீர்! பிச்சை
 கேட்டுப் பிழைப்போனையும்
கிரீடபதி யாக்குவீர்! கற்பாந்த வெள்ளமொரு
 கேணியினுட் குறுகவைப்பீர்!
மூட்டிடா எடுத்தா யிரத்தெட்டு மாற்றாக
 ஒளிவிடும் பொன்னாக்குவீர்!
தேகமு மிளைப்பாற யோகதண் டத்திலே
 உலகுசுமை யாகஅருளால்
மீட்டிடவும் வல்லநீர், என்மனக் கல்லையனல்
 மெழுகாக்கி வைப்பதரிதோ!
வேதாந்த சித்தாந்த சமரசநல் நிலைபெற்ற
 வித்தகச் சித்தர்கணமே!

பாரொடுநல் நீராதி ஒன்றொடொன் றாகவே
    பற்றிலய மாகுபோழ்து
பரவெளியின் மருவுவீர்! கற்பாந்த வெள்ளம்
    பரந்திடின் அதற்குமீதே
நீரினுரை வண்டாய்த் தவண்டுசிவ யோகநிலை
    நிற்பீர்! விகற்பமாகி
நெடியமுகில் ஏழும் பரந்துவரு ஷிக்கிலோ
    நிலவுமதி மண்டலத்தே
நேரென விளங்குவீர்! பிரமாதி முடிவில்இடை
    யூர்தியருளால் உலவுவீர்!
உலகங்கள் கீழ்மேல வாகப் பெருங்காற்
    றுலாவின்நல் தாரணையினால்
மேருவென அசையாமல் நிற்கவல்லீர்! உமது
    மேதக்க சித்திஎளிதோ!
வேதாந்த சித்தாந்த சமரசநல் நிலைபெற்ற
    வித்தகச் சித்தர்கணமே!

எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
    யாதினும் அரிதரிதுகாண்;
இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ!
    ஏதுவருமோ அறிகிலேன்!
கண்ணகல் நிலத்துநான் உள்ளபொழுதே, அருள்
    ககனவட்டத்தில்நின்று,
காலூன்றி மழைபொழியும் ஆனந்த முகிலொடு
    கலந்துமதி யவசமுறவே
பண்ணுவது நன்மை; இந்நிலைபதியு மட்டுமே
    பதியா யிருந்ததேகப்
பவுரிகுலை யாமலே கவுரிகுண் டலியாயி
    பண்ணவி தன் அருளினாலே
விண்ணிலவும் மதியமுதம் ஒழியாது பொழியவே
    வேண்டுவேன் உமதடிமைநான்;



வேதாந்த சித்தாந்த சமரசநல் நிலைபெற்ற
    வித்தகச் சித்தர்கணமே! (4)

பொய்திகழும் உலகநடை என்சொல்கேன்! என்சொல்கேன்!!
    பொழுதுபோக் கேதென்னிலோ?
பொய்யுடல் நிமித்தம் புசிப்புக் கலைந்திடல்,
    புசித்தபின் கண்ணுறங்கல்
கைதவ மலாமல்இது செய்தவம தல்லவே,
    கண்கெட்ட பேர்க்கும்வெளியாய்க்
கண்டதிது; விண்டிதைக் கண்டித்து நிற்றலைக்
    காலமோ! அதையறிகிலேன்;
மைதிகழு முகில்இனங் குடைநிழற் றிடஅட்ட
    வரையினொடு செம்பொன்மேரு
மால்வரையின் முதுகூடும் யோகதண் டக்கோல்
    வரைந்துசய விருதுகாட்டி
மெய்திகழும் அஷ்டாங்க யோகபூ மிக்குள்வளர்
    வேந்தரே! குணசாந்தரே!
வேதாந்த சித்தாந்த சமரசநல் நிலைபெற்ற
    வித்தகச் சித்தர்கணமே! (5)

கெசதுரக முதலான சதுரங்கம் மனமாதி
    கேள்வியின் இசைந்துநிற்க,
கொடிகொண்ட தலமாறும் மும்மண்டலத்திலும்
    கிள்ளாக்கு செல்ல, மிக்க
தேசவிதம தாய்நின்ற நாதங்கள் ஒலிடச்,
    சிங்காச னாதிபர்களாய்த்
திக்குத் திகந்தமும் பூரண மதிக்குடைத்
    திகழ்ந்திட, வசந்தகாலம்
இசைய, மலர் மீதுறை மணம்போல ஆனந்தம்
    இதயமேல் கொள்ளும் வண்ணம்
என்றைக்கும் அழியாத சிவராச யோகராய்
    இந்த்ராதி தேவர்கள் எலாம்

விசயசய் சயவென்ன ஆசிசொல வேகொலு
 விருக்கும்,நம் பெருமை எளிதோ !
வேதாந்த சித்தாந்த சமரசநல் நிலைபெற்ற
 வித்தகச் சித்தர்கணமே !

ஆணிலே பெண்ணிலே என்போல ஒருபேதை
 அகிலத்தின் மிசையுள்ளதோ !
ஆடிய கறங்குபோல் ஓடிஉழல் சிந்தையை
 அடக்கி ஒரு கணமேனும்யான்
காணிலேன் திருவருளை; அல்லாது மௌனியாய்க்
 கண்மூடி ஓடுமூச்சைக்
கட்டிக் கலாமதியை முட்டவே மூலவெங்
 கனலினை எழுப்பநினைவும்
பூணிலேன்; இற்றைநாள் கற்றதும் கேட்டதும்
 போக்கிலே போகவிட்டுப்
பொய்யுலக னயினேன்; நாயினும் கடையான
 புன்மையேன் இன்னம் இன்னம்
வீணிலே அலையாமல், மலையிலக் காகநீர்
 வெளிப்படத் தோற்றல்வேண்டும்;
வேதாந்த சித்தாந்த சமரசநல் நிலைபெற்ற
 வித்தகச் சித்தர்கணமே !

கன்னல் அமு தெனவும்முக் கனியெனவும் வாயூறு
 கண்டெனவும் அடிஎடுத்துக்
கடவுளர்கள் தந்ததல அழுதழுது பேய்போல்
 கருத்திலெழு கின்றதெல்லாம்.
என்னதறி யாமையறி வென்னும்இரு பகுதியால்
 ஈட்டுதமிழ் என்தமிழினுக்
கின்னல்பக ராதுலகம்; ஆராமை மேலிட்
 டிருத்தலால், இத்தமிழையே
சொன்னவன் யாவனவன் முத்திசித் திகளெலாம்
 தோய்ந்தநெறி யேபடித்தீர்!



சொல்லுமென, அவர்நீங்கள் சொன்னவகை யில்சிறந்து
 தோய்ந்தகுண சாந்தன் எனவே
மின்னல்பெற வேசொல்ல அச்சொல்கேட் டடிமைமனம்
 விகசிப்ப தெந்தநாளோ !
வேதாந்த சித்தாந்த சமரசநல் நிலைபெற்ற
 வித்தகச் சித்தர்கணமே ! (8)

பொற்பினொடு கைகாலில் வள்ளுகிர் படைத்தலாற்
 போர்த்திடை ஒடுக்கமுறலால்,
பொலிவான வெண்ணீறு பூசியே அருள்கொண்டு
 பூரித்த வெண்ணீர்மையால்,
நற்படவி ராங்குகக னத்தில்இமை யாவிழி
 இசைந்துமேல் நோக்கமுறலால்,
இரவுபகல் இருளான கனதந்தி படநூறி
 இதயங் களித்திடுதலால்,
பற்பல விதங்கொண்ட புலிகலையி னுரியது
 படைத்துப்ர தாபமுறலால்,
பனிவெயில்கள் புகுதாமல் நெடியவான் தொடர்நெடிய
 பருமா வனங்களாரும்
வெற்பினிடை உறைதலால், தவராச சிங்கமென
 மிக்கோர் உமைப்புகழ்வர்காண்!
வேதாந்த சித்தாந்த சமரசநல் நிலைபெற்ற
 வித்தகச் சித்தர்கணமே ! (9)

கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்;
 கற்றும்அறி வில்லாத என்
கர்மத்தை என்சொல்வேன் ! மதியையென் சொல்லுவேன் !
 கைவல்ய ஞானநீதி
நல்லோ ருரைக்கிலோ கர்மமுக் கியமென்று
 நாட்டுவேன்; கர்மமொருவன்
நாட்டினு லோபழைய ஞானமுக் கியமென்று
 நவிலுவேன்; வடமொழியிலே

வல்லா னொருத்தன்வர வும்த்ரா விடத்திலே
வந்ததா விவகரிப்பேன்;
வல்லாரிய னொருவன்வரின் அங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிதுபுகல்வேன்;
வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகைவந்த
வித்தையென்? முத்திதருமோ?
வேதாந்த சித்தாந்த சமரசநல் நிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே! (10)

---

## ஆனந்தமானபரம்.

கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்கும்! அக்
குணமொன்றும் ஒன்றிலேன்பால்,
கோரம் எத்தனை, பக்ஷபாதம் எத்தனை, வன்
குணங்கள் எத்தனை, கொடியபாழ்ங்
கல்லாமை எத்தனை, அகந்தை எத்தனை, மனக்
கள்ளம் எத்தனை, உள்ளசற்
காரியஞ் சொல்லிடினும் அறியாமை எத்தனை,
கதிக்கென் றமைத்தவருளில்
செல்லாமை எத்தனை, விர்த்தாகோஷ்டி யென்னிலோ
செல்வதெத்தனை, முயற்சி
சிந்தையெத்தனை, சலன மிந்த்ரஜா லம்போன்ற
தேகத்தில் வாஞ்சைமுதலாய்
அல்லாமை எத்தனை அமைத்தனை! உனக்கடிமை
யானேன், இவைக்கும் ஆளோ!
அண்டபகி ரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி
ஆனந்த மானபரமே!

தெருளாகி, மருளாகி, உழலுமன மாய், மனஞ்
சேர்ந்துவளர் சித்தாகி, அச்
சித்தெலாஞ் சூழ்ந்தசிவ சித்தாய், விசித்ரமாய்த்
திரமாகி, நானாவிதப்



பொருளாகி, அப்பொருளை அறிபோதிய மாகி, ஐம்
புலனுமாய், ஐம்பூதமாய்,
புறமுமாய், அகமுமாய்த், தூரஞ் சமீபமாய்ப்,
போக்கொடு வரத்துமாகி,
இருளாகி, ஒளியாகி, நன்மைதீ மையுமாகி,
இன்றாகி, நாளையாகி,
என்றுமாய், ஒன்றுமாய்ப், பலவுமாய், யாவுமாய்,
இவ்வயல்ல ஆயநின்னை,
அருளாகி நின்றவர்கள் அறிவதல்லால், ஒருவர்
அறிவதற் கெளிதாகுமோ!
அண்டபகி ரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி
ஆனந்த மானபரமே! (2)

மாறுபடு தர்க்கந் தொடுக்க அறிவார்; சாண்
வயிற்றின் பொருட்டதாக
மண்டலமும் விண்டலமும் ஒன்றாகி, மனதுழல
மாலாகி நிற்கஅறிவார்;
வேறுபடு வேடங்கள் கொள்ள அறிவார்; ஒன்றை
மௌனமௌனன் றகம்வேறதாம்
வித்தை அறிவார்; எமைப் போலவே சந்தைபோல்
மெய்ந்நூல் விரிக்க அறிவார்;
சீறுபுலி போற்சீறி மூச்சைப் பிடித்துவிழி
செக்கச் சிவக்க அறிவார்;
திரமென்று தந்தம் மதத்தையே தாமதச்
செய்கைகொடு உளறஅறிவார்;
ஆறுசம யங்கள்தொறும் வேறுவே றாகிவிளை
யாடுமுனை யாவரறிவார்?
அண்டபகி ரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி
ஆனந்த மானபரமே!

காயிலை உதிர்ந்தகனி சருகுபுனல் மண்டிய
கடும்பசி தனக்கடைத்துப்

கார்வரையின் முழையில் கருங்கல்போல் அசையாது
கண்மூடி நெடிதிருந்தும்,
தீயினிடை வைகியும், தோயமதின் மூழ்கியும்,
தேகங்கள் என்பெலும்பாய்த்
தெரியநின்றும், சென்னி மயிர்கள் கூடாக்குருவி
தெற்றவெயி லூடிருந்தும்,
வாயுவை அடக்கியும், மனதினை அடக்கியும்,
மௌனத்தி லேயிருந்து
மதிமண் டலத்திலே கனல்செல்ல அமுதுண்டு,
வனமூடிருந்தும், அறிஞர்
ஆயுமறை முடிவான அருள்நாடினர்; அடிமை
அகிலத்தை நாடல் முறையோ!
அண்டபகி ரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி
ஆனந்த மானபரமே! (4)

சுத்தமும், அசுத்தமும், துக்கசுக பேதமும்,
தொந்தமுடன் நிர்த்தொந்தமும்,
ஸ்தூலமொடு சூக்ஷமமும், ஆசையும், நிராசையும்,
சொல்லும் ஒரு சொல்லின்முடிவும்,
பெத்தமொடு முத்தியும், பாவமொ டபாவமும்,
பேதமொடு அபேதநிலையும்,
பெருமையொடு சிறுமையும், அருமையுடன் எளிமையும்,
பெண்ணினுடன் ஆணுமற்று,
நித்தமும், அநித்தமும், அஞ்சன நிரஞ்சனமும்,
நிஷ்களமும், நிகழ்சகளமும்,
நீதியும், அநீதியும், ஆதியொடந்தமும்;
நிர்விஷய விஷயவடிவும்,
அத்தனையும் நீயலதெள் அத்தனையும் இல்லையெனின்,
யாங்களுனை அன்றியுண்டோ?
அண்டபகி ரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி
ஆனந்த மானபரமே!



கார்ஆரும் ஆணவக் காட்டைக் களைந்தறக்
கண்டகங் காரம் என்னும்
கல்லைப் பிளந்து, நெஞ் சகமான பூமிவெளி
காணத் திருத்தி, மேன்மேல்
பாராதி அறியாத மோனமாம் வித்தைப்
பதித்தன்பு நீராகவே
பாய்ச்சி, அது பயிராகு மட்டும், மாமாயைவன்
பறவை அணுகாதவண்ணம்
நேராக நின்று, விளைபோகம் புசித்துய்ந்த
நின் அன்பர் கூட்டம் எய்த
நினைவின் படிக்குநீ முன்னின்று காப்பதே
நின் அருட்பாரம் என்றும்;
ஆராரும் அறியாத சூதான வெளியில், வெளி
யாகின்ற துரியமயமே!
அண்டபகி ரண்டமும் அடங்கஒரு நிறைவாகி
ஆனந்த மானபரமே! (6)

வானாதி பூதமாய், அகிலாண்ட கோடியாய்,
மலையாகி, வளைகடலுமாய்,
மதியாகி, இரவியாய், மற்றுள எலாமாகி,
வான்கருணை வெள்ளமாகி,
நானாகி நின்றவனும், நீயாகி நின்றிடவும்,
நான் என்ப தற்றிடாதே,
நான்நா னெனக்குளறி நானாவிகாரியாய்,
நான் அறிந் தறியாமையாய்ப்,
போனால்-அதிட்டவலி, வெல்ல எளிதோ! பகற்
பொழுதுபுகு முன்கண்மூடிப்
பொய்த்துயில்கொள் வானைஎழுப்பவசமோ! இனிப்
போதிப்ப தெந்தநெறியை?
ஆனாலும் என்கொடுமை! அநியாயம்! அநியாயம்!!
ஆர்பால் எடுத்துமொழிவேன்?

அண்டபகி ரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி
    ஆனந்த மானபரமே! (7)

பொய்யனேன்; புலையனேன்; கொலையனேன்; நின் அருள்
    புலப்பட அறிந்தும் நிலையாப்
புன்மையேன்; கல்லாத தன்மையேன்; நன்மைபோல்
    பொருளலாப் பொருளைநாடும்
வெய்யனேன்; வெகுளியேன்; வெறியனேன்; சிறியனேன்;
    வினையனேன் என்றென்னைநீ
விட்டுவிட நினைவையேல், தட்டழிவதல்லாது
    வேறுகதி ஏதுபுகலாய்?
துய்யனே! மெய்யனே! உயிரினுக் குயிரான
    துணைவனே! இணை ஒன்றிலாத்
துரியனே! துரியமுங் காணா அதீதனே!
    சுருதிமுடி மீதிருந்த
ஐயனே! அப்பனே! எனும் அறிஞர் அறிவைவிட்
    டகலாத கருணைவடிவே!
அண்டபகி ரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி
    ஆனந்த மா பரமே! (8)

எத்தனை விதங்கள்தான் கற்கினுங் கேட்கினும் என்
    இதயமும் ஒடுங்கவில்லை;
யான் எனும் அகந்தைதான் எள்ளளவும் மாறவில்லை;
    யாதினும் அபிமானம் என்
சித்தமிசை குடிகொண்ட தீமையோ டாக்கம் என்
    சென்மத்தும் நான் அறிகிலேன்;
சீலமொடு தவவிரதம் ஒருகனவி லாயினும்
    தெரிசனம் * செய்துமறியேன்
பொய்த்தமொழி யல்லால் மருந்துக்கும் மெய்ம்மொழி,
    புகன்றிடேன்; பிறர்கேட்கவே

* 'கண்டு மறியேன்' என்றும் பாடமுண்டு.



போதிப்ப தல்லாது, சும்மா இருந்தருள்
    பொருந்திடாப் பேதைநானே;
அத்தனை குணக்கேடர் கண்டதாக் கேட்டதா
    அவனிமிசை உண்டோ சொலாய்?
அண்டபகி ரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி
    ஆனந்த மானபரமே! (9)

எக்காலமுந் தனக் கென்ன ஒரு செயலிலா
    ஏழைநீ என்றிருந்திட்
டெனதாவி உடல்பொருளும் மௌனியாய் வந்து, கை
    யேற்றும தென்ற அன்றே
பொய்க்கால தேசமும், பொய்ப்பொருளில் வாஞ்சையும்,
    பொய்யுடலை மெய்யென்னலும்,
பொய்யுறவு பற்றலும், பொய்யாகும் நானென்னல்
    பொய்யினும் பொய், ஆகையால்
மைக்கால் இருட்டனைய இருளில்லை; இருவினைகள்
    வந்தேற வழியுமில்லை;
மனமில்லை; அம்மனத் தினமில்லை; வேறும் ஒரு
    வரவில்லை; போக்கும் இல்லை;
அக்காலம் இக்காலம் என்பதிலை; எல்லாம்
    அதீதமயம் ஆனதன்றோ?
அண்டபகி ரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி
    ஆனந்த மானபரமே! (10)

---

## சுகவாரி.

இன்னமுத கனிபாகு கற்கண்டு சீனிதேன்,
    என்றுருசித் திடவலியவந்
தின்பங் கொடுத்தநினை எந்நேரம் நின்னன்பர்
    இடையறா துருகிநாடி,
உன்னிய கருத்தவிழ உரைகுழறி; உடலெங்கும்
    ஓய்ந்தயர்ந் தவசமாகி,

உணர்வரிய பேரின்ப அநுபூதி உணர்விலே
உணர்வார்கள் உள்ளபடிகாண்;
கன்னிகை ஒருத்திசிற் றின்பமேலெண்ணினும்
கைக்கொள்வள் பக்குவத்தில்;
கணவனருள் பெறின்முனே சொன்னவா றென்னெனக்
கருதிகை யாவள் அதுபோல்,
சொன்னபடி கேட்கும் இப் பேதைக்கு நின்கருணை
தோற்றில் சுகாரம்பமாம்
சுத்தநிர்க் குணமான பரதெய்வமே! பரஞ்
சோதியே! சுகவாரியே! (1)

அன்பின்வழி அறியாத என்னைத் தொடர்ந்தென்னை
அறியாத பக்குவத்தே
ஆசைப் பெருக்கைப் பெருக்கிக் கொடுத்து, நான்
அற்றேன், அலந்தேன் என்
என்புலன் மயக்காவே பித்தேற்றி விட்டாய்;
இரங்கி ஒரு வழியாயினும்
இன்பவெள மாகவந் துள்ளங் களிக்கவே
எனைநீ கலந்ததுண்டோ?
தன்பருவ மலருக்கு மணமுண்டு வண்டுண்டு,
தண்முகை தனக்குமுண்டோ?
தமியனேற் கிவ்வணம் திருவுளம் இரங்காத
தன்மையால், தனியிருந்து
துன்பமுறின் எங்ஙனே அறியாத நின்னவபர்
சுகம்வந்து வாய்க்கும் உரையாய்?
சுத்தநிர்க் குணமான பரதெய்வமே! பரஞ்
சோதியே! சுகவாரியே! (2)

கல்லேனும் ஐய ஒரு காலத்தில் உருகும் என்
கன்னெஞ்சம் உருகவிலையே!
கருணைக் கிணங்காத வன்மையையும் நானுமன்
கற்பிக்க ஒரு கடவுளோ!



வல்லான் வகுத்ததே வாய்க்கால் எனும்பெரு
வழக்குக் கிழுக்குமுண்டோ?
வானமாய் நின்றின்ப மழையாய் இரங்கி எனை
வாழ்விப்ப துன்பரங்காண்,
பொல்லாத சேயெனில் தாய்தள்ளல் நீதமோ!
புகலிடம் பிறிதும் உண்டோ!
பொய்வார்த்தை சொல்லிலோ திருவருட் கயலுமாய்ப்
புன்மையேன் ஆவனந்தோ!
சொல்லால் முழக்கிலோ சுகமில்லை; மௌனியாய்ச்
சும்மா இருக்க அருளாய்!
சுத்தநிர்க் குணமான பரதெய்வமே! பரஞ்
சோதியே! சுகவாரியே! (3)

என்பெலா நெக்குடைய, ரோமஞ் சிலிர்ப்ப, உடல்
இளக, மனம் தழலின்மெழுகாய்
இடையறா துருக,வரு மழைபோல் இரங்கியே
இருவிழிகள் நீரிறைப்ப,
அன்பினால் மூர்ச்சித்த அன்பருக் கநந்தனே
அமிர்தசஞ் சீவிபோல்வந்
தானந்த மழைபொழிவை; உள்ளன் பிலாதஎனை
யார்க்காக அடிமைகொண்டாய்?
புன்புலால் மயிர்தோல் நரம்பென்பு மொய்த்திடும்
புலைக்குடிலில் அருவருப்புப்
பொய்யல்லவே! இதனை மெய்யென்று நம்பி என்
புத்திசெலுமோ! பாழிலே
துன்பமாய் அலையவோ உலகநடை ஐய ஒரு
சொப்பனத் திலும்வேண்டிலேன்;
சுத்தநிர்க் குணமான பரதெய்வமே! பரஞ்
சோதியே! சுகவாரியே! (4)

வெக்கீர் பொருதென் உடல் காலின்முள் தைக்கவும்
வெடுக்கென் றசைத்தெடுத்தால்

விழியிமைத் தங்கனே கண்ணருளை நாடுவேன்,
வேறொன்றை ஒருவர்சொல்லின்
அந்நேரம், ஐயோ! என் முகம்வாடி நிற்பதும்
ஐயநின் னருள் அறியுமே!
ஆனாலும், மெத்தப் பயந்தவன் யான்; என்னை
ஆண்டநீ கைவிடாதே!
இந்நேரம் என்றிலை உடற்சுமைய தாகவும்
எடுத்தால் இறக்கவென்றே
எங்கெங்கும் ஒருநீர்மை ஆயமகண் டாயினும்
இறைஞ்சுசுக ராதியான
தொன்னீர்மை யாளர்க்கு மானிடம் வகுத்தருள்
துணையென்று நம்புகின்றேன்;
சுத்தநிர்க் குணமான பரதெய்வமே! பரஞ்
சோதியே! சுகவாரியே! (5)

பற்றுவன அற்றிடும் நிராசையென் றொருபூமி;
பற்றிப் பிடிக்கும் போகப்
பாங்கின் பிராணலய மென்னும் ஒரு பூமி; இவை
பற்றின், மன மறும் என்னவே
கற்றையஞ் சடைமௌனி தானே கனிந்தகனி
கனிவிக்க வந்தகனிபோல்,
கண்டதிந் நெறியெனத் திருவுளக் கனிவினொடு
கனிவாய் திறந்தும், நின்னைப்
பெற்றவனு மல்லேன்; பெறாதவனு மல்லேன்;
பெருக்கத் தவித்தலறியே
பெண்ணீர்மை என்ன, இரு கண்ணீர் இறைத்துநான்
பேய்போல் இருக்க, உலகம்
சுற்றிநகை செய்யவே உலையவிட் டாயெனில்,
சொல்லஇனி வாயுமுண்டோ!
சுத்தநிர்க் குணமான பரதெய்வமே! பரஞ்
சோதியே! சுகவாரியே! (6)

அரும்பொனே! மணியே! என் அன்பே! என் அன்பான
அறிவே! என் அறிவிலூறும்
ஆனந்த வெள்ளமே! என்றென்று பாடினேன்;
ஆடினேன்; நாடிநாடி
விரும்பியே கூவினேன்; உலறினேன்; அலறினேன்;
மெய்சிலிர்த் திருகைகூப்பி
விண்மாரி யெனவிரு கண்மாரி பெய்யவே
வேசற் றயர்ந்தேன் யான்;
இரும்புநேர் நெஞ்சகக் கள்வன் ஆனாலும் உனை
இடைவிட்டு நின்றதுண்டோ!
என்றுநீ அன்றுநான்; உன்னடிமை அல்லவோ!
யாதேனும் அறியாவெறும்
துரும்பனேன் என்னினுங் கைவிடுதல் நீதியோ!
தொண்டரொடு கூட்டுகண்டாய்!
சுத்தநிர்க் குணமான பரதெய்வமே! பரஞ்
சோதியே! சுகவாரியே! (7)

பாராதி அண்டங்கள் அத்தனையும் வைக்கின்ற
பரவெளியின் உண்மைகாட்டிப்,
பற்றுமவ் வெளிகாட்டி, மனவெளியினில் தோய்ந்த
பாவியென் பரிசுகாட்டித்,
தாராள மாய்நிற்க நிச்சிந்தை காட்டிச்,
சதாகால நிஷ்டையெனவே
சகசநிலை காட்டினை; சொரூப நிலயம்
தனைக்காட்ட நாள்செல்லுமோ?
கார்ஆர எண்ணரும் அனந்தகோடிகள் நின்று,
கால் ஊன்றி, மழைபொழிதல்போல்
கால்வீசி, மின்னிப் படர்ந்து, பரவெளியெலாம்
கம்மி, ஆனந்தவெள்ளம்
சோராது பொழியவே, கருணையின் முழங்கியே
தொண்டரைக் கூவுமுகிலே!

சுத்தநிர்க் குணமான பரதெய்வமே! பரஞ்
சோதியே! சுகவாரியே! (8)

பேதித்த சமயமோ ஒன்றுசொன படியொன்று
பேசாது; துறவாகியே
பேசாத பெரியோர்கள் நிருவிகற் பத்தினால்
பேசார்கள்; பரமகுருவாய்ப்
போதிக்கும் முக்கணிறை நேர்மையாய்க் கைக்கொண்டு
போதிப்ப தாச்சரியிலே;
போக்குவரவு அற இன்பம் நீக்கமற வசனமாய்
போதிப்ப தேவர்? ஐயனே!
சாதித்த சாதலமும் யோகியர்கள் நமதென்று
சங்கிப்பர்; ஆதலாலே,
தன்னிலே தானாய் அயர்ந்துவிடு வோமெனத்
தனியிருந் திடின், அங்ஙனே
சோதிக்க மனமாயை தனையேவினால், அடிமை
சுகமாவ தெப்படிசொலாய்?
சுத்தநிர்க் குணமான பரதெய்வமே! பரஞ்
சோதியே! சுகவாரியே! (9)

அண்டமுடி தன்னிலோ! பகிரண்ட மதனிலோ!
அலரிமண் டலநடுவிலோ!
அனல்நடுவிலோ! அமிர்தமதி நடுவிலோ! அன்பர்
அகமுருகி மலர்கள் தூவித்
தெண்டமிட வருமூர்த்தி நிலையிலோ! நிக்குத்
திகந்தத்திலோ! வெளியிலோ!
நிகழ்விந்து நாதநிலை தன்னிலோ! வேதாந்த
சித்தாந்த நிலைதன்னிலோ!
கண்டபல பொருளிலோ! காணாத நிலையெனக்
கண்டரு வியமதனிலோ!
காலமொரு மூன்றிலோ! பிறவிநிலை தன்னிலோ!
கருவிகா ணங்களோய்ந்த



தொண்டர்கள் இடத்திலோ! நீயிற் றிருப்பது,
தொழும்பனேற் குளவுபுகலாய்!
சுத்தநிர்க் குணமான பரதெய்வமே! பரஞ்
சோதியே! சுகவாரியே! (10)

எந்தநாள் கருணைக் குரித்தாகும் நாள் எனவும்
என்னிதயம் எண்ணிவாட்டுதே!
வந்தென்று சொல்லுவேன், முன்னொடுபின் மலைவறவும்
இற்றைவரை யாதுபெற்றேன்;
பந்தமா னதிலிட்ட மெழுகாகி யுள்ளம்
பதைத்துப் பதைத்துருகவோ!
பழுதேகழ லவது பொறுப்பரிய துயரமாய்ப்
பலகாலு மூர்ச்சிப்பதோ!
சிந்தையானதும் அறிவை! என்னறிவில் அறிவான
தெய்வநீ அன்றியுளதோ!
தெக்கநிலை அல்லவே! உடைகப்பல் கப்பலாய்த்
திரையாழி நடுசெலுமோ!
சொந்தமாய் ஆண்டநீ அறியார்கள் போலவே
துன்பத்தில் ஆழ்த்தல் முறையோ!
சுத்தநிர்க் குணமான பரதெய்வமே! பரஞ்
சோதியே! சுகவாரியே! (11)

எங்கணும் உடலிலே உயிராம் உனைப்போல்,
இருக்கவிலை யோமனதெனும்
யானும், என் நட்பாம் பிராணனும்; எமைச்சடம
தென்றெனைச் சித்தென்றுமே
அந்நாளில் எவனோ பிரித்தான்; அதைக்கேட்டு
அன்றுமுதல் இன்றுவரையும்
அநியாயமாய் எமை அடக்கிக் குறுக்கே
அடர்ந்தாக பண்ணி, எங்கண்,
முன்னாக நீயென்ன கோட்டை கொண்டாய் என்று;
மூடமனம் மிகவும் வசு,

முண்டெரியும் அனலிட்ட மெழுகாய் உளங்கருகல்
முறைமையோ! பதினாயிரஞ்
சொன்னாலும் நின்னருள் இரங்கவிலையே! இனிச்
சுகம்வருவ தெப்படிசொலாய்?
சுத்தநிர்க் குணமான பரதெய்வமே! பரஞ்
சோதியே! சுகவாரியே! (12)

---

## எங்குநிறைகின்றபொருள்.

'அவனன்றி ஓரணுவும் அசையா' தெனும்பெரிய
ஆப்தர்மொழி ஒன்றுகண்டால்!
அறிவாவ தேது? சில அறியாமை யேதிவை
அறிந்தார்கள் அறியார்களார்?
மௌனமோ இருந்ததார்? என்போல உடம்பெலாம்
வாயாய்ப் பிதற்றுமவரார்?
மனதெனவும் ஒருமாயை எங்கே இருந்துவரும்?
வன்மையோ டிரக்கம் எங்கே?
புவனம் படைப்பதென்? கர்த்தவியம் எவ்விடம்?
பூதபே தங்கள் எவிடம்?
பொய் மெய் இதம் அகிதம் மேல்வருநன்மை தீமையொடு
பொறை பொறாமையும் எவ்விடம்?
எவர்சிறியர்? எவர்பெரியர்? எவருறவர்? எவர்பகைஞர்!
யாதுமுனை அன்றியுண்டோ?
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே! (1)

அன்னை யனையெனுஞ் சிலசமயம்; நின்னையே
ஐயா! ஐயா! என்னவே
அலறிடுஞ் சிலசமயம்; அல்லாது பேய்போல
அலறியே ஒன்றுமிலவாய்ப்
பின்னேதும் அறியாமல் தன்னையிட் டென்னைப்
பிதற்றிடும் சிலசமயம்; பேசு,



பேசரிய ஒளியென்றும், வெளியென்றும், நாதாதி
பிறவுமே நிலயமென்றும்,
தன்னேர் இலாததோர் அணுவென்றும், மூலிகத்
தன்மையாம் காலமென்றும்,
சாற்றிடும் சிலசமயம்; இவையாகி வேறதாய்ச்
சதாஞான ஆனந்தமாம்
என்னே! எனே! கருணை விளையாட் டிருந்தவா
றெம்மனோர் புகலவெளிதோ?
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே! (2)

வேதமுடன் ஆகமம் புராணம் இதிகாசமுதல்
வேறுமுள கலைகளெல்லாம்,
மிக்காக அத்துவித துவிதமார்க் கத்தையே
விரிவா எடுத்துரைக்கும்;
ஒத்தரிய துவிதமே அத்துவித ஞானத்தை
உண்டுபணும் ஞானமாகும்;
ஏகம் அநுபவவசன மூன்றுக்கும் ஒவ்வுமீ
துபயவா திகள்சம்மதம்;
ஆகலின், எனக்கினிச் சரியையா திகள்போதும்;
யாதொன்று பாவிக்கநான்
அதுவாதலால், உன்னை நானென்று பாவிக்கின்
அத்துவித மார்க்கமுறலால்,
ஏதுபாவித்திடினும் அதுவாகி வந்தருள்செய்
எந்தைநீ குறையுமுண்டோ!
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே! (3)

சொல்லா னதில்சற்றும் வாராத பிள்ளையைத்
தொட்டிலதைக் காட்டி ஆட்டித்
தொடையினைக் கிள்ளல்போல், சங்கற்பம் ஒன்றில்
தொடுக்கும்; தொடுத் தழிக்கும்;

பொல்லாத வாதனை எனும் சப்த பூமியிடை
 போந்து தலை சுற்றியாடும்
புருஷனில் அடங்காத பூவைபோல் தானே
 புறம்போந்து சஞ்சரிக்கும்;
கல்லோ டிரும்புக்கு மிகவன்மை காட்டிடும்;
 காணாது கேட்டவெல்லாம்
கண்டதாக் காட்டியே அறிவைச் சுருக்கிடும்
 கபடநா டகசாலமோ!
எல்லாமும் வல்லசித்தே மனமாயை ; ஏழையாம்
 என்னால் அடக்கவசமோ!
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
 எங்குநிறை கின்றபொருளே! (4)

கன்றா நீர்மல்கி, உள்ளம் நெக்குருகாத
 கள்ளனேன்; அல்லல்மேவ,
கைகுவித் தாடியும் பாடியும் விடாமலே
 கண்பனித் தாரைகாட்டி,
அன்றே! பரஞ்சோதி! அப்பா! உனக்கடிமை
 யான் எனவும் பேசல் எழுந்த
அன்பாகி நாடகம் நடித்ததோ குறைவில்லை;
 அகிலமும் சிறிதறியுமேல்,
தன்றாரும் நின்னதருள் அறியாத தல்லவே!
 சற்றேனும் இனியிரங்கி
சாசுவத முத்திநிலை ஈதென் றுணர்த்தியே,
 சகசநிலை தந்து, வேறொன்
றெண்ணாமல் உள்ளபடி சுகமாய் இருக்கவே
 ஏழையேற் கருள்செய்கண்டாய்!
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
 எங்குநிறை கின்றபொருளே! (5)

காகமா னதுகோடி கூடிநின் றாலும் ஒரு
 கல்லின்முன் எதிர்நிற்குமோ!



கர்மமா னதுகோடி முன்னேசெய் தாலும்நின்
 கருணைப்ர வாகஅருளைத்
தாகமாய் நாடினரை வாதிக்க வல்லதோ!
 தமியனேற் கருள்தாகமோ
சற்றுமிலை என்பதுவும் வெளியாச்சு; வினையெலாம்
 சங்கேத மாய்க்கூடியே
தேகமா னதைமிகவும் வாட்டுதே! துன்பங்கள்
 சேராமல் யோகமார்க்க
சித்தியோ வாயிலை; சகசநிட் டைக்குமென்
 சிந்தைக்கும் வெகுதூரம்; நான்
ஏகமாய் நின்னொ டிருக்குநாள் எந்தநாள்?
 இந்நாளில் முற்றுறாதோ!
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
 எங்குநிறை கின்றபொருளே! (6)

ஒருமையான தாலே அல்லல்அற நின்அருளில்
 ஒருவன்நான் வந்திருக்கின்,
உலகம் பொருந்ததோ! மாயா விசித்ரமென
 ஓயுமோ! இடமில்லையோ!
அருளுடைய நின்னன்பர் சங்கைசெய் திலரோ!
 அலது நித்திய கர்த்தராய்
அகிலம் படைத்தெம்மை யாள்கின்ற பேர்சிலர்
 அடாதென்பரோ! அகன்ற
பெருமைபெறு பூரணங் குறையுமோ! பூதங்கள்
 பேய்க்கோல மாய்விதண்டை
பேசுமோ! அலதுதான் பரிபாக காலம்
 பிறக்கவில்லையோ! தொல்லையாம்
இருமைசெறி சடவினை எதிர்த்துவாய் பேசுமோ!
 ஏதுளவு சிறிதுபுகலாய்!
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
 எங்குநிறை கின்றபொருளே! (7)

நில்லாத தேகமெனும் நினைவுண்டு; தேகநிலை
நின்றிடவும் மௌனியாகி
நேரே உபாயமொன் றருளினை, ஐயோ! இதனை
நின்றனுட் டிக்கவென்றால்,
கல்லாத மனமோ ஒடுங்கிடப் ரதிபெறக்
காணவில்லை; ஆகையாலே,
கையேற் றுணும்புசிப் பொல்வா தொருளும் உன்
காட்சியி லிருந்துயொண்டு,
வல்லாளராய் இயம நியமாதி மேற்கொண்ட
மாதவர்க் கேவல்செய்து,
மனதின் படிக்கெலாஞ் சித்திபெற லாம்ஞானம்
வாய்க்கும் ஒரு மனு எனக்கிங்
கில்லாமை ஒன்றினையும் இல்லாமை யாக்கவே
இப்போ திரங்குகண்டாய்!
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே! (8)

மரவுரி உடுத்தும், மலைவனநெல் கொறித்தும், உதிர்
வனசருகு வாயில்வந்தால்,
வன்பசி தவிர்த்தும், அனல் வெயிலாதி மழையால்
வருந்தியும், மூல அனலைச்
சிரமள வெழுப்பியும், நீரினிடை மூழ்கியும்,
தேகநம தல்லவென்று
சிற்சுக அபேக்ஷையாய் நின்அன்பர் யோகஞ்
செலுத்தினர்; யாம் பாவியேம்:
விரவும் அறு சுவையினொடு வேண்டுவ புசித் தரையில்
வேண்டுவ வெலாமுடுத்து,
மேடைமா ளிகையாதி வீட்டினிடை வைகியே,
வேறொரு வருத்தமின்றி,
இரவுபகல் ஏழையர்கள் சையோக மாயினோம்
எப்படி பிழைப்பதுரையாய்!



இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே! (9)

முத்தனைய மூரலும், பவளவாய் இன்சொலும்,
முகத்திலகு பசுமஞ்சளும்,
மூர்ச்சிக்க விரகசன் னதமேற்ற இருகும்ப
முலையின்மணி மாலைநால
வைத்தெமை மயக்கி, இரு கண்வலையை வீசியே
மாயா விலாசமோக
வாரிதியில் ஆழ்த்திடும் பாழான சிற்றிடை
மடந்தையர்கள் சிற்றின்பமோ
புத்தமிர்த போகம் புசித்து, விழி இமையாத
பொன்னாட்டும் வந்ததென்றால்,
போராட்ட மல்லவோ? பேரின்ப முத்திப்
பூமியி லிருந்துகாண!
எத்தனை விகாதம்வரு மென்றுசுகர் சென்றநெறி
இவ்வுலகம் அறியாததோ!
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே! (10)

உன்னிலையும் என்னிலையும் ஒருநிலை எனக்கிடந்
துளறிடும் அவத்தையாகி,
உருவுதான் காட்டாத ஆணவமும் ஒளிகண்
டொளிக்கின்ற இருளென்னவே
தன்னிலைமை காட்டா தொருங்க வரு வினையினால்
தாவுசுக துக்கவேலை
தட்டழிய, முற்றுமில் லாமாயை அதனால்
தடித்தகில பேதமான
முன்னிலை ஒழிந்திட, அகண்டிதா காரமாய்
முதலறிவு மேலுதிப்ப,
முன்பினொடு கீழ்மேல் நடுப்பக்கம் என்னாமல்
முற்றும் ஆனந்த நிறைவே!

என்னிலைமை யாய்நிற்க இயல்புகூ றருள்வடிவம்
எந்நாளும் வாழி! வாழி !!
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே! (11)

---

## சச்சிதானந்தசிவம்.

பாராதி ககனப் பரப்பும்உண் டோவென்று
படர்வெளிய தாகி, எழுநாப்
பரிதிமதி காணாச் சுயஞ்சோதியாய், அண்ட
பகிரண்ட உயிரெவைக்கும்
நேராக அறிவாய், அகண்டமாய், ஏகமாய்,
நித்தமாய், நிர்த்தொந்தமாய்,
நிர்க்குண விலாசமாய், வாக்குமனம் அணுகாத
நிர்மலா னந்தமயமாய்,
போராது நிற்றிநீ சும்மா இருந்துதான்
பேரின்பம் எய்திடாமல்,
பேய்மனதை அண்டியே தாயிலாப் பிள்ளைபோல்
பித்தாக வோமனதைநான்
சாராதபடி அறிவின் நிருவிகற்ப அங்கமாம்
சாசுவத நிஷ்டையருளாய்!
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே! (1)

குடக்கொடு குணக்காதி திக்கினை உழக்கூடு
கொள்ளல்போல், ஐந்துபூதங்
கூடுஞ் சுருங்கிலைச்; சாலேகம் ஒன்பதும்
குலாவுநடை மனையைநாறும்
வடக்கயிறு வெண்ணரம்பா என்பு தசையினால்
மதவேள் விழாநடத்தி
வைக்கின்ற கைத்தேரை வெண்ணீர்செ நீர்கணீர்
மலநீர்புனீர் இறைக்கும்



விடக்குத் துருத்தியைக், கருமருந் துக்கூட்டை,
வெட்டவெட் டத்தளிர்க்கும்
வேட்கைமரம் உறுகின்ற சுடுகாட்டை, முடிவிலே
மெய்போல் இருந்து, பொய்யாம்
சடக்கைச் சடக்கெனச் சதமென்று சின்மயந்
தானாகி நிற்பதென்றோ!
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே! (2)

பாகத்தி னல்கவிதை பாடிப் படிக்கவோ
பத்திநெறி இல்லை; வேத
பாராயணப்பனுவல் மூவர்செய் பனுவலது
பகரவோ இசையும் இல்லை;
யோகத்தி லேசிறிது முயலவென்றால் தேக
மொவ்வாதி லூண்வெறுத்தால்,
உயிர்வெறுத் திடலாக்கும்; அல்லாது கிரியைகள்
உபாயத்தி னால்செய்யவோ
மோகத்தி லேசிறிதும் ஒழியவிலை; மெய்ஞ்ஞான
மோனத்தில் நிற்கவென்றால்,
முற்றாது பரிபாக சத்திகள் அனேகநின்
முதறிவிலே எழுந்த
தாகத்தி லேவாய்க்கும் அமிர்தப்ர வாகமே
தன்னந் தனிப்பெருமையே!
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே! (3)

இமையளவு போதைஒரு கற்பகா லம்பண்ணும்
இவ்வுலகம் எவ்வுலகமோ!
என்றெண்ணம் வருவிக்கும் மாதர்சிற் றின்பமே
என்னின்மக மேருவாக்கிச்
சுமையெடுமின் என்றுதான் சும்மாடுமாய் எமைச்
சுமையாளு மாக்கி, நாளும்

தூர்ப்புத்தி பண்ணியுள நற்புத்தி யாவையுங்
குறையிட் டிந்த்ரஜாலம்
அமைய ஒரு கூத்துஞ் சமைந்ததும் மனமாயை
அம்ம! அம்ம!! வெல்ல வெளிதோ!
அருள்பெற்ற பேர்க்கெலாம் ஒளிபெற்று நிற்குநீ
தருளோ அலாதுமருளோ!
சமயநெறி காணாத சாக்ஷிநீ, சூக்ஷ்மமாத்
தமியனேற் குளவுபகலாய்!
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே! (4)

இனியே தெமக்குனருள் வருமோ எனக்கருதி
ஏங்குதே நெஞ்சம், ஐயோ!
இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லையே!
அனியாயமாய் இந்த உடலைநான் என்றுவரும்
அந்தகற் காளாகவோ!
ஆடித் திரிந்துநான் கற்றதுங் கேட்டதும்
அவலமாய்ப் போதல் நன்றோ!
கனியேனும், வறியசெங் காயேனும், உதிர்சருகு
கந்தமூ லங்கள் ஏனும்,
கனல்வாதை வந்தெய்தில் அள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனியாகித்
தனியே யிருப்பதற் கெண்ணினேன்; எண்ணமிது,
சாமிநீ அறியாததோ!
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே! (5)

மத்தமத கரிமுகிற் குலமென்ன நின்றிலகும்
வாயிலுடன் மதிஅகடுதோய்
மாடகூ டச்சிகர மொய்த்தசந் திரகாந்த
மணிமேடை உச்சிமீது



முத்தமிழ் முழக்கமுடன் முத்தநகை யார்களொடு
முத்தமுத் தாய்க்குலாவி
மோகத் திருந்துமென்? யோகத்தின் நிலைநின்று
மூச்சைப் பிடித்தடைத்துங்
கைத்தலம் நகப்படா விரித்தபுலி சிங்கமொடு
கரடிநுழை நூழைகொண்ட
கானமலை உச்சியில் குகையூ டிருந்துமென்?
காதலா மலகமென்னச்
சந்தமற மோனநிலை பெற்றவர்கள் உய்வர்காண்
சனகாதி துணிவிதன்றோ!
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே!

கைத்தலம் விளங்கும் ஒரு நெல்லியங் கனியெனக்
கண்டவே தாகமத்தின்
காட்சிபுரு ஷார்த்தம் அதின் மாட்சிபெறும் முத்தியது
கருதின் அநுமானமாதி
உத்திபல வாம்; நிருவிகற்பமேல் இல்லையால்,
ஒன்றோ டிரண்டென்னவோ
உரையுமிலை; நினைவுமிலை; நானுமிலை; என்பதும்
உபாயம்நீ உண்டுநானுஞ்
சித்தமுளன் நான் இல்லை எனும்வசனம், நீயறிவை:
தெரியார்கள் தெரியவசமோ!
செப்புகே வலநிஷ்டை ஒப்புவமை அல்லவே
சின்முத்தி ராங்கமாயில்
சத்தமற எனையாண்ட குருமௌனி கையினால்
தமியனேற் குதவுபொருளே!
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே!

காயாத மாமீது கல்லேறு செல்லுமோ!
கடவுள்நீ யாங்களடியேம்

கர்மபந் தத்தினுல் சன்மபந் தம்பெறக்
கற்பித்த துன்னதருளே!
வாயார உண்டபேர் வாழ்த்துவதும், நொந்தபேர்
வைவதுவும் எங்களுலக
வாய்பாடு; நிற்க, நின் வைதிக ஒழுங்குநினை
வாழ்த்தினுல் பெறுபேறுதான்
ஓயாது பெறுவர்என முறையிட்ட தால், பின்னர்
உளறுவது கருமமன்றும்;
உபயநெறி யீதென்னின் உசிதநெறி எந்தநெறி?
உலகிலே பிழைபொறுக்குந்
தாயான கருணையும் உனக்குண் டெனக்கினிச்
சஞ்சலங் கெடவருள்செய்வாய்!
சர்வபரிபூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே!

இன்னம் பிறப்பதற் கிடமென்னில் இவ்வுடலம்
இறவா திருப்ப, மூலத்
தெழுமங்கி அமிர்தொழுகு மதிமண்ட லத்தில் உற
என்னம்மை குண்டலினிபால்
பின்னம் பிறக்காது, சேயென வளர்த்திடப்
பேயேனை நல்கவேண்டும்;
பிறவாத நெறியெனக் குண்டென்னில், இம்மையே
பேசுகாப் பூரதீபம்
மின்னும் படிக்ககண் டாகார அன்னைபால்
வினையேனை ஒப்புவித்து,
விட்டுநெறி கூட்டிடுதல் மிகவுநன் றிவையன்றி
விகார முண்டென்னிலோ,
தன்னந் தனிச்சிறியன் ஆற்றிலேன்; போற்றிவளர்
சன்மார்க்க முத்திமுதலே!
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே!



வேதாவை இவ்வண்ணம் விதித்ததே தென்னின், உன்
வினைப்பகுதி என்பன், அந்த
வினைபேச அறியாது; நிற்க, இவை மனதால்
விளைந்ததால் மனதைநாடில்,
போதமே நிற்கும்; அப் போதத்தை நாடிலோ,
போதமும்நி னல்விளக்கம்;
பொய்யன்று; தெய்மறை யாவுமே நீயென்று
போக்குவர வறநிகழ்த்தும்
ஆதாரம் ஆதேயம் முழுதுநீ; ஆதலால்,
அகிலமீ தென்னையாட்டி
ஆட்டங்கண் டவனும்நீ; ஆடுகின் றவனும்நீ,
அருளுநீ; மௌனஞான
தாதாவும்நீ; பெற்ற தாய்தந்தை தாமும்நீ;
தமருநீ; யாவுநீ காண்;
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே! (10)

கொந்தவிழ் மலர்ச்சோலை நன்னீழல் வைகினும்,
குளிர்தீம் புனல்கையள்ளிக்
கொள்ளுகினும், அந்நீ ரிடைத்திளைத் தாடினும்,
குளிர்சந்த வாடைமடவார்
வந்துலவு கின்றதென முன்றிலிடை யுலவவே
வசதிபெறு போதும், வெள்ளை
வட்டமதி பட்டப் பகற்போல நிலவுதர
மகிழ்போதும், வேலையமுதம்
விந்தைபெற அறுசுவையில் வந்ததென வமுதுண்ணும்
வேளையிலும், மாலைகந்தம்
வெள்ளிலை அடைக்காய் விரும்பிவேண் டியவண்ணம்
விளையாடி விழிதுயிலினும்,
சந்ததமும் நின்னருளை மறவா வரந்தந்து
தமியேனை ரக்ஷைபுரிவாய்!

சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே! (11)

---

## தேசோமயாநந்தம்.

மருமலர்ச் சோலைசெறி நன்னீழல் மலையாதி
மன்னுமுனி வர்க்கேவலாய்
மந்த்ரமா கிளைசொல்லும் இயமநிய மாதியாம்
மார்க்கத்தில் நின்றுகொண்டு,
கருமருவு காயத்தை நிர்மலம தாகவே
கமலாச னாதிசேர்த்துக்
காலைப்பிடித் தனலை அம்மைகுண் டலிஅடிக்
கலைமதியி னூடுதாக்கி,
உருகிவரும் அமிர்தத்தை உண்டுண் டுறங்காமல்
உணர்வான விழியைநாடி,
ஒன்றோ டிரண்டெனாச் சமரச சொரூபசுகம்
உற்றிட என் மனதின்வண்ணம்
திருவருள் முடிக்க இத் தேகமொடு காண்பனோ!
தேடரிய சத்தாகி என்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே!
தேசோ மயானந்தமே! (1)

இப்பிறவி எனும்ஓ ரிருட்கடலின் மூழ்கி, நா
னென்னும் ஒரு மகரவாய்ப்பட்டு
இருவினை எனும் திரையில் எற்றுண்டு புற்புத
மெனக்கொங்கை வரிசைகாட்டும்
துப்பிதழ் மடந்தையர் மயல்சண்ட மாருதச்
சுழல்வந்து வந்தடிப்பச்,
சோராத ஆசையாம் கானாறு வான்நதி
சுரந்ததென மேலுமார்ப்பக்,
கைப்பரிசு காரர்போல் அறிவான வங்கமும்
கைவிட்டு மதிமயங்கிக்,



கள்ளவங் கக்காலர் வருவரென் றஞ்சியே
கண்ணருவி காட்டுமெளியேன்,
செப்பரிய முத்தியாங் கரைசேரவும், கருணை
செய்வையோ! சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
சேசோ மயானந்தமே! (2)

தந்தைதாய் தமர்தாரம் மகவென்னும் இவையெலாம்,
சந்தையிற் கூட்டம்; இதிலோ
சந்தேக மில்லை; மணி மாடமா ளிகைமேடை,
சதுரங்க சேனையுடனே,
வந்தவோர் வாழ்வும், ஓரிந்த்ரசா லக்கோலம்;
வஞ்சனை, பொறாமை, லோபம்
ஊவத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ,
வாஞ்சனை யிலாதகனவே,
எந்நாளுஞ்சரி எனத்தேர்ந்து தேர்ந்துமே,
இரவுபகல் இல்லாவிடத்
தேகமாய் நின்றநின் அருள்வெள்ள மீதிலே
யானென்ப தறவுமூழ்கிச்
சிந்தைதான் தெளியாது சுழலும்வகை என்கொலோ!
தேடரிய சத்தாகி என்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே!
தேசோ மயானந்தமே! (3)

ஆடாமல் ஓய்ந்திட்ட பம்பரம் போல், விசை
யடங்கி மனம் விழ, நேரே
அறியாமை ஆகின்ற இருள்கல, இருளொளியும்
இல்லாதிருந்த வெளிபோல்
கோடா தெனைக்கண் டெனக்குள்நிறை சாந்தவெளி
கூடி இன் பாதீதமும்
கூடினேனோ! சரியை கிரியையின் முயன்றநெறி
கூடினேனோ! அல்லனாயான்

கூடாகவே ஆறு வீட்டினின் நிரம்பியே
இலகிவளர்; பிராணனென்னும்
இருநிதி யினைக்கட்டி யோகபர னாகாமல்
ஏழைக் குடும்பனாகித்
தேடா தழிக்கவொரு மதிவந்த தென்கொலோ!
தேடரிய சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே!
தேசோ மயானந்தமே! (4)

பாடா துபாடிப் படித்தளவில் சமயமும்
பஞ்சுபடு சொல்லன் இவனைப்
பார்மினோ! பார்மினோ!! என்றுசபை கூடவும்
பரமார்த்தம் இதுவென்னவே
ஆடாது மாடிநெஞ் சுருகிநெக் காடவே
அமலமே! ஏகமே! எம்
ஆதியே! சோதியே! எங்குநிறை கடவுளே!
அரசே! எனக்கூவிநான்
வாடாது வாடும் என் முகவாட்ட முங்கண்டு
வாடா வெனக்கருணைநீ
வைத்திடா வண்ணமே சங்கேதமா இந்த
வன்மையை வளர்ப்பித்ததார்?
தேடாது தேடுவோர் தேட்டற்ற தேட்டமே!
தேடரிய சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே!
தேசோ மயானந்தமே! (5)

பிரியாத தண்ணருட் சிவஞானி யாய்வந்து,
பேசரிய வாசியாலே
பேரின்ப உண்மையை யளித்தனை; என் மனதறப்
போம்ப லக்கடவுளாய்,
அறிவாய் இருந்திடும் நாதவொலி காட்டியே
அமிர்தப்ர வாகசித்தி



அருளினை; அலாது திரு அம்பலமு மாகி, எனை
ஆண்டனை; பினெய்திநெறியாய்க்
குறிதான் அளித்தனை; நன் மாவுரிகொள் அந்தணக்
கோலமாய் அஜபாநலந்
கூறினபின், மௌனியாய்ச் சும்மா இருக்கநெறி
கூட்டினை; எலாமிருக்கச்
சிறியேன் மயங்கிமிக அறிவின்மை யாவனோ!
தேடரிய சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே!
தேசோ மயானந்தமே! (6)

ஆரா எனக்கென்ன போதித்தும் என்ன? என்
அறிவினை மயக்கவசமோ!
அண்ட * கோடியையெலாம் கருப்ப அறை போலவும்
அடுக்கடுக்கா அமைத்துப்
போகாமல் நின்றபர வெளியிலே மனவெளி
பிறங்குவத லாதொன்றினும்
பின்னமுற மருவாது; நன்னயத் தால் இனிப்
பேரின்ப முத்திநிலையும்
தாராது; தள்ளவும் போகாதுனால்; அது
தள்ளினும் போகேன் யான்;
தடையேது மில்லை; ஆண்டவன் அடிமை என்னும் இரு
தன்மையிலும் என்வழக்குத்
தீராது விடுவதிலை; நடுவான கடவுளே!
தேடரிய சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே!
தேசோ மயானந்தமே! (7)

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்;
கரடிவெம் புலிவாயையும்

---

* 'கோடிகளெல்லாம்' என்றும் பாடமுண்டு.

கட்டலாம்; ஒருசிங்க முதுகின்மேல் கொள்ளலாம்;
    கட்செவி எடுத்தாட்டலாம்;
வெந்தழலில் இரதம்வைத் தைந்துலோ கத்தையும்
    வேதித்து விற்றுண்ணலாம்;
வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்;
    விண்ணவரை ஏவல்கொளலாம்;
சந்ததமும் இளமையோ டிருக்கலாம்; மற்றொரு
    சரீரத்தினும் புகுதலாம்;
சலமேல் நடக்கலாம்; கனல்மேல் இருக்கலாம்;
    தன்னிகரில் சித்திபெறலாம்;
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
    திறம் அரிது; சத்தாகி என்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே!
    தேசோ மயானந்தமே!

எல்லாம் அறிந்தவரும், ஏதுமறி யாதவரும்
    இல்லையெனும் இவ்வுலகமீ
தேதுமறி யாதவன் எனப்பெயர் தரித்து, மிக
    ஏழைக்குள் ஏழையாகி,
கல்லாத அறிவிற் கடைப்பட்ட நான், அன்று
    கையினால் உண்மைஞானம்
கற்பித்த நின் அருளி னுக்கென்ன கைம்மாறு
    காட்டுவேன், குற்றேவல்நான்:
அல்லார்ந்த மேனியொடு குண்டுகண் பிறை எயிற்
    றுபாச வடிவமான
அந்தகா! நீயொரு பகட்டாற் பகட்டுவா
    தடாதடா! காசுநம்பாற்
செல்லா தடா! என்று பேசவா யதுதந்த
    செல்வமே! சத்தாகி என்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே!
    தேசோ மயானந்தமே!



மின்போலும் இடையொடியும் ஒடியுமென மொழிதல்போல்,
    மென்சிலம் பொலிகளார்ப்ப,
வீங்கிப் புடைத்தெழு சுமையன்ன கொங்கைமட
    மின்னார்கள் பின் * சூலலாய்
என்போல் அலைந்தவர்கள் கற்றோர்கள், கல்லார்கள்,
    இருவர்களில் ஒருவருண்டோ!
என்செய்கேன்! அம்மம்ம! என்பாவம்! என்கொடுமை!!
    ஏதென் றெடுத்துமொழிவேன்!
அன்பால் வியந்துருகி அடியற்ற மரமென்ன,
    அடியிலே வீழ்ந்துவீழ்ந்தெம்
அடிகளே! உமதடிமை யாங்களெனும் நால்வருக்
    கறமாதி பொருள் உரைப்பத்
தென்பாலின் முகமாகி வடவா லிருக்கின்ற
    செல்வமே! சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே! (10)
    தேசோ மயானந்தமே!

புத்தமிர்த போகமும், கற்பகநல் நீழலில்
    பொலிவுற இருக்குமியல்பும்,
பொன்னுலகில் அயிரா வதத்தேறு வரிசையும்,
    பூமண்ட லாதிக்கமும்,
மத்தவெறி யினர்வேண்டு மாலென்று தள்ளவும் எம்
    மானுமொரு சுட்டுமறவே
வைக்கின்ற வைப்பாளன், மௌன தேசிகனென்ன
    வந்தநின் அருள்வாழிகாண்!
சுத்தபரி பூரண அகண்டமே! ஏகமே!
    சுருதிமுடி வானபொருளே!
சொல்லரிய உயிரினிடை அங்கங்கு நின்றருள்
    சுரந்துபொழி கருணைமுகிலே!

---

* ஏவளாய் என்றும் பாடமுண்டு.

சித்திநிலை முத்திநிலை விளைகின்ற பூமியே!
தேடரிய சத்தாகிஎன்,
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே!
தேசோ மயானந்தமே.

---

## சிற்சுகோதயவிலாசம்.

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

காகமொடு கழுகலகை நாய்நரிகள்
சுற்றுசோறிடு துருத்தியைக்,
கால் இரண்டு நவவாசல் பெற்றுவளர்
காமவேள் நடன சாலையை,
மோக ஆசைமுறி யிட்ட பெட்டியை, மும்
மலமிகுந் தொழுகு கேணியை,
மொய்த்து வெங்கிருமி தத்து கும்பியை,
முடங்க லார்கிடை சரக்கினை,
மாக விந்த்ரதனு மின்னை ஒத்திலக,
வேதம் ஓதிய குலாலனார்
வனைய, வெய்யதடி காரனான யமன்
வந்த டிக்குமொரு மட்கலத்
தேக மானபொயை மெய்யெனக் கருதி
ஐய! வையமிசை வாடவோ!
தெரிவ தற்கரிய பிரமமே! அமல
சிற்சு கோதய விலாசமே!

குறித ளோடுகுண மேதும் இன்றி அனல்
ஒழுக நின்றிடும் இரும்பனல்
கூட லின்றி, அது வாயி ருந்தபடி
கொடிய ஆணவ அறைக்குளே
அறிவ தேதுமற வறிவி லாமைமய
மாய் இருக்கும்எனை, அருளினால்



வுளவி லாதத்து கரண மாதியை
அளித்த போதுனை அறிந்து. நான்
ிறவிலா தவ்வணம் நின்றி டாதபடி,
பலநிறங் கவரு முபலமாய்ப்
பெரிய மாயையி லழுந்தி, நின்னது
ப்ரசாத நல்லருள் மறந்திடும்
ிறிய னேனும், உனை வந்த ணைந்துசுக
மாயி ருப்பதினி என்றுகாண்!
தெரிவ தற்கரிய பிரமமே! அமல
சிற்சு கோதய விலாசமே! (2)

ஐந்து பூதம்ஒரு கானல் நீரென
அடங்க வந்தபெரு வானமே!
ஆதி யந்தநடு ஏது மின்றி அரு
ளாய்நி றைந்திலகு சோதியே!
தொந்த ரூபமுடன் அருப மாகிகுறி
குணம் இறந்தவளர் வஸ்துவே!
துரியமே! துரிய உயிரி னுக்குணர்வு
தோன்ற நின்றருள் சுபாவமே!
எந்த நாளும்நடு வாகி நின்றொளிரும்
ஆதியே! கருணை நீதியே!
எந்தை யேஎன இடைந்தி டைந்துருகும்
எளிய னேன்கவலை தீரவும்
சிந்தை யானதை அறிந்து நீயுனருள்
செய்ய நாளும்இனி உய்வனோ!
தெரிவ தற்கரிய பிரமமே! அமல
சிற்சு கோதய விலாசமே! (3

ஐவர் என்றபுல வேடர் கொட்டம
டங்க, மர்க்கடவன் முட்டியாய்
அடவி நின்றுமலை அருகில் நின்று, சரு
காதி தின்று, பனி வெயிலினால்

மெய்யி ருந்ததவம் இல்லை; நற்சரியை
கிரியை யோகமெனும் மூன்றதாய்
மேவு கின்றசவு பான நன்னெறி
விரும்ப இல்லை; உலகத்திலே
பொய்யு டம்புதொழில் யாததற்கு நல
சாத னத்தொழில் நடத்திடும்
புத்தி யூகம் அறிவற்ற மூகம் இவை
பொருள் எனக் கருது மருளன்யான்;
தெய்வ நல்லருள் படைத்த அன்பரொடு
சேர வுங்கருணை கூர்வையோ!
தெரிவ தற்கரிய பிரமமே! அமல
சிற்சு கோதய விலாசமே!

ஏக மானஉரு வானநீ அருளி
னால் அநேகஉரு வாகியே
எந்த நாள்அகில கோடி சிருஷ்டிசெய
இசைந்த நாள்வரைய நாள்முதல்
ஆக நாளது வரைக்கும் உன்னடிமை
கூட வேசனனம் ஆனதோ!
அனந்தம் உண்டுசல சனன மீதுநான்
அறிய வேண்டுவன அறிவெலாம்
போக மாதிதரு பாச மானதை
அறுத்து விட்டுனையும் எனையுமே
முழுது ணர்ந்துபர மான இன்பவெள
மூழ்க வேண்டும்இது இன்றியே
தேகமே நழுவி நானு மோக்ஷமில்,
பின்னை உய்யும்வகை உள்ளதோ!
தெரிவ தற்கரிய பிரமமே! அமல
சிற்சு கோதய விலாசமே!

நியம லக்ஷணமும், இயம லக்ஷணமும்,
ஆச னாதிவித பேதமும்,



ொடிது ணர்ந்திடப் பத்ம பீடமிசை
நின்றி லங்கும்அழ பாலகத்
தியல் அறிந்துவளர் மூல குண்டலியை
இனிதி றைஞ்சியவள் அருளினால்
எல்லை அற்றுவளர் சோதி மூலவனல்
எங்கண் மோனமது முறையிலே
வியபி ருந்துவரும் அமிர்த மண்டலம்
மதிக்கு ளேமதியை வைத்துநான்
வாய்மை யுத்தமிர்த வாரி யைப்பருகி
மன்னும் ஆரமிர்த வடிவமாய்ச்
செயபி ருந்துவரு சித்த யோகநிலை
பெற்று ஞானநெறி யடைவனோ!
தெரிவ தற்கரிய பிரமமே! அமல
சிற்சு கோதய விலாசமே! (6)

ஏறிது ளாக்கடல் சேர்த்த செல்வமிக
அல்லல் என்றொருவர் பின்செலா
தில்லை, என்னுமுடமை பேசிடா துலகில்
எவரு மாமென மதிக்கவே
தெரியின் வைகிவளர் செல்வ மும்உதவி,
நோய்கள் அற்றசுக வாழ்க்கையாய்
நியம மாதிநிலை நின்று ஞானநெறி
நிஷ்டை கூடவும் எந்நாளுமே
அறிவி னின்றுகுரு வாய்உணர்த்தியது
மன்றி, மோனகுரு வாகியே
அகில மீதுவா வந்த சீர்அருளை
ஐய! ஐய! இனி என்சொல்கேன்!
சிறியன் ஏழைநம தடிமை என்றுனது
திருவு ளத்தினில் இருந்ததோ!
தெரிவ தற்கரிய பிரமமே! அமல
சிற்சு கோதய விலாசமே! (7)

எவ்வுயிர்த் திரளும் உலகில் என்னுயிர்
 எனக்கு ழைத்திரங்கி நன்மையாய்
இதமு ரைப்பவென தென்ற பாவையும்
 எடுத்தெ றிந்தமுத பானம்போல்
கவ்வை பற்றநடை பயில அன்பாடி
 கண்டதே அருளின் வடிவமாக்
கண்ட பாவையும் அகண்ட மென்ன இரு
 கைகுவித்து, மலர் தூவியே
பவ்வ வெண்டிரை கொழித்த தண்தரளம்
 விழியு திர்ப்ப, மொழி குழறியே,
பாடி யாடியுள் உடைந்துடைந் தெழுது
 பாவையொத் தசைதல் இன்றியே
திவ்ய அன்புருவ மாகி, அன்பரொடும்
 இன்ப வீட்டினில் இருப்பனோ!
தெரிவ தற்கரிய பிரமமே! அமல
 சிற்சு கோதய விலாசமே!

மத்தர் பேயொடு பாலர் தன்மை, அது
 மருவியே அறிவ வடிவமாய்,
மன்னு தேசமொடு காலம் ஆதியை
 மறந்து நின்னடியர் அடியிலே
பத்தியாய் நெடிது நம்பும் என்னை ஒரு
 மையல் தந்திவ மாயையைப்
பாரு பாரென நடத்த வந்ததென,
 பாரதந் தினும் இதுள்ளதோ!
சுத்த நித்தஇயல் பாகுமோ! உனது
 விசுவ மாயையொடு வாசவே
சொல்ல வேறும்வகை நல்ல காதிகளை
 சொல்லும் மாயையினும் இல்லை; என்
சித்தம் இப்படி மயங்குமோ! அருளை
 நம்பி னோர்கள்பெறு பேறிதோ!



தெரிவ தற்கரிய பிரமமே! அமல (9)
 சிற்சு கோதய விலாசமே!

பன்மு கச்சமய நெறி படைத்தவரும்
 யாங்க ளேகடவு ளென்றிடும்
பாத கத்தவரும், வாத தர்க்கமிடும்
 படிற ரும்தலை, வணங்கிடத்,
தன்முகத்தில் உயிர் வரவழைக்கும் நாம
 தருமனும், பகடு மேய்க்கியாய்த்
தனியிருப்ப, வட நீழல் மேவுவோர்
 சனக னாதிமுனி வோர்கள் தம்
சொன்ம யக்கமது தீர, அங்கைகொடு
 மோன ஞானம துணர்த்தியே,
சுத்த நித்த அருள் இயல்ப தாகவுள
 சோமசேகர கிர்பாளுவாய்த்,
தென்மு கத்தின்முக மாயிருந்த கொலு
 எம்மு கத்திலும் வணங்குவேன்!
தெரிவ தற்கரிய பிரமமே! அமல (10)
 சிற்சு கோதய விலாசமே!

---

## ஆகாரபுவனம் - சிதம்பரரகசியம்.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆகார புவனம் இன்ப ஆகா ரமாக,
 அங்ஙனே, ஒருமொழியால் அகண்டா கார
யோகாநு பூதிபெற்ற அன்பர் ஆவிக்
 குறுந்துணையே! என்னளவும் உகந்த நட்பே!
வாகாரும் படிக்கிசைகின் கிளிவா யென்ன,
 மலர்ந்தமல ரிடைவாசம் வயங்கு மாபோல்,
ஏகாதி உலகமெங்குங் கலந்து, நானே
 திகழ் அனந்தா னந்தமயத் தெய்வக் குன்றே! (1)

சின்னப்பதம் உயிர்கள்தோறும் உயிராய், என்றும்
ஆனந்த நிலையாகி, அளவைக் கெட்டாத்
தன்சித்தின் மாத்திரமாய், நிழல்போல்காட்டாச்
சதசத்தாய், அருட்கோயில் அமைந்த தேவே!
இனம்பிரிந்த மான்போல்நான் இடையாவண்ணம்
இன்பமுறு அன்பர்பக்கல் இருத்திவைத்துக்
கனிந்தருமா கனமே! தன்னருளில்தானே
கனிபழுத்த ஆனந்தக் கட்டிப்பேறே! (2)

பேறனைத்தும் மறுவெனவே உதறித் தள்ளப்
பேரின்ப மிகவந்த பெருக்கே! பேசா
பிறனைத்தும் இந்நெறிக்கே பொய்யே, என்னை
மேவென்ற வாத்தே! பாழ் வெய்ய மாயைக்
கூறனைத்துங் கடந்தவெல்லைச் சேட மாகிக்
குறைவறநின் றிலங்குநிறைவே! குலவா நின்ற
ஆறனைத்தும் புகுங்கடல்போல், சமயகோடி
அத்தனையுந் தொடர்ந்துபுகும் ஆதி கட்பே! (3)

ஆதியந்த மெனும் எழுவாய் பிறப்பொடுங்கி
அருமறையின் முழங்காலு தாற்ற, காறு
பேதமதன் கருமலைய, மலைபோல் யாதப்
பெற்றிபெறும் வாய்வாதப் பெயராகச்,
சாந்தமோ வந்ததென்ன வடவரில் நிழல்
தன்னருட்சத் திரமெனவே! நடக்கைக் கேற்ற
வேதகளின் மாத்திரமாய் எம்ம னோர்க்கும்
வெளியாக வந்ததொன்றே! விமல வாழ்வே! (4)

விமலமுதற் குணமாகி நாற்றெட்டாகி.
வேதமெடுத் தெடுத்துரைத்த விருத்திக் கேற்க,
அமையுமிலக் கணவடிவாய், அதுவும் போதா
தப்பாலுக் கப்பாலாய், அருட்கண் ணாலே,
சமமுடன் கலப்புமின்றித் தனியாய்க் காணத்
தன்னருள்தந் தெனைக்காத்துஞ் சாக்ஷிப் பேறே!



இமையளவும் உபகாரம் அல்லால், வேறொன்
றியக்கா நிர்க் குணக்கடலாய் இருந்த ஒன்றே! (5)

ஒன்றாகிப், பலவாகிப், பலவாக்கண்ட
ஒளியாகி, வெளியாகி, உருவு மாகி,
நன்றாகித், தீதாகி, மற்று மாகி,
நாசமுடன் உற்பத்தி நண்ணாதாகி,
இன்றாகி நாளையுமாய், மேலு மாகி
என்னதயே! எம்மானே! என்றேன் றேங்கிக்
கன்றாகிக், கதறினர்க்குத் தேதா வாகிக்,
ஆதினில்லவர் தருள்கூருங் கருணை விண்ணே! (6)

அருள்பழுத்த பழச்சுவையே! கரும்பே! தேனே!
ஆரமிர்தே! என்கண்ணே! அரிய வான
பொருளனைத்துந் தரும்பொருளே! கருணை நீங்காப்
பூரணமாய் நின்றவொன்றே! புனித வாழ்வே!
கருதரிய கருத்தகனுள் கருத்தாய் மேவிக்,
காலமுந்தே சமும்வகுத்துக், கருவியாதி
விரிவினையுங் கூட்டி, உயிர்த் திரளையாட்டும்
விழுப்பொருளே! யான்சொலும்விண் ணப்பங்கேளே! (7)

விண்ணவர் இந்திரன் முதலோர், நாரதாதி
விளங்குசப்த ருஷிகள், கலைவிலை வல்லோர்,
எண்ணரிய சித்தர், முதலாதி வேந்தர்,
இருக்காதி மறைமுனிவ ரெல்லாம். இந்தக்
கண்ணகன்ற ஞாலமதிக்கத் தானே, உள்ளங்
கையில்நெல்லிக் கனிபோலக் காட்சி யாகத்
தின்னியால் லறிவால் இச் சமயத்தன்றோ
செப்பரிய சித்திமுத்தி சேர்ந்தா ரென்றும். (8)

செப்பரிய சமயநெறி எல்லாந் தந்த
தெய்வமே! தெய்வமெனும் செயற்கை யான.

அப்பரிசா ளரும்அஃதே பிடித்தாலிப்பால்
அடுத்தவந்நூல் களும்விரித்தே அறமாஞ்சி
ஒப்பவிரித் துரைப்பர் இவ்வன் பொய்மெய் என்ன
ஒன் றிலை; ஒன் றெனப்பார்ப்ப தொவ்வா தார்க்கும்
இப்பரிசாஞ் சமயமுமாய், அல்ல வாகி,
யாதுசம யமும்வணங்கும் இயல்ப தாகி, (9)

இயல்பென்றுந் திரியாமல் இயம மாதி
எண்குணமுங் காட்டி, அன்பால் இன்பமாகிப்,
பயனருளப் பொருள்கள்பரி வார மாகிப்,
பண்புறவுஞ் சௌபான பக்ஷங் காட்டி,
மயலறுமந் திரஞ்சிக்ஷை சோதி டாதி
மற்றங்க நூல்வணங்க மௌன மோலி
அயர்வறச்சென் னியில்வைத்து ராசாங் கத்தில்
அமர்ந்தது வைதிகசைவம் அழகி தந்தோ! (10)

அந்தோ! ஈ ததிசயம் இச் சமயம்போல் இன்
றறிஞரெல்லாம் நடுவறிய, அணிமா வாதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கும் மற்று மற்றும்
இந்த்ராதி போகநலம் பெற்ற பேர்க்கும்,
இதுவன்றித் தாயகம்வே றில்லை; இல்லை;
சந்தான கற்பகம்போல் அருளைக் காட்டத்
தக்கநெறி இந்நெறியே தான்சன் மார்க்கம். (11)

சன்மார்க்க ஞானமதின் பொருளும், வீறு
சமயசங்கே தப்பொருளுந் தானொன் றாகப்,
பன்மார்க்க நெறியினிலுங் கண்ட தில்லை,
பகர்வரிய தில்லை; மன் றுட் பார்த்த போதங்
கென்மார்க்க மிருக்குதெல்லாம் வெளியே என்ன
எச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சா நிற்பர்;
சன்மார்க்க நெஞ்சமுளா எனக்குந் தானே
கண்டவுடன் ஆனந்தங் காண்ட லாகம். (12)



காண்டல்பெறப் புறத்தின்உள்ள படியே யுள்ளும்
காட்சிமெய்ந் நூல் சொலும்பதியாம் கடவுளே! நீ
நீண்டநெடு மையும் அகலக் குறுக்குங் காட்டா
நிறைபரிபூ ரண அறிவாய், நித்த மாகி,
வேண்டுவிருப் பொடுவெறுப்பும் சமீபந் தூரம்
விலகல்அணு குதல்முதலாம் விவகா ரங்கள்
பூண்டஅள வைகள் மனவாக் காதி எல்லாம்
பொருந்தாமல், அகம்புறமும் புணர்க்கை யாகி, (13)

ஆகியசற் காரியவ கத்துக் கேற்ற
அமலமாய், நடுவாகி, அனந்த சத்தி
யோகமுறும் ஆனந்த மயம தாகி,
உயிர்க்குயிராய், எந்நாளும் ஓங்கா நிற்ப,
மோகவிருள் மாயைவினை உயிர்கட் கெல்லாம்
மொய்த்ததென்கொல்? உபகார முயற்சி யாகப்
பாகமிக அருள்ஒரு சத்தி வந்து
பதிந்ததென்கொல்? நானெனும் அப்பான்மைஎன்கொல்?

நானென்னும் ஓகந்தை எவர்க்கும் வந்து
கலந்தவுடன், சகமாயை நானு வாகித்
தான்வந்து தொடரும்; இத்தால் வளருந் துன்பச்
சாகரத்தின் பெருமை எவர் சாற்ற வல்லார்!
ஊனென்றும், உடலென்றும், கரண மென்றும்,
உள்ளென்றும், புறமென்றும், ஒழியா நின்ற
வானென்றும், காலென்றும், நீரென்றும்,
மண்ணென்றும், மலையென்றும், வனம தென்றும், (15)

மலைமலையாம் காட்சி, கண்டா லலமை யாகி
மறப்பென்றும், நினைப்பென்றும், மாயா வாரி
அலையலையாய் அடிக்குமின்ப துன்ப மென்றும்,
அதைவிளைக்கும் வினைகளென்றும், அதனைத் தீர்க்கத்
தலைபலவாஞ் சமயமென்றும், தெய்வ மென்றும்,
சாதகரென்றும், அதற்குச் சாக்ஷியாகக்

கலைபல்வாம் நெறியென்றும், தர்க்க மென்றும்,
  கடலுறுநன் மணலெண்ணிக் காணும் போதும், (16)
காணரிய அல்லலெல்லாந் தானே கட்டுக்
  கட்டாக விளையும்; அதைக் கட்டோ டேதான்
வினினில்கர்ப் பூரமலை பற்றிப் பட்ட
  விந்தைஎனக் கரைஒரு விவேகங் காட்ட
ஊண்உறக்கம் இன்பதுன்பம் பேரூ ராதி
  ஒவ்விடமும் எனைப்போல உருவங் காட்டிக்,
கோள் அறவே யான்கட்டி, மானை யீர்க்கும்
  கொள்கையென அருள்மௌன குருவாய் வந்து, (17)

வந்தென்உடல் பொருளாவி மூன்றுந் தன்னை
  வசமெனவே அத்துவா மார்க்க நோக்கி
ஐந்துபுலன் ஐம்பூதங் கரண மாதி
  அடுத்தகுணம் அத்தனையும் அல்லை அல்லை;
இந்தவுடல் அறிவறியா மையுநீ யல்லை;
  யாதொன்று பற்றினதன் இயல்பாய் நின்று,
பந்தமறும் பளிங்கனைய சித்து நீ; உன்
  பக்குவங்கண் டறிவிக்கும் பான்மை யேம்யாம். (18)

அறிவாகி, ஆனந்த மயமாய், என்றும்
  அழியாத நிலையாகி, யாதின் பாலும்
பிரியாமல் தண்ணருளே கோயி லான
  பெரியபரம் பதியதனைப் பெறவே வேண்டி,
நெறியாகக் கூறுவன்கேள் எந்த நாளும்
  நிர்க்குணநிற் குளம்வாய்ந்து நீடு வாழ்க!
செறிவான அறியாமை எல்லாம் நீங்க,
  சிற்கம்பெற் றிடுக, பந்தந் தீர்க என்றே, (19)

பந்தமறு மெய்ஞ்ஞான மான மோனப்
  பண்பொன்றை அருளி, அந்தப் பண்புக் கேதான்
சிந்தையில்லை; நானென்னும் பான்மை யில்லை;
  தேசமில்லை; காலமில்லை; திக்கு மில்லை;



தொந்தமில்லை; நீக்கமில்லை; பிரிவு மில்லை;
  சொல்லுமில்லை; இராப்பகலாந் தோற்றமில்லை;
அந்தமில்லை; ஆதிஇல்லை; நடுவும் இல்லை;
  அகமும் இல்லை; புறமும் இல்லை; யனைத்தும் இல்லை; (20)

இல்லையில்லை என்னினொன்று மில்லா தல்ல
  இயல்பாகி என்றுமுள்ள இயற்கை யாகிச்,
சொல்லரிய தன்மையதா யன்று னெனனக்
  தோன்றுதெல்லாம் விழுங்குஞ் சொரூப மாகி,
அல்லையுண்ட பகல்போல அவித்தை எல்லாம்
  அணையவுண்டு தடையறவுன் அறிவைத் தானே
வெல்லவுண்டிங் குன்னையுந்தா னாகக் கொண்டு
  வேதகமாய்ப் பேசாமை விளங்குந் தானே! (21)

தானான தன்மயமே அல்லால், ஒன்றைத்
  தலையெடுக்க வொட்டாது; தலைப்பட் டாங்கே
போனதுங் கர்ப்பூர தீபம் போலப்
  போயொளிப்ப தல்லாது, புலம்வே றின்றாம்;
ஞானகா ரத்தினொடு ஞேய மற்ற
  ஞாதுருவு நழுவாமல் நழுவி நிற்கும்;
ஆனாலும், இதன்பெருமை எவர்க்கார் சொல்வார்?
  அதுவானால், அதுவாவர்; அதுவே சொல்லும். (22)

அதுவென்றால், எது? எனவுன் றுடக்குஞ் சங்கை:
  ஆதலினால், அதுஎனலும் அறவே விட்டு,
மதுவுண்ட வண்டெனவுஞ் சனக னாதி
  மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தா ரென்றும்,
பதிஇந்த நிலையெனவும், என்னை யாண்ட
  படிக்குநிரு விகற்பத்தால் பரமானந்தக்
கதிகண்டு கொள்ளவுநின் னருள்கூர்; இந்தக்
  கதியன்றி உறங்கேன்; மேல் கருமம் பாரேன். (23)

பாராதி விண்ணனைத்து நீயாச், சிந்தை
  பரியமட லாவெழுதிப் பார்த்துப் பார்த்து,

வாராயோ என்பிராண நாதா! என்பேன்;
வலைத்துவலைத் தலைநீயா வைத்துக் கொண்ம
பூராய மாமேலோன் றறியா வண்ணம்
புண்ணுளர் போல், நெஞ்சம் புலம்பி உள்ளே
நீராள மாய்உருகிக் கண்ணீர் சோர
நெட்டுயிர்த்து மெய்ம்மறந்தோர் நிலையாய் நிற்பேன். (24)

ஆயும் அறி வாகிஉன்னைப் பிரியா வண்ணம்
அணைந்துசுகம் பெற்றஅன்பர், ஐயோ! என்னத்
தீயகொலைச் சமயத்துஞ் * செல்லச் சிந்தை
தெளிந்திடவும் சமாதானஞ் செய்வேன்; வாழ்வான்
கயிலைபுன் சருகாதி அருந்தக் கானம்
கடல் மலையெங்கே எனவுங் கவலை யாவேன்;
வாயில்கும்பம் பொற்கிடந்து புரள்வேன்; வானின்
மதிகதிரை முன்னிலையா வைத்து நேரே. (25)

நேரேதான் இரவுபகல் கோடா வண்ணம்
நித்தம்வர உங்களைஇந் நிலைக்கே வைத்தார்
ஆரே? அங் கவர்பெருமை என்னே என்பேன்!
அடிக்கின்ற காற்றே! நீ யாரா லேதான்
போகாதே சுழல்கின்றாய்? என்பேன்; வந்து
பெய்கின்ற முகில்காள்! எம்பெருமான் றம்போல்
தாராள மாக்கருணை பொழியச் செய்யும்
சாதகம் என்னே கருதிச் சாற்று மென்பேன்; (26)

கருதரிய விண்ணே! நீ எங்கு மாகிக்
கலந்தனையே உன்முடிவின் காட்சி யாக
வருபொருள்எப் படியிருக்கும்? சொல்லாய் என்பேன்;
மண்ணே! உன் முடிவிலெது வயங்கும்? ஆங்கே
துரியவறி வுடைச்சேடன், ஈற்றின் உண்மை
சொல்லானோ; சொல்லென்பேன்; சுருதியே! நீ

* செய்ய எனவும் பாடமுண்டு.



ஒருவரைப்போல் அனைவருக்கும் உண்மை யாம்முன்
உரையன்றோ? உன்முடிவை யுரைநீ என்பேன். (27)

உரையிறந்து பெருமைபெற்றுத் திரைக்கை நீட்டி
ஒலிக்கின்ற கடலே! இவ் வுலகஞ் சூழக்
கரையும் இன்றி உன்னைவைத்தார் யாரே? என்பேன்;
கானகத்தில் பைங்கிளிகாள்! கமல மேவும்
வரிசிறைவண் டினங்காள்! ஓதிமங்காள்! தூது
மார்க்கம் அன்றோ? நீங்கள் இது வரையி லேயும்
பெரியபரி பூரணமாம் பொருளைக் கண்டு
பேசியதுண் டோ? ஒருகாற் பேசு மென்பேன்! (28)

ஒருவனவன் யானைகெடக் குடத்துள் செங்கை
ஓட்டுதல்போல், நான்பேதை உப்போ டப்பை
மருவவிட்டும். கர்ப்பூரம் அதனில் தீபம்
வயங்கவிட்டும், ஐக்கியம் உன்னி வருந்தி நிற்பேன்;
அருளுடைய பரம் என்றோ, அன்று தானே
யான் உளனென் றும், எனக்கே ஆணவாதி
பெருகுவினைக் கட்டென்றும், என்னுற் கட்டிப்
பேசியதன் றே; அருள்நூல் பேசிற் றன்றே. (29)

அன்றுமுதல் இன்றுவரைச் சனன கோடி
அடைந்தடைந்திவ் வியாதனையால் அழிந்த தல்லால்,
இன்றுவரை முத்திஇன்றே எடுத்த தேகம்
எப்போதோ தெரியாதே; இப்போ தேதான்
துன்றுமனக் கவலைகெடப் புலோர யனைத்
தொழும்புகொளச் சொழித் துணையே! தாது
சென்றிடவே பொருளைவைத்த நாலவோய்நஞ்
சிவன், அப்பா என்ற அருட் செல்வத் தேவே! (30)

தேவர்தொழும் வாதவூர்த் தேவே! என்பேன்;
திருமூலத் தேவே! இச் சகத்தோர் முத்திக்
காவல் உறச் சிவஞானவாக் குடனே வந்த
அரசே! சும்மா இருந்தன் அருளைச் சார

பூவுலகில் வளர் அருண கிரியே! மற்றைப்
புண்ணியர்காளோ என்பேன்; புரையொன் றில்லா
ஓவியம்போல் அசைவறவுந் தானே நிற்பேன்;
ஓதரிய துயர்கெடவே உரைக்கு முன்னே. (31

ஓதரிய சுகர்போல, வ(?)னென் என்ன
ஒருவரிலை யோ? எனவும் உரைப்பேன்; தானே
பேதம் அபேதங்கெடவும் ஒருபே சாமை
பிறவாதே! ஆலடியில் பெரிய மோன
நாதன் ஒரு தரம் உலகம் பார்க்க இச்சை
நண்ணுனோ? என்றென்றே நானு வாங்கக்
காதல்மிகும் அணி இழையார் எனவா டுற்றேன்;
கருத்தறிந்து புரப்பதுன்மேற் கடன்முக் காலும். (32)

காலமொடு தேசவர்த்த மானமாதி
கலந்துநின்ற நிலை, வாழி! கருணை வாழி!
மால் அறவுஞ் சைவமுதல் மதங்க ளாகி
தாதீத மான அருள் மரபு வாழி!
சாலமிகும் எளியேன்இவ் வழக்குப் பேசத்
தயவுவைத்து வளர்த்தஅருள் தன்மை வாழி!
ஆலடியில் பரமகுரு வாழி! வாழி!!
அகண்டிதா கார அருள் அடியார் வாழி! (33)

---

## தேன்முகம்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தேன்முகம் பிலிற்றும் பைந்தாள் செய்யபங் கயத்தின் மேவும்
நான்முகத் தேவே! நின்னால் நாட்டிய அகில மாயை
கான்முயல் கொம்பே என்கோ! கானலம் புனலே என்கோ!
வான்முக முளரி என்கோ! மற்றென்கோ! விளம்பல் வேண்டும்.

வேண்டுவ படைத்தாய்; நங்கை, விதிப்படி புரந்தான்; அத்தைக்
காண்தக அழித்தான் முக்கண் கடவுள்; தான் இனைய வாற்றால்



ஆண்டவன் எவனோ! என்ன, அறிகிலா தகிலம்; நீயே
ஈண்டிய அல்லல் தீர எம்மனோர்க் கியம்பு கண்டாய். (2)

கண்டன அல்ல என்றே கழித்திடும்; இறுதிக் கண்ணே
கொண்டது பரமா னந்தக் கோதிலா முத்தி; அத்தாற்
பண்டையிற் படைப்புங் காப்பும் பறந்தன; மாயை யோடே,
வெண்டலை விழிகை காலில் விளங்கிட நின்றான் யாவன்? (3)

விளங்கவெண் ணீறு பூசி, விரிசடைக் கங்கை தாங்கித்,
துளங்குநன் னுதற்கண் தோன்றச், சுழல்வளி நெடுமூச் சாகக்
களங்கமில் உருவந் தானே ககனமாய்ப் பொலியப், பூமி
வளர்ந்ததாள் என்ன, உள்ள மன்றென, மறையொன் றின்றி, (4)

மறைமுழக் கொலிப்பத், தானே வரதமோ டபயக் கைகள்
முறைமையின் ஓங்க, நாத முரசெனக் கறங்க, எங்கும்
குறைவிலா வணநி றைந்து கோதிலா நடனஞ் செய்வான்,
இறையவன் எனலாம்; யார்க்கும் இதயசம் மதம் ஈதல்லால், (5)

அல்லலாந் தொழில் படைத்தே, அடிக்கடி உருவெ டுத்தே,
மல்லன்மா ஞாலங் காக்க வருபவர் கடவுள் என்னில்,
தொல்லையாம்; பிறவி வேலை தொலைந்திடா திருணீங் காது;
நல்லது மாயை தானும் நானென வந்து நிற்கும். (6)

நானென நிற்கு ஞானம் ஞானமன் றந்த ஞானம்
மோனமா யிருக்க வொட்டா; மோனம் இன் றாகவே தான்
தேனென ருசிக்கு மன்பால், சிந்தைதைந் துருகும் வண்ணம்
வானென நிறைந்தா னந்த மாகடல் வளைவ தின்றே. (7)

இன்றென இருப்போம் என்னில், என்றுஞ்சூ னியமாம்; முத்தி
நன்றொடு தீது மன்றி, நாமுன்னே பெறும் அவித்தை,
நின்றது; பெத்தந் தானே; நிரந்தர முத்தி என்னில்,
ஒன்றொரு வரைநான் கேட்க உணர்விலை; குருவுமில்லை. (8)

இல்லையென் றிடில், இப்பூமி யிருந்தவா றிருப்போம் என்னில்
நல்லவன் சாரு வாகன் நான்சொலு நெறிக்கு வீணில்

தொல்லையேன்? ஆகமாதி தொடுப்பதேன்? மயக்க மேதிங்
கொல்லைவந் திருமின் என்ன, உறவுசெய் திடுவன் அந்தோ! (9)

அந்தணர் நால்வர் காண அருட்குரு வாகி வந்த
எந்தையே! எல்லாந் தானென் றியம்பினன்; எமைப்படைத்த
தந்தைநீ; எம்மைக் காக்குந் தலைவனே நுந்தை அன்றோ?
பந்தமில் சித்தி முத்தி படைக்கநின் அருள்பா லிப்பாய். (10)

## பன்மாலை.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பன்மாலைத் திரள் இருக்கத், தமையு ணர்ந்தோர்
பாமாலைக்கே, நீதான் பக்ஷ மென்று,
நன்மாலை யாவெடுத்துச் சொன்னார் நல்லோர்;
நலமறிந்து கல்லாத நானுஞ் சொன்னேன்;
சொன்மாலை மாலையாக் கண்ணீர் சோரத்
தொண்டனேன் எந்நாளுந் துதித்து நிற்பேன்;
என்மாலை அறிந்திங்கே வாவா என்றே
எனைக்கலப்பாய் திருக்கருணை எம்பி ரானே! (1)

கருணைமொழி சிறிதில்லேன், ஈதல் இல்லேன்;
கண்ணீர்கம் பலைஎன்றன் கருத்துக் கேற்க
ஒருபொழுதும் பெற்றறியேன்; என்னை யாளும்
ஒருவா! உன்னடிமைநான் ஒருத்த னுக்கோ
இருவினையு முக்குணமுங் கரண நான்கும்
இடர்செயும் ஐம்புலனும் காமாதி ஆறும்
வரவரவும், ஏழைக்கோர் எட்ட தாக
மதத்தொடும் வந்தெதிர்த்தநவ வடிவ மன்றே! (2)

வடிவனைத்துந் தந்தவடி வில்லாச் சுத்த
வான்பொருளே! எளியனேன் மனமா மாயைக்
குடிகெடுக்கத் துசங்கட்டிக் கொண்ட மோன
குருவே! என் தெய்வமே! கோதி லாத



படிஎனக்கா னந்தவெள்ளம் வந்து தேக்கும்
படிஎனக்குன் திருக்கருணை யுற்று மாறே
அடியெடுத்தென் முடியில் இன்னம் வைக்க வேண்டும்;
அடிமுடிஒன் றில்லாத அகண்ட வாழ்வே! (3)

வாழ்வனைத்தும் மயக்கமெனத் தேர்ந்தேன்; தேர்ந்த
வாறேநா னப்பால்ஓர் வழியா ராமல்
தாழ்வுபெற் றிங் கிருந்தேன்; ஈதென்ன மாயம்!
தண்டூஉற் றால் மேற்கதியுந் தடைய தாயே!
ஊழ்வலியோ! அல்லதுன்றன் திருக்கூத்தோ! இங்
கொருதமியேன் மேற்குறையோ! உணர்த்தாய்! இன்னம்
பாழ்அவதிப் படஎனக்கு முடியா தெல்லாம்
படைத்தளித்துத் துடைக்கவல்ல பரிசி னானே! (4)

நானெனிங் கெனும் அகந்தை எனக்கேன் வைத்தாய்?
நல்வினைதீ வினையெனவே நடுவே நாட்டி
ஊனுரு முட்டூற்சுமைஎன் மீதேன் வைத்தாய்?
உயிரெனவும் என்னையொன்று உள்ளேன் வைத்தாய்?
ஆனமை யாய்அகில நிகில பேதம்
அனைத்தி னுள்ளுந் தானாகி, அறிவா னந்தத்
தேனாகிப், பாலாகிக், கனியாய்க், கன்னற்
செழும்பாகாய்க், கற்கண்டாய்த், திகழ்ந்த ஒன்றே! (5)

ஒன்றியொன்றி நின்றுநின்றும் என்னை? என்னை
உன்னிஉன்னும் பொருளலைநீ; உன்பால் அன்பால்
நின்றதன்மைக் கிரங்கும்வை ராக்கிய னல்லேன்;
நிவிர்த்தி அவை வேண்டும் இந்த நீல னுக்கே;
என்றும் என்றும், இந்நெறிஓர் குணமு மில்லை;
இடுக்குவார் கைப்பிள்ளை ஏதோ! ஏதோ!
கன்றுமனத் துடன் ஆடு தழைதின் றாற்போல்,
கல்வியும் கேள் வியுமாகிக் கலக்குற் றேனே! (6)

உற்றதுணை நீயல்லால் பற்று வேறொன்
றுன்னேன்; பன்னாள் உலகத் தோடி யாடிக்

கற்றதுங்கேட் டதும் இதனுக் கேது வாகும்;
கற்பதுங்கேட் பதும் அமையுங் கண்டோ நீதம்
நற்றவமே! அருள்தாயே! இன்பமான
நாதாந்த பரம்பொருளே! நாத ஜோதி
சுற்றமுமாய் நல்லன்பர் தமைச்சே யாகத்
தொழும்புகொள்ளுங் கருணையே சோதிக் குன்றே! (7)

குன்றாத வுருவாய், அருவாய், ஞானக்
கொழுந்தாகி, அறுசமயக் கூத்துமாடி,
நின்றாயே! மாயையெனுந் திரையை நீக்கி
நின்னையார் அறியவல்லார்? நினைப்போர் நெஞ்சம்
மன்றாக இன்பக்கூத் தாட வல்ல
மணியே! என் கண்ணே! மாமருந்தே! நால்வர்க்
கன்றாலின் கீழிருந்து மோன ஞானம்
அமைத்தசின்முத் திரைக்கடலே! அமர ரேறே! (8)

திரையில்லாக் கடல்போலச் சலனந் தீர்ந்து,
தெளிந்துருகும் பொன்போலச் சகத்தை யெல்லாம்
கரையவே கனிந்துருக்கு முத்தி லே நீ
கனிந்தபர மானந்தக் கட்டி; இந்நாள்
வரையிலே வாக்கானேன்; கன்னற் கட்டி
வார்த்தைசொன்னால் சுகம்வருமோ! வஞ்ச னேனை
இரையிலே இருத்திநிரு விகற்ப மான
இன்பநிஷ்டை கொடுப்பதையா எந்த நாளோ! (9)

எந்நாள் உனக்கடிமை யான நாளோ!
எந்நாளோ கதிவருநாள் எளிய னேன்றன்
சிந்தையா னதுவரைக்கும் மயங்கிற் றல்லால்,
தெளிந்ததுண்டோ! மௌனியாய்த் தெளிய ஓர்சொல்
தந்தநாள் முதல், இன்பக் கால்சற் றல்லால்
தடையறஆ னந்தவெள்ளந் தானே பொங்கி
வந்தநா ளில்லை; மெத்த அலைந்தேன் உன்னை
மருவாஇன் பத்தாலே வாழ்கின் றேனே! (10)

## நினைவொன்று.

ஞானிகளிடம் பொருளேவல்.

நினைவொன்றும் நினையாமல் நிற்கின் அக மெனபார்;
நிற்குமிடமே அருளாம் நிஷ்டையருள் ஓட்டும்;
தன்னையென்றும் மறந்திருப்ப அருள்வடிவா னதுமேல்
தட்டியெழுந் திருக்கும்; இன்பந் தன்மயமே அதுவாம்
பினையொன்றும் இலை; அந்த இன்பமேனும் நிலயம்
பெற்றாரே பிறவாமை பெற்றார்; மற் றார்தான்
மனையென்றும் மகவென்றும் சுற்றமென் றும் அசுத்த
வாதனையாம் ஆசை ஒழி மன்றொருசொற் கொண்டே! (1)

ஒருமொழியே பலமொழிக்கும் இடங்கொடுக்கும். அந்த
ஒருமொழியே மலம்ஒழிக்கும் ஒழிக்குமென மொழிந்த
குருமொழியே மலையிலக்கு; மற்றைமொழி யெல்லாம்
கோடின்றி வட்டாடல் கொள்வதொக்குங் கண்டாய்!
கருமொழியின் குணக்கில்லை; மொழிக்குமொழி ருசிக்கக்
கரும்பனைய சொற்கொடுனைக் காட்டவுங்கண் டனை, மேல்
தருமொழியின் குணக்கில்லை; உன்னைவிட்டு நீங்காத்
தற்பரமாய் ஆனந்தப் பொற்பொதுவாய் நில்லே! (2)

நில்லாத ஆக்கைநிலை அன்றெனவே கண்டாய்!
நேயவருள் மெய்யன்றோ! நிலயமதா நிற்கக்
கல்லாதே என்படித்தாய்! கற்றதெல்லாம் மூடம்;
கற்றதெல்லாம் மூடம் என்றோ கண்டனையு மன்று
சொல்லாலே பயனில்லை, சொல்முடிவைத் தானே
தொடர்ந்துபிடி மர்க்கடம்போல், தொட்டதுபற் றுநில்
எல்லாரும் அறிந்திடவே, வாய்ப்பறை கொண்டடி நீ
இராப்பகலில் லாவிடமே எமக்கிடமென் றறிந்தே.

இடம்பொருளே வலைக்குறித்து மடப்புகுவாய் எனவே
எங்கேநீ அகப்பட்டாய் இங்கேநீ வாடா
மடம்பெறுபாழ் நெஞ்சாலே அஞ்சாதே, நிராசை
மன்னிடமே இடம், அந்த மாநிலத்தே பொருளும்

இடம்பெறவே நிற்கினெல்லா வுலகமும்வந் தேவல்
செய்யும்; இந்த நிலைநின்றோர் சனகன்முதல் முனிவர்
கடம்பெறுமா மதயானை யென்னவுநீ பாசக்
கட்டான நிகளபந்தக் கட்டவிழப் பாரே. (4)

பாராதி அண்டமெல்லாம் படர்கானற் சலம்போல்
பார்த்தனையே முடிவினின்று பாரெதுதா னின்ற
தாராலும் அறியாத சத்தன்றோ! அதுவாய்
அங்கிருநீ எங்கிருந்தும் அதுவாவை கண்டாய்!
பூராய மாகவுநீ மற்றொன்றை விரித்துப்
புலம்பாதே! சஞ்சலமாய்ப் புத்தியை நாட்டாதே!
ஓராதே! ஒன்றையுநீ முன்னிலைவை யாதே!
உள்ளபடி முடியுமெலாம் உள்ளபடி காணே! (5)

உள்ளபடி யென்னவுநீ மற்றொன்றைத் தொடர்ந்திட்
டுளங்கருத வேண்டா; நிஷ்களங்கமதி யாகிக்
கள்ளமனத் துறவைவிட்டெல் லாந்துறந்த துறவோர்
கற்பித்த மொழிப்படியே கங்குல்பகல் அற்ற
வெள்ளவெளிக் கடன்மூழ்கி, இன்பமயப் பொருளாய்
விரவியெடுத் தெடுத்தெடுத்து விள்ளவும்வா யின்றிக்
கொள்ளைகொண்ட கண்ணீருங் கம்பலையு மாகிக்
கும்பிட்டுச் சகம்பொயெனத் தம்பட்ட மடியே! (6)

அடிமுடியும் நடுவுமற்ற பரவெளிமேற் கொண்டால்
அத்துவித ஆனந்த சித்தமுண்டாம்; நமது
குடிமுழுதும் பிழைக்கும், ஒரு குறையுமில்லை; எடுத்த
கோலமெல்லாம் நன்றாகும்; குறைவுநிறை வறவே
விடியுமுத யம்போல அருளுதயம் பெற்ற
வித்தகரோ டுங்கூடி விளையாட லாகும்
படிமுழுதும் விண்முழுதுந் தந்தாலும் களியாப்
பாலருடன் உன்மத்தர் பசாசர்குணம் வருமே. (7)

வரும்போமென் பனவுமின்றி என்றுமொரு படித்தாய்
வகைதி [illegible]வத்தை வளர்ந்தருந்தி வெளியாம்



இருப்போகல் லோமரமோ வென்னுநெஞ்சைக் கனன்மேல்
இட்டமெழு காவுருக்கும் இன்பவெள்ள மாகிக்
கரும்போ! கண்டோ! சீனி சருக்கரையோ! தேனோ!
கனியமிர்தோ! எனருசிக்குங் கருத்தவிழ்ந்தோ ருணர்வார்
அரும்போநன் மணங்காட்டும்! காமரசங் கன்னி
அறிவாளோ! அபக்குவர்க்கோ அந்நலந்தான் விளங்கும் (8)

தானேயும் இவ்வுலகம் வருமுதலு மாகாத்
தன்மையினால் படைத்தளிக்கு [illegible] வான
கோனாக ஒருமுதலின் குண்டெனவும் ஊகம்
கூட்டியதுஞ் சகமுடிவில் குலவுறுமெய்ஞ் ஞான
னாக அம்முதலே நிற்குநிலை நம்மால்
மதிப்பரிதாம் எனமோனம் வைத்ததுமுன் மனமே
ஆனாலும் மனஞ்சடமென் றழுங்காதே! உண்மை
அறிவித்த இடம்குருவாம் அருளிலதோர் நிலையே! (9)

---

## பொன்னைமாதரை.

### கலிவிருத்தம்.

பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்;
என்னை நாடிய என்னுயிர் நாதனே!
உன்னை நாடுவன்; உன்னருள் தூவெளி
தன்னை நாடுவன்; தன்னந் தனியனே. (1)

தன்ன தென்றுரை சாற்று வனவெல்லாம்,
நின்ன தென்றனை; நின்னிடத் தே தந்தேன்;
இன்னம் என்னை இட்டுறக் கூட்டினால்,
பின்னை உய்கிலன் பேதைய னாவியே! (2)

ஆவியே! உனை யான் அறி வாய்நின்று
சேவியேன்; தூங் சிந்தை திறைகொடேன்;
பாவி யேனுள பான்மையைக் கண்டுநீ
கூவி ஆளெனை ஆட்கொண்ட கோலமே! (3)

கோலம் இன்றிக், குணமின்றி, நின்னருள்
சீலம் இன்றிச், சிறியன் பிழைப்பனோ!
ஆலம் உண்டு அமிர் தரு வாய்வந்த
காலம் எந்தை கதிநிலை காண்பதே. (4)

காணுங் கண்ணில் கலந்தகண் ணே! உனைச்
சேணும் பாருந் திரிபவர் காண்பரோ!
ஆணும் பெண்ணும் அலியெனும் பான்மையும்
பூணும் கோலம் பொருந்தியுள் நிற்கவே! (5)

நிற்கு நல்வழி நிற்கப்பெற் றார் அருள்
வர்க்க மன்றி, மனிதர் அன் றே ஐயா!
தூர்க்கு ணக்கடற் சோங்கன்ன பாவியேற்
கெற்கு ணங்கண் டென்பெயர் சொல்வதே! (6)

சொல்லை உன்னித் துடித்தத லாலருள்
எல்லை உன்னி எனைஅங்கு வைத்திலேன்
வல்லை நீஎன்னை வாவென் றிடாவிடில்,
கல்லை யாம்இக் கருமி நடக்கையே! (7)

கையு மெய்யுங் கருத்துக் கிசையவே
ஐய! தந்ததற் கையம் இனியுண்டோ!
பொய்யனேன் சிந்தைப் பொய்கெடப் பூரண
மெய்யதாம் இன்பம் என்று விளைவதே! (8)

என்றும் உன்னை இதய வெளிக்குளே
துன்ற வைத்தன னே அருள் சோதியே
நின்ற தன்மை நிலைக்கென்னை நேர்மையாம்?
ஒன்று நீதற வைத்த நடுவதே. (9)

வைத்த தேகம் வருந்த வருந்திடும்
பித்தன் நானருள் பெற்றுங் கிடப்பிலேன்;
சித்த மோன சிவசின்ம யானந்தம்
வைத்த ஐய! அருட்செம்பொற் சோதியே! (10



செம்பொன் மேனிச் செழுஞ்சுட ரே! முழு
வம்ப னேன்உனை வாழ்த்து மதியின்றி,
இம்பர் வாழ்வினுக் கிச்சைவைத் தேன்; மனம்
நம்பி வாவெனில், நானென்கொல் செய்வதே. (11)

செய்யுஞ் செய்கையுஞ் சிந்திக்குஞ் சிந்தையும்
ஐய! நின்னதென் றெண்ணும் அறிவின்றி,
வெய்ய காம வெகுளி மயக்கமாம்
பொய்யி லேசுழன் றேன்என்ன புன்மையே! (12)

புன்பு லால்நரம் பென்புடைப் பொய்யுடல்
அன்பர் யார்க்கும் அருவருப் பல்லவோ!
என்பொ லாமணி யே! இறை யே! இத்தால்
துன்பம் அன்றிச் சுகம்ஒன்றும் இல்லையே! (13)

இல்லை உண்டென் றெவர்பக்க மாயினும்
சொல்ல வோஅறி யாத தொழும்பன் யான்;
செல்ல வேறொரு திக்கறி யேன்; எலாம்
வல்ல நீஎனை வாழ்விக்க வேண்டுமே! (14)

வேண்டுஞ் சீரருள் மெய்அன்பர்க் கேஅன்பு
பூண்ட நானென் புலமறி யாததோ!
ஆண்ட நீயுன் அடியவன் நானென்று
தூண்டு வேன்அன்றித் தொண்டனென் சொல்வதே! ()

எனக்குளே உயி ரென்ன இருந்தநீ
மனக்கி லேசத்தை மாற்றல் வழக்கன்றே!
கனத்த சீரருள் காட்சி யலாதொன்றை
நினைக்க வோஅறி யாதென்றன் நெஞ்சமே. (16)

நெஞ்சு கந்துனை நேசித்த மார்க்கண்டர்க்
கஞ்சல் என்ற அருளறிந் தே, ஐயா!
தஞ்சம் என்றுன் சரணடைந் தேன்எங்குஞ்
செஞ்செ வேநின்ற சிற்சுக வாரியே! (17)

வாரி ஏழு மலையும் பிறவுந்தான்
சீரி தானநின் சின்மயத் தென்றால்,
ஆரி லேயுள தாவித் திரளைகை
ஓரி லென்னை ஆண்ட ஒருவனே! (18)

ஒருவர் என்னுளத் துள்குங் குறிப்பறிந்
தருள்வ ரோ! எனை ஆளுடை அண்ணலே!
மருள னேன்பட்ட வாதை விரிக்கினோ
பெருகு நாள்இனிப் பேச விதியின்றே. (19)

இன்று னக்கென் பிழைத்திலன் நானென்றே
அன்று தொட்டெனை ஆளரி சேனன்று
நின்ற நற்றிய நீலனைக் கைவிட்டால்,
மன்றம் எப்படி நின்அருள் வாழ்த்துமே! (20)

வாழ்த்து நின்அருள் வாரம்வைத் தால்அன்றிப்
பாழ்த்த சிந்தைப் பதகனும் உய்வனோ!
சூழ்த்து நின்ற தொழும்பரை ஆனந்தத்
தாழ்த்து முக்கண் அருட்செம்பொற் சோதியே! (21)

சோதி யே!சுட ரே!சுக மே!துணை
நீதி யே! நிச மே! நிறை வே! நிலை
ஆதி யே!உனை யானடைந் தென்அகம்
வாதி யாதருள் வாய்அருள் வானையே! (22)

வானைப் போல வளர்ந்துகொண் டானந்தத்
தேனைத் தந்தெனைச் சேர்ந்துக லந்தமெய்ஞ்
ஞானத் தெய்வத்தை நாடுவன் நானெனும்
ஈனப் பாழ்கெட என்றும் இருப்பனே. (23)

இரும்பைக் காந்தம் இழுக்கின்ற வாறெனைத்
திரும்பிப் பார்க்கவொட் டாமல் திருவடிக்
கரும்பைத் தந்துகண் ணீர்கம்ப லையெலாம்
அரும்பச் செய்யென தன்னைஒப் பாமனே! (24)



அன்னை அப்பன்என் ஆவித் துணையெனுந்
தன்னை ஒப்பற்ற சற்குரு என்பதென்?
என்னைப் பூரண இன்ப வெளிக்குளே
துன்ன வைத்த சுடரெனத் தக்கதே! (25)

தக்க கேள்வியிற் சார்ந்தநற் பூமியின்
மிக்க தாக விளங்கு முதலொன்றே
எக்க ணுந்தொழ யாவையும் பூத்துக்காய்த்
தொக்க நின்றும்ஒன் றாய்நிறை வானதே. (26)

ஆன மான சமயங்கள் ஆறுக்குந்
தான மாய்நின்று தன்மயங் காட்டிய
ஞான பூரண நாதனை நாடியே
ஈன னேன்இன்பந் தேக்கித் திளைப்பனே. (27)

தேக்கி இன்பந் திளைக்கத் திளைக்கவே
ஆக்க மாயெனக் காந்த மாகியே
போக்கி னோடு வரவற்ற பூரணம்
தாக்கி நின்றவா தன்மய மாம்அதே. (28)

அதுவென் றுன்னும் அதுவும் அறநின்ற
முதிய ஞானிகள் மோனப் பொருளது
எதுவென் றெண்ணி இறைஞ்சுவன் ஏழையேன்
மதியுள் நின்றின்ப வாரி வழங்குமே. (29)

வாரிக் கொண்டெனை வாய்மடுத் தின்பமாய்ப்
பாரிற் கண்டவை யாவும் பருகினை
ஓரிற் கண்டிடும் ஊமன் கனவென
யார்க்குஞ் சொல வாயிலை ஐயனே! (30)

ஐய மற்ற அறிவரு ணர்க்கெலாம்
கையி லாமல கக்கனி யாகிய
மெய்ய னே!இந்த மேதினி மீதுழல்
பொய்ய னேற்குப் புகலிடம் எங்ஙனே! (31)

எங்ங னேஉய்ய யானென தென்பதற்
றங்ங னேஉன் அருள்மய மாகிலேன்
திங்கள் பாதி திகழப் பணியணி
கங்கை வார்சடைக் கண்ணுதல் எந்தையே! (32)

கண்ணில காண்பதுன் காட்சி,கை யாற்றொழில்
பண்ணல் பூசை, பகர்வது மந்திரம்,
மண்ணொ டைந்தும் வழங்குயிர் யாவுமே,
அண்ண லே!நின் அருள்வடி வாகுமே! (33)

வடிவெ லாநின் வடிவென வாழ்த்திடாக்
கடிய னேனும்உன் காரணங் காண்பனோ!
நெடிய வான்என எங்கு நிறைந்தொளிர்
அடிக ளே! அர சே! அருள் அத்தனே! (34)

அத்த னே! அகண் டானந்த னே! அருட்
சுத்த னே!என உன்னைத் தொடர்ந்திலேன்;
மத்த னேன்பெறு யாமல மாயவான்
கத்த னேகல்வி யாதது கற்கவே! (35)

கற்றும் என்பலன்? கற்றிடு நால்முறை
சொற்ற சொற்கள் சுகாரம்ப மோ?நெறி
நிற்றல் வேண்டும் நிருவிகற் பச்சுகம்
பெற்ற பேர்பெற்ற பேசாப் பெருமையே! (36)

பெருமைக் கேஇறு மாந்து பிதற்றிய
கருமிக் கைய கதியுமுண் டாங்கொலோ!
அருமைச் சீர்அன்பர்க் கன்னையொப் பாகவே
விரும்அப் பேரொளி யே!உன்ம னந்தமே! (37)

உன்ம னிக்குள் ஒளிர்பரஞ் சோதியாம்
சின்ம யப்பொரு ளே! பழஞ் செல்வமே!
புன்ம லத்துப் புழுவனை பாவியேன்
கன்ம னத்தைக் கரைக்கக் கடவதே! (38)



கரையில் இன்பக் கடலமு தே! இது
வரையில் நானுனை வந்து கலந்திலேன்;
உரையி லாஇன்ப முள்ளவர் போலஇத்
தரையி லேநடித் தேன்என்ன தன்மையே! (39)

மையு லாம்விழி மாதர்கள் தோதகம்
பொய்யில் ஆழும் புலைஇனிப் பூரைகாண்,
கையில் ஆமல கக்கனி போன்றஎன்
ஐய னே!எனை யாளுடை அண்ணலே! (40)

அண்ண லேஉன் னடியவர் போல்அருள்
கண்ணி னால்உனைக் காணவும் வாஎனப்
பண்ணி னால்,என் பசுத்துவம் போமெயும்
வண்ண மாக மனோலயம் வாய்க்குமே! (41)

வாய்க்கும் கைக்கும் மௌன மௌனம்என்
றேய்க்குஞ் சொற்கொண் டிராப்பகல் அற்றிடா
நாய்க்கும் இன்பமுண் டோ!நல் லடியாரைத்
தோய்க்கும் ஆநந்தத் தூவெளி வெள்ளமே! (42)

தூய ஞான துரிய அறிவெனும்
தாயு நீ; இன்பத் தந்தையும் நீஎன்றால்,
சேய தாம்இந்தச் சிவத் திரளன்றோ
ஆயும் பேரொளி யான அகண்டமே! (43)

அகண்ட மென்ன அருமறை ஆகமம்
புகன்ற நின்தன்மை போதத் தடங்குமோ!
செகங்கள் எங்குந் திரிந்துநல் மோனத்தை
உகந்த பேர்உனை ஒன்றுவர் ஐயனே! (44)

ஐய னே! உனை யன்றி ஒருதெய்வம்
கையி னால்தொழ வுங்கரு தேன்கண்டாய்;
பொய்ய னாகிலும் பொய்புரை யேன்; சுத்த
மெய்ய னாம்உனக் கேவெளி யாகுமே! (45)

வெளியில் நின்ற வெளியாய் விளங்கிய
ஒளியில் நின்ற வொளியாம்உன் தன்னைநான்
தெளிவு தந்தகல் லாலடித் தேஎன்று
களிபொ ருந்தஅன் றே,கற்ற கல்வியே!

கல்லை உற்ற கருத்தினர், கார்நிறத்
தல்லை யொத்த குழலினர் ஆசையால்,
எல்லை யற்ற மயல்கொள வோ, எழில்
தில்லை யிற்றிக ழுந்திருப் பாதனே!

திருவ ருள்தெய்வச் செல்வி மலைமகள்
உருவி ருக்கின்ற மேனி ஒருபாங்
குருவை, முக்கண்எம் கோவைப் பணிநெஞ்சே!
கருவி ருக்கின்ற கன்மம்இங் கில்லையே!

கன்மம் ஏது? கடுநர கேது? மேல்
சென்ம மேதெனைத் தீண்டக் கடவதோ!
என்ம னோரதம் எய்தும் படிக்கருள்
நன்மை கூர்முக்க ணாதன் இருக்கவே.

நாத னேதென்என் நாதன், முக் கட்பிரான்,
வேத வேதியன், வெள்விடை யூர்தி, மெய்ப்
போத மாய்நின்ற புண்ணியன் பூந்திருப்
பாத மேகதி; மற்றிலை பாழ்நெஞ்சே!

மற்று னக்கு மயக்கமென்? வன்னெஞ்சே!
கற்றை வார்சடைக் கண்ணுத லோன்அருள்
பெற்ற பேர்அவ ரேபெரி யோர்; எலாம்
முற்றும் ஓர்ந்தவர் மூதுரை அர்த்தமே.

உரை இறந்துளத் துள்ள விகாரமாம்
திரைக டந்தவர் தேடும்முக் கட்பிரான்
பரைநி றைந்த பரப்பெங்ஙன்? அங்ஙனே
கரைக டந்தின்ப மாகக் கலப்பனே!



கலந்த முத்தி கருதினும் கேட்பினும்
நிலங்கள் ஆதியும் நின்றனைப் போலவே,
அலந்து போயினம் என்னும் அருமறை
மலர்ந்த வாய்முக்கண் மாணிக்கச் சோதியே! (53)

சோதி யாதெனைத் தொண்டருள் கூட்டியே
போதி யாதஎல் லாம்மௌப் போதிக்க,
ஆதி காலத்தில் உன்னடிக் கீழ்தவம்
ஏது நான்முயன் றேன்முக்கண் எந்தையே! (54)

எந்த நாளைக்கும் ஈன்றருள் தாயென
வந்த சீர்அருள் வாழ்கவென் றுன்னுவேன்;
சிந்தை நோக்கம் தெரிந்து குறிப்பெலாம்
தந்து காக்குந் தயாமுக்கண் ஆதியே! (55)

கண்ண கன்றஇக் காசினி யூடெங்கும்
பெண்ணெ டாண்முத லாம்என் பிறவியை
எண்ண வோஅரி தேழை கதிபெறும்
வண்ணம் முக்கண் மணிவந்து காக்குமே! (56

காக்கும் நின்னருட் காட்சியல் லால்ஒரு
போக்கு மில்லை; என் புந்திக் கிலேசத்தை
நீக்கி ஆளுகை நின்பரம்; அன்பினர்
ஆக்க மே! முக்கண் ஆனந்த மூர்த்தியே! (57

ஆனந் தம்கதி என்ன, என் ஆனந்த
மோனஞ் சொன்ன முறைபெற, முக்கண்எங்
கோன்இங் கீந்த குறிப்புத வின், வெறுந்
தீனன் செய்கை திருஅருட் செய்கையே. (5

கையி னால்தொழு தேத்திக், கசிந்துளம்,
மெய்யி னால்உனைக் காண விரும்பினேன்;
ஐய னே! அர சே! அரு ளே! அருள்
தையல் ஓர்புறம் வாழ்சக நாதனே! (5

சகத்தின் வாழ்வைச் சதமென எண்ணியே
மிகுத்த தீமை விளையு விளைக்கின்றேன்
அகத்துள் ஆரமு தாம்ஐய! நின்முத்தி
சுகத்தில் நான்வந்து தோய்வ தெக்காலமே! (60)

கால மூன்றுங் கடந்தொளி ராநின்ற
சீல மே! நின் திருவரு ளால்இந்த
சால மாம்இச் சகமென எண்ணி, நின்
கோலம் நாடுதல் என்று? கொடியனே! (61)

கொடிய வெவ்வினைக் கூற்றைத் துரத்திடும்
அடிக ளாம்பொரு ளே!நினைக் கன்றிப்
படியில் ஏழைமை பற்றுகின் றேன்; வெறு
மிடியி னேன்கதி மேவும் விதியின்றே! (62)

விதியை யும்விதித் தென்னை விதித்திட்ட
மதியை யும்விதித் தம்மதி மாயையில்
பதிய வைத்த பசுபதி! நின்னருள்
கதியை எப்படிக் கண்டு களிப்பதே! (63)

கண்ட கண்ணுக்குக் காட்டுங் கதிரெனப்
பண்டும் இன்றுமென் பால்நின் றுணர்த்திடும்
அண்ட னே!உனக் கோர்பதி னாயிரந்
தெண்டன் என்பொய்ம்மை தீர்த்திடல் வேண்டுமே! (64)

வேண்டும் யாவும் இறந்து வெளியிடைத்
தூண்டு வார்அற்ற சோதிப் பிரான்நின்பால்
பூண்ட அன்பர்தம் பொற்பணி வாய்க்குமேல்,
ஈண்டு சன்மம் எடுப்பன் அனந்தமே! (65)

எடுத்த தேகம் இறக்குமு னேஎனைக்
கொடுத்து நின்னையுங் கூடவுங் காண்பேனோ!
அடுத்த பேரறி வாய்அறி யாமையைக்
கெடுத்த இன்பக் கிளர்மணிக் குன்றமே! (66)



குன்றி டாத கொழுஞ்சுட ரே! மணி
மன்று ளாடிய மாணிக் கமே! உனை
யன்றி, யார்துணை? ஆருற வார்கதி?
என்று நீஎனக் கின்னருள் செய்வதே! (67)

அருளெ லாம்திரண் டோர்வடி வாகிய
பொருளெ லாம்வல்ல பொற்பொது நாதஎன்
மருளெ லாங்கெடுத் தேஉள மன்னலால்
இருளெ லாம்இரிந் தெங்கொளித் திட்டதே! (68)

எங்கும் என்னை இகலுற வாட்டியே
பங்கஞ் செய்த பழவினை பற்றற்றால்,
அங்க ணா! உன் அடியிணை அன்றியே
தங்க வேறிடம் உண்டோ சகத்திலே! (69)

உண்ட வர்க்கன்றி உட்பசி ஓயுமோ!
கண்ட வர்க்கன்றிக் காத லடங்குமோ!
தொண்ட ருக்கெளி யானென்று தோன்றுவான்
வண்ட மிழ்க்கிசை வாக மதிக்கவே! (70)

மதியும் கங்கையும் கொன்றையும் மத்தமும்
பொதியும் சென்னிப் புனிதநின் பொன்னடிக்
கதியை விட்டிந்தக் காமத்தில் ஆழ்ந்தஎன்
விதியை எண்ணி விழிதுயி லாதன்றே! (71)

அன்றெ னச்சொல, ஆமென, அற்புதம்
நன்றெ னச்சொல, நண்ணிய நன்மையை
ஒன்றெ னச்சொன, ஒண்பொரு ளே! ஒளி
இன்றெ னக்கருள் வாய்இரு ளோகவே. (72)

இருவ ரேபுகழ்ந் தேத்தற் கினியராம்
ஒருவ ரேதுணை என்றுண ராய்நெஞ்சே!
வருவ ரேகொடுங் காலர்கள் வந்தெதிர்
பொருவ ரே! அவர்க் கென்சொல் புகல்வதே! (73)

புகழுங் கல்வியும் போதமும் பொய்யிலா
அகமும் வாய்மையும் அன்பும் அளித்தவே
சுகவி லாசத் துணைப்பொருள் தோற்றமாங்
ககன மேனியைக் கண்டன கண்களே! (74)

கண்ணுள் நின்ற ஒளியைக் கருத்தினை,
விண்ணுள் நின்று விளங்கிய மெய்யினை,
எண்ணி எண்ணி இரவும் பகலுமே
நண்ணு கின்றவர் நேர்தொழுந் தெய்வமே. (75)

தெய்வம் வேறுள தென்பவர் சிந்தனை
நைவர், என்பது நற்பர தற்பர
சைவ சிற்சிவனே! உனைச் சார்ந்தவர்
உய்வர் என்பதும் யானுணர்ந் தேனுற்றே! (76)

உற்ற வேளைக் குறுதுணை யாய்இந்தச்
சுற்ற மோநமைக் காக்குஞ் சொலாய்நெஞ்சே!
கற்றை வார்சடைக் கண்ணுதல் பாதமே
பற்ற தாயிற் பரசுகம் பற்றுமே! (77)

பற்ற லாம்பொருளே! பரம் பற்றினால்
உற்ற மாதவர்க் குண்மையை நல்குமே!
மற்றும் வேறுள மார்க்க மெலாமெடுத்
தெற்று வாய்மன மேகதி எய்தவே! (78)

---

## ஆரணம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆரண மார்க்கத் தாகம வாசி
அற்புத மாய்நடந் தருளுங்
காரணம் உணர்த்துங் கையுநின் மெய்யுங்
கண்கள்மூன் றுடையா! என்கண்ணே!
பூரண அறிவிற் கண்டிலம்; அதனால்
போற்றிஇப் புந்தியோ டிருந்து



தாரணி உள்ள மட்டுமே வணங்கத்
தமியனேன் வேண்டிடத் தருமே. (1)

இடம்ஒரு மடவாள் உலகனைத் தீன்றிட்
டெவ்வுல கத்தையும் ஈன்றும்
தடமுறும் அகிலம் அடங்குநாள்; அம்மை
தன்னையும் ஒழித் தவிண் எனவே,
படர்உறு சோதிக் கருணையங் கடலே!
பாயிருட் படுகரிற் கிடக்கக்
கடனதோ! நினைப்பு மறப்பெனுந் திரையைக்
கவர்ந்தெனை வளர்ப்பதுன் கடனே! (2

வளம்பெறு ஞான வாரிவாய் மடுத்து
மண்ணையும் விண்ணையுந் தெரியா
துளம்பெறுந் துரும்பொத் தாவியோ டாக்கை
ஆனந்த மாகவே அலந்தேன்;
களம்பெறு வஞ்ச நெஞ்சினர் காணுக்
காட்சியே! சாக்ஷியே! அறிஞர்
உளம்பெறுந் துணையே! பொதுவினில் நடிக்கும்
உண்மையே! உள்ளவா றிதுவே! (3

உள்ளமே! நீங்கா என்னை,வா வாவென்
றலப்பிலா ஆனந்த மான
வெள்ளமே! பொழியுங் கருணைவான் முகிலே!
வெப்பிலாத் தண்ணருள் விளக்கே!
கள்ளமே துரக்குந் தூவெளிப் பரப்பே!
கருவெனக் கிடந்தபாழ் மாயப்
பள்ளமே வீழா தெனக்கரை ஏற்றிப்
பாலிப்ப துன்னருட் பரமே! (4

பரம்பர மாகிப் பக்குவம் பழுத்த
பழஅடி யார்க்கருள் பழுத்துச்
சார்ந்தினி திரங்குந் தான கற்பகமே!
சோதியே! தொண்டனேன் நின்னை

இராதுநெஞ் சுடைந்து கண்டுயில் பொருமல்
இருந்ததும் என்கணில் இருட்டைக்
காராநின் கண்ணால் துயில்பெறல் வேண்டிக்
கருதினேன் கருத்திது தானே. (5)

கருத்தினுள் கருத்தாய் இருந்து, நீ உணர்த்தும்
காரணம் கண்டுசும் மாதான்
வருத்தம் அற்றிருந்து சுகம்பெறு வண்ணம்
வருந்தினேன்; மதியின்மை *தீர்ப்பாய்
ஒருத்தர் ஆர் உளப்பா டுணர்பவர் யாவர்?
உலகவர் பன்னெறி எனக்குப்
பொருத்தமோ சொல்லாய்? மௌனசற் குருவே!
போற்றிநின் பொன்னடிப் போதே! (6)

அடியெனும் அதுவும், அருளெனும் அதுவும்
அறிந்திடில், நிர்க்குண நிறைவும்,
முடிஎனும் அதுவும், பொருளெனும் அதுவும்
மொழிந்திடில் சுகமென மாயைக்
குடிகெட வேண்டில், பணியற நிற்றல்
குணமெனப் புன்னகை காட்டிப்
படிமிசை மௌனி யாகி, நீ யாளப்
பாக்கியம் என்செய்தேன் பரனே! (7)

என்செயல் இன்றி யாவும்நின் செயலென்
றெண்ணுவேன் ஒவ்வொரு காலம்
புன்செயல் மாயை மயக்கில்என் செயலாப்
பொருந்துவேன் அஃதொரு காலம்,
பின்செயல் யாது நினைவின்றிக் கிடப்பேன்;
பித்தனேன் நன்னிலை பெற, நின்
தன்செய லாக முடித்திடல் வேண்டும்
சச்சிதா னந்தசற் குருவே! (8)

* 'தீர்ப்பார்' என்றும் பாடமுண்டு.



குருஉரு வாகி, மௌனியாய் மௌனக்
கொள்கையை உணர்த்தினை; அதனால்,
கருஉரு வாவ தெனக்கிலை; இந்தக்
காயமோ பொய்யெனக் கண்ட
திருவுரு வாளர் அனுபவ நிலையுஞ்
சேருமோ ஆவலோ மெத்த
அருஉரு வாகி, அல்லவாய்ச் சமயம்
அளவிடா ஆனந்த வடிவே! (9)

வடிவிலா வடிவாய், மனதினை அனுகா
மார்க்கமாய், நீக்கருஞ் சுகமாய்,
மு[illegible]
மோனம்அல் லால், வழி யுண்டோ?
படிஇருள் அகலச் சின்மயம் பூத்த
பசுங்கொழுந் தை அடக்கியோர் கல்லால்
அடியிலே இருந்த ஆனந்த அரசே!
அன்பரைப் புரக்கும் அமுதே. (10)

## சொல்லற்கரிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சொல்லற் கரிய பரம்பொருளே! சுகவா ரிதியே! சுடர்க்
கொழுந்தே! - வெல்லற் கரிய மயலிலென்னை விட்டென் கொளித்
தாய் ஆகெட்டேன்; - கல்லிற் பசிய நாருரித்துக் கடுகில் பெரிய
கட்டுடைக்கும் - அல்லிற் கரிய அந்தகனார்க் காளாக் கினை (1)
யோ அறியேனே!

அறிவிற் கறிவு தாரகம்என் றறிந்தே அறிவோ டறியாமை
நெறியிற் புகா தோர்படித்தாய் நின்ற நிலையுந் தெரியாது
குறியற் றகண்டா நிதமயக் கோதில் அமுதே நினைக்குறுகிப்
பிறிவற் றிருக்க வேண்டாவோ! பேயேற் கினிநீ பேசாயே! (2)

பேசாஅநுபூ திலையடியேன் பெற்றுப்பிழைக்கப் பேருளால்
தேசோ மயந்தந் தினிஒருகால் சித்தந் திருளுந் தீப்பாவோ!
பாசா டவியைக் கடந்தஅன்பர் பற்றும் அகண்டப் பரப்பான
ஈசா! பொதுவில் நடமாடும் இறைவா! குறையா இன்னமுதே!

இன்பக் கடலில் புகுந்திடுவர்ன், இரவும் பகலும் தோற்றமில் - அன்பிற் கரைந்து கரைந்துருகி, அன்னே! அரசே! எனக்கூவிப்-பின்பும் றழுஞ்சேச் பென, விழிநீர் பெருக்கிப்பெருக்கிப் பித்தாகித் - துன்பக் கடல்விட் டகல் வேனோ!. சொரூபானந்தச் சுடர்க்கொழுந்தே! (4)

கொழுந்து திகழ்வெண் பிறைச்சடிலக் கோவே மன்றில் கூத்தாடற், - கொழுந்த சுடரே! இமயவரை என்தாய் கண்ணுக் கினியானே! - தொழுந்தெய் வமுநீ! குருவுநீ! துணையுநீ! தந்தை தாயுநீ! - அழுந்தும் பவநீ! நன்மையுநீ! ஆவி யாக்கை நீதானே! (5)

தானே அகண்டா காரமயந் தன்னில் எழுந்து பொதுநடஞ்செய் - வானே! மாயப் பிறப் பறுப்பான் வந்துன் னடிக்கே காங்கூப்பித், - தேனே! என்னைப் பருகவல்ல தெள்ளா ரமுதே! சிவலோகக், - கோனே! எதுஞ்சொல் நினதுசெயல் கொள்ளா தென்னோ கூறுயே! (6)

கூறு நின்ற இடக்கலக்குக் கும்பக் கூத்துள் உனைத்தருடு
மாறு நின்ற பாவியைநீ! வாவென் றழைத்தால் ஆகாதோ!
நீறர் மேனி முக்கணுடை நிமலா! அடியார் நினைவினிடை
ஊறப் பெருகும் பெருங்கருணை அரசே! என்னை ஆள்வானே!

வானே முதலாம் பெரும்பூதம் வகுத்துப் புரந்து மாற்றவல்ல, கோனே! என்னைப் புரக்குநெறி குறித்தா யிலையே! கொடியேனைத், - தானே படைத்திங் கென்னபலன்? தன்னைப் படைத்தாய் - உன்கருத்தை, - நானே தென்றிங் கறியேனே நம்பினேனென் கண்டருள்வாயே! (8)



கண்டார் கண்ட காட்சியுநீ! காணார் காணாக் கள்வனுநீ!
பண்டா ருயிர்நீ ஆக்கையுநீ! பலவாஞ் சமயப் பகுதியுநீ!
எண்டோள் முக்கண் செம்மேனி! எந்தாய்! நினக்கே எவ்வாறு
தொண்டாய்ப்பணிவர் அவர்பணிநீ கூட்டிக்கொள்வதெவ்வாறே!

கூட்டி யெனதென் றிடுஞ்சுமையைச் சுமந்தி, எனையுஞ் சுமையாளாக், - கூட்டிப் பிடித்து, வினைவழியே கூத்தாட் டினையே, நினதருளால், - வீட்டைக் கருதும் அப்போது வெளியாமுலக வியப்பனைத்தும், - வட்டுக் கடங்காச் சொப்பனம் போல், எந்தா யிருந்த தென்சொல்வேன்! (10)

---

## வம்பனேன்.

வம்பனேன் கள்ளங் கண்டு மன்னருள் வெள்ள சீய
உம்பர்பால் வுவல்செய்என் றுணர்த்தியே ... கோ! வானோர்
தம்பிரா னே! நீ செய்த தயவுக்குங் கைம்மா றுண்டோ?
எம்பிரான் உய்ந்தேன் உய்ந்தேன் இனிஒன்றுங் குறைவிலேனே!

குறைவிலா நிறைவாய், ஞானக் கோதில் ஆனந்த வெள்ளத்
துறையிலே படிந்து மூழ்கித் துளைந்து, நான் தோன்று வாறுள்
உறையிலே உணர்த்தி மோன வொள்சுடர் வைவாள் தந்த
இறைவனே! உனைப் பிரிந்திங் கிருக்கிலேன் இருக்கிலேனே! (2)

இருநிலம் ஆதி நாதம் ஈறதாம் இவை கடந்த
பெருநிலம் ஆய தூய பேரொளிப் பிழம்பாய் நின்றும்
கருதரும் அகண்டா னந்தக் கடவுள்நின் காட்சி காண
வருகவென் றழைத்தா லன்றி வாழ்வுண்டோ, வஞ்சனேற்கே!

வஞ்சனை அழுக்கா றாதி வைத்திடும் பாண்ட மான
நெஞ்சனை வலிதின் மென்மேல் நெக்குநெக் குருகப் பண்ணி,
அஞ்சலி செய்யுங் கையும் அருவிநீர் விழியு மாகத்
தஞ்சமென் றிரங்கிக் காக்கத் தற்பரா! பரம் உனக்கே. (4)

107
175860
125-12-1961

உனக்குநான் அடித் தொண்டாகி உன்னடிக் கன்பு செய்ய
எனக்குநீ தோற்றி யஞ்சேல் என்னும் நாளெந்த நாளோ!
மனத்திலே சங்கை தீர்ந்த மாதவர்க் கெண்டற் றோங்கும்
தனக்குநே ரில்லா ஒன்றே! சச்சிதா னந்த வாழ்வே! (5)

வாழ்வெனு மயக்கி என்னை வசஞ்செய்து மருட்டிப் பாழ்த்த
ஊழ்வினைப் பகுதி கெட்டிங் குன்னையுங் கிட்டு வேனோ!
தாழ்வெனுஞ் சமய நீங்கித் தன்மையுணர்ந் தோர்கட் கெல்லாம்
சூழ்வெளிப் பொருளே! முக்கண் சோதியே! அமரரேறே! (6)

ஏறுவாம் பரியா வோடை இருக்கலை உரிய வென்றும்
நாறுநற் சாந்த நீறு நஞ்சமே அமுதாக் கொண்ட
கூறுநற் குணத்தோய் உன்றன் குரைகழல் குறுகி னல்லால்
ஆறுமோ தாப சோபம் அகலுமோ வல்ல றானே! (7)

தானமுந் தவமும், யோகத் தன்மையும், உணரா என்பால்
ஞானமுந் தெவிட்டா இன்ப நன்மையு நல்கு வாயோ!
பானலங் கவர்ந்த தீஞ்சொல் பச்சிளங் கிள்ளை காண,
வானவர் இறைஞ்ச, மன்றுள் வயங்கிய நடத்தி னானே! (8)

நடத்தியில் உலகை யெல்லாம் நாதநீ நிறைந்த தன்மை
திடத்துடன் அறிந்தா னந்தத் தெள்ளமு தருந்தி டாதே
விடத்திரள் அனைய காம வெட்கையில் அழுந்தி மாயைச்
சடத்தினை மெய்யென் றெண்ணித் தளர்வதோ தனிய னேனே! (9)

தனிவளர் பொருளே! மாறாத் தண்ணருங் கருணை பூத்த
இனியநற் பதமே! முக்கண் எந்தையே! நினக்கன் பின்றி
கனிபெருங் குடிலங் காட்டு நயனவேல் கரிய கூந்தல்
வனிதையர் மயக்கி லாழ்ந்து வருந்தவோ வம்ப னேனே! (10)

## சிவன்செயல்.

சிவன்செய லாலே யாதும் வருமெனத் தேறேன்; நாளும்
அவந்தரு நினைவை எல்லாம் அ[illegible]



கவர்ந்துகொண் டிழுப்ப அந்தக் கட்டிலே அகப்பட் டையோ!
அவந்தனை ஈட்டி ஈட்டிப் பதைக்கின்றேன் பாவி யேனே! (1)

பாவியேன் இனியென் செய்கேன்! பரமனே! பணிந்துன் பாதம்
சேவியேன்; விழிநீர் மல்கச் சிவ! சிவ!! என்று தேம்பி
ஆவியே! நிறைய வந்த அமுதமே! என்னேன்; அந்தோ!
சாவிபோஞ் சமயத் தாழ்ந்து,சகத்திடைத் தவிக்கின் றேனே!(2)

இடைந்திடைந் தேங்கி மெய்புளகிப்ப, எழுந்தெழுந் தைய நின்சரணம், - அடைந்தனன் இனிநீ கைவிடேல் உனக்கே அபய மென் றஞ்சலி செய்துள், - உடைந்துடைந் தழுது சித்திரப் பாவை ஒத்து,நா அசைவற நிற்பத், - தொடர்ந்துநீ யெனையாட் கொள்ளுநாள் என்றோ! சோதியே! ஆதிநா யகனே!

ஆதியாய், நடுவாய், அந்தமாய்ப் பந்தம் யாவுமற் றகம் புற நிறைந்த, - சோதியாய்ச், சுகமாய் இருந்தஎம் பெருமான் தொண்டனேன் சுகத்திலே இருக்கப், - போதியா வண்ணங் கைவிடன் முறையோ! புன்மையேன் என்செய்கேன்! மனமோ, - வாதியா நின்ற தன்றியும், புலன்சேர் வாயிலோ டீயினுங் கொடிதே! (4)

வாயிலோர் ஐந்திற் புலனெனும் வேடர் வந்தெனை யீர்த்து, வெங் காமத் தீயிலே வெதுப்பி, - உயிரொடுந் தின்னச் சிந்தைநைந் துருகி, மெய்ம் மறந்து, - தாயிலாச் சேய்போல் அலைந்தலைப் பட்டேன்; தாயினுங் கருணையா மன்றுள், நாயகமாகி ஒளிவிடு மணியே! நாதனே! ஞானவா ரிதியே! (5)

ஞானமே வடிவாய்த் தேடுவார் தேடு நாட்டமே! நாட்டத்துள் நிறைந்த, - வானமே! எனக்கு வந்துவந் தோங்கு மார்க்கமே! மருளர்தா மறியா, - மோனமே! முதலே! முத்தி நல் வித்தே! முடிவிலா இன்பமே! செய்யுந், - தானமே தவமே! நின்னைநான் நினைந்தேன்; தமியனேன் தனைமறப் பதற்கே!

மறமலி உலக வாழ்க்கையே வேண்டும் வந்துநின் னன்பர் தம் பணியாம், - அறமது கிடைக்கில் அன்றியா னந்த அற்புத

நிட்டையி னிமித்தம், - அறவது வேண்டும் மௌனியாய் எனக்
குத் தாயகல் அருள்தரின் இன்னம், - பிறவியும் வேண்டும்;
யான்என நிற்கப் பெற்றவர் பெற்றிடும் பேறே! (7)

பெற்றவர் பெற்ற பெருந்தவக் குன்றே! பெருகிய கருணை
வாரிதியே! - நற்றவத் துணையே! ஆனந்தக் கடலே! ஞாதுரு
ஞானஞே யங்கள், - அற்றவர்க் கருத நட்புடைக் கலப்பே!
அனேகமாய் நின்னடிக் கன்பு, - கற்றதுங் கேள்வி கேட்டது
நின்னைக் கண்டிடும் பொருட்டன்றோ காணே. (8)

அன்பரால் வருக்கும் ஒளிநெறி காட்டும் அன்புடைச்
சோதியே! செம்பொன், - மன்றுண் முக்கண்ணுங் காளகண்
டமுமாய் வயங்கிய வானமே! என்னுள், - துன்றகலிருளைத்
தூர்த்திடு மதியே! துன்பமு மின்பமு மாகி, - நின்றவா தனை
யைக் கடந்தவர் நினைவே! நேசமே! நின்பரம் யானே! (9)

யானெனல் காணேன் பூரண நிறைவில், யாதினும் இருந்த
பேரொளியே! - நானென நிற்குஞ் சமத்துற வென்னைத் தன்ன
வன் ஆக்கவும் தகுங்காண், - வானென வயங்கி ஒன்றிரண்
டென்னு மார்க்கமாம் நெறிகடந்து, மாறாத்-தேனென ருசித்துள்
அன்பரைக் கலந்த செல்வமே! சிற்பர சிவமே! (10)

---

## தன்னையொருவர்.

தன்னை ஒருவர்க் கறிவரிதாய்த், தானே தானாய், எங்கும்
நிறைந் - துன்னற் கரிய பரவெளியாய், உலவா அமுதாய், ஒளி
விளக்காய், - என்னுள் கலந்தாய்; யானறியா திருந்தாய்;
இறைவா! இனியேனும் ; நின்னைப் பெறுமா றெனக்கருளாம்
நிலையைக் கொடுக்க நினையாயோ! (1)

நினையு நினைவுக் கெட்டாத நெறிபெற் றுணர்ந்த நெறியா
ளர்,-வினையைக் கரைக்கும் பரம இன்ப வெள்ளப் பெருக்கே!
நினதருளால், - மனைவி புதல்வர் அன்னைபிதா மாடு வீடென்



றிடுமயக்கம் - தனையு மறந்துன் றனைமறவாத் தன்மை வருமோ
தமியேற்கே! (2)

வரும்போம் என்னும் இருநிலைமை மன்றே தொருதன்
மைக்காகிக், - கரும்போ! தேனோ! முக்கனியோ! என்ன என்
னுள் கலந்தநலம், - தரும்பே ரின்பப் பொருளே! நின் தன்னை
நினைந்து நெக்குருகேன்; - இரும்போ! கல்லோ! மரமோ! என் (3)
இதயம் யாதென் றறியேனே!

அறியுந் தரமோ நானுன்னை! அறிவுக் கறிவாய் நிற்கை
யினால், - பிரியுந் தரமோ நீயென்னைப் பெம்மானே! பேரின்ப
மதாய்ச் - செறியும் பொருள்நீ, நின்னையன்றிச் செறியாப்
பொருள்நான் பெறும்பேற்றை, - நெறிநின் றொழுக விசாரித்தால் (4)
நினக்கோ இல்லை எனக்காமே.

எனதென் பதும்பொய்; யானெனல்பொய்; எல்லா மிறந்த
இடங்காட்டும் - நினதென் பதும்பொய்; நீயெனல்பொய்; நிற்கு
நிலைக்கே நேசித்தேன்; - மனதென் பதுமோ என்வசமாய் வாரா
தைய! நின்னருளோ - தனதென் பதற்கும் இடங்காணேன்; (5)
தமியேன் எவ்வா றுய்வேனே!

உய்யும் படிக்குன் திருக்கருணை ஒன்றைக் கொடுத்
தால் உடையாய்பாழ்ம் - பொய்யும் அவாவும் அழுக்காறும்
புடைபட் டோடும்; நன்னெறியாம் மெய்யும் அறிவும் பெறும்
பேறும் விளங்கும்; எனக்குன் அடியார்பாற் - செய்யும் பணி (6)
யுங் கைகூடும்; சிந்தைத் துயருந் தீர்ந்திடுமே!

சிந்தைத் துயர்என் றொருபாவி சினந்து சினந்து போர்
முயங்க, - சிந்தைக் கிடையாய்ச் சகவாழ்வை நிலையென் றுணர்ந்தே
நிற்கின்றேன்; எந்தப் படியுன் அருள்வாய்க்கும்? எனக்கெப்
படிநீ யருள்செய்வாய்? பந்தத் துயரற் றவர்க்கெளிய பரமானந் (7)
தப் பழம்பொருளே!

பொருளைப் பூவைப் பூவையரைப் பொருளென் றெண்
ணும் ஒருபாவி, இருளைத் தூர்த்திட் டொளிநெறியை என்னுட்

பதிப்ப தென்றுகொலோ! தெருளத் தெருள் அன்பர் நெஞ்சத் தித்தித் தூருகத் தெவிட்டாத, அருளைப் பொழியுங் குணமுகிலே! அறிவா னந்தத் தாரமுதே! (8)

ஆரா அமிர்தம் விரும்பினர்கள் அறிய விடத்தை அமிர் தாக்கும் போ னந்தச் சித்தனென்னும் பெரியோய்! ஆவிக் குரியோய்! கேள், காரார் சிறக் வலையினிடைக் கட்டுண்டிருந்த களைகளெல்லாம், ஊரா லொருநாள் கையுணவேற் றுண்டால் எனக் கிங் கொழிந்திடுமே! (9)

எனக்கென் றிருந்த உடல்பொருளும் யானும் நினவென் றிந்தவண்ணம், அனைத்தும் இருந்தும் இலவாக அருளாய் நில்லா தழிவழக்காய், மனத்துட் புகுந்து மயங்கவும்என் மதிக் குள் களங்கம் வந்ததென்னோ? தனக்கொன் றுவமை அறநிறைந்த தனியே! தன்னந் தனிமுதலே! (10)

---

## ஆசையெனும்.

ஆசையெனும் பெருங்காற் றூடிலவம்பஞ்செனவும்மன தலையுங்காலம் - மோசம்வரும்: இதனாலே, கற்றதுங்கேட்டதுந் தூர்ந்து, முத்திக்கான - நேசமும்நல் வாசமும்போய்ப், புலனாய் இல்கொடுமைபற்றி நிற்பர்; அந்தோ! - தேசுபழுத் தருள் பழுத்த பராபரமே! நிராசையின்றேல் தெய்வமுண்டோ? (1)

இரப்பான்அங் கொருவன்அவன் வேண்டுவகேட் டருள் செய்வன வச்சற் றேதான், - புரப்பான்தன் அருள்நாடி இருப்பதுபோல் எனக்குநிறை பொருளே கேளாய்! - மரப்பான்மை நெஞ்சினன்யான் வேண்டுவகேட் டிரங்கெனவே மௌனத் தோடந் - தரப்பான்மை அருள்நிறைவில் இருப்பதுவோ பராபரமே சச்சநிட்டை! (2)

சாட்டையின் பம்பர சாலம் போல்எல்லாம்
ஆட்டுவான் இறையென அறிந்து நெஞ்சமே!
தேட்டம்ஒன் றறஅருள் செயலில் நிற்றியேல்,
விட்டறந் துறவறம் இரண்டும் மேன்மையே. (3)



தன்னெஞ்சம் நினைப்பொழியா தறிவிலிகாண், ஞான மெனுந் தன்மை பேச - உன்னெஞ்சம் மகிழ்ந்தொருசொல் உரைத் தனையே! அதனை உன்னி உருகேனையா! - வன்னெஞ்சோ! இரக் காத மரநெஞ்சோ! இரும்புநெஞ்சோ! வைரமான - கன்னெஞ் சோ! அலதுமண்ணாங் கட்டிநெஞ்சோ! எனதுநெஞ்சங் கரு திற்றேனே. (4)

வாழி சோபனம் வாழி! நல் லன்பர்கள்
சூழ வந்தருள் தோற்றமுஞ் சோபனம்!
ஆழி போலருள் ஐயன் மௌனத்தால்
ஏழை யேன்பெற்ற வின்பமுஞ் சோபனம்! (5)

கொடுக்கின் றோர்கள்பால் குறைவையா தியானெனுங் குதர்க்
விடுக்கின் றோர்கள்பாற் பிரிகிலாது உள்ளன்பு விடாதே [கம்
அடுக்கின் றோர்களுக் கிரங்கிடுந் தண்டமிழ் அலங்கல்
தொடுக்கின் றோர்களைச் சோதியா ததுபராஞ் சோதி. (6)

உலக மாயையி லேஎளி யென்றனை உழல விட்டனை யே உடையாய்! அருள் - இலகு பேரின்ப வீட்டினில் என்னையும் இருத்தி வைப்பதெக் காலஞ்சொலாய்? எழில் - திலக வாள்நுதல் பைந்தொடி கண்இணை தேக்க நாடகஞ் செய்தடி யார்க்கெலாம் அலகி லாவினை தீர்க்கத் துசங்கட்டும் அப்பனே! அருளானந் தச் சோதியே! (7)

முன்னிலைச்சுட் டொழிதினைப் பலகாலும் நெஞ்சே! நான் மொழிந்தேனே! நின் - றன்னிலையைக் காட்டாதே; என்னை ஒன்றாச் சூட்டாதே; சாணுன் போந்த - அந்நிலையே நிலை; அந்த நிலையிலே சித்திமுத்தி யனைத்துந் தோன்றும்; நன்னிலையி தன்றியிலை; சுகமென்றே சுகர்முதலோர் நாடினாரே! (8)

அத்துவிதம் பெறும்பேறென் றறியாமல், யானெனும் பேய் அகந்தை யோடு - மத்தமதி யினர்போல மனங்கிடப்ப, இன்னமின்னம் வருந்துவேனோ! - சத்தபரி பூரணமாய், நின் மலமாய், அகண்டிதமாய்ச், - சொரூபா னந்தச் - சத்திகள்நீங் காதவணம் தன்மையாய், அருள்பழுத்துத் தழைத்த ஒன்றே! ()

தந்தை தாயுநீ! என்னுயிர்த் துணையுநீ! சஞ்சல மதுதீர்க்க
வந்த தேசிக வடிவுநீ! உனையலான் மற்றொரு துணைகாணேன்;
அந்தி மாதியும் அளப்பருஞ் சோதியே! ஆதியே! அடியார்தம்
சிந்தை மேவிய தாயுமா னவனெனுஞ் சிரகிரிப் பெருமானே!(10)

காதில் ஓலையை வரைந்துமேற் குமிழையுங் கறுவிவேள் கருநீலப் - போது போன்றிடும் கண்ணியர் மயக்கிலெப் போதுமே தளராமல், - மாது காதலி பங்கனை அபங்கனை, - மாடமா ளிகைசூழுஞ் - சேது மேவிய ராமநா யகன்தனைச் சிந்தைசெய் மடநெஞ்சே! (11)

அண்டமுமாய்ப், பிண்டமுமாய், அளவிலாத ஆருயிருக் கோருயிராய் அமர்ந்தாயானல் - கண்டவரார்? கேட்டவரார்? உன்னாலுன்னைக் காண்பதல்லால் என்னறிவால் காணப் போமோ! - வண்துளப மணிமார்பன் புதல்வனோடும் மனைவியொடுங் குடியிருந்து வணங்கிப் போற்றும் - புண்டரிக புரத்தினில் நாதாந்த மௌன போதாந்த நடம்புரியும் புனிதவாழ்வே! (12)

பொறியில் செறியும் புலக்களிறைப் புத்திக் கவரால் புகுத்திழுத்து, - மறுகிச் சுழலு மனக்குரங்கு மாளா வாளா இருப்பேனே, - அறிவுக் கறிவாய்ப் பூரணமாய் அகண்டானந்த மயமாகிப், - பிறிவற் றிருக்கும் பெருங்கருணைப் பெம்மானே! எம் பெருமானே! (13)

உரையுணர் விறந்து தம்மை உணர்பவர் உணர்வி னூடே
கரையிலா இன்ப வெள்ளங் காட்டிடு முகிலே! மாறாப்
பரையெனுங் கிரணஞ் சூழ்ந்த பானுவே! நின்னைப்பற்றித்
திரையிலா நீர்போற் சித்தந் தெளிவனோ சிறியனேனே! (14)

கேவல சகல மின்றிக் கிலேசொடு மேலாய் எங்கும்
மேவிய அருளின் கண்ணாய் மேவிட, மேலா மின்பம்
காவிட், இன்பா தீதத் தனியிடை இருத்தி வைத்த
தேவெனும் மௌனி செய்பொன் சேவடி சிந்தை செய்வாம்! (15)



நேற்றுளார் இன்று மாளா நின்றனர்; அதனைக் கண்டும்
போற்றிலேன் நின்னை அந்தோ! போக்கினேன் வீணே காலம்;
ஆற்றிலேன்; அகண்டானந்தம் அண்ணலே! அளவில் மாயைச்
சேற்றிலே இன்னம் வீழ்ந்து திளைக்கவோ சிறிய னேனே. (16)

போதம் என்பதே விளக்கொளியும்; அவித்தைபொய் இருளாம்;
நீதி லாவிளக் கெடுத்திருள் தேடவும் சிக்கா
தாத லால், அறி வாய்நின்ற விடத்தறி யாமை
ஏது மில்லையென் றெம்பிரான் சுருதியே இயம்பும்! (17)

சுருதி யே!சிவாக மங்களே! உங்களாற் சொல்லும்
ஒருத னிப்பொருள் அளவையீதென்னவா யுண்டோ!
பொருதி ரைக்கடல் நுண்மணல் எண்ணினும் புகலக்
கருத எட்டா நிறைபொருள் அளவையார் காண்பார்? (18)

மின்னைப் போன்றன அகிலமென் றறிந்துமெய்ப் பொருளாம்
உன்னைப் போன்றநற் பரம்பொருள் இல்லையென் றோர்ந்து
பொன்னைப் போன்றநின் போதங்கொண் டுன்பணி பொருந்தா
என்னைப் போன்றுள வறையர் ஐய! இங் கெவரே? (19)

தாயுந் தந்தையும் எனக்குற வாவதுஞ் சாற்றின்,
ஆயும் நீயும்நின் அருளும்நின் அடியரு மன்றோ?
பேய னென்றிரு வடியிணைத் தாமரை பிடித்தேன்
நாய னே!எனை ஆளுடை முக்கண்நா யகனே! (20)

காந்தமதை எதிர்காணில் கருந்தாது செல்லும்; அந்தக் காந்தத்தொன்று, - தேய்ந்தவிடம் எங்கேதான் அங்கேதான் சலிப்பறவும் இருக்குமாபோல், - சாந்தபதப் பரம்பொருளே! பற்றுபொருள் இருக்குமந்நாள் சலிக்குஞ்சித்தம்; - வாய்ந்த பொருள் இல்லையெனில் பேசாமை நின்றநிலை வாய்க்குமன்றே!

பொற்பு றுங்கருத் தேஅகமாய், அதிற் பொருந்தக்
கற்பின் மங்கைய ரொவிழி கதவுபோல் கவினச்
சொற்ப னத்தினுஞ் சோர்வின்றி இருந்தநான், சோர்ந்து
நிற்ப தற்கிந்த வினைவந்த வாறென்கொல்? நிமலா! (22)

வந்தவா றிந்த வினைவழி இதுவென மதிக்கத்
தந்தவா றுண்டோ? உள்ளுணர் வில்லை, அன்றித் தமியேன்
நொந்தவா றுகண் டிரங்கவு மில்லை; கற்ற நூலால்
எந்தவா றினித் தற்பரா! உய்குவேன் ஏழை? (23)

சொல்லாலும், பொருளாலும், அளவையாலும் தொடரவொண்ணு அருள்நெறியைத் தொடர்ந்துநாடி, - நல்லார்கள் அவையகத்தே இருக்கவைத்தாய்; நன்னர்நெஞ்சந் தன்நலமும் நணுகுவேனே!-இல்லாளி யாய்உலகோ டுயிரையின்றிட் டெண்ணரிய யோகினிக்கும் இவனே என்னக், - கல்லாலின் கீழிருந்த செக்கர் மேனிக் கற்பகமே! பராபரமே! கயிலை வாழ்வே! (24)

சாக்கிரமா நுதலில்இந் திரியம்பத்தும் சத்தாதி வசனாதி வாயுபத்தும், நீக்கமில் அந்தக்கரணம்புருடனோடு நின்றதுமுப் பானைந்து, நிலவுங்கண்டத் தாக்கியசொப் பனமதனில் வாயு பத்தும் அடுத்தனசத் தாதிவச னாதியாக,நோக்குகரணம்புருடனுடனேகூட் டுவல்வர்இரு பத்தைந்தா நுண்ணியோரே. (25)

சுழுத்திஇத யந்தனிற்பி ராணஞ்சித்தஞ் சொல்லரிய புருடனுடன் மூன்றதாகும்; - வழுத்தியநா பியிற்றுரியம் பிராணனோடு மன்னுபுரு டனுங்கூட வயங்கா நிற்கும்;- அழுத்திடுமூலந்தன்னிற் றுரியாதீதம்;அதனிடையே புருடனொன்றி அமரும் ஞானம் - பழித்திடும்பக் குவரறிவர்; அவத்தை ஐந்தில் பாங்குபெறக் கருவிநிற்கும் பரிசுதானே. (26)

இடத்தைக் காத்திட்ட சுவானெனப் புன்புலால் இறைச்சிச்
சடத்தைக் காத்திட்ட நாயினேன், உன்அன்பர் தயங்கும்
மடத்தைக் காத்திட்ட சேடத்தால் விசேடமாய் வாழ
விடத்தைக் காத்திட்ட கண்டத்தோய்! நின்னருள் வேண்டும்.

வாதனைப்பழக் கத்தினன் மனம்; அந்த மனத்தால்
ஓத வந்திடும் உரை; உரைப் படிதொழி லுளவாம்;
ஏதமம்மனம் மாயையென் றிடின்,கண்ட எல்லாம்
ஆதரஞ்செயாப் பொய்; அதற்கையமுண் டாமோ! (28)



ஐய! வாதனைப் பழக்கமே மனநினை வதுதான்
வைய மீதினில் பரம்பரை யாதினு மருவும்
மெய்யில் நின்றொளிர் பெரியவர் சார்வுற்று விளங்கிப்
பொய்ய தென்பதை யொருவிமெய் உணருதல் போதம். (29)

குலமி லான், குணங் குறியிலான், குறைவிலான், கொடிதாம்
புலமி லான்,தனக் கென்னவோர் பற்றிலான், பொருந்தும்
இலமி லான்;மைந்தர் மனைவியில் லான்எவன், அவன்சஞ்
சலமி லான்; முத்தி தரும்பர சிவனெனத் தகுமே! (30)

கடத்தை மண்ணென வுடைந்தபோ தோவிந்தக் கருமச்
சடத்தைப் பொய்யென விறந்தபோ தோசொலத் தருமம்;
விடத்தை நல்லமிர் தாவுண்டு, பொற்பொது வெளிக்கே
நடத்தைக் காட்டி, எவ்வுயிரையும் நடப்பிக்கு நலத்தோய்!(31)

நானெனவும் நீயெனவும் இருதன்மை நாடாமல், நடுவே சும்மா-தான்அமரு நிலைஇதுவே சத்தியஞ்சத் தியம்எனநீ தமியனேற்கு மோனகுரு வாகியுங்கை காட்டினையே! திரும்பவும் நான் முளைத்துத் தோன்றி, மானதமார்க் கம்புரிந்திங் கலைந்தேனே! பரந்தேனே! வஞ்சனேனே! (32)

தன்மயம், சுபாவம், சுத்தம், தண்ணருள் வடிவம், சாந்தம்,
மின்மய மான அண்ட வெளிஉரு வான மூர்த்தி,
என்மயம் எனக்குக் காட்டா தெனைஅப கரிக்கவந்த
சின்மயம் அகண்டா காரம்; தக்ஷிணா திக்க மூர்த்தம். (33)

சிற்ற ரும்பன சிற்றறி வாளனே தெளிந்தால்,
மற்ற ரும்பென மலரெனப் போதி வாகிக்
கற்றரும்பிய கேள்வியான் மதித்திடக் கதிச்சீர்
முற்ற ரும்பிய மௌனியாய்ப் பரத்திடை முளைப்பான். (34)

மயக்கு சிந்தனை தெளிவென இருநெறி வகுப்பால்,
நயக்கு மொன்றன்பா லொன்றிலை யெனல்நல் வழக்கே;
இயக்க முற்றிடும் மயக்கத்தில் தெளிவுறல் இனிதாம்;
பயக்க வல்லகோர் தெளிவுடையவர்க்கெய்தல் பண்போ! (35)

அருள்வடி வேழு மூர்த்தம் அவைகள்சோ பான மென்றே
சுருதிசொல் லியவாற் றுலே தொழுந்தெய்வ மெல்லாமொன்றே;
மருளெனக் கில்லை முன்பின் வருநெறிக் கிவ்வ ழக்குத் [னே!
தெருளின்முன் னிலையாம் உன்னைச் சேர்ந்தியான் தெளிகின்றே

எத்தனைப் பிறப்போ! எத்தனை இறப்போ! எளியனேற்
கிதுவரை யமைத்த - தத்தனை யெல்லாம் அறிந்தநீ அறிவை;
அறிவிலி அறிகிலேன்; அந்தோ! - சித்தமும் வாக்குந் தேகமு
நினவே சென்மமு மினியெனு லாற்று - வைத்திடிங் கென்னை
நின்னடிக் குடியா மறைமுடி யிருந்தவான் பொருளே! (37)

வான்பொரு ளாகி எங்குநீ யிருப்ப வந்தெனைக் கொடுத்
தநீ யாகா - தேன்பொருள் போலக் கிடக்கின்றேன்; முன்னை
இருவினை வாதனை யன்றோ? - நின்பொரு ளான அமிர்தமே!
நின்னைச் சிந்தையிற் பாவனை செய்யும் - நான்பொரு ளானேன்;
நல்ல நல்லரசே! நானிறந் திருப்பது நாட்டம். (38)

நாட்டமுன் றுடைய செந்நிற மணியே! நடுவுறு நாயக
விளக்கே! - கோட்டமில்குணத் தோர்க் கெளியநிர்க் குணமே!
கோதிலா வமிர்தமே! நின்னை - வாட்டமில் நெஞ்சங் கின்னா
மாச்சேர்த்து வாய்மடுத் தருந்தின னுங்கே - பாட்டளி நறவ
முண்டயர்ந் ததுபோற் பற்றயர்ந் திருப்பதெந் நாளோ! (39)

என்னுடை உயிரே! என்னுளத் தறிவே! என்னுடை
அன்பெனு நெறியாய்! - கன்னன்முக் கனிதேன் கண்டமிர் தென்
னக் கலந்தெனை மேவிடக் கருணை - மன்னிய உறவே! உன்னை,
நான் பிரியா வண்ணம்என் மனமெனுங் கருவி - தன்னது வழி
யற் றென்னுழைக்கிடப்பத் தண்ணருள் வரமதுவேண்டும். (40)

---

## எனக்கெனச் செயல்.

எனக்கெனச்செயல் வேறிலை, யாவும்இங் கொருநின்
தனக்கெனத்தகும் உடல்பொருள் ஆவியுந் தந்தேன்;



மனத்த கத்துள அழுக்கெலாம் மாற்றிஎம் பிரான்நீ
நினைத்த தெப்படி அப்படி அருளுதல் நீதம். (1)

உளவ றிந்தெலாம் நின்செயல் ஆமென உணர்ந்தோர்க்
களவில் ஆனந்தம் அளித்தனை, அறிவிலாப் புன்மைக்
களவு நாயினேற் கிவ்வணம், அமைத்தனை கருத்துத்
தளருந் தன்மைஇங் காரொடு புகலுவேன் தக்கோய்! (2)

என்னைத் தான்இன்ன வண்ணம் என்றறிகிலா ஏழை
தன்னைத் தானறிந் திடஅருள் புரிதியேல் தக்கோய்!
பின்னைத் தானின்றன் அருள்பெற்ற மாதவப் பெரியோர்
நின்னைத் தான்நிக ராமென வாழ்த்துவர் நெறியால். (3)

ஏதம் இன்றித் தன் அடியிணைக் கன்புதான் ஈட்டும்
காதல் அன்பர்க்குக் கதிநிலை ஈதெனக் காட்டும்.
போத! நித்திய! புண்ணிய! வெண்ணரும் புவன
நாத! தற்பர! நானெவ்வா றுய்குவேன் நவிலாய்! (4)

வேதம் எத்தனை அத்தனை சித்தினும் விளங்கும்
பாத! நித்திய! பரம்பர! நிரந்தர! பரம!
நாத! தற்பர! சிற்பர! வடிவமாய் நடிக்கும்
நீத! நிர்க்குண! நினையன்றி ஒன்றுநான் நினையேன். (5)

நெறிகள் தாம்பல பலவுமாய் அந்தந்த நெறிக்காம்
செறியுந் தெய்வமும் பலபல வாகவுஞ் செறிந்தால்
அறியுந் தன்மையிங் காருனை அறிவினால் அறிந்தோர்?
பிறியுந் தன்மைஇல் லாவகைக் கலக்கின்ற பெரியோய்! (6)

பெரிய அண்டங்கள் எத்தனை அமைத்ததிற் பிறங்கும்
உரிய பல்லுயிர் எத்தனை அமைத்தவைக் குறுதி
வருவ தெத்தனை அமைத்தனை அமைத்தருள் வளர்க்கும்
அரிய தத்துவ! எனக்கிந்த வண்ணமேன் அமைத்தாய்! (7)

கனம தேனும்நின் காரணந் தன்னையே கருத்தில்
உணரு மாதவர்க் கானந்த முதவினை யென்றும்

குணமி லாதபொய் வஞ்சனுக் கெந்தைநிற் குணமாம்
மணமி லாமலர்ப் பதந்தரின் யாருனை மறப்பார்? (8)

கன்னல் முக்கனி கண்டுதேன் சருக்கரை கலந்த
தென்ன முத்தியிற் கலந்தவர்க் கின்பமா யிருக்கும்
நன்ன லத்தநின் நற்பதந் துணையென நம்பச்
சொன்ன வர்க்கெனல் ஆங்கைம்மா றில்லையென் சொல்வேன்! ()

தந்தை தாய்தமர் மகவெனும் அவையெலாஞ் சகத்தில்
பந்த மாமென்றே அருமறை வாயினாற் பகர்ந்த
எந்தை நீயெனை இன்னம்அவ் அல்லலில் இருத்திச்
சிந்தை தான்றெளிந் தெவ்வணம் உய்வணஞ் செப்பாய்! (10)

துய்யன், தண்ணருள் வடிவினன், பொறுமையால் துலங்கும்
மெய்யன் என்றுனை ஐயனே யடைந்தனன்; மெத்த
நொய்யன்; நுண்ணிய அறிவிலன் ஒன்றைநூ றாக்கும்
பொய்யன், என்றெனைப் புறம்விடின், என்செய்வேன் புகலாய்!

ஒன்ற தாய்ப்பல வாயுயிர்த் திரட்கெலாம் உறுதி
என்ற தாயென்றும் உள்ளதாய் எவற்றினும் இசைய
நின்ற தாய்நிலை நின்றிடும் அறிஞ;என் நெஞ்சம்
மன்றதாய் இன்ப உருக்கொடு நடித்திடின் வாழ்வேன். (12)

தனியி ருந்தொரு சகசமே பொருந்திடத் தமியேற்
கினியி ரங்குதல் கடனிது சமயமென் இதயக்
கனிவும் அப்படி யாயின தாதலால் கருணைப்
புனித நீயறி யாததொன் றுள்ளதோ புகலாய்! (13)

திருந்து சீரடித் தாமரைக் கன்புதான் செய்யப்
பொருந்து நாள்நல்ல புண்ணியஞ் செய்யுநாள் பொருந்தா
திருந்த நாள்வெகு தீவினை இழைத்தநா ளென்றால்
அருந்த வாவுனைப் பொருந்துநாள் எந்தநாள் அடிமை! (14)

பின்னும் முன்னுமாய் நடுவுமா யாவினும் பெரிய
தென்னுந் தன்மையாய் எவ்வுயிர்த் திரளையு மியக்கி



மன்னுந் தண்ணருள் வடிவமே உனக்கன்பு வைத்துந்
துன்னும் இன்னலென் யானெனும் அகந்தையேன் சொல்லாய்?

மின்னை யன்னபொய் வாழ்க்கையே நிலையென மெய்யாம்
உன்னை நான்மறந் தெவ்வணம் உய்வணம் உரையாய்?
முன்னை வல்வினை வேறற முடித்தென்று முடியாத்
தன்னைத் தன்னடி யார்க்கருள் புரிந்திடுந் தக்கோய்! (16)

எம்ப ராபர! எம்முயிர்த் துணைவ! என் றிறைஞ்சும்
உம்பர் இம்பர்க்கும் உளக்கணே நடிக்கின்றாய் உன்றன்
அம்பொன் மாமலர்ப் பதத்தையே துணையென அடிமை
நம்பி னேன்இனிப் புரப்பதெக் காலமோ நவிலாய்! (17)

பாடி யாடிநின் றிரங்கிநின் பதமலர் முடிமேல்
சூடி வாழ்ந்தனர் அமலநின் அடியர்யான் றொழும்பன்
நாடி யேயிந்த வுலகத்தை மெய்யென நம்பித்
தேடி னேன்வெறுந் தீமையேன் என்னினிச் செய்வேன்! (18)

களவு வஞ்சனை காமமென் றிவையெலாங் காட்டும்
அளவு மாயையின் காரெனக் கமைத்தனர் ஐயா!
உளவி லேயெனக் குள்ளவா றுணர்த்தின்உன் அடிமை
வளரு மாமதி போன்மதி தளர்வின்றி வாழ்வேன்! (19)

வான நாயக! வானவர் நாயக! வளங்கூர்
ஞான நாயக! நான்மறை நாயக! நலஞ்சேர்
மோன நாயக! நின்னடிக் கன்பின்றி, முற்றுந்
தீன னாய்அகம் வாடவோ என்செய்வேன் செப்பாய்! (20)

ஏத மற்றவர்க் கின்பமே பொழிகின்ற இறையே!
பாத கக்கருங் கன்மனஞ் சோர்விலாப் பரிந்து
சூத கத்தனு யாகினும் இச்சைமேற் றோன்றும்
வாத னைக்கிட மாயினேன் எவ்வணம் வாழ்வேன்! (21)

தெளிவோ டமைதியா அறிகிலா அறிவிலான் றெரினும்
அளியி லானிவன் திருவருட் கயலென வறிந்தோ!

எளிய னுக்கினி என்செய்வேன் என்செய்வேன்! எல்லா
ஒளியு மாய்நிறை வெளியுமாய் யாவுமாம் உரவோய்! (22)

கன்னி னுண்மணி யென்னவே தொழும் அன்பர் கருத்துள்
நண்ணு கின்றநின் அருளெனக் கெந்தநாள் நணுகும்?
மண்ணும் விண்ணுமற் றுள்ளன பூதமு மாகிப்
பெண்ணும் ஆணுமாய் அல்லவாய் நிற்கின்ற பெரியோய்! (23)

சகமெ லாந்தனி புரந்தனை, தகவுடைத் தக்கோர்
அகமெ லாநிறைந் தானந்த மாயினை, அளவின்
மகமெ லாம்புரிந் தோரைவாழ் வித்தனை, மாறு
இகமெ லாமெனைப் பிறந்திடச் செய்ததென் எந்தாய்! (24)

ஏய்ந்த நல்லருள் பெற்றவர்க் கேவலாய் எளியேன்
வாய்ந்த பேரன்பு வளர்க்கவுங் கருணைநீ வளர்ப்பாய்
ஆய்ந்த மாமறை எத்தனை அத்தனை அறிவால்
தோய்ந்த பேர்கட்குந் தோன்றிலாத் தோன்றலாந் தூயோய்! ()

தக்க நின்னருள் கேள்வியோ சிறிதின்றித் தமியேன்
மிக்க தெய்வமே நின்னின்ப வெள்ளத்தில் வீழேன்
ஒக்க தாய்தந்தை மகவெனும் பாசக்கட் டுடனே
துக்க வெள்ளத்தில் ஆழ்கின்றேன் என்செய்வான் துணிந்தேன்!

பவம்பு ரிந்திடும் பாவியேற் கருள்நிலை பதியத்
தவஞ்செ யும்படித் தயவுசெய் தருள்வதே தருமம்
அவம்பு ரிந்திடார்க் கானந்த அமிர்தத்தை அளிக்க
நவங்கொள் தத்துவத் திரைபெறு கடலெனும் நலத்தோய்! (27)

உற்ற வர்க்கெலாம் மேல நில்லையென் றுனையே
பற்று கின்றனர் எந்தைநின் அடியர்யான் பாவி
முற்று மாயமாஞ் சகத்தையே மெய்யென முதலுள்
அற்றி ருந்திடத் தொழில்செய்வான் தனிநிக ரானேன். (28)

## மண்டலத்தின்.

மண்டலத்தின் மிசையொருவன் செய்த வித்தை அதோ என வும், வாரணாதி - அண்டமவை அடுக்கடுக்காய் அந்தரத்தில் நிறுத்துமவ தானம் போல, - எண்தருநல் அகிலாண்ட கோடி யைத்தன் அருள்வெளியில் இலக வைத்துக் - கொண்டுநின்ற அற்புதத்தை, எவராலும் நிச்சயிக்கக் கூடா ஒன்றை, (1)

ஒன்றிரண்டாய் விவரிக்கும் விவகாரங் கடந்தேழாம் யோக பூமி - நின்றதெளிந் தவர்பேசா மௌனநிய மத்தை, நிறை நிறைவைத், தன்னை - அன்றியொரு பொருளிலதாய் எப் பொருட்குந் தான்முதலாய் அசல மாகி - என்றுமுள இன்பத் தைத், தன்னொன்ற சாந்தபத வியற்கை தன்னை, (2)

பதமூன்றுங் கடந்தவர்க்கு மேலான ஞானபதப் பரிசு காட்டிச் - சதமாகி, நிராலம்ப சாக்ஷியதாய், ஆரம்பத் தன்மை யாகி, - விதமியாவுங் கடந்தவித்தை எனும்இருளைக் கீண்டெ ழுந்து விமல மாகி, - மதமாறுங் காணாத ஆனந்த சாகரத்தை மௌன வாழ்வை, (3)

வாழ்வனைத்துந் தந்தஇன்ப மாகடலை, நல்லமிர்தை, மணி யைப், பொன்னைத், - தாழ்வறஎன் னுளத்திருந்த தத்துவத் தைத், அத்துவித சாரந் தன்னைச், - சூழ்பெரும்பே ரொளியை, ஒளிபரந்த பரவெளியை, இன்பச் சுகத்தை மாறு - தேழுல குங் கலந்நின்றாய் நாயனாய், என்றுமாம் இயற்கை தன்னை, (4)

தன்னைஅறிந் தவர்தம்மைத் தானாகச் செய்தருளுஞ் சமர்த்தை, லோகம் - பின்னைநிகர்த் திடவழியாச் சொரூபானந் தச்சுடரை, வேத மாதி - என்னையறி வரிதென்னச் சமயகோ டிகள்இடைய றாத - பொன்னை, விரித்திடுமுலகத் தும்பரும் இம்பரும்பாவும் புனித மெய்யை, (5)

பரவரிய பரசிவமாய், அதுவெனலாய், நானெனலாய்ப், பாச சாலம் - விரவிநின்ற விசித்திரத்தை, ஐக்கபதத் தனி

நிருத்த விவேகந் தன்னை, - இரவுபகல் நினைப்புமறப் பெனுந்
தொந்த மறியார்க ளிதயம் வேதச் - சிரமெனவாழ் பராபரத்தை,
ஆனந்த நீங்காச் சிதாகா சத்தை, (6)

அத்துவித அநுபவத்தை, அனந்தமற்ற இன்னமின்
னம் அறியேம் என்னும் - நித்தியத்தை, நிராமயத்தை, நிர்க்
குணத்தைத், தன்னருளால் நினைவுக் குள்ளே - வைத்துவைத்
துப் பார்ப்பவரைத் தானாக நாந்நாளும் வளர்த்துக் காக்குஞ் -
சித்தினை, மாத் தூவெளியைத், தன்மயமாம் ஆனந்தத் தெய்வந்
தன்னை, (7)

தன்னிலே தானாக நினைந்துகனிந் தவிழ்ந்துசுக சமாதி
யாகப், - பொன்னிலே பணிபோலும் மாயைதரு மனமே! உன்
புரைகள் தீர்ந்தாய் - என்னினா யான்பிழைப்பேன்; எனக்கினி
யார் உன்போல்வார்? இல்லை யில்லை; - உன்னிலோ திருவருளுக்
கொப்பாவாய், என்னுயிர்க்கோர் உறவு மாவாய். (8)

உறவுடலை எடுத்தவரிற் பிரமநிலை யெனுமுடலை ஒழிந்து
தள்ளற் - கறவுமரி தரிதன்றோ? இகபரமும் உன்னையன்றி யாவ
துண்டோ? - வறிதினுன்னை அசத்தென்பவ் வழக்கன்று; சத்
தெனவும் வாழ்த்து வேனென்; - சிறுமைகெடப் பெருமையின்
நின்றென்மதே யத்தினிநீ செல்லல் வேண்டும். (9)

வேண்டியநாள் என்னோடும் பழகியநீ எனைப்பிரிந்த விசா
ரத் தாலே - மாண்டுகிடக் கினும்அந்த கல்லையாயும் பூரணமா
வணக்கஞ் செய்வேன்; ஆண்டகுரு மௌனிதன்னால் யானென
தற் றவனருளா னாவேன்; பூவிற்; - காண்டகஎன் சித்திமுத்தி
எனக்குண்டாம்; உன்னாலென் கவலை தீர்வேன். (10)

தீராத என்சனன வழக்கெல்லாந் தீருமிந்தச் செனனத்
தோடே; - யாரேனும் அறிவரிய சிவன்முத்தி உண்டாகும்;
ஐய! ஐயோ! - காரேனுங் கற்பகப்பூங் காவேனும் உனக்கு
மவைகாட்டப் போமோ? - பாராதி யாகஎழு மண்டலத்தில்
நின்பெருமை பகரலாமே! (11)

## பாயப்புலி.

பாயப் புலிமுனை மான்கன்றைக் காட்டும் படியதில
மாயைப் பெரும்படைக் கேயிலக் காளனை வைத்தனையோ!
நீயெப் படிவருத் தாலுநன் றே;நின் பெருங்கருணை
தாயொத் தடியர்க் கருள்சச்சி தானந்த தற்பரமே! (1)

தற்பர மாஞ்சிற் பரமாகி மன்றந் தனினடித்து
நிற்பரம் பொருகன் மால்பணி நீதரென் நெஞ்சகமாம்
கற்பரந் தாங்கு கரைந்திட வானந்த காட்சிநல்கும்
பொற்பர மாயென் வினைக்கருந் தாதைப் பொடிசெய்ததே. (2)

செய்யுந் தவஞ்சற்று மில்லாத நானுன் திருவடிக்கே
தொய்யும் புதுமல ரிட்டுமெய் யன்பர் குழாத்துடனே
கையுஞ் சிரமிசைக் கூப்பிநின் றாடிக் கசிந்துருகி
உய்யும் படிக்கருள் செய்வதென் றோ?புலி யூர்அத்தனே! (3)

அத்தனைச், சிற்றம் பலவனை, என்னுயி ராகிநின்ற
சுத்தனைச், சுத்த வெளியா னவனைச், சுகவடிவாம்
நித்தனை, நித்த நிராதார மாகிய நின்மலனை,
எத்தனை நாள்செலு மோமன மேகண் டிறைஞ்சுதற்கே. (4)

கண்டாரு ளத்தினில் காலூன்றிப் பெய்யுங் கருணைமுகில்,
அண்டார் புரத்துக்கும், அன்பர்வினைக்கும் அசனி;தன்னைக்
கொண்டா டினார்முனங் கூத்தாடு மத்தன்றன் கோலமெல்லாம்
விண்டால்,அம் மாவொன்றுங் காணாது; வெட்ட வெறுவெளியே!

வெளியான நீஎன் மனவெளி யூடு விரவின், ஐயா!
ஒளியாருங் கண்ணும் இரவியும்போல்நின் றுலாவு வன்காண்
அளியாருங் கொன்றைச் சடையாட, அம்புலி யாடக்,கங்கைத்
துளியாட, மன்றுள் நடமாடும் முக்கண் சுடர்க்கொழுந்தே! (5)

கொழுந்தா துறைமலர்க் கோதையர் மோகக் குரைகடலில்
அழுந்தாத வண்ணநின் பாதப் புணைதந் தருள்வ தென்றோ?
எழுந்தா தரவுசெய் எம்பெருமானென் றிறைஞ்சி விண்ணோர்
தொழுந்தா தையே! வெண் பொடிபூத்த மேனிச் சுகப்பொருளே!

சகமாகும் ஞானந் திருமேனி யாதல்ல தொண்டர் தங்கள்
அகமே பொற்கோயில் எனமகிழ்ந் தேமன்று ளாடியகற்
பகமே! உன் பொன்னடி நீழல்கண் டாலன்றிப் பாவிக்கிந்தச்
செகமாயை யானஅ ருங்கோடை நீங்குந் திறமிலையே! (8)

நீங்கா துயிருக் குயிராகி நின்ற நினையறிந்தே
தூங்காமற் றூங்கினல் லாதே யெனக்குச் சுகமுமுண்டோ?
ஓங்கார மாமைந் தெழுத்தாற் புவனத்தை உண்டுபண்ணிப்
பாங்கா நடத்தும் பொருளே! அகண்ட பரசிவமே! (9)

சிவமாதி நான்முகக் கோஅந்த மாமறை செப்புகின்ற
நவமாயி லங்கிய ஒன்றே! இரண்டற்ற நன்மைபெறுந்
தவமே தரும்ஐம் புலப்பொறிக் கேயென் அறிவொல்லாப்
பவமே விளைக்கவென் றேவெளி மானெனப் பாய்ந்ததுவே! ()

ஆறோத் திலங்கு சமயங்க ளாறுக்கும் ஆழ்கடலாய்
வீறிப் பரந்த பரமான ஆனந்த வெள்ளமொன்று
தேறித் தெளிந்து நிலைபெற்ற மாதவர் சித்தத்திலே
ஊறிப் பரந்தண்ட கோடியெல் லாநின் றுலாவியதே. (11)

நடக்கினும் ஓடினும் நிற்கினும் வேறொரு நாட்டமின்றிக்
கிடக்கினும் செவ்வி திருக்கினும் நல்லருட் கேள்வியிலே
தொடங்குமென் நெஞ்ச மனமற்ற பூரணத் தொட்டிக்குள்ளே
முடக்குவன் யான்பர மானந்த நித்திரை மூடிடுமே. (12)

எண்ணாத தெண்ணிய நெஞ்சே! துயரொழி; என்னிரண்டு
கண்ணே! * உறங்குறங் கென்னுணை; முக்கண் கருணைப்பிரான்
தண்ணார் கருணை மௌனத்தி னால்முத்தி சாதிக்கலாம்;
நண்ணாத தொன்றில்லை; எல்லா நலமும் நமக்குளவே! (13)

நானென் றொருமுதல் உண்டென்ற நான்தலை நாணஎன்னுள்
தானென் றொருமுதல் பூரண மாகத் தலைப்பட்டொப்பில்
ஆனந்தந் தந்தென் னறிவ எல் லாமுண் டவசநல்கி
மோனந் தனைவிளைத் தால்,இனி யாது மொழிகுவதே! (14

* 'உறங்குக' என்றும் பாடமுண்டு.



தானந் தவஞ்சற்று மில்லாத நான்உண்மை தானறிந்து
மோனம் பெற்றுளெனக் கண்டிடச் சற்குரு மோனனுமாய்த்
தின்னன் றனக்கிங் கிரங்கினை யேஇனிச் சிந்தைக்கென்றும்
ஆனந்தந் தானல்ல வோபரமே! சச்சி தானந்தமே! (15)

எனக்கோர் சுதந்தரம் இல்லை அப்பா! எனக் கெய்ப்பில்வைப்பாய்
மனக்கோ தகற்றும் பரம்பொரு ளே! என்னை வாழ்வித்திடல்
நினக்கே பரம்; நின்னை நீங்காத பூரண நீள்கருணை
தனக்கே பரம்; இனிச் சும்மா விருக்கத் தகுமென்றுமே! (16)

இடம் பெறுவீடு, மின்னார், சேய், சகமும், இருநிதியும்,
உடம்பைவிட் டாருயிர் போம்போது கூடிபு டன்வருமோ?
மடம்பெறு மாயை மனமே! இனியிங்கு வா! மௌனி
திடம்பெற வைத்த மௌனஞ் சகாயந் தெரிந்துகொள்ளே! (17)

நாற்றச் சடலத்தை, ஒன்பது வாசல் நடைமனையைச்,
சோற்றுப் பூசையினை, மும்மல பாண்டத் தொடக்குறையை,
ஆற்றுப் பெருக்கன்ன கன்மப் பெருக்கை, அடர்கிருமிச்
சேற்றைத் துணையென்ற நாய்க்குமுண் டோகதி! சேர்வதுவே

பொய்யா ருலகம் நிலையல்ல கானல் புனலெனவே
மெய்யா அறிந்தென்ன? என்று விதனை விடப்படுமோ!
கையால் மௌனந் தெரித்தேகல் லால்நிழற் கண்ணிருந்த
ஐயா! அப்பா! என் அரசே! முக்கண் ணுடை யாரமுதே! (19)

ஆரா அமுதென மோனம் வகுத்துக்கல் லால்நிழற்கீழ்ப்
பேராது நால்வ ருடன்வாழ்முக் கண்ணுடைப் பேராசே!
நீரா யுருகஉள் என்புதந் தேசுக நிட்டையையீ.
தாரா விடின்,என் பெருமூச்சுத் தான்அத் தனஞ்சயனே! (20)

வாயுண்டு வாழ்த்த, மௌனஞ்செய் போது மௌனஅருள்
தாயுண்டு, சேயென்ன என்னைப் புரக்கச் சதானந்தமாம்
நீ உண்டு, நின்னைச் சரண்புக நானுண்டென் நெஞ்சம் ஐயா!
தீயுண் டிருந்த மெழுகல வோகதி சேர்வதற்கே! (21)

கல்லா லெறிந்தும்,கை வில்லா லடித்தும், கனிமதுரச்
சொல்லால் துதித்தும்,நற் பச்சிலை தூவியுந் தொண்டரின
மெல்லாம் பிழைத்தனர்; அன்பற்ற நான்இனி ஏதுசெய்வேன்!
கொல்லா விரதியர் நேர்நின்ற முக்கண் குருமணியே! (22)

முன்னிலைசுட் டொழி நெஞ்சே! நின்போத முளைக்கில், ஐயோ!
பின்னிலைச் சன்மம் பிறக்குங்கண் டாய்இந்தப் பேய்த்தனமென்?
தன்னிலை யேநில்லு; தானே தனிச்சச்சி தானந்தமாம்
நன்னிலை வாய்க்கும்; எண் சித்தியுங் காணும்; நமதல்லவே.(23)

சொல்லான் மௌன மௌனமென் றேசொல்லிச் சொல்
லிக்கொண்ட - தல்லால், மனமறப் பூரணநிட் டையில் ஆழ்ந்த
துண்டோ? கல்லாத மூடனினி என்செய் வேன்சகற் காரண
மாம் - வல்லாள ஞான மௌன சதானந்த மாகடலே! (24)

ஆரணம் ஆகமம் எல்லா முரைத்த அருள் மௌனம்,
காரணம் மூலம்கல் லால்அடிக் கேஉண்டு; காணப்பெற்றால்,
பார்அணங் கோடும் சுழல்நெஞ்ச மாகிய பாதரசம்
மாரண மாய்விடும்; எண்சித்தி முத்தியும் வாய்த்திடுமே. (25)

சித்த மௌனி, வடபான மவுனி,நந் தீபகுண்ட
சுத்த மவுனி எனுமூ வருக்குந் தொழும்பு செய்து
சத்த மவுன, முதல்மூன்று மௌனமும் தான்படைத்தேன்;
நித்த மவுனமல் லால்அறியேன் மற்றை நிட்டைகளே. (26)

கண்டேன் நினதருள்; அவ்வருளாய் நின்று காண்பதெல்லாம்
உண்டே அதுவும் நினதாக்கி னேன்;உவட் டாதஇன்பம்
மொண்டே அருந்தி இளைப்பாறி னேன்;நல்ல முத்திபெற்றுக்
கொண்டேன்; பரா பரமே! எனக்கேதுங் குறைவில்லையே! (27)

மேற்கொண்ட வாயுவும் கீழ்ப்பட்ட மூலத்து வெந்தழலைச்
சூற்கொண்ட மேக மென,ஊமைநின்று சொரிவதை என்
னால் கண்ட தன்று, மௌனோப தேசி அளிக்கையில் இப்
பாற்கண்டு கொண்டனன்; மேலே அமிர்தம் பருகுவனே! (28)



சொல்லால் தொடர்பொரு ளால்தொட ராப்பரஞ் சோதிநின்னை
வல்லாளர் கண்ட வழிகண்டி லேன்;சக மார்க்கத்திலும்
செல்லா தென் சிந்தை நடுவே கிடந்து திகைத்துவிம்மி
அல்லான தும்பக லானதும் வாய்விட் டரற்றுவனே. (29)

அறியாத என்னை அறிவாய் நீயென் றகம்புறமும்
பிறியா தறிவித்த பேரறிவாஞ் சுத்த பேரொளியோ!
குறியாத ஆனந்தக் கோவே! அமுதருள் குண்டலியோ!
சிறியேன் படுந்துயர் கண்டுகல் லால் நிழற் சேர்ந்ததுவே. (30)

எல்லாமுதவும் உனைஒன் றிற் பாவனையே னுஞ்செய்து
புல்லாயினும்ஒரு பச்சிலையாயினும் போட்டிறைஞ்சி
நில்லேன்; நல்யோக நெறியுஞ் செயேன்; அருள்நீதியொன்றும்
கல்லேன்; எவ்வாறு பரமே! பரகதி காண்பதுவே! (31)

ஒன்றுந்தெரிந்திட இல்லை என்னுள்ளத் தொருவ! எனக்
கென்றுந்தெரிந்த இவையிவைகேள், இரவும் பகலும்
குன்றும் குழியும் வனமும் மலையும் குறைகடலும்
மன்றும்மனையும் மனமாதிதத்துவ மாயையுமே. (32)

பழுதுண்டுபாவையர் மோகவிகாரப் பரவையிடை
விழுகின்றபாவிக்குந் தன்தாள்புணைபை வியந்தளித்தான்;
தொழுகின்றஅன்பர் உளங்களிகூரத் துலங்குமன்றுள்
எழுகின்ற ஆனந்தக் கூத்தன் என் கண்மணி என்னப்பனே!

அழுக்கார்ந்த நெஞ்சுடை யேனுக்கையா! நின்னருள் வழங்கின்
இழுக்காகு மென்றெண்ணி யோ இரங்காத இயல்புகண்டாய்;
முழுக்காதலாகி விழிநீர் பெருக்கிய முத்தரொனும்
குழுக்காணநின்று நடமாடுந் தில்லைக் கொழுஞ்சுடரே! (34)

ஆலம்படைத்த விழியார் கள்மால்கொண் டவர்செய் இந்திர
சாலம்படைத்துத் தளர்ந்தனை யேயென்றும் தண்ணருள் கூர்
கோலம்படைத்துக் கல்லாலடிக்கீழ்வைகுங் கோவுக்கன்பாம்,
காலம்படைக்கத் தவம்படையாதென்கொல்? கன்னெஞ்சமே!

சும்மாவிருக்கச் சுகம்சுகமென்று சுருதியெல்லாம்
அம்மா! நிரந்தரஞ் சொல்லவுங்கேட்டு, அறிவின்றியே
பெம்மான்மௌனி மொழியையுந்தப்பிஎன் பேதைமையால்
வெம்மாயக்காட்டில் அலைந்தேன்; அந்தோ! என்விதிவசமே!

தினமேசெலச்செல வாழ்நாளுநீக்கச் செகத்திருள்சேர்
பிணமேயெனவெளி கண்டேயிருக்கவும், பாசபந்த
இனமேதுணையென் றிருந்தோம் நமன்வரின் என்செய்குவோம்
மனமே! நம்போலவுண் டோசுத்தமூடர்இவ் வையகத்தே! ()

கடலெத்தனை? மலையெத்தனை? அத்தனைகன்மம்; அதற்
குடலெத்தனை? அத்தனைகடல் மண்மணல் ஒக்கும்; இந்தச்
சடலத்தை, நான்விடு முன்னேஉனைவந்து சார இருள்
படலத்தை மாற்றப் படாதோ? நிறைந்த பராபரமே! (38)

நினையுநினைவும் நினையன்றியில்லை; நினைந்திடுங்கால்,
வினையென்றொருமுதல் நின்னையல்லாது விளைவதுண்டோ?
தனையுந்தெளிந்துன்னைச்சார்ந்தோர்களுள்ளச்செந்தாமரையாம்
மனையும், பொன்மன்றமும் நின்றிடுஞ்சோதிமணிவிளக்கே!(39)

உள்ளத்தையும்இங் கெனையும்நின்கையினில் ஒப்புவித்தும்
கள்ளத்தைச்செய்யும் வினையால்வருந்தக் கணக்குமுண்டோ?
பள்ளத்தில்வீழும் புனல்போற்படிந்துன் பரமஇன்ப
வெள்ளத்தின்மூழ்கினர்க் கேளிதாம்இல்லை வித்தகனே! (40)

கள்ளம்பொருந்து மடநெஞ்சமே! கொடுங்காலர்வந்தால்
உள்ளன்பவர்கட் குண்டோ? இல்லையே! உலகென்ற அன்னை
வள்ளம்பொருந்தும் மலரடிகாண மன்றும்இன்ப
வெள்ளச்செம்பாதப் புணையே அல்லாற்கதி வேறில்லையே! (41)

தன்மயமான சுபாவத்தில்மெள்ளத் தலைப்படுங்கால்,
மின்மயமான சகம்யாதுரைத்தென்? வெளியில்வைத்த
சின்மயமுத்திரைக் கையேமெய்யாகத் தெளிந்தநெஞ்சே!
நின்மயமென்மயம் எல்லாம் நிறைந்த நி...... ! (42)



ஆயுங்கலையும் சுருதியுங்காண்டற் கரியவுனைத்
தோயும்படிக்குக் கருணைசெய்வாய்சுக வான்பொருளே!
தாயும்பிதாவும் தமருங்குருவும் தனிமுதலும்
நீயும்பரையுமென்றே உணர்ந்தேன்இது நிச்சயமே. (43)

அல்லும்பகலும் உனக்கேஅபயம் அபயமென்று
சொல்லுஞ்சொல்இன்னந்தெரிந்ததன்றோ! துதிப்பார்கள்மனக்
கல்லுங்கரைக்கும் மௌனா! உனது கருணைஎன்பால்
செல்லும்பொழுதல்லவோ செல்லுவேன் அந்தச் சிற்சுகத்தே ()

எல்லாஞ்சிவன்செயல் என்றறிந்தால், அவன் இன்னருளே
அல்லாற்புகலிடம் வேறுமுண்டோ? அது வேநிலையா
நில்லாயுன்றற்றமி யேற்குக்கதியுண்டு நீணிலத்தில்
பொல்லாமயக்கத்தில் ஆழ்ந்தாலென்ன? புகல்நெஞ்சமே! (45)

ஒளியே! ஒளியினுணர்வே! உணர்விலுவந்துபொங்கும்
களியே! களிக்குங் கருத்தே! கருத்தைக் கவளங்கொண்ட
வெளியே! வெளியின் விகாசகமே! சுகர் வீறுகண்டுக் [வனே?
தெளியேன்; தெளிந்தவரைப்போற்றிடேன்; என்னசெய்கு

மறக்கின்ற தன்மை இறந்தலோ பாகும்; மனமதொன்றில்
பிறக்கின்றதன்மை பிறந்தலோ பாகும் இப் பேய்ப்பிறவி
இறக்கின்ற எல்லைக் களவில்லையே! இந்தச்சன்மம் அல்லல்
மறக்கின்ற நாளெந்த நாள்? பரமே! நின் றொழும்பனுக்கே!

காட்டிய அந்தக் கரணமும், மாயைஇக் காயமென்று
சூட்டிய கோலமும், நாளு இயங்கத் துறையிதனுள்
நாட்டிய நான்தனக்கென்றோர் அறிவற்ற நான்இவற்றைக்
கூட்டிநின் றூட்டினையே பரமே! நல்ல கூத்திதுவே. (48)

பொல்லாத மாமர்க் கடமனமே! என்னைப் போலடுத்த
எல்லாத்தை யும்பற்றிக் கொண்டனையே! என்னை நின்மயமாய்
நில்லாய் அருள்வெளி நீகாணிற்பேன் அருள் நிட்டை ஒரு
சொல்லால் பகிர்ந்து பரிபூரணானந்தம் தோய்குவனே. (49)

வாராய் நெஞ்சே! உன்றன் துன்மார்க்கம் யாவையும் வைத்
துக்கட்டிங்-காரா யடிக்கடி சுற்றுகின்றாய் உன் அவலமதிக்-கோ
ராயிரம்புத்தி சொன்னாலும் ஓர்கிலை; ஓகெடுவாய் - பாராய்
உனைக்கொல்லுவேன்; வெல்லுவேன் அருட் பாங்குகொண்டே.

மாதத்திலே ஒரு திங்களுண் டாகி மடிவதைநின்
போதத்தி லேசற்றும் வைத்திலை யேவெறும் புன்மைநெஞ்சே!
வேதத்திலே, தர்க்க வாதத்தி லேவிளங்காது; விந்து
நாதத்தி லேயடங் காதந்த வான்பொருள் நாடிக்கொள்ளே. (51)

எங்கும்வியாபிநி றுணர்வாய் உனக்கென் இதயத்துளே
தங்குந்துயரந் தெரியாதவண்ணம் தடைசெய்ததார்?
அங்கங்குழைந்துள் ளுருகும்அன்பாளர்க் கணைகடந்து
பொங்குங்கருணைக் கடலே! சம்பூரண போதத்தனே! (52)

வையகமாதர் சுகத்தையும் பொன்னையும் மாயைமல
மெய்யையும்மெய்யென்று நின்னடியார்தம் விவேகத்தையும்
ஐயமில்வீட்டையும் மெய்ந்நூலையும்பொய்ய தாகஎண்ணும்
பொய்யர்தம் நட்பை விடுவதென்றோ? பரி பூரணமே! (53)

அளியுங்கனியொத் தருவினையாளுந் தயர்வுறுவேன்
தெளியும்படிக்குப் பரிபாககாலமுஞ் சித்திக்குமோ!
ஒளியுங்கருணையும் மாறாதஇன்பமும் ஓருருவாய்
வெளிவந்தடியர் களிக்கநின்றாடும் விழுப்பொருளே! (54)

அடையார்புரஞ்செற்ற தேவே! நின்பொன்னடிக் கன்புசற்றும்
படையாத என்னைப் படைத்திந்தப்பாரிற் படர்ந்தவினைத்
தடையாற்றளையிட்டு, நெஞ்சம்புண்ணாகத், தளரவைத்தாய்
உடையாய்உடைய படியன்றியான்செய்த தொன்றிலையே!

ஆடுங்கறங்குந் திரிகையும்போல அலைந்தலைந்து
காடுங்கரையுந் திரிவதல்லால், நின் கருணைவந்து
கூடும்படிக்குத் தவமுயலாத கொடியர், எமன்
தேடும்பொழுதென்ன செய்வார்? பரானந்த சிற்சுடரே! (56)



கற்றும்பலபல கேள்விகள்கேட்டுங் கறங்கெனவே
சுற்றுந்தொழில்கற்றுச் சிற்றின்பத்தூடு சுழலினென்னாம்?
குற்றங்குறைந்து குணமேலிடும்அன்பர் கூட்டத்தையே
முற்றுந்துணையென நம்புகண்டாய்சுத்த மூடநெஞ்சே! (57)

நீயெனநானென வேறில்லைஎன்னும் நினைவருளத்
தாயெனமோன குருவாகிவந்து தடுத்தடிமைச்
சேயெனக் காத்தனையே! பரமே! நின் திருவருளுக்
கேயென்னசெய்யுங்கைம் மாறுளதோகத்த வேழையனே? (58)

ஆத்திரம்வந்தவர் போலலையாமல், அரோகதிட-
காத்திரந்தந்தென்னை யேஅனைபோலுங் கருணைவைத்திம்
மாத்திரமுன்னின் றுணர்த்தினையே மவுனா! இனிநான்
சாத்திரஞ்சொன்ன படி-இயமாதியுஞ் சாதிப்பனே. (59)

---

## உடல்பொய்யுறவு.

---

நேரிசை வெண்பா.

உடல்பொய் உறவாயின், உண்மை உறவாகக்
கடவாரார்? தண்ணருளே கண்டாய் - திடமுடனே
உற்றுப்பார் மோனன் ஒருசொல்லே உண்மை; நன்றாப்
பற்றிப்பார், மற்றவெல்லாம் பாழ். (1)

பாராதி பூதமெல்லாம் பார்க்குங்கால், அப்பாத்தின்
சீராக நிற்குந் திறங்கண்டாய் - நேராக
நிற்குந் திருவருளில் நெஞ்சே! யான் நிற்பதல்லால்
கற்குநெறி யாதினிமேற் காண்? (2)

மெய்யான தன்மை விளங்கினால், யார்க்கேனும்
பொய்யான தன்மை பொருந்துமோ? - ஐயாவே!
மன்னு நிராசைஇன்னம் வந்ததல்லை உன்னடிமை
என்னுநிலை எய்துமா றென்? (3)

அறியாமை மேலிட் டறிவின்றி நிற்கும்
குறியேற் கறிவென்ற கோலம் - வறிதேயாம்
நீயுணர்த்த நானுணரும் நேசத்தா லோஅறிவென்
றேனைக்கோர் நாமமிட்ட தே. (4)

ஏதுக்குச் சும்மா இருமனமே என்றுனக்குப்
போதித்த உண்மை எங்கே போகவிட்டாய்? - வாதுக்கு
வந்தெதிர்த்த மல்லரைப் போல், வாதாடி. ஞாயே, உன்
புந்தி என்ன? போதமென்ன? போ. (5)

சகமனைத்தும் பொய்யெனவே தானுணர்ந்தால், துக்க
சுகமனைத்தும் பொய்யன்றோ? சோரா - நிகபரத்தும்
விட்டுப் பிரியாத மேலான அத்துவிதக்
கட்டுக்குள் ஆவதென்றோ காண்! (6)

கற்கண்டோ! தேனோ! கனிரசமோ! பாலோ! என்
சொற்கண்டா தேதெனநான் சொல்லுவேன்? - நிற்கண்ட
வான மதிகாண மௌனி மௌனத்தளித்த
தானமதில் ஊறு மமிர்தம். (7)

கேட்டவுடன் சிந்தித்தல் கேடிலா மெய்த்தெளிவால்
வாட்டமறு உற்பவநோய் மாறுமோ? - நாட்டமுற்று
மெய்யான நிட்டையினை மேவினர்கட் கன்றோதான்
பொய்யாம் பிறப்பிறப்புப் போம். (8)

மாயா சகத்தை மதியாதார் மண்முதலாய்
ஆயான தத்துவத்தில் எய்துவரோ? - நேயாது
பூதிநிலை நிற்கப் பொருந்துவர்கள் அன்னவர்தம்
நீதியையே யோர்மனமே நீ! (9)

இகமுழுதும் பொய்யெனவே மெய்யுணர்ந்தால் ஆங்கே
மிகவளர வந்தஅருள் மெய்யே - அகநெகிழ்ப்
பாரீர் ஒருசொற் படியே அனுபவத்தைச்
சேரீர் அதுவே திறம். (10)



ஆரணங்கள் ஆகமங்கள் யாவுமே, ஆனந்த
பூரணமே உண்மைப் பொருளென்னும் - காரணத்தை
ஓராயோ? உள்ளுள்ளே உற்றுணர்ந்த லுண்மையினைப்
பாராயோ? நெஞ்சே! பகர். (11)

நேராய் அம் மௌனநிலை நில்லாமல், வாய்பேசி
ஆரா யலைந்தீர்; ஆ! கெடுவீர்; - தேரீர்;
திரையுந் திரையுநதிச் சென்னியனை நாவால்
கரையுங் கரையுமனக் கல். (12)

அற்ப மனமே! அகிலவாழ் வந்தனையும்
சொற்பனங்கண் டாய்உண்மை சொன்னேனுன்-கற்பனையோன்
நில்லா விட்டதே எனைச்சும்மா வைத்திருக்கக்
கல்லாய்நீ தானோர் கவி. (13)

ஏதும் திருவருளின் இச்சையாம் என்றென்றெப்
போதும் பொருந்தும் புனிதற்பால் - நீதுநெறி
செல்லுமோ? செல்லாதே! செல்லுமிடம் இன்பமலால்
சொல்லுமோ வேதத் தொனி? (14)

கல்லேறுஞ் சில்லேறுங் கட்டியே றும்போலச்
சொல்லேறப் பாழ்த்த துணைச்செவிகொண் - டல்லேறு
நெஞ்சனென நிற்கவைத்தாய்; நீதியோ! தற்பரமே!
வஞ்சனல்லேன்; நீயே மதி. (15)

அப்பொருளும் ஆன்மாவும் ஆரணநூல் சொன்னபடி
தப்பிலாச் சித்தென்றுஞ் சாதியினால் - எப்படியும்
தேரின் துவிதஞ் சிவாகமமே சொல்லுநிட்டை
ஆருமிடத் தத்துவித மாம். (16)

வேத முதலாய் விளங்குஞ் சிவவடிவாம்
போத நிலையில் பொருந்தாமல் - ஏதமிகும்
மோகாதி அல்லலிலே மூழ்கினையே நெஞ்சே! இத்
தேகாதி மெய்யோ தெளி! (17)

நோக்கற் கரிதான நுண்ணியவான் மோனநிலை
தாக்கற் குபாயஞ் சமைத்தபிரான் - காக்குமுயிர்
அத்தனைக்கும் நானடிமை யாதலினால், யானெனதென்
றித்தனைக்கும் பேசஇட மில். (18)

ஒன்றுமற நில்லென் றுணர்த்தியநம் மோனகுரு
தன்றுணைத்தாள் நீடூழி தாம்வாழ்க! - என்றென்றே
திக்கனைத்துங் கைகுவிக்குஞ் சின்மயராந் தன்மையர்க்கே
கைக்குவரும் இன்பக் கனி. (19)

மனத்தாலும் வாக்காலும் மன்னவொண்ணா மோன
இனத்தாரே நல்ல இனத்தார்; - கனத்தபுகழ்
கொண்டவரும் அன்னவரே; கூறரிய முத்திநெறி
கண்டவரும் அன்னவரே காண். (20)

கண்ணொளியே! மோனக் கரும்பே! கவலையறப்
பண்ணொளிக்கும் உள்ளொளியாம் மான்மையினை - நண்ணிட
சித்தம் இரங்கிலதென் சித்தந் தெளியாவே [வுன்
றித்தனைக்கும் ஆதரவும் இல். (21)

அறியாமை சாரின் அதுவாய் அறிவாம்
நெறியான போததுவாய் நிற்கும் - குறியால்
சதசத் தருளுணர்த்தத் தானுணரா நின்ற
விதமுற் றறிவெனும்பேர் மெய். (22)

குருலிங்க சங்கமமாக் கொண்ட திருமேனி
கருவொன்று மேனிநம்பாற் காட்டா - தருளொன்று
கண்டவர்க்கே ஆனந்தங் கண்டுகொள லாம்அலது
கொண்டவர்க்கிங் கென்னகிடைக் கும்! (23)

புலியின் அதளுடையான் பூதப் படையான்
பலியிரந்தும் எல்லாம் பறிப்பான் - மலிபுனல்சேர்
பொன்முடியான் முக்கண் புனிதன் சரண்புகுந்தோர்க்
கென்முடியா தேதுமுள தே. (24)



சொல்லுக் கடங்காச் சுகப்பொருளை நாமெனவே
அல்லும் பகலும் அரற்றுவதென்? - நல்லசிவ
ஞானமயம் பெற்றோர்கள் நாமில்லை என்பர்; அந்தோ!
மோனமய மான முறை. (25)

ஐயா! அருணகிரி! அப்பா! உனைப்போல
மெய்யாக ஓர்சொல் விளம்பினர்யார்? - வையகத்தோர்
சாற்றரிதென் றேசற்றார் தன்னனையாய் முக்கணெந்தை
நாற்றிசைக்குங் கைகாட்டி னான். (26)

காதற்றுப் போனமுறி கட்டிவைத்தால் ஆவதுண்டோ?
தீதற்ற காயமும்அச் செய்கையே - போதமாய்
நிற்பரல்லால் இச்சகத்தில் நேரார்கள் *நேர்ந்திடினும்
தற்பரமாக் கண்டிருப்பார் தாம். (27)

வெள்ளங் குலாவுசடை வெள்ளக் கருணையினன்
கள்ளங் குலாவுவஞ்சக் கள்ளனேன் - உள்ளத்தில்
இல்லனென்றால், அன்னவன்தான் எங்கும் வியாபகத்தான்;
அல்லனென்றுஞ் சொல்லவழக் காம். (28)

தத்துவப் பேயோடே தலையடித்துக் கொள்ளாமல்
வைத்த அருள்மௌன வள்ளலையே - நித்தமன்பு
பூணக் கருதுநெஞ்சு போற்றக் கரமெழும்பும்
காணத் துடிக்குமிரு கண். (29)

தொல்லைவினைக் கீடாய்ச் சுழல்கின்ற நானொருவன்
எல்லையிலா நின்கருணை எய்துவனோ? - வல்லவனும்
மோன குருவே! முழுதினையுந் தானுணர்ந்த
ஞான குருவே! நவில். (30)

மூன்றுகண்ணும் முத்தொழிலாம் மும்முதலாம் மூவுலகும்
தோன்றக் கருணைபொழி தோன்றலே! - ஈன்றஅன்னை

---

* 'நேரிடினும்' என்றும் பாடமுண்டு.

தன்னைப்போல் அன்பு தழைத்தோய்! ஒருதெய்வம்
உன்னைப்போல் உண்டோ உரை? (31)

நேசிக்குஞ் சிந்தை நினைவுக்குள் உன்னைவைத்துப்
பூசிக்குந் தானிறைந்து பூரணமாய் - யோசித்து
நின்றதல்லால் மோனா! நிருவிகற்ப நிட்டைநிலை
என்றுவரு மோவறியே னே! (32)

அறிவில் அறியாமை அற்றறிவாய் நின்று
பிறிவற ஆனந்தமயம் பெற்றுக் - குறியவிழ்ந்தால்
அன்றைக் குடல்வேண்டேன்; ஐயா! இவ் ஆக்கையையே
என்றைக்கும் வேண்டுவனே யான். (33)

உடலைப் பழித்திங் குணவுங் கொடாமல்
விடவிடவே நாடுவரோ? மெய்யைப் - படபடென
வேண்டுவேன் இந்தவுடல் மெய்யுணராப் பொய்யன் நான்
ஆண்டநீ தானே அறி. (34)

அறியாயோ என்னையுநீ? ஆண்டநீ சுத்த
வெறியால் மயங்கவும் ஏன் விட்டாய்? - நெறிமயங்கிக்
குன்றுஞ் செடியுங் குறுகுமோ ஐயாவே?
கன்றுகெட்டால் தாயருகே காண். (35)

வீறாக் குடற்சுமைகொண் டேனிருந்தேன் ஐயனே!
ஆதிக்க மோனம் அருட்டாயே! - சோதியாம்
மன்ன! நிருவிகற்ப ஆனந்த நிட்டையிலே
பின்னமற நில்லாத பின். (36)

பின்னும் உடற்சுமையாப் பேசும் வழக்கதனால்
என்னபலன் நாமுற் றிருந்தோமே? - அன்னதனால்
ஆனந்தம் தானேதா னாகும் எம்மையனே?
ஏனிந்தத் துன்பம் இனி? (37)

துன்பக் கடலில் துளைந்ததெல்லாந் தீர்ந்ததே
இன்பக் கடலில் இருமென்ன - அன்பிற்



கரைந்து கரைந்துருகிக் கண்ணருவி காட்ட
விரைந்துவரும் ஆனந்தமே! (38)

கரைந்து கரைந்துருகிக் கண்ணீர் ஆறாக
விரைந்தே நிருவிகற்பம் எய்த - நிரந்தரமும்
நின்னையே சிந்திக்க நீகொடுத்தாய் மோனா! நான்
என்னைமுழு துங்கொடுத்தே னே. (39)

அல்லும் பகலும்பே ரன்புடனே தானிருந்தால்
கல்லும் உருகாதோ! கன்னெஞ்சே! - பொல்லாத
தப்புவழி யேனினைந்தாய்? சந்ததமும் நீஇறந்த
எய்ப்பிலே ஆனந்தமே! (40)

கொடுத்தேனே என்னைக் கொடுத்தவுடன் இன்பம்
மடுத்தேனே நீடூழி வாழ்ந்தே - அடுத்தேனே
பெற்றேனே பெற்றுப் பிழைத்தேனே சன்மஅல்லல்
இற்றேனே ஏழையடி யேன். (41)

பெற்றோம் பிறவாமை பேசாமை யாயிருக்கக்
கற்றோம் எனவுரைக்கக் காரியமென்? - சற்றேனும்
நீக்கற்ற இன்ப நிலைபொருந்தி யேசற்று
வாக்கற்றால் பேசுமோ வாய்? (42)

காலன் தனைஉதைத்தான், காமன் தனையெரித்தான்,
பாலன் பசிக்கிரங்கிப் பாற்கடலை - ஞாலமெச்சப்
பின்னே நடக்கவிட்டான், பொருளை நாடாதார்க்
கென்னே நடக்கை இனி? (43)

விண்ணருவி மென்மேல் விளங்குவபோ லேயிரண்டு
கண்ணருவி வெள்ளமொடு கைகூப்பித் - தண்ணமிர்த
வெள்ளமே! ஆனந்த வெற்பே! எனத்தொழுவோர்
உள்ளமே ஞான ஒளி. (44)

பிள்ளைமதிச் செஞ்சடையான், பேசாப் பெருமையினான்,
கள்ளவிழும் பூங்கொன்றைத் தண்ணியான் - உள்ளபடி

கல்லாலின் கீழிருந்து கற்பித்தான் ஓர்வசனம்
எல்லாரும் ஈடேற வே. (45)

புல்லனைந்துந் தானே பொரமயங்கிச் சிந்தை
அலமந் துழலு மடிமை - நலமிகுந்த
சித்தான மோன சிவனே! நின் சேவடிக்கே
பித்தானால் உண்டோ பிறப்பு? (46)

நிறைகுடந்தான் நீர்கொளுமோ நிச்சயமா மோன
முறையுணர்ந்தார் யாதைத் முயல்வார்? - பிறையணிந்த
மிக்ககை லாயமலை வித்தகனே! வேதியனே!
செக்கரணி மேனியனே! செப்பு. (47)

துங்கமழு மானுடையாய்! சூலப் படையுடையாய்!
திங்களணி செஞ்சடையாய்! சேவுடையாய்! - மங்கையொரு
பாலுடையாய்! செங்கட் பணியாய்! என் சென்னியின்மேல்
காலுடையாய்! நீயே கதி. (48)

இனிய கருணைமுகில் எம்பிரான், முக்கட்
கனியமிர்த வாரியின்பக் கட்டி - தனிமுதல்வன்,
நித்தன், பரமன், நிமலன், நிறை வாய்நிறைந்த
சுத்தன்நமக் கென்றுந் துணை. (49)

நீதியாய்க் கல்லாலின் நீழல்கீ ழேயிருந்து
போதியா உண்மையெல்லாம் போதித்தான் - ஏதில்
சனகாதி யாய தவத்தோர்க்கு ஞான
தினகரனாம் மௌன சிவன். (50)

தேகச் செயல்தானுஞ் சிந்தையுட னேகுழையில்
யோகநிலை ஞானிகளுக் கொப்புவதோ? - மோகநிலை
அல்லலிலே வாழ்வாரோ? அப்பனே! நீயற்ற
எல்லையிலே சும்மா இரு. (51)

சும்மா இருக்கச் சுகஉதயம் ஆகுமே
இம்மாய யோகம்இனி ஏனடா? - தம்மறிவின்
சுட்டாலே ஆகுமோ? சொல்லவேண் டாங்கன்ம
நிட்டா! சிறுபிள்ளாய்! நீ. (52)

நீயற்ற அந்நிலையே நிட்டையதில் நீயிலையோ?
வாயற் றவனே மயங்காதே - போயற்
றிருந்தாலும் நீபோகாய்; என்றுமுள்ளாய்; சும்மா
வருந்தாதே இன்பமுண்டு வா. (53)

வாவாவென் றின்பம் வரவழைக்குங் கண்ணீரோ
டாவாஎன் றேயழுத அப்பனே! - நீவாடா
எல்லாம் நமக்கெனவே ஈந்தனையே ஈந்தபடி
நில்லாய்; அதுவே நிலை. (54)

நில்லாப் பொருளை நினையாதே; நின்னையுள்ளோர்
கொல்லாப் பொருட்டிரளைச் சொல்லாதே; - கல்லாத
சிந்தை குழைந்துசுகஞ் சேரக் குருவருளால்
வந்தவழி நல்ல வழி. (55)

வழியிதென் றும் அல்லா வழியிதென் றும் சொல்லின்
பழிபழியாம் நல்லருளால் பார்த்தோர் - மொழியுனக்கே
ஏற்றிருக்கச் சொன்ன அன்றே. எங்கும் பெருவெளியாம்
பார்த்தவிடம் எல்லாநீ பார். (56)

பாரனைத்தும்பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல்
ஆருந் துறக்கை அரிதரிது! - நேரே
மனத்துறவும் அப்படியே மாணு! இவற்றில்
உனக்கிசைந்த வாறென்றே யோர். (57)

ஓர்மலேஒருகால் உன்னுமல் உள்ளொளியைப்
பாராமல் உள்ளபடி பார்த்திருந்தால் - வாராதோ?
பத்துத் திசையும் பரந்தெழுந்தா னந்தவெள்ளம்
தத்திக் கரைபுரண்டு தான். (58)

தானான தன்மைவந்து தாக்கினால்; அவ்விடத்தே
வானாதி மாயை வழங்காவோ? - ஞானா! கேள்

உன்னுள்ளே தோன்று உறவாகி நின்றதென்
என்னுள்ளே என்றும் இரு. (59)

என்னை உன்னை இன்னதிது என்னாமல் நிற்குநிலை
தன்னை அருளென்ற தருணத்தில் - அன்னைபெற்ற
பிள்ளைக்குஞ் சொல்லாத பெற்றிகண்டாய் ஐயனே!
உள்ளத்தி னுள்ளே உணர். (60)

சொன்னவர்தாம் நிட்டை தொகுத்திரார் நிட்டையிலே;
மன்னினவர் போதியார்; மாமௌனன் - தன்னுள்
விருப்பாகக் கைகாட்டி மிக்க வடநீழல்
இருப்பான் நிருவிகற்பத் தே. (61)

இந்த நிருவிகற்பத் தெய்த இருக்கநிட்டை
சிந்தைநீ தேறுப்; செகமனைத்தும் - வந்ததொடர்ப்
பாடுகெட அன்றோ? ஓர் பாத்திரத்துக் காடலல்லால்
ஆடுவதேன் ஆட்டும் அவன். (62)

அவனே பரமும், அவனே குருவும்,
அவனே அகில மனைத்தும்; - அவனேதாம்
ஆனவரே சொன்னால் அவரே குருவெனக்கு
நான் அவனாய் நிற்பதெந்த நாள்? (63)

நாளவங்கள் போகாமல் நாடோறும் நம்தமையே
ஆளவந்தார் தாளின்கீழ் ஆட்புகுந்தாய் - மீளவுனைக்
காட்டாமல் நிற்குங் கருத்தறிந்தால் நெஞ்சே! உன்
ஆள்தான்நான் ஐயமில்லை யால். (64)

யான்தான் என அறவே இன்பநிட்டை என்றருணைக்
கோன்தான் உரைத்தமொழி கொள்ளாயோ? - தோன்றி
இழுக்கடித்தாய் நெஞ்சேநீ என்கலைகள் சோர
அழுக்கடிக்கும் வண்ணார்போ லாய். (65)

எங்குஞ் சிவமே இரண்டற்று நிற்கின் நெஞ்சே!
சங்குஞ் சுகநீ சலியாதே - அங்கிங்கென்



றெண்ணாதே; பாழி லிறந்து பிறந்துழலப்
பண்ணாதே; யானுன் பரம். (66)

மெய்யைப்பொய்யென்றிடவும் மெய்பணையாப்பொய்ந்நெஞ்சே!
பொய்யைத்தான் மெய்யெனவும் போகுமோ? - ஐயமறத்
தன்மயத்தை மெய்யெனவே சார்ந்தனையேல், ஆனந்தம்
என்மயமும் நின்மயமு மே. (67)

பூங்கா வனநிழலும், புத்தமுதும் சாந்தபதம்,
வாங்காத ஆனந்த மாமழையும் - நீங்காவாம்
சொல்லிறந்து மாண்டவர்போல் தாமௌன பூமியில் நான்
இல்லையென நின்ற இடம். (68)

இடம்வான நல்லபொருள் இன்பமெனக் கேவல்
அடங்காக் கருவி யனைத்தும் - உடனுதவ
மந்தார தாருவென வந்து மவுனகுரு
தந்தான் ஓர் சொற்கொண்டு தான். (69)

தானந் தவஞானம் சாற்றரிய சித்திமுத்தி
ஆனவைஎல் லாந்தாமே ஆகுமே - மோனகுரு
சொன்னவொரு சொல்லால் சுகமாய் இருமனமே
இன்னமய்க்க முனக் கேன்.? (70)

உன்னை உடலை உறுபொருளைத் தாவெனவே
என்னை அடிமைக் கிருத்தினன் - சொன்னவொரு
சொல்லை மறவாமல் தோய்ந்தால் நெஞ்சே! உன்னால்
இல்லை பிறப்பதெனக் கே. (71)

என்க்கும் உனக்கும் உறவில்லையெனத் தேர்ந்து
நினைக்கவரி தான இன்பநிட்டை - தனைக்கொடுத்தே
ஆசான் மவுனி அளித்தான் நெஞ்சே! உனையோர்
காசா மதியேனன் காண். (72)

ஆனந்த மோனகுரு வாம் எனவே என்னறிவின்
மோனந் தனக்கிசைய மாற்றியதால் - தேனுந்து

சொல்லெல்லாம் மோனம், தொழிலா தியுமோனம்,
ல்லாம் நின் மோன வடிவே. (73)

எல்லாமே மோனநிறை வெய்துதலால் எவ்விடத்தும்
நல்லார்கண் மோனநிலை நாடினார் - பொல்லாத
நானெனஇக் கொன்றை நடுவே முளைக்கவிட்டின்
கேனலைந்தேன் மோனகுருவே! (74)

மோன குருஅளித்த மோனமே! ஆனந்தம்
ஞான அருளுமது; நாளுமது - வானுறநி
நின்ற நிலையுமது; நெஞ்சப் பிறப்புமது;
என்றறிந்தேன் ஆனந்தமே. (75)

அறிந்த அறிவெல்லாம் அறிவன்றி யில்லை
மறிந்த மனமற்ற மவுனம் - செறிந்திடவே
காட்டினான் ஆனந்த காட்டிற் குடிவாழ்க்கை
கூட்டினான் மோன குரு. (76)

குருவாகித் தன்னருளைக் கூறுமுன்னே மோனா!
உருநீடுயிர்பொருளும் ஒக்கத் - தருதியென
வாங்கினையே வேறுமுண்மை வைத்திடவுங் கேட்டிடவும்
ஈங்கொருவ ருண்டோ இனி? (77

இனிய கருப்புவட்டை என்னுளில் இட்டான்
தனியிரத மாறாது நாளும் - தனியிருக்கப்
பெற்றிலேன்; மோனம் பிறந்தவன்றே மோனமல்லால்
கற்றிலேன் ஏதுங் கதி. (78

ஏதுக்குஞ் சும்மா இருநீ என்றுரைத்த
சூதுக்கோ தோன்றாத் துணையாகிப் - போதித்து
நின்றதற்கோ என்ஐயா! நீங்கிப் பிரியாமல்
கொன்றதற்கோ பேசாக் குறி. (79

குறியுங் குணமும்அறக் கூடாத கூட்டத்
தறிவறிவாய் நின்றுவிட ஆங்கே - பிறிவறவும்



சும்மா இருந்திச் சுகங்கொடுத்த மோனநின்பால்
கைம்மாறு நானொழிதல் காண். (80)

நான்தான் எனுமயக்கம் நண்ணுங்கால் என்னை
யான்தான் எனநிறைய மீட்டாய்நீ - ஊன்றாமல்
வைத்தமவு னத்தாலே மாய்ந்த மனம்இறந்து
துய்த்துவிடு ஞான சுகம். (81)

ஞானநெறிக் கேற்றகுரு நண்ணரிய சித்திமுத்தி
தானந் தருமந் தழைத்தகுரு - மானமொடு
தாயெனவும் வந்தென்னைத் தந்தகுரு என்சிந்தை
கோயிலென வாழுங் குரு. (82)

சித்துஞ் சடமுஞ் சிவத்தைவிட இல்லையென்ற
நித்தன் பரமகுரு நேசத்தால் - சுத்தநிலை
பெற்றோமே நெஞ்சே! பெரும்பிறவி சாராமல்
கற்றோமே மோனக் கரு. (83)

---

## ஏசற்ற அந்நிலை.

### கொச்சகக்கலிப்பா.

ஏசற்ற அந்நிலையே எந்தைபரி பூரணமாய்
மாசற்ற ஆனந்த வாரி வழங்கிடுமே
ஊசற் சுழல்போல் உலகநெறி வாதனையால்
பாசத்துள் செல்லாதே பல்காலும் பாழ்நெஞ்சே! (1)

பாழாகி அண்டப் பரப்பை எல்லாம் வாய்மடுத்தும்
ஆழாழி இன்பத் தழுந்தப் படியாயோ?
தாழாயோ? எந்தையருள் தாள்கீழ்நெஞ்சே! எனைப்போல்
வாழாது வாழ்ந்தழியா வண்ணம் இருப்பாயே. (2)

இருப்பாய் இருந்திடப்பே ரின்பவெளிக் கோமக்குக்
குருப்பார்வை அல்லாமல் கூடக் கிடைத்திடுமோ?
அருட்பாய் நமக்காக ஆளவந்தார் பொன்னடிக்கீழ்
மருட்பேயர் போலிருக்க வாகண்டாய் வஞ்சநெஞ்சே? (3)

வஞ்சமோ பண்டையுள வாதனையால் நீயலைந்து
கொஞ்சமுற்றாய் உன்னைக் குறைசொல்ல வாயுமுண்டோ ?
அஞ்சலஞ்ச லென்றிரங்கும் ஆனந்த மாக்கடற்கே
நெஞ்சமே ! என்போல நீயழுந்த வாராயோ ! (4)

வாரா வரவாய் வடநிழற்கீழ் வீற்றிருந்த
பூரண நம்மைப் புலப்படுத்த வேண்டியன்றோ
ஊராயோ ? நெஞ்சே ! உருகாயோ ? உற்றிருந்து
பாராயோ ? அவ்வுருவைப் பார்க்கநிறை வாய்விடுமே. (5)

வாயாதோ இன்பவெள்ளம், வந்துன் வழியாகப்
பாயாதோ ? நானும் பயிராய்ப் பிழையேனோ ?
ஓயாமல் உன்னி உருகுநெஞ்சே ! அந்நிலைக்கே
தாயான மோனகுரு சந்திக்க வந்திடுமே. (6)

வந்தவரை மறந்துலகாய் வாழ்ந்து கன்ம
பந்தமுற உன்னைப் படிப்பிக்கக் கற்றவர்யார் ?
இந்தமதி யேனுனக்கிங் கென்மதிகேள், என்றாலே
சந்தநெஞ்சே ! பாதத்திற் சாரின்இன்ப முண்டாமே. (7)

இன்பமயமாய் உலக மெல்லாம் நிறைப்பதற்குன்
அன்புநிலை என்பா ரதுநிலை அன்றியுண்டோ ?
உன்புலத்தை யூரினருட் கொப்பாவாய் நெஞ்சே !
தென்புலத்தா ரோடிருந்து செய்பூசை கொண்டருளே. (8)

அருளேயோர் ஆலயமாய் ஆனந்த மாயிருந்த
பொருளோ டியானிருக்கப் போயொளித்த நெஞ்சே !
மருள்தீர் முயற்கோடோ ? வான்மலரோ ? பேய்த்தேரோ ?
இருள்தீர நீயுறைந்த தெவ்விடமோ ? காணேனே ! (9)

எவ்விடத்தும் பூரணமாம் எந்தைபிரான் தன்னருளே
அவ்விடத்தே உன்னைநெஞ்சே ! ஆராயில் கண்டிலனே !
அவ்விடத்து மாயையிலே மாண்டனையோ ? அவ்விடமும்
செவ்விடமே; நீயுஞ் செனனமற்று வாழியவே ! (10)

## காடுங்கரையும்.

காடுங்கரையு மனக்குரங்கு கால்விட்டோட அதன்பிறகே
ஓடுந்தொழிலாற் பயனுளதோ ? ஒன்றாய்ப்பலவாய் உயிர்க்கு
ஆடுங்கருணைப் பரஞ்சோதி! அருளைப்பெறுதற் கன்புநிலை [யிராய்
தேடும்பருவம் இதுகண்டீர், சேரவாருஞ் செகத்தீரே ! (1)

சைவசமய மேசமயம் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டும்இந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலும் சமயநெறி புகுதவேண்டாம் முத்திதரும்
தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே ! (2)

காகமுறவ [illegible] ணக் கண்டீர்; அகண்டா காரசிவ [மாய்
போகமெனும்பே ரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரண
ஏகவுருவாய்க் கிடக்குதையோ! இன்புற்றிடநாம் இனியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே ! (3)

---

## எடுத்ததேகம்.

### கட்டளைக்கலிப்பா.

எடுத்த தேகம் பொருள் ஆவி மூன்றும் நீ
    ஏனக்கொண் டில்லை எனமோன நன்னெறி
கொடுத்த போது, கொடுத்ததன் றோபினும்
    குளறி நானென்று கூத்தாட மாயையை
விடுத்த வாறும், கண் ணீரொடு கம்பலை
    விலகு மாறும், என் வேட்கைப்ர வாகத்தைத்
தடுத்த வாறும், புகலாய் ? சிரகிரித்
    தாயு மான தயாபர மூர்த்தியே! (1)

நோயும் வெங்கலிப் பேயுந் தொடரநின்
    நாலிற் சொன்ன முறை இய மாதிநான்
தோயும் வண்ணம் எனைக்காக்குங் காவலும்
    தொழும்பு கொள்ளுஞ் சுவாமியும் நீகண்டாய்;

ஓயுஞ் சன்மம் இனியஞ்ச லஞ்சலென்
றுலகங் கண்டு தொழுவோர் உருவிலே
தாயுந் தந்தையு மானாய்! சிரகிரித்
தாயு மான தயாபர மூர்த்தியே! (2)

---

## முகமெலாம்.

முகம் எலாங்கணீர் முத்தரும் பிடச்,செங்கை முகிழ்ப்ப,
அகமெ லாங்குழைந் துநெக்க மாக,நல் லறிஞர்
இகமெ லாந்தவ மிழைக்கின்றார்; என்செய்கோ ஏழை?
சகமெ லாம்பெற நல்லரு ளுருவாய்ச் சமைந்தோய்! (1)

---

## திடமுறவே.

கொச்சகக்கலிப்பா.

திடம் உறவே நின்னருளைச் சேர்ந்தென்னைக் காத்தாளக்
கடனுனக்கென் றெண்ணி,நின்னைக் கைகுவித்தோ னானலனோ?
அடைவுகெட்ட பாழ்மாயை ஆழியிலே இன்னமல்லல்
படமுடியா தென்னையிப் பற்றே பராபரமே! (1)

ஆராமை கண்டிங் கருட்குருவாய் நீயொருகால்
வாராயோ? வந்து வருத்தமெல்லாந் தீராயோ?
பூராய மாகஅருள் பூரணத்தில் அண்டமுதல்
பாராதி வைத்த பதியே! பராபரமே! (2)

வாழாது வாழஉனை வந்தடைந்தோர் எல்லாரும்
ஆழாழி என்னஅரு ளானார்; அழுக்காற்றோ
டேழா யெனவுலக மேசும்இனி நானொருவன்
பாழாகி வாழமுகம் பார்நீ பராபரமே! (3)

உள்ளத்தி னுள்ளே ஒளித்தென்னை ஆட்டுகின்ற
கள்ளக் கருணையையான் காணுநா ளாமோ?
வெள்ளத்தை மாற்றி விடக்குண்பார் கஞ்சூட்டும்
பள்ளத்தில் மீன்போல் பதைத்தேன் பராபரமே! (4)



வாவிக் கமலமலர் வண்டாய் அவண்டுஅவண்
டாவிக்கு நின்றுனைக் கன்புவைத்தார்க் கஞ்சலென்பாய்;
பூவிற்கும் வான்கடையிற் புல்விற்போர் போலொன்றைப்
பாவிக்க மாட்டேன்; பதியே! பராபரமே! (5)

விண்ணூறு வெற்பின் விழுந்தாங் கெனமார்பில்
சண்ணூறு பாய்ச்சிடுமென் காதல்வெள்ளங் கண்டிலையோ?
தண்ணூறு சாந்தபதத் தற்பரமே! நால்வேதப்
பண்ணூறு மின்பப் பதியே! பராபரமே! (6)

கூடியநின் னடியார் கூட்டமென்றோ வாய்க்குமென
வாடியஎன் நெஞ்சமுக வாட்டமுநீ கண்டிலையோ?
தேடியநின் னருளைத் திக்கனைத்துங் கைகுவித்துப்
பாடியநான் கண்டாய் பதியே! பராபரமே! (7)

நெஞ்சத்தி னூடே நினைவாய், நினைவூடும்
அஞ்சலென வாழும்என தாவித் துணைநீயே!
சஞ்சலமாற் றினை;இனிமேற் றுய்க்குபசா ரம்புகன்று
பஞ்சரிக்க நானார்? பதியே! பராபரமே! (8)

புத்திநெறி யாகவுனைப் போற்றிப் பலகாலும்
முத்திநெறி வேண்டாத மூடனேன்; ஆ! கெடுவேன்
சித்திநெறிக் கென்கடவேன்? அடியார்க் கேவல்செயும்
பத்திநெறிக் கேனுமுகம் பார்நீ பராபரமே! (9)

கண்டறியேன், கேட்டறியேன், காட்டுநினை யேஇதயங்
கொண்டறியேன், முத்திகுறிக்குந் தாழுமுண்டோ?
தொண்டறியாப் பேதைமையேன், சொல்லெனின் தொன்மை
பண்டறிவாய் நீயே பகராய் பராபரமே! {எல்லாம், (10)

## தன்னை.

### கொச்சகக்கலிப்பா.

தன்னை அறியத் தனதருளால் தானுணர்த்தும்,
மன்னைப் பொருளெனவே வாழாமல், பாழ்நெஞ்சே!
பொன்னைப், புவியை, மடப் பூவையரை, மெய்யெனவே
என்னைக் கவர்ந்திழுத்திட் டென்னபலன் கண்டாயே!

---

## ஆக்குவை.

ஆக்குவை மாயையாவும் நொடியினில் அதனைமாள
நீக்குவை, நீக்கமில்லா நினைப்பொடு மறப்புமாற்றிப்
போக்கொடு வரவுமின்றிப் புனிதநல் அருளானந்தம்
தாக்கவுஞ் செய்வாயன்றோ? சச்சிதா னந்தவாழ்வே!

---

## கற்புறுசிந்தை.

கற்புறு சிந்தைமாதர் கணவரை யன்றிவேறோர்
இற்புறத் தவரைநாடார்; யாங்களும் இன்பவாழ்வுன்
தற்பொறி யாகநல்குந் தலைவநின் னலதோர்தெய்வம்
பொற்புறக் கருதோங்கண்டாய், பூரணானந்தவாழ்வே!

முருந்திள நகையார்பாழ் முலைமுகந் தழுவிச்செவ்வாய்
விருந்தமிர் தெனஅருந்தி வெறிபட்டுக் காளாய்களும்
இருந்தலோ காயதப்பேர் இனித்தனு யிருந்தபாழை
பொருந்தவுங் கதி மேலுண்டோ? பூரணானந்தவாழ்வே!

தீதெலாம் ஒன்றும்வன்மை செறிந்திடப் படலம்போர்த்த
பாதகச் சிந்தைபெற்ற பத்தனுன் பாதநீழல்
ஆதர வடையவுள்ளன் பருள்கிலே; ஆயின், மற்றியார்,
போதனை செய்யவல்லார்? பூரணானந்தவாழ்வே!



நாதனை, நாதாந்த நண்பனை, நடுவாய்நின்ற
நீதனைக் கலந்துநிற்க நெஞ்சமே! நீவாவென்றால்,
வாதனை பெருக்கியென்னை வசஞ்செய்து மனந்துன்மார்க்க
போதனை செய்தல் நன்றோ? பூரணானந்தவாழ்வே! (4)

எண்ணிய எண்ணமெல்லாம் இறப்புமேற் பிறப்புக்காசை
பண்ணி, என் அறிவைஎல்லாம் பாழாக்கி, எனைப்பாழாக்குந்
திண்ணிய வினையைக்கொன்று சிறியனை உய்யக்கொண்டால்,
புண்ணியம் நினக்கேயன்றோ? பூரணானந்தவாழ்வே! (5)

பத்திநீ, பத்திக்கான பலனுநீ, பலவாச்சொலுஞ்
சித்திநீ, சித்தர்சித்தித் திறமுநீ, திறமார்மோன
முத்திநீ, முத்திக்கான முதலுநீ, மூதன்மையான
புத்திநீ, எனக்கொன்றுண்டோ? பூரணானந்தவாழ்வே! (6)

தாயினும் இனியநின்னைச் சரணென அடைந்தசேயேன்
பேயினுங் கடையனாகிப் பிதற்றுதல் செய்தனன்றோ?
தீயிடை மெழுகாய்நொந்தேன், தெளிவிலேன் வீணேகாலம்
போயின தாற்றகில்லேன், பூரணானந்தவாழ்வே! (7)

---

## மலைவளர்காதலி.

பதியுண்டு, நிதியுண்டு, புத்திரர்கள் மித்திரர்கள்
பக்கமுண் டெக்காலமும்
பவிசுண்டு, தவிசுண்டு, திட்டாந்த மாகயம
பட்டரெனுந் திமிரமணுகாக்
கதியுண்டு, ஞானமாங் கதிருண்டு, சதுருண்டு,
காயசித் திகளுமுண்டு,
கறையுண்ட கண்டர்பால் அம்மைநின் தாளில்
கருத்தொன்று முண்டாகுமேல்,
நதியுண்ட கடலெனச் சமயத்தை யுண்டபர
ஞானவா னந்தவொளியே!

நாதாந்த ரூபமே! வேதாந்த மோனமே!
　　நானெனும் அகந்தைதீர்த்தென்
மதியுண்ட மதியான மதிவதன வல்லியே!
　　மதுசூதனன் தங்கையே!
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
　　வளர்காத லிப்பெ ணுமையே! (1)

தெட்டிலே, வலியமட மாதர்வாய் வெட்டிலே,
　　சிற்றிடையிலே, நடையிலே,
சேலொத்த விழியிலே, பாலொத்த மொழியிலே,
　　சிறுபிறை நுதற்கீற்றிலே,
பொட்டிலே, அவர்கட்டு பட்டிலே, புனைகந்த
　　பொடியிலே, அடியிலே, மேல்
பூரித்த முலையிலே, நிற்கின்ற நிலையிலே,
　　புந்திதனை நுழையவிட்டு,
நெட்டிலே அலையாமல், அறிவிலே, பொறையிலே,
　　நின்னடியர் கூட்டத்திலே,
நிலைபெற்ற அன்பிலே, மலைவற்ற மெய்ஞ்ஞான
　　நேயத்திலே, உனிருதாள்
மட்டிலே, மனதுசெல நினதருளும் அருள்வையோ!
　　வளமருவு தேவையரசே!
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
　　வளர்காதலிப்பெ ணுமையே!

பூதமுத லாகவே நாதபரி யந்தமும்
　　பொய்யென் றெனைக்காட்டி, என்
போதத்தின் நடுவாகி, அடியிறு தியில்லாத
　　போதபூ ரணவெளிக்குள்
ஏதுமற நில்லென் றுபாயமா வைத்து, நினை
　　யெல்லாஞ்செய் வல்லசித்தாம்
இன்பவுரு வைத்தந்த அன்னையே! நின்னையே
　　எளியேன் மறந்துய்வனோ?



வேதமுத லானநல் லாகமத் தன்மையை
　　விளக்குமுட் கண்ணிலார்க்கு
மிக்கநின் மகிமையைக் கேளாத செவிடர்க்கும்,
　　வீறுவா தம்புகலுவார்
வாதநோ யாளர்க்கும் எட்டாத முக்கனுடை
　　மாமருந் தக்கமிர்தமே!
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
　　வளர்காதலிப்பெ ணுமையே!

மிடியிட்ட வாழ்க்கையால் உப்பிட்ட கலமெனவும்
　　மெய்யெலா முள்ளுடைந்து
மிறிட்ட செல்வர்தந் தலைவாயில் வாசமாய்
　　வேதனைக ளுற,வேதனார்
அடியிட்ட வெவ்வினையை யெவனுன்; பாவிநான்
　　தொடரிட்ட தொழில்களெல்லாம்
துண்டிட்ட சரண்கும்பி யின்பொருட் டாயதுன்
　　தொண்டர்பணி செய்வதென்றோ?
வடியிட்ட செந்தமிழின் அருமையிட் டாரூரில்
　　அரிவையோர் பரவைவாயில்
அம்மட்டும் அடியிட்டு நடைநடந் தருளடிகள்
　　அடியிது முடியிதென
வடியிட்ட மறைபேசு பச்சிளங் கிள்ளையே!
　　வளமருவு தேவையரசே!
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
　　வளர்காதலிப்பெ ணுமையே!

பூரணி, புராதனி, சுமங்கலை, சுதந்தரி,
　　புராந்தகி, த்ரியம்பகி, எழில்
புங்கவி, விளங்குசிவ சங்கரி, சகஸ்ரதள
　　புஷ்பமிசை வீற்றிருக்கும்
நாரணி, மனாதீத நாயகி, குணாதீத
　　நாதாந்த சத்தியென்றுன்

நாமமே உச்சரித் திடுமடியர் நாமமே
    நானுச் சரிக்கவசமோ!
ஆரணி சடைக்கடவுள், 'ஆரணி'! எனப்புகழ
    அகிலாண்ட கோடியீன்ற
அன்னையே! பின்னையுங் கன்னியென மறைபேசும்
    ஆனந்த ரூபமயிலே!
வாரணியும் இருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
    வளமருவு தேவையரசே!
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
    வளர்காதலிப்பெ ணுமையே! (5)

பாகமோ பெறவுனைப் பாடவறி யேன்;மல
    பரிபாகம் வரவுமனதில்
பண்புமோ சற்றுமிலை; நியமமோ செய்திடப்
    பாவியேன் பாபரூப
தேகமோ திடமில்லை; ஞானமோ கனவிலுஞ்
    சிந்தியேன்; பேரின்பமோ
சேரவென் றால்,கள்ள மனதுமோ மெத்தவுஞ்
    சிந்திக்கு தென்செய்குவேன்?
மோகமோ, மதமோ, குரோதமோ, லோபமோ,
    முற்றுமாற் சரியமோதான்
முறியிட் டெனைக்கொள்ளும் நிதியமோ தேடவெனின்,
    முசுவரி வண்டுபோல
மாகம் ஓடவும்வல்லன் எனையாள வல்லையோ!
    வளமருவு தேவையரசே!
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
    வளர்காதலிப்பெ ணுமையே! (6)

தீரேறு தாசிபோல், வினைபெறு மெய்பெறும்
    தொக்கினுட் சிக்கிநாளும்
சுழலேறு காற்றினிடை அழலேறு பஞ்செனச்
    சூறையிட் டறிவெல்லாம்,



நாளேற நாளேற வார்த்திக மெனுங்கூற்றின்
    நட்பேற, உள்ளுடைந்து
நயனங்க ளற்றதோ ரூரேறு போலவே
    நானிலந் தனிலலையவோ,
வேளேறு தந்தியைக்* கனதந்தி யுடன்வென்று
    விரையேறு மாலைசூடி
விண்ணேறு மேகங்கள் வெற்பேறி மறைவுற
    வெருட்டிய கருங்கூந்தலாய்!
வாளேறு கண்ணியே! விடையேறு மெம்பிரான்
    மனதுக் கிசைந்தமயிலே!
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
    வளர்காதலிப்பெ ணுமையே! (7)

பூதமொடு பழகிவளர் இந்திரிய மாம்பேய்கள்,
    புந்திமுத லானபேய்கள்,
போராடு கோபாதி ராக்ஷசப் பேய்களென்
    போதத்தை யூடழித்து,
வேதனை வளர்த்திடச் சதுர்வேத வஞ்சன்
    விதித்தானி வல்லலெல்லாம்
வீழும் படிக்குனது மௌனமந் த்ராதிக்ய
    வித்தையை வியந்தருள்வையோ?
நாதவடி வாகிய மஹாமந்த்ர ரூபியே!
    நாதாந்த வெட்டவெளியே!
நற்சமய மானபயிர் தழையவரு மேகமே!
    ஞானவா னந்தமயிலே!
வாதமிடு பரசமயம் யாவுக்கும் உணர்வரிய
    மகிமைபெறு பெரியபொருளே!
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
    வளர்காதலிப்பெ ணுமையே! (8)

* 'கனபந்தி' என்றும் பாடமுண்டு.

## அகிலாண்ட நாயகி.

### சந்தவிருத்தம்.

வட்டமிட் டொளிர் பிராண வாயுவெனும்
நிகள மோடுகம னஞ்செயும்
மனமெ னும்பெரிய மத்த யானையென்
வசம டங்கிடின், முமண்டலத்
திட்ட முற்றவளர் ராஜ யோகமிவன்
யோகம் என்றறிஞர் புகழவே
சமைய னுலகினிடை வாழ்வன் இனி
இங்கிதற்கும் அனுமானமோ?
பட்ட வர்த்தனர் பராவு சக்ரதர
பாக்ய மான சுக போகமும்,
பாரகாவிய கவித்வ நான்மறை
பாராயணஞ்செய் மதியூகமும்,
அட்ட சித்தியுநல் லன்பருக் கருள
விருது கட்டியபொ னன்னமே!
அண்ட கோடிபுகழ் காவை வாழும்அகி
லாண்டநாயகியெ னம்மையே!

---

## பெரியநாயகி விருத்தம்.

காற்றைப் பிடித்துமட் கரகத் தடைத்தபடி,
கன்மப் புனற்குறைந்தும்,
கடைகெட்ட நவவாயில் பெற்றபசு மட்கலக்
காயத்துள் எனையிருத்திச்,
சோற்றைச் சுமந்திடு பந்தித் துவைக்கத்
திருத்திக்குள் மதுவென்னவே
துள்ளித் துடித்தென்ன பேறுபெற் றேன்! அருள்
தோயநீ பாய்ச்சல் செய்து...



நாற்றைப் பதித்ததென ஞானமாம் பயிரதனை
நாட்டிப் புலப்பட்டியும்
நமனென நீப்பூடும அணுகாமல் முன்னின்று
நாடுசிவ போகமான
பேற்றைப் பகுத்தருளி, எனையாள வல்லையோ
பெரியவகி லாண்டகோடி
பெற்றநா யகி! பெரிய கயிலைமா நகர்மருவு
பெரியநா யகியம்மையே! (1)

---

## தந்தைதாய்.

தந்தைதாய் மகவுமனை வாழ்க்கை யாக்கை
சகம்அனைத்தும் மௌனியருள் தழைத்த போதே,
இந்திரசா லங்கனவு கான லீராய்
இருந்ததுவே இவ்வியற்கை என்னே! என்னே!! (1)

என்னைநான் கொடுக்கவொருப் பட்ட காலம்
யாதிருந்தென்? ஏதுபோயென்? என்னை நீங்கா
அன்னைபோல், அருள்பொழியுங் கருணை வாரி!
ஆனந்தப் பெருமுகிலே! அரசே சொல்லாய்! (2)

அரசே! நின் திருக்கருணை யல்லா தொன்றை
அறியாத சிறியேன்நான்; அதனால் முத்திக்
கரைசேரும் படிக்குன் அருட் புணையைக் கூட்டுங்
கைப்பிடியே கடைப்பிடியாக் கருத்துட் கண்டேன், (3)

கண்டேன்இங் கென்னையும்என் றன்னையும் நீங்காக்
கருணையுநின் தன்னையும்நான் கண்டேன் கண்டேன்;
விண்டேனென் றெனைப்புறம்பாத் தள்ள வேண்டாம்;
விண்டதுநின் அருட்களிப்பின் வியப்பா லன்றோ? (4)

ஓ! என்ற சத்தவெளி யொன்றே நின்றின்
குயிலையெல்லாம் வம்மினென; உவட்டா இன்பக்

தேவென்ற நீகலந்து கலந்து முத்தி
சேர்த்தனையேல், குறைவாமோ செகவி லாசம்? (5)

செகத்தையெல்லாம் அணுவளவுஞ் சிதறா வண்ணம்
சேர்த்தணுவில் வைத்தாய்; அணுத்திரளை யெல்லாம்
மகத்தாய்ப் பிரமாண்ட மாகச் செய்யும்
வல்லவா! நீநினைந்த வாறே எல்லாம். (6)

சொல்லாலே வாய்துடிப்ப தல்லால், நெஞ்சந்
துடித்திருகண் ணீருகவி சோரத் தேம்பிக்
கல்லாலே யிருந்த நெஞ்சக் கல்லான் முக்கட்
கனியே, நெக் குருகிடவுங் காண்பேன் கொல்லோ? (7)

---

## பெற்றவட்கே.

பெற்றவட்கே தெரியும்அந்த வருத்தம்; பிள்ளை
பெறாப்பேதை அறிவாளோ? பேரா னந்தம்
உற்றவர்க்கே கண்ணீர்கம் பலையுண் டாகும்;
உறாதவரே கன்னெஞ்ச முடைய ராவார். (1)

ஆவாவென் றழுதுதொழும் மெய்ய ராகி
'அப்பனே! ஆனந்த வடிவ னே! நீ
வாவா' என் றவர்க்கருளுங் கருணை எந்தாய்!
வன்னெஞ்சர்க் கிரங்குவதெவ் வாறு நீயே? (2)

நீயேயிந் நெறியேற்குத் தாக மோகம்
நினைவூடே நின்றுணர்த்தி நிகழ்த்த லாலே,
பேயேற்குந் தனக்கெனவோ ரன்பு முண்டோ?
பெம்மானே! இன்னமன்பு பெருகப் பாராய்! (3)

பாராயோ என்துயர மெல்லாம், ஐயா!
பகருமுன்னே தெரியாதோ? பாவி யென்முன்
வாராயோ? இன்னமொரு காலா னாலும்;
மலர்க்காலென் சென்னியிசை வைத்தி டாயோ? (4)



வைத்திடுங்கா லைப்பிடித்துக் கண்ணில் மார்பில்
வைத்தணைத்துக் கொண்டுகையால் வளைத்துக் கட்டிச்
சித்தமிசைப் புகவிருத்திப் பிடித்துக் கொண்டு
தியக்கமற இன்பசுகம் சேர்வ தென்றோ? (5)

சேராமல் சிற்றினத்தைப் பிரித்தெந் நாளும்
திருவடிப்பே றினத்துடனே சேரா வண்ணம்
ஆராக நானலைந்தேன்; அரசே! நீதான்
அறிந்திருந்து மாயையிலே யழுந்த வைத்தாய்? (6)

வைத்தபொரு ளுடலாவி மூன்றும் நின்கை
வசமென்றே யான்கொடுக்க வாங்கிக் கொண்டு
சித்தமிசைப் புகுந்ததுதான் மெய்யோ? பொய்யோ?
சிறியேற்கிங் குளவுரையாய் திகைப்பா வண்ணம். (7)

திகையாதோ? எந்நாளும் பேரானந்தத்
தெள்ளமுதம் உதவாமற் றிவலை காட்டி
வகையாக அலக்கழித்தாய்; உண்டுடுத்து
வாழ்ந்தேனோ விரண்டுகால் மாடு போல. (8)

மாடுமக்கள் சிற்றிடையார் செம்பொ னாடை
வைத்தகன தனமேடை மாட கூடம்
வீடுமென்பால் தொடர்ச்சியோ? இடைவி டாமல்
மிக்ககதி வீடன்றோ? விளங்கல் வேண்டும். (9)

விளங்கவெனக் குள்ளுள்ளே விளங்கா நின்ற
வேதகமே! போதகமே! விமல வாழ்வே!
களங்கமறு தற்பொருளே! என்னை நீங்காக்
கண்ணுதலே! நாதாந்தக் காட்சிப் பேறே! (10)

நாதமே! நாதாந்த வெளியே! சுத்த
ஞாதுருவே! ஞானமே! ஞேய மே! நல்
வேதமே! வேதமுடி வான மோன
வித்தே! இன் றென்னையினி விட்டி டாதே. (11)

## கல்லாலின்.

கல்லாலி னிழல்தனில் ஒருநால் வர்க்கும்
கடவுள்நீ உணர்த்துவதுங் கைகாட் டென்றால்,
சொல்லாலே சொலப்படுமோ? சொல்லுந் தன்மை,
துரும்புபற்றிக் கடல்கடக்குந் துணிபே அன்றோ! (1)

அன்றோ! ஆமோ! எனவுஞ் சமய கோடி
அத்தனையும் வெவ்வேறாய் அரற்ற, நேரே
நின்றாயே! நினைப்பெறுமா றெவ்வா றிங்கே?
நின்னருள்கொண் டறிவதல்லால், நெறிவே றுண்டோ? (2)

நெறிபார்க்கின் நின்னையன்றி அகிலம் வேறோ?
நிலநீர்தீக் கால்வானும் நீய லாது
குறியாது மில்லையென்றால், யாங்கள் வேறோ?
கோதையொரு கூறுடையாய் கூறாய்! கூறாய்!! (3)

கூறாய ஐம்பூதக் கும்மையைத் தாங்கிக்
குணமிலா மனமெனும்பேய்க் குரங்கின் பின்னே
மாறாத கவலையுடன் சுழல என்னை
வைத்தனையே! பரமே! நின் மகிமை நன்றே! (4)

நன்றெனவுந் தீதெனவும் எனக்கிங் குண்டோ?
நானுநீ யிருந்த நியாயஞ் சற்றே
இன்றெனக்கு வெளியானால், எல்லாம் வல்ல
இறைவா! நின் னடியருட னிருந்து வாழ்வேன். (5)

வாழ்வெனவுந் தாழ்வெனவும் இரண்டாப் பேசும்
வையகத்தார் கற்பனையா மயக்க மான
பாழ்வலையைக் கிழித்தறிச் செயல்போய் வாழப்
பரமே! நின் ஆனந்தப் பார்வை எங்கே? (6)

எங்கேயெங் கேயருளென் றெண்ணமி ரந்தான்
ஏழையே னெனவுமெண்ணி ...



அங்கேயாங் கேவெளிக் கென்னை யாண்ட
ஆரமுதே! உனைக்காண்பான் அலந்து போனேன். (7)

போனநாட் கிரங்குவதே தொழிலா இங்ஙன்
பொருந்துநா ளத்தனையும் போக்கி னேன்;என்
ஞானநா யகனே! நின் மோன ஞான
நாட்டமுற்று வாழ்ந்திருக்கு நாளெந் நாளோ! (8)

நாட்பட்ட கமலமென்ன இதய மேவும்
நறுந்தேனே! துன்மார்க்க நாரி மார்கண்
வாள்பட்ட காயமிக்கக் காய மென்றோ?
வெங்கூற்று முயிர் பிடிக்க வருமந் நீதி. (9)

நீதியெங்கே? மறையெங்கே? மன்னி னெங்கே?
சித்தியரா மவர்களெங்கே? நெறிதப் பாத
சாதியெங்கே? ஒழுக்கமெங்கே? யாங்க ளெங்கே?
தற்பர! நீ யின்றுமென் றிறச் சமைப்ப தானால், (10)

ஆனாலும், யானெனநிங் கற்ற வெல்லை
அதுபோதும், அதுநிதா னல்ல வென்று
போனாலும் யான்பேச வல்லால், மோனப்
புண்ணியனே! வேறுமொரு பொருளை நாடேன், (11)

பொருளே! நின் பூரணமே விட்ட காலம்
போக்குவர வுண்டோ? தற் போத முண்டோ?
இருள்தா னுண்டோ? அல்லால், வெளிதா னுண்டோ?
இன்பமுண்டோ? துன்பமுண்டோ? யாமங் குண்டோ? (12)

உண்டோ? நீ படைத்தவுயிர்த் திரளி லென்போல்
ஒருபாவி; தேகாதி யுலகம் பொய்யாக்
கண்டேயும் எள்ளளவுந் துறவு மின்றிக்
காசினிக்கு ளலைந்தவரார்? காட்டாய் தேவே! (13)

தேவரெல்லாந் தொழச்சிவந்த செந்தாள் முக்கண்
செங்கரும்பே! மொழிக்குமொழி தித்திப் பாக

மூவர்சொலுந் தமிழ்கேட்குந் திருச்செவிக்கே
மூடனேன் புலம்பியசொல் முற்றுமோதான்? (14)

முற்றுமோ? எனக்கினியா னந்த வாழ்வு;
முதலறிவுக் கினியாய்! நின் முளரித் தாளில்
பற்றுமோ சற்றுமில்லை; ஐயோ! ஐயோ!
பரிவுபடுங் கண்கலக்கம் பார்த்தி லாயோ? (15)

பார்த்தனவெல் லாமழியும்; அதனாற் சுட்டிப்
பாராதே, பார்த்திருக்கப் பரமே! மோன
மூர்த்திவடி வாயுணர்த்துங் கைகாட் டுன்னை
முற்றிசைநல் லல்லல்வினை முடிவ தென்றோ? (16)

என்றைக்கும், அன்றுள்ளம் யாமென்ப தென்னே?
இதுநிற்க, எல்லாந்தா மில்லை யென்றே
பொன்றிடச்செய் வல்லவ! நீ யமைப்ப டைக்கும்
பொறையுடையா யென்னின், அது பெருந்தி றம்தே! (17)

பொருந்துசக மனைத்தினையும் பொய்பொய் யென்று
புகன்றபடி, மெய்யென்றே போத ரூபத்
திருந்தபடி, யென்றிருப்ப தன்றே யன்றோ?
எம்பெருமான்! யான்கவலை யெய்தக் காலம். (18)

காலமே! காலமொரு மூன்றுங் காட்டுங்
காரணமே! காரணகா ரியங்க ளில்லாக்
கோலமே! யெனைவாவா வென்று கூவிக்
குறைவறநின் னருள்கொடுத்தால், குறைவோ சொல்லாய்? (19)

சொல்லாத நிருதியெல்லாங் கடந்து நின்ற
சொரூபானந் தச்சுடரே! தொண்ட னேனைக்
கல்லாகப் படைத்தாலு மெத்த நன்றே!
கரணமுட னுறவு கலக்க மாட்டேன். (20)

கலங்காத நெஞ்சுடைய ஞான தீரர்
கடவுளுனைக் காணவே, காய சித்தி



புலங்காணார்; நானொருவன் ஞானம் பேசிப்
பொய்க்கூடு காத்ததென்ன புதுமை கண்டாய்! (21)

கண்டிலையோ? யான்படும்பா டெல்லாம்; மூன்று
கண்ணிருந்துந் தெரியாதோ? கசிந்துள் ளன்பர்
தொண்டடித் தொண்டனன்றோ? கருணை நீங்காச்
சுத்தபரி பூரணமாஞ் சோதி நாதா! (22)

சோதியாய் இருட்பிழம்பைச் சூறை யாடும்
தூவெளியே! யெனைத்தொடர்ந்து தொடர்ந்தெந் நாளும்
வாதியா நின்றவினைப் பகையை வென்ற
வாழ்வே! இங் குனைப்பிரிந்து மயங்கு கின்றேன்! (23)

மயக்குறுமென் மனமறுகாப் பாதை காட்டி,
வல்வினையைப் பறித்தனையே வாழ்வே! நானென்
செயக்கடவேன்! செயலெல்லாம் நினதே யென்று
செங்கைகுவிப் பேனல்லால், செயல்வே றில்லை. (24)

வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்,
விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால்,
மாறுபடுங் கருத்தில்லை; முடிவின் மோன
வாரிதியில் நதித்திரள்போல், வயங்கிற் றம்மா! (25)

அம்மா! ஈ ததிசயந்தா னன்றோ அன்றோ?
அகண்டாகி லாக்கியென்னை அறிவாம் வண்ணம்
சும்மாவே இருக்கவைத்தாய்; ஐயா! ஆங்கே
சுகமயமா யிருப்பதல்லால், சொல்வா னென்னே! (26)

என்னேநான் பிறந்துழல வந்த வாறிங்
கெனக்கெனவோர் செயலில்லையே! ஏழை யென்பால்
முன்னேசெய் வினையெனவும், பின்னே வந்து
மூளும்வினை யெனவும்வா முறையேன்? எந்தாய்! (27)

தாயான தண்ணருளை நிரம்ப வைத்துத்
தமியேனைப் புரவாமல் தள்ளித் தள்ளி

போய்,ஆன தென்கொல்? ஐயா! ஏக தேசம்
பூரணத்துக் குண்டோதான் புகலல் வேண்டும்? (28)

புகலரிய நின்விளையாட் டென்னே? எந்தாய்!
புன்மையறி வுடையஎன்னைப் பொருளாப் பண்ணி,
இகல்விளைக்கும் மலமாயை கன்மத் தூடே
இடர்உறவுஞ் செய்தனையே இரக்க மீதோ! (29)

இரக்கமொடு பொறையீத லறிவா சாரம்
இல்லெனு நல்லோர்க ளிட்டங் கண்டால்,
காக்குமியல் புடையென்பாம் நெஞ்சம் எந்தாய்!
கருந்தாதோ? வல்லிருக்கோ? கரிய கல்லோ? (30)

---

## பராபரக்கண்ணி.

சீராருந் தெய்வத் திருவருளாம் பூமிமுதல்
பாராதி யண்ட பதியே! பராபரமே! (1)

கண்ணாரக் கண்டோர் கருப்பெருள்கா ணாமல்,அருள்
விண்ணூ டிருந்தஇன்ப வெற்பே! பராபரமே! (2)

சிந்தித்த வெல்லாம்என் சிந்தையறிந் தேயுதவ
வந்த, கருணை மழையே! பராபரமே! (3)

ஆரா வமுதே! அரசே! ஆனந்தவெள்ளப்
பேராறே! மோனப் பெருக்கே! பராபரமே! (4)

அறிவார் என்ன அனந்தமறை ஓலமிடும்
பேரறிவே! இன்பப் பெருக்கே! பராபரமே! (5)

உரையிறந்த அன்பருளத் தேங்கொளியாய் ஓங்கிக்
கரையிறந்த இன்பக் கடலே! பராபரமே! (6)

எத்திக்குந் தானாகி, என்னிதயத் தேயூறித்,
தித்திக்கு மானந்தத் தேனே! பராபரமே! (7)

திக்கொடுகீழ் மேலாந் திருவருளாம் பொற்பதிக்கோர்
கைக்குள்வளர் செல்வக் கனியே! பராபரமே! (8)



முத்தே! பவளமே! மொய்த்தபசும் பொற்சுடரே!
சித்தே! என்னுள்ளத் தெளிவே! பராபரமே! (9)

கண்ணே! கருத்தே! என்கற்பகமே! கண்ணிறைந்த
விண்ணே! ஆனந்த வியப்பே! பராபரமே! (10)

வாக்காய், மனதாய், மனவாக் கிறந்தவர்பால்
தாக்காதே தாக்குந் தனியே! பராபரமே! (11)

பார்த்தவிட மெல்லாம் பரவெளியாத் தோன்ற, ஒரு
வார்த்தை சொல்லவந்த மனுவே! பராபரமே! (12)

வாளாந்த மன்னினந்தம் வைத்துவைத்துப் பார்க்க, எனக்
கானந்தந் தந்த அரசே! பராபரமே! (13)

அன்பைப் பெருக்கி,என தாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே! இறையே! பராபரமே! (14)

வானமெல்லாங் கொண்ட மௌனமணிப் பெட்டகத்துக்
கானமணி யான அணியே! பராபரமே! (15)

ஓடும் இருநதியும் ஒன்றாகக் கண்டவர்கள்
நாடும் பொருளான நட்பே! பராபரமே! (16)

சித்தநினைவுஞ் செயுஞ் செயலும் நீயெனவாழ்
உத்தமர்கட் கானஉறவே! பராபரமே! (17)

போதாந்தப் புண்ணியர்கள் 'போற்றிசய போற்றி', எனும்
வேதாந்த வீட்டில் விளக்கே! பராபரமே! (18)

முத்தாந்த வீதி முளரிதொழு மன்பருக்கே,
சித்தாந்த வீதிவருந் தேவே! பராபரமே! (19)

ஈனந் தருமுடல மென்னதியா னென்பதற,
ஆனந்தம் வேண்டி அலந்தேன் பராபரமே! (20)

என்புருகி நெஞ்சம் இளகிக் கரைந்துகரைந்
தன்புருவாய் நிற்க அலந்தேன்; பராபரமே! (21)

சுத்த அறிவாய்ச் சுகம்பொருந்தி னல்லால், என்
சித்தந் தெளியாதென் செய்வேன்? பராபரமே! (22)

மாறா அனுபூதி வாய்க்கின் அல்லால், என்மயக்கந்
தேறாதென் செய்வேன்? சிவமே! பராபரமே! (23)

தாகமறிந் தின்பநிட்டை தாராயேல், ஆ! கெடுவேன்;
தேகம் விழுந்திடினென் செய்வேன்? பராபரமே! (24)

அப்பா! என் எய்ப்பில்வைப்பே! ஆற்றலேன்; 'போற்றி'என்று
வேறென் செய்வேன்? பராபரமே! [செப்புவதல்லால், (25)

உற்றறியும் என்னறிவும் உட்கருவி போற்சகமான்
டற்றும், இன்பந்தந்திலையே! ஐயா! பராபரமே! (26)

சொல்லால் அடங்காச் சுகக்கடலில் வாய்மடுக்கின்
அல்லால், என்தாகம் அறுமோ? பராபரமே! (27)

பாராயோ என்னைமுகம்? பார்த்தொருகால் என்கவலை
தீராயோ? வாய்திறந்து செப்பாய்; பராபரமே! (28)

ஓயாதோ என்கவலை? உள்ளோயா னந்தவெள்ளம்
பாயாதோ? ஐயா! பகராய்; பராபரமே! (29)

ஓகோ! உனைப்பிரிந்தார் உள்ளங் கனலில்வைத்த
பாகோ? மெழுகோ? பகராய்; பராபரமே! (30)

கூர்த்தஅறி வத்தனையுங் கொள்ளைகொடுத் துன்னருளைப்
பார்த்தவன் நான்; என்னைமுகம் பாராய்; பராபரமே! (31)

கட்டமுதே! தேனே! என் கண்ணே! கவலைப்
படமுடியா தென்னைமுகம் பார்நீ; பராபரமே! (32)

உள்ள மறிவாய்; உழப்பறிவாய்; நானேழை;
தள்ளிவிடின், மெத்தத் தவிப்பேன்; பராபரமே! (33)

கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போல, எனக்
கென்றிரங்கு வாய்கருணை எந்தாய்! பராபரமே! (34)

எண்ணாத எண்ணமெலாம் எண்ணிஎண்ணி, ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப் போதும்; பராபரமே! (35)

அழித் துரும்பெனவே அங்குமிங்கும் உன்னடிமை
பாழில் திரிவதென்ன பாவம்? பராபரமே! (36)



கற்றஅறி வாலுனைநான் கண்டவன்போல் கூத்தாடில்,
குற்றமென்றென் னெஞ்சே கொதிக்கும்; பராபரமே! (37)

ஐயோ! உனைக்காண்பான் ஆசைகொண்ட தத்தனையும்
பொய்யோ? வெளியாய்ப் புகலாய்; பராபரமே! (38)

துன்பக் கண்ணீரிற் றுளைந்தேற்குன் ஆனந்த
இன்பக்கண் ணீர்வருவ தெந்நாள்? பராபரமே! (39)

வஞ்சனையும் பொய்யுமுள்ளே வைத்தழுக்கா றாயுளறும்
நெஞ்சனுக்கு முண்டோ நெறிதான்? பராபரமே! (40)

பாசம்போய் நின்றவர்போற் பாராட்டி யானும்
மோசம்போ னேனுன் முறையோ? பராபரமே! (41)

நன்றறியேன்; தீதறியேன்; நானென்று நின்றவன்ஆர்
என்றறியேன்; நானேழை, என்னே! பராபரமே! (42)

இன்றுபுதி தன்றே! எளியேன் படுந்துயரம்,
ஒன்று மறியாயோ? உரையாய், பராபரமே! (43)

எத்தனைதான் சன்மமெடுத் தெத்தனைநான் பட்டதுயர்
அத்தனையும் நீயறிந்த தன்றோ? பராபரமே! (44)

இந்நாட் சற்று மிரங்கிலையேல், காலன்வரும்
அந்நாட் காக்கவல்லா ரார்காண்? பராபரமே! (45)

உற்றுற்று நாடி யுளமருண்ட பாவியை நீ,
சற்றிரங்கி, ஆளத் தகாதோ? பராபரமே! (46)

எள்ளளவு நின்னைவிட் டில்லா எனை,மயக்கில்
தள்ளுதலா லென்னபலன் சாற்றாய்? பராபரமே! (47)

பாடிப் படித்துலகிற் பாராட்டி நிற்பதற்கோ,
தேடி யெனையடிமை சேர்த்தாய்? பராபரமே! (48)

சொன்னத்தைச் சொல்வதல்லால், சொல்லறவென் சொல்லிறந்
கென்னத்தைச் சொல்வே னெளியேன்? பராபரமே! [திக், (49)

சொல்லும் பொருளுமற்றுச் சும்மா இருப்பதற்கே,
அல்லும் பகலுமெனக் காசை; பராபரமே! (50)

நேச நிருவிகற்ப நிட்டையல்லால், உன்னடிமைக்
காசையுண்டோ? நீயறியா தன்றோ! பராபரமே! (51)

துச்சனென வேண்டாமித் தொல்லுலகில் அல்லல்கண்டால்,
அச்சமிக வுடையேன்; ஐயா! பராபரமே! (52)

கண்ணுவா சேனும்உனைக் கைகுவியா ராயின்,அந்த
மண்ணுவார் நட்பை மதியேன்; பராபரமே! (53)

கொல்லா விரதம் குவலயமெல் லாமோங்க,
எல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை; பராபரமே! (54)

எத்தாற் பிழைப்பேனு எந்தையே? நின்னருட்கே
பித்தானேன்; மெத்தவுநான் பேதை; பராபரமே! (55)

வாயினாற் பேசா மௌனத்தை வைத்திருந்தும்
தாயிலார் போல்நான் தளர்ந்தேன்; பராபரமே! (56)

அன்னையிலாச் சேய்போல் அலக்கணுற்றேன்; கண்ணார
என்னகத்தில் தாய்போ லிருக்கும் பராபரமே! (57)

உற்றுநினைக்கில் துயர் முள்ளுள்ளே செந்தீயாய்ப்
பற்றநொந்தேன்; என்னைமுகம் பாரீ! பராபரமே! (58)

பொய்யனிவ னென்றுமெள்ளப் போதிப்பார் சொற்கேட்டுக்
கைவிடவும் வேண்டாம்;என் கண்ணே! பராபரமே! (59)

எண்ணமறிந்தே இளைப்பறிந்தே யேழை உய்யும்
வண்ணந் திருக்கருணை வையாய்; பராபரமே! (60)

நாட்டாதே யென்னையொன்றில்; நாட்டி யிதமகிதம்
காட்டாதே; எல்லாம்நீ கண்டாய்; பராபரமே! (61)

உன்னைநினைந் துன்னிறைவி லுள்ளே உலாவுமென்னை
அன்னைவயிற் றின்னமடைக் காதே; பராபரமே! (62)

யாமுனக்கென் றெண்ணும் பழக்கமே மாறா
வரமெனக்குத் தந்தருளென் வாழ்வே! பராபரமே! (63)

வந்தித்து நின்னை மறவாக் கடனுகச்
சிந்திக்க நின்னருள் செய்யாய்: பராபரமே!



எவ்வுயிரும் என்னுயிர்போ லெண்ணி, இரங்கவுநின்
தெய்வ வருட்கருணை செய்யாய்; பராபரமே! (65)

வெட்டவெளிப் பேதையன்யான் வேறுகப டொன்றறியேன்;
சிட்டருடன் சேரனந்த தெண்டன் பராபரமே! (66)

இரவுபக லற்றவிடத் தேகாந்த யோகம்
வரவுந் திருக்கருணை வையாய்; பராபரமே! (67)

மால்காட்டிச் சிந்தை மயங்காமல் நின்றுசுகக்
கால்காட்டி வாங்காதே கண்டாய்; பராபரமே! (68)

எப்பொருளு நீயெனவே எண்ணிநான் * தோன்றாத
வைப்பையுழி யாநிலையா வையாய்; பராபரமே! (69)

சும்மா விருப்பதுவே சுட்டற்ற பூரணமென்
றெம்மா லறிதற் கெளிதோ? பராபரமே! (7

முன்னோடு பின்பக்க முடியடிநாப் பண்ணறநின்
றன்னோடொ னிற்பதென்றோ சாற்றாய்? பராபரமே! (7

மைவண்ணன் நீர்ந்த மௌனிசொன்ன தெவ்வண்ணம்,
அவ்வண்ண நிட்டை யருளாய்; பராபரமே. ! (7

வித்தன்றி யாதும் விளைவதுண்டோ? நின்னருளாஞ்
சித்தன்றி யாங்களுண்டோ செப்பாய்? பராபரமே! (7

ஆங்கார மற்றுன் அறிவான அன்பருக்கே
தூங்காத தூக்கமது தாக்கும்; பராபரமே!

சிந்தை அவிழ்ந்தவிழ்ந்து சின்மயமா நின்னடிக்கே
வந்தவர்க்கே இன்பநிலை வாய்க்கும்; பராபரமே! (75)

சொல்லாடா ஊமரைப்போல் சொல்லிறந்து நீயாகின்
அல்லால், எனக்குமுத்தி யாமோ? பராபரமே! (76)

பேச்சாகா மோனம் பிறவா முளைத்ததென்றற்
காச்சாச்சு மேற்பயனுண் டாமோ? பராபரமே! (77)

---

* 'தோயாத' என்றும் பாடமுண்டு.

கெட்டியென்றுன் அன்பர்மலங் கெட்டயர்ந்தோர், பூரணமாந்
தொட்டிலுக்குட் சேய்போற் றுயின்றார்; பராபரமே! (78)

காட்ட அருளிருக்கக் காணா திருண்மலத்து
நாட்ட மெனக்குவரா னன்றோ ? பராபரமே ! (79)

எத்தன்மைக் குற்றம் இயற்றிடினுந் தாய்பொறுக்கும்
அத்தன்மை நின்னருளு மன்றோ ?பராபரமே! (80)

எத்தனையோ தேர்ந்தாலும் என்னாலே இன்பமுண்டோ ?
சித்துருவே! இன்பச் சிவமே! பராபரமே! (81)

மண்ணொடுவிண் காட்டி மறைந்துமறை யாஅருளைக்
கண்ணொடுகண் ணாகன்று காண்பேன் ? பராபரமே! (82)

பஞ்சரித்து நின்னைப் பலகா லிரந்ததெல்லாம்
அஞ்ச லெனும்பொருட்டே யன்றோ ! பராபரமே! (83)

எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங் கிருப்பதுநீ யன்றோ ? பராபரமே! (84)

அனைத்துமாய் நின்றாயே ! யான்வேறோ ? நின்னை
நினைக்குமா றெங்கே? நிகழ்த்தாய்; பராபரமே! (85)

நின்போதத் தாலே நினைப்பு மறப்புமென்றால்,
என்போத மெங்கே? இயம்பாய்; பராபரமே! (86)

ஒன்றைநினைந் தொன்றைமறந் தோடுமன மெல்லாம்நீ
என்றறிந்தா லெங்கே யியங்கும் ? பராபரமே! (87)

கொழுந்தில் வயிரமெனக் கோதறவுள் ளன்பில்
அழுந்துமவர்க் கேசுகமுண் டாகும்; பராபரமே! (88)

பற்றும் பயிர்க்குப் படர்கொழுந்து போற்பருவம்
பெற்றவர்க்கே நின்னருடான் பேறும்; பராபரமே! (89)

யோகியர்க்கே ஞான மொழுங்காம்;பே ரன்பான
தாகியரும், யோகமுன்னே சார்ந்தோர்; பராபரமே! (90)

அல்லும் பகலும் அறிவாகி நின்றவர்க்கே
சொல்லும் பொருளுஞ் சுமைகாண் ! பராபரமே! (91)



எச்சிலென்று பூவை யிகழ்ந்தோர்க் குனைப்போற்றப்
பச்சிலையுங் கிள்ளப் படுமோ? பராபரமே! (92)

அந்தக் கரண மடங்கத் துறப்பதுவே
எந்தத் துறவினுநன் றெந்தாய்; பராபரமே! (93)

தன்னை அறிந்தால், தலைவன்மேற் பற்றலது
பின்னையொரு பற்றுமுண்டோ ? பேசாய், பராபரமே! (94)

அன்பாற் கரைந்துகண்ணீ ராறுகண்ட புண்ணியருக்
குன்பால் வரவழிதா னுண்டோ ? பராபரமே! (95)

தன்னை அறிந்தருளே தாரகமா நிற்பதுவே
உன்னை யறிதற் குபாயம்; பராபரமே ! (96)

கற்றகலை யாவிலேதான் காணுமோ ? காண்பதெல்லாம்
முற்றவிடத் தேவெளியா மன்றோ ? பராபரமே! (97)

கண்மூடிக் கண்விழித்துக் காண்பதுண்டோ ? நின்னருளாம்
விண்மூடி னெல்லாம் வெளியாம்; பராபரமே ! (98)

நேரே நினதருளென் னெஞ்சைக் கவரினொன்றும்
பாரேன்; சுகமும் படைப்பேன்; பராபரமே ! (99)

வான்காண வேண்டின், மலையேற லொக்கும்; உன்னை
நான்காணப் பாவனைசெய் நாட்டம், பராபரமே ! (100)

வாதனைவிட் டுன்னருளின் மன்னினல்லால், வேறுமொரு
சாதனைதா னுண்டோ ? நீ சாற்றாய்; பராபரமே! (101)

பாரகமும் விண்ணகமும் பற்றாக நிற்பதருள்
தாரகத்தைப் பற்றியன்றோ? சாற்றாய் பராபரமே ! (102)

விளக்குந் தகளியையும் வேறென்றார், நின்னைத்
துளக்கமறச் சீவனென்று சொல்வார்; பராபரமே ! (103)

பாராதி நீயாப் பகர்ந்தால், அகமெனவும்
ஆராயுஞ் சீவனுநீ யன்காண்; பராபரமே ! (104)

பொய்யைப்பொய் யென்றறியும் போதத்துக் காதாரம்
மெய்யருளே யன்றோ? விளம்பாய் ! பராபரமே! (105)

வருவான்வந் தேனெனல்போல் மின்னியழி யுஞ்சகத்தைத்
தெரிவாக வில்லையென்ற தீரம், பராபரமே! (106)

மாயா சகமிலையேல், மற்றெனக்கோர் பற்றுமிலை;
நீயேநா னென்றுவந்து நிற்பேன்; பராபரமே! (107)

வானாதி நீயெனவே வைத்தமறை, என்னையுநீ
தானாகச் சொல்லாதோ? சாற்றாய்! பராபரமே! (108)

வெள்ளக் கருணைமத வேழமாம் நின்னருட்கென்
கள்ளக் கருத்தே கவளம்; பராபரமே! (109)

வண்டாய்த் துவண்டு மௌன மலரணைமேல்
கொண்டார்க்கோ இன்பங் கொடுப்பாய்? பராபரமே! (110)

மாயைமுத லாம்வினைநீ, மன்னுயிர்நீ, மன்னுயிர்தேர்
தாயுமறி வானதுநீ அன்றோ? பராபரமே! (111)

என்னறிவும் யானும்என தென்பதுவு மாம்இவைகள்
நின்னவையே யன்றோ? நிகழ்த்தாய்; பராபரமே! (112)

பாரறியா தண்டப் பரப்பறியா தன்பெருமை
ஆரறிவார்? நானோ அறிவேன், பராபரமே! (113)

அண்ட மனைத்திலுமாய் அப்பாலுக் கப்பாலும்
கொண்டநின்னை யாரறிந்து கொள்வார்? பராபரமே! (114)

ஒப்புயர்வொன் றின்றி ஒளிபுகா மோனவட்டக்
கப்பலுக்காம் வான்பொருள் நீகண்டாய்; பராபரமே! (115)

என்போ லெளியவரும், எங்கெங்கும் பார்த்தாலும்,
உன்போல் வலியவரு முண்டோ? பராபரமே! (116)

பார்க்கினண்ட பிண்டப் பரப்பனைத்தும் நின்செயலே!
யார்க்குஞ் செயலிலையே, ஐயா! பராபரமே! (117)

ஒன்றே பலவே உருவே அருவேயோ
என்றே அழைப்பதன்னை என்று? பராபரமே! (118)

செப்புவதெல் லாஞ்செபம்நான் சிந்திப்ப தெல்லாம்நின்
ஒப்பில் தியானமென ஓர்ந்தேன்; பராபரமே! (119)



ஆரிருந்தென்? ஆர்போயென்? ஆரமுதாம் நின்னருளின்
சீரிருந்தால் உய்வேன்; சிவமே! பராபரமே! (120)

வஞ்சநமன் வாதனைக்கும், வன்பிறவி வேதனைக்கும்,
அஞ்சி உனையடைந்தேன்; ஐயா! பராபரமே! (121)

எந்தப் படியுன் னிதயம் இருந்த தெமக்
கந்தப் படிதருவ தன்றோ? பராபரமே! (122)

எந்தெந்த நாளும் எனைப்பிரியா தென்னுயிராய்ச்
சிந்தைகுடி கொண்ட அருள் தேவே? பராபரமே! (123)

அஞ்சலஞ்ச லென்றடிமைக் கப்போதைக் கப்போதே
நெஞ்சி லுணர்த்து நிறைவே! பராபரமே! (124)

என்னையுன்றன் கைக்களித்தார் யாவர்? என்னை யான்கொடுத்
பின்னையுன்றாற் பெற்றநலம் பேசேன்; பராபரமே! [துப், (125)

வாய்பேசா ஊமையென வைக்கவென்றோ, நீமௌனத்
தாயாக வந்தருளைத் தந்தாய்! பராபரமே! (126)

தன்னைத்தந் தென்னைத் தடுத்தாண்ட நின்கருணைக்
கென்னைக்கொண் டென்னபலன்? எந்தாய்! பராபரமே! (127)

மார்க்கண்டர்க் காக மறலிபட்ட பாட்டையுன்னிப்
பார்க்கினன்பர்க் கென்ன பயங்காண்? பராபரமே! (128)

சுட்டியுண ராமற் றுரியநிலை யாய்வெளியில்
விட்டநின்னை யானோ வியப்பேன்? பராபரமே! (129)

ஏதொன்று மின்றியென்னைச் சும்மா இருக்கவைத்தாய்
ஈதொன்றும் போதாதோ. இன்பம்? பராபரமே. (130)

வாயொன்றும் பேசா மௌனியாய் வந்தாண்ட
தேயொன்றும் போதாதோ, இன்பம்? பராபரமே! (131)

என்று மிருந்தபடிக் கென்னை யெனக்களித்த
தொன்றும்போ தாதோ, உரையாய்? பராபரமே! (132)

எண்டிசையும் மேலான எல்லாம் பெருவெளியாக்
கண்டவிடத் தென்னையுநான் கண்டேன்; பராபரமே! (133)

பித்தனெ னதும்மறியாப் பேதையெனை யாண்டவுனக்
கெத்தனைநா னெண்ட னிடுவேன்? பராபரமே! (134)

தாயர்கர்ப்பத் தூடனமுந் தண்ணீருந் தந்தருளும்
நேய! உனை யாரே நினையார்? பராபரமே! (135)

விரிந்த மனமொடுங்கும் வேளையினொ ன்றாகப்
பரந்தவருள் வாழி! பதியே! பராபரமே! (136)

சிந்தனைபோய், நானெனல் போய்த் தேக்கவின்ப மாமழையை
வந்து பொழிந்தனை நீ, வாழி! பராபரமே! (137)

தந்தேனே யோர்வசனந் தந்தபடிக் கின்பமுமாய்
வந்தேனே என்றனை நீ, வாழி! பராபரமே! (138)

மண்ணும்விண்ணும் வந்து வணங்காவோ? நின்னருளைக்
கண்ணுறவுட் கண்டவரைக் கண்டால், பராபரமே! (139)

என்றுங் கருணைபெற்ற இன்பத் தபோதனர்சொல்
சென்றசென்ற திக்கனைத்துஞ் செல்லும்; பராபரமே! (140)

ஆடுவதும் பாடுவதும் ஆனந்த மாகநின்னைத்
தேடுவதும் நின்னடியார் செய்கை; பராபரமே! (141)

பொங்கியநின் தண்ணருளைப் புட்கலமாப் பெற்றவர்கட்
கெங்கெழுந்தென் ஞாயி றியம்பாய்; பராபரமே! (142)

பாலரொடு பேயர்பித்தர் பான்மையென நிற்பதுவே
சீலமிகு ஞானியர்தஞ் செய்கை; பராபரமே! (143)

உண்டுடுத்துப் பூண்டிங் குலகத்தார் போற்றிசையும்
தொண்டர்விளை யாட்டே சுகங்காண்; பராபரமே! (144)

கங்குல்பக லற்றதிருக் காட்சியர்கள் கண்டவழி
எங்கு மொருவழியே; எந்தாய்! பராபரமே! (145)

காயநிலை யல்லவென்று காண்பா ருறங்குவரோ?
தூயவருட் பற்றுத் தொடர்வார்; பராபரமே! (146)

அப்புமுப்பும் போன்ற அயிக்யபரா னந்தர்தமக்
கொப்புவமை சொல்லவும்வா யுண்டோ? பராபரமே! (147)



சித்தர் தெளிந்து சிவமானோ ரெல்லார்க்கும்
கொத்தடிமை யானவ னடிநான்; பராபரமே! (148)

தம்முயிர்போ லெவ்வுயிருந் தாமென்று தண்ணருள்கூர்
செம்மையருக் கேவலென்று செய்வேன்; பராபரமே! (149)

விண்ணுக்கும் விண்ணாகி மேவுமுனக் கியான்பூசை
பண்ணிநிற்கு மாறு பகராய்! பராபரமே! (150)

நெஞ்சமே கோயில், நினைவே சுகந்தம், அன்பே
மஞ்சனநீர், பூசைகொள்ள வாராய்; பராபரமே! (151)

கெட்டவழி ஆணவப்பேய் கீழாக; மேலான
சிட்ட ருனைப்பூசை செய்வார்; பராபரமே! (152)

கால்பிடித்து மூலக் கனலைமதி மண்டலத்தின்
மேலெழுப்பிற் றேகம் விழுமோ? பராபரமே! (153)

பஞ்சசுத்தி செய்துநின்னைப் பாவித்துப் பூசைசெய்தால்,
விஞ்சிய ஞானம் விளங்கும்; பராபரமே! (154)

அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கி விட்டுவிட்டால்,
இன்பநிலை தானேவந் தெய்தும்; பராபரமே! (155)

மூர்த்திதலந் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும்; பராபரமே! (156)

விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்புமலர் காய்கனிபோ லன்றோ? பராபரமே! (157)

தானந் தவந்தருமஞ் சந்ததமுஞ் செய்வர், சிவ
ஞானந் தனையணைய நல்லோர்; பராபரமே! (158)

சொன்னத்தைச் சொல்லித் துடிக்கின்ற ஆணவப்பேய்க்
கின்னல் வருவதென்னா ளெந்தாய்? பராபரமே! (159)

இன்றோ இருவினைவந் தேறியது? நானென்றே
அன்றே விளைந்ததன்றோ? ஆற்றேன்! பராபரமே! (160)

எண்ணமுந்தான் நின்னைவிட இல்லையென்றால், யான்முனமே
பண்ணவினை ஏது பகராய்? பராபரமே! (161)

என்னையின்ன தென்றறியா ஏழைக்கும், ஆ! கெடுவேன்;
முன்னைவினை கூடன் முறையோ? பராபரமே! (162)

அறியாநான் செய்வினையை, ஐயா! நீ கூட்டுங்
குறியே தெனக்குளவு கூறாய்? பராபரமே! (163)

என்னைக் கெடுக்க இசைந்த இருவினைநோய்
தன்னைக் கெடுக்கத் தகாதோ? பராபரமே! (164)

வல்லமையே காட்டுகின்ற மாமாயை, நானொருவன்.
இல்லையெனி னெங்கே * இருக்கும்? பராபரமே! (165)

முக்குணத்தால் எல்லா முளைக்கப் பிரகிருதிக்
கிக்குணத்தை நல்கியதா ரெந்தாய்? பராபரமே! (166)

ஆற்றப் படாது துன்பம், ஐய! என்று லென்மனது
தேற்றப் படாதினியென் செய்வேன்? பராபரமே! (167)

பூராய மாய்மனதைப் போக்க அறியாமல், ஐயோ!
ஆரா யலைந்தேன், அரசே! பராபரமே! (168)

சினமிறக்கக் கற்றாலும், சித்தியெல்லாம் பெற்றாலும்,
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன்? பராபரமே! (169)

வாதுக்கு வந்தெதிர்த்த மல்லரைப்போல், பாழ்த்தமனம்
ஏதுக்குக் கூத்தாடு தெந்தாய்! பராபரமே! (170)

சூதாடு வார்போல் துவண்டு துவண்டு, மனம்
வாதாடி னென்னபலன் வாய்க்கும்? பராபரமே! (171)

கொள்ளித்தேள் கொட்டிக் குதிக்கின்ற பேய்க்குரங்காய்க்
கள்ளமனந் துள்ளுவதென் கண்டாய்? பராபரமே! (172)

வந்ததையும் போனதையும் வைத்துவைத்துப் பார்த்திருந்தால்,
சிந்தை இதமகிதஞ் சேரும்; பராபரமே! (173)

ஏறுமயிர்ப் பாலமுணர் இந்தவிட யங்கள், நெருப்
பாறெனவும் நன்று அறிந்தேன்; பராபரமே! (174)

* 'இயங்கும்' என்றும் பாடமுண்டு.



பொறிவழியே யலைய பொறியா யுழல்வதுநின்
அறிவின் விதித்தவிதி யாமோ? பராபரமே! (175)

பாசசா லங்களெல்லாம் பற்றுவிட, ஞானவைவாள்
வீசுநா ளென்னாள் விளம்பாய்? பராபரமே! (176)

எந்தவுட லேனு மெடுத்தவுடல் நல்லதென்று
சிந்தைசெய வந்ததிறம் செப்பாய்? பராபரமே! (177)

பொய்யெல்லா மொன்றாய்ப் பொருந்திவைத்த பொய்யுடலை
மெய்யென்றால் மெய்யாய் விடுமோ? பராபரமே! (178)

மின்னனைய பொய்யுடலை மெய்யென்று நம்பி, ஐயோ!
நின்னை மறக்கை நெறியோ? பராபரமே! (179)

நித்தியமொன் றில்லாத நீர்க்குமிழி போன்றவுடற்
கித்தனைதான் துன்பமுண்டோ? என்னே! பராபரமே! (180)

தேகமிறு மென்றுசடர் தேம்புவதென்? நித்திரையின்
மோகமறிந் தாலுபயந் தானுண்டோ? பராபரமே! (181)

ஏதைச் சுமையா எடுப்பார்? எடுத்தவுடல்
சேதமுறின், யாதுபின்னே செல்லும்? பராபரமே! (182)

தோற்பாவை நலாட் சுமையாகும், சீவனென்றிங்
கார்ப்பா லெடுத்ததெவ ராலே? பராபரமே! (183)

ஞாலத்தை மெய்யெனவே நம்பிநம்பி, நாளுமென்றன்
காலத்தைப் போக்கியென்ன கண்டேன்? பராபரமே. (184)

பொய்யுலக வாழ்க்கைப் புலைச்சேரி வாதனை, நின்
மெய்யருளின் மூழ்கின் விடுங்காண்; பராபரமே! (185)

நூலேணி விண்ணேற நூற்குப் பருத்திவைப்பார்
போலே, கருவிநன்னூற் * போதம்; பராபரமே! (186)

சின்னஞ் சிறியார்கள் செய்தமணற் சோற்றையொக்கும்
மன்னுங் கலைஞான மார்க்கம்; பராபரமே! (187)

* 'போதும்' என்றும் பாடமுண்டு.

வாசகஞா னத்தால் வருமோ சுகம்? பாழ்த்த
பூசலென்று போமோ, புகலாய்? பராபரமே! (188)

கேட்டதையே சொல்லுங் கிளிபோல, நின்னருளின்
நாட்டமின்றி வாய்பேச னன்றோ? பராபரமே! (189)

வெளியாய் யருளில் விரவுமன்பர் தேகம்
ஒளியாய்ப் பிறங்கியது முண்டோ? பராபரமே! (190)

காலமொரு மூன்றுங் கருத்திலுணர்ந் தாலுமதை
ஞாலந் தனக்குரையார் நல்லோர்; பராபரமே! (191)

கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்,மற்
றல்லாதார் யாரோ? அறியேன்! பராபரமே! (192)

இல்லாத காரியத்தை இச்சித்துச் சிந்தைவழிச்
செல்லாமை நல்லோர் திறங்காண்; பராபரமே! (193)

ஏதுவந்தும் ஏதொழிந்தும் என்னதியா னென்னார்கள்
போதநிலை கண்ட புலத்தோர்; பராபரமே! (194)

ஆயிரஞ்சொன் னாலும் அறியாத வஞ்சநெஞ்சப்
பேயரொடு கூடில், பிழைகாண்; பராபரமே! (195)

மாய மயக்கொழிந்தார் மற்றொன்றை நாடுவரோ?
நேய வருணிலையி னிற்பார்; பராபரமே! (196)

நித்திரையிற் செத்தபிண நேருமுடற் சிந்தையையாச்
சுத்தர்களே, நல்ல துறவோர்; பராபரமே! (197)

என்னெஞ்ச மேது மிரங்குமே! நின்னருட்குக்
கன்னெஞ் சருமுளரோ காட்டாய்? பராபரமே! (198)

மந்தஅறி வாகியின்பம் வாயா திருந்தலைந்தால்,
சிந்தைமயங் காதோ? என் செய்வேன்! பராபரமே! (199)

தேடினேன் திக்கனைத்துந் தெண்டனிட்டேன்; சிந்தைநைந்து
வாடினேன்; என்மயக்க மாற்றாய்? பராபரமே! (200)

மடிமையெனு மொன்றை மறந்தன்றோ? என்னை
அடிமைகொளல் வேண்டும் அரசே! பராபரமே! (201)



காலர்பயந் தீர இன்பக் காற்கபய மென்றெழுந்த
மாலை வளர்த்தனையே வாழி! பராபரமே! (202)

நீர்புற் புதமாய், நினைவருட்கே, நின்றழியப்
பார்ப்பதல்லால், வேறுமொன்றைப் பாரேன்; பராபரமே! (203)

நீர்க்குமிழி போலென் நினைவுவெளி யாக்கரையப்
பார்க்குமிட மெல்லாமென் பார்வை; பராபரமே! (204)

ஆடியோய் பம்பரம்போல், ஆசையுட னெங்குமுனைத்
தேடியோய் கின்றேன்; என் செய்வேன், பராபரமே! (205)

வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்னார் கண்களிக்கும்
நாதாந்த மோன நலமே! பராபரமே! (206)

ஆனந்த மானநின்னை யன்றி,யொன்றை யுன்னாத
மோனந் தமியேற்கு முத்தி; பராபரமே! (207)

ஏதுக்கு முன்னைவிட வில்லையென்றால், என்கருத்தைச்
சோதிக்க வேண்டாம்; நான் சொன்னேன்; பராபரமே! (208)

முத்தியிலுந் தேகசித்தி மூலிகமாம் சித்திபெற்றோர்
எத்தனைபே ரென்றுரைப்ப தெந்தாய்? பராபரமே! (209)

நீயன்றி நானார்? நினைவார்? என் நெஞ்சகமார்?
தாயன்றிச் சூலுமுண்டோ, சாற்றாய்? பராபரமே! (210)

அங்கமே நின்வடிவ மானசுகர் கூப்பிட,நீ
எங்கும் 'ஏனென்'என்ற தென்னே? பராபரமே! (211)

தொல்லைவெள்ளத் தண்ணருண்மேற் கொண்டுசெழித் தார்த்
கள்ளமனக் கப்பலெங்கே காணும்? பராபரமே! [திழுத்தால்?

எக்கலையுங் கற்றுணர்ந்தோம் என்றவர்க்குஞ் சம்மதஞ்சொல்
வக்கணைப்பால் இன்பம் வருமோ? பராபரமே! (213)

கல்லெறியப் பாசி கலைந்துநன்னீர் காணும்; நல்லோர்
சொல்லுணரின் ஞானம்வந்து தோன்றும்; பராபரமே! (214)

நின்னையுணர்ந் தோர்கடமை நிந்தித்த பேயறிஞர்
என்ன கதிபெறுவார்? எந்தாய்! பராபரமே! (215)

என்னதியான் என்னலற்றோர் எங்கிருந்து பார்க்கினும்,நின்
சன்னிதியாம், நீபெரிய சாமி! பராபரமே! (216)

சோற்றுத் துருத்திச் சுமைசுமக்கக் கண்பிதுங்கக்
காற்றைப் பிடித்தலைந்தேன்; கண்டாய், பராபரமே! (217)

உள்ளபடி யொன்றை உரைக்கினவர்க் குள்ளுறவாய்க்
கள்ளமின்றி அன்பாய்க் களிப்பேன்; பராபரமே! (218)

அடுத்தவியல் பாகவொன்றை யான்பகர்வ தல்லால்,
தொடுத்ததொன்றை யான்வேண்டிச் சொல்லேன்; பராபரமே! ()

உள்ளமறி யாதொருவர் ஒன்றையுன்னிப் பேசிலையா?
துள்ளியிளங் கன்றாய்த் துடிப்பேன்; பராபரமே! (220)

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல், வேறொன் றறியேன்; பராபரமே! (221)

முன்னாண் மெய்ஞ்ஞான முனிவர்தவ மீட்டுதல்போல்,
இந்நாளிற் காணவெனக் கிச்சை; பராபரமே! (222)

கன்மமென்ப தெல்லாங் கரிசறவே மெய்ஞ்ஞான
தன்மநிலை சார்ந்ததன்பர் தன்மை; பராபரமே! (223)

கண்டுயிலா தென்னறிவின் கண்ணூடே காட்சிபெற
மண்டிய பேரொளிநீ; வாழி! பராபரமே! (224)

நானென தன்மையென்று நாடாமல் நாட இன்ப
வானாகி நின்றனைநீ; வாழி! பராபரமே! (225)

அகத்தூ டணுவணுவாய் அண்டமெல்லாந் தானாய்,
மகத்தாகி, நின்றனைநீ; வாழி! பராபரமே! (226)

காரகமாங் கர்ப்பவரைக் கண்ணூடும், என்கண்ணே!
வாரமுவைத்துக் காத்தனைநீ; வாழி! பராபரமே! (227)

புரந்தோர்தந் தேசமென்பார்; பூமியைப்போ ராடி,
இரந்தோருந் தம்மதென்பார்; என்னே! பராபரமே (228)

மூர்த்தியெல்லாம் வாழி! எங்கள் மோனகுரு வாழி! அருள்
வார்த்தையென்றும் வாழி! அன்பர் வாழி! பராபரமே!(229)



சொல்லும் பொருளுந் தொடரா அருள்நிறைவில்
செல்லும் படிக்கருள்நீ செய்தாய்; பராபரமே! (230)

இற்றைவரைக் குள்ளாக எண்ணரிய சித்திமுத்தி
பெற்றவர்க ளெத்தனைபேர்? பேசாய்; பராபரமே! (231)

நாடும், நகரும், நிசானட்டிய பாளயமும்;
ஈடுசெயு மோ?முடிவி லெந்தாய்! பராபரமே! (232)

தேடுந் திரவியமுஞ் சேர்ந்தமணிப் பெட்டகமும்
கூட வருந்துணையோ? கூறாய்; பராபரமே! (233)

தேடாத தேட்டினரே செங்கைத் துலாக்கோல்போல்,
வாடாச் சமநிலையில் வாழ்வார்; பராபரமே! (234)

நேயக் கசிந்துருகி நெட்டுயிர்த்து நின்றேனைப்
பாரா தென்னோ? பகராய்; பராபரமே! (235)

உள்ளபொரு ளாவி யுடன்மூன்று மன்றேதான்
கொள்ளைகொண்ட நீ, என் குறைதீர்; பராபரமே! (236)

ஆழ்ந்தாயே இவ்வுலகி லல்லலெல்லாந் தீர்ந்தருளால்
வாழ்ந்தாயே யென்றனைநீ; வாழி! பராபரமே! (237)

தாரா, அருளையெல்லாந் தந்தெனையும் நின்னருளின்
வாராயோ என்றனைநீ; வாழி! பராபரமே! (238)

ஆசையுன்மீ தல்லா லருளறிய வேறுமொன்றில்
பாசம்வையேன்; நின்கருணைப் பாங்கால், பராபரமே! (239)

ஆதியந்த நீகுருவா யாண்டதல்லால் நின்னையன்றிப்
போதனையு முண்டோ? புகலாய், பராபரமே! (240)

தானாக வந்து தடுத்தாண் டெனையின்ப
வானாகச் செய்தவின்ப வானே! பராபரமே! (241)

பற்றற் றிருக்குநெறி பற்றில்; கடன்மலையுஞ்
சுற்ற நினைக்குமனஞ் சொன்னேன்; பராபரமே! (242)

படிப்பற்றுக் கேள்வியற்றுப் பற்றற்றுச் சிந்தைத்
துடிப்பற்றார்க் கன்றோ? சுகங்காண்; பராபரமே! (243)

சத்தாகி நின்றோர் சடங்க ளிலிங்கமென
வைத்தாரு முண்டே? என் வாழ்வே! பராபரமே! (244)

சித்த நிருவிகற்பஞ் சேர்ந்தார் உடல்தீபம்
வைத்தகர்ப்பூ ரம்போல் வயங்கும்; பராபரமே! (245)

ஆதிகா லத்திலெனை ஆண்டனையே! இப்பால்நீ
போதியெனின் எங்கேநான் போவேன்? பராபரமே! (246)

நாவழுத்துஞ் சொன்மலரோ? நாளுதிக்கும் பொன்மலரோ?
தேவையுனக் கின்னதென்று செப்பாய்? பராபரமே! (247)

கன்னல் தரும் பாகாய்க், கரும்புவட்டாய்க், கற்கண்டாய்,
இன்னமுதாய் என்னு ளிருந்தாய், பராபரமே! (248)

சிற்பரமே! தற்பரமே! தெய்வச் சுருதிசொன்ன
அற்புதமே! அன்பே! அறிவே! பராபரமே! (249)

அறிவிப்பான் நீயென்றால், ஐம்புலன்கள் தந்த
நெறிநிற்பார் யாரே? நிகழ்த்தாய்; பராபரமே! (250)

அந்தக் கரணமெனும் ஆகாத பேய்களெனை
வந்துபிடித் தாட்ட வழக்கோ? பராபரமே! (251)

ஐவரொடுங் கூடாமல் அந்தரங்க சேவைதந்த
தெய்வ அறிவே! சிவமே! பராபரமே! (252)

அருளாகி நின்றசுகம் ஆகாம லையோ!
இருளாகி நிற்க இயல்போ? பராபரமே! (253)

அன்பரெல்லாம் இன்ப மருந்திடவும், யானொருவன்
துன்புறுத லன்றோ? நீ சொல்லாய்; பராபரமே! (254)

சந்ததமு நின்கருணை சாற்றுவதல் லால், வேறு
சிந்தையறி யேனுன்றன் சித்தம், பராபரமே! (255)

நானு னெனக்குளாறு நாட்டத்தால், என்னைவிட்டுப்
போனாலும், உன்னைவிட்டுப் போகேன்; பராபரமே! (256)

இக்காயம் பொய்யென்றோ நீட்டத் தனக்கபயம்
புக்காதா ருண்டோ? புகலாய்! பராபரமே! (257)



தானுதல் பூரணமே சாருமிட முண்டுயிரும்
வானுதியு மொழுங்காய் மன்னும்; பராபரமே! (258)

உன்னுமனங் கர்ப்பூர வுண்டைபோ லேகரைய
மின்னும் ஆனந்த விளக்கே! பராபரமே! (259)

நாட்பட் டலைந்த நடுக்கமெல்லாந் தீரவெனைக்
காட்பட்டுந் துன்பமெனக் காமோ? பராபரமே! (260)

பாவிபடுங் கண்கலக்கம் பார்த்துமிரங் காதிருந்தால்,
ஆவிக் குறுதுணையார்? ஐயா! பராபரமே! (261)

நின்னிறைவே தாரகமாய் நின்றுசுக மெய்தாமல்,
என்னிறைவே பாவித்தேன்; என்னே! பராபரமே! (262)

நின்னைச் சரண்புகுந்தால் நீகாக்க வேண்டுமல்லால்,
என்னைப் புறம்விடுதல், என்னே! பராபரமே! (263)

மாறாத துன்பமெல்லாம் வந்தணைத்தால், நின்செவியில்
ஏறாத வாறேன் இயம்பாய்? பராபரமே! (264)

விஞ்சுபுலப் பாடனைத்தும், வீறுதுன்பஞ் செய்யவந்த
அஞ்சுபுல வேடருக்கு மாற்றேன்; பராபரமே! (265)

கன்னங் கரியநிறக் காமாதி ராக்ஷசப்பேய்க்
கென்னையிலக் காக்கவைத்த தென்னே! பராபரமே! (266)

சித்திநெறி கேட்டல், செகமயக்குஞ் சன்மமற
முத்திநெறி கேட்டல் முறைகாண்; பராபரமே! (267)

சிந்தை சிதையச் சிதையாத ஆனந்தம்
எந்தவகை யாலெவர் தெய்தும்? பராபரமே! (268)

கூர்த்தவறி வாலறியக் கூடா தெனக்குரவன்
சேர்த்தபடி தானே தெரிந்தேன்; பராபரமே! (269)

பத்த ரருந்தும் பரமசுகம் யானருந்த
எத்தனைநாள் செல்லும்? இயம்பாய்; பராபரமே! (270)

நீரத்தி ஞற்றுறவு சேராமல், இவ்வுலகில்
[illegible] பராபரமே! (271)

ஒன்றுமறி யாஇருளாம் உள்ளம் படைத்தவெனைக்
கென்றுகதி வருவ தெந்தாய்? பராபரமே! (300)

சிந்திக்குந் தோறும்என் னுட் சிற்சுகமா யூற்றூறிப்
புந்திக்குள் நின்றவருட் பொற்பே! பராபரமே! (301)

என்றுமடைந் தோர்கட் கெய்யுமா றுறிப்பனைத்தும்
கன்றைப்புதைத காலி கதைகாண், பராபரமே! (302)

குற்றங் குறையக், குணமே விடஅருளை
யுற்றவரே ஆவிக் குறவாம்; பராபரமே! (303)

ஒருரையால் வாய்க்குமுண்மைக் கோரனந்த நூல்கோடிப்
பேருரையாற் பேசிலென்ன, பேறும்? பராபரமே! (304)

சொல்லுஞ் சமயநெறிச் சுற்றுக்கு ளேசுழலும்
அல்ல லொழிவதென்றைக் கையா! பராபரமே! (305)

பிடித்ததையே தாபிக்கும், போ ணவத்தை
அடித்துத் துரத்தவல்லா ரார்காண்? பராபரமே! (306)

நேசத்தால் நின்னை நினைக்கு நினைவுடையார்
ஆசைக் கடலி லழுந்தார்; பராபரமே! (307)

கள்ளாது கட்டுணவுங் காரியமோ? நானொருசொற்
கொள்ளாத தோஷமன்றோ? கூறாய்; பராபரமே! (308)

சென்றவிட மெல்லாந் திருவருளே தாரகமாய்
நின்றவர்க்கே ஆனந்த நிட்டை; பராபரமே! (309)

நீட்சி குறுகலிலா நித்யசுகா ரம்பசக
சாக்ஷியாம் உன்னைவந்து சார்ந்தேன்; பராபரமே! (310)

வானாதி தத்துவமாய் மன்னிநின்ற காரணநீ;
நானாகி நிற்பதெந்த நாளோ? பராபரமே! (311)

காட்டத்தி லங்கி கடையவந்தா லென்னஉன்னும்
நாட்டத்தி னூடுவந்த நட்பே! பராபரமே! (312)

நித்திரையாய்த் தானே நினைவயர்ந்தால் நித்தநித்தம்
செக்குமிறைப் பானகெங்கள் செய்கை; பராபரமே! (313)



இன்பநிட்டை யெய்தாமல், யாதெனினுஞ் சென்றுமனந்
துன்புறுதல், வன்பிறவித் துக்கம்; பராபரமே! (314)

பொய்யகல மெய்யான போதநிலை கண்டோர்க்கோர்
ஐயமிலை; ஐயமிலை; ஐயா! பராபரமே! (315)

மந்திரத்தை யுன்னி மயங்கா தெனக்கினியோர்
தந்திரத்தை வைக்கத் தகாதோ? பராபரமே! (316)

விண்கருணை பூத்ததென்ன மேவி உயிர்க்குயிராய்த்
தண்கருணை தோன்றவரு டாய்நீ! பராபரமே! (317)

தன்மயமாய் நின்றநிலை தானேதா னாகிநின்றால்
நின்மயமா யெல்லாம் நிகழும்; பராபரமே! (318)

ஏங்கி [illegible]டையுநெஞ்ச வேழையை, நீ வாவென்றே
பாங்குபெறச் செய்வதுன்மேற் பாரம்; பராபரமே! (319)

ஆண்டநின்னை நீங்கா அடிமைகள்யாம் ஆணவத்தைப்
பூண்டதென்ன கன்மம்? புகலாய்; பராபரமே! (320)

எங்கணுநீ என்றால் இருந்தபடி எய்தாமல்,
அங்குமிங்கு மென்றலைய லாமோ? பராபரமே! (321)

கற்குமது வுண்டு களித்தல்லால் நின்னருளின்
நிற்குமது தந்ததுண்டோ? நீதான்; பராபரமே! (322)

அண்டபகி ரண்ட மறியாத நின்வடிவைக்
கண்டவரைக் கண்டாலே கதியாம்; பராபரமே! (323)

கலக்கமுற நெஞ்சைக் கலக்கித் திரும்பத்
துலக்குபவன் நீயலையோ? சொல்லாய்; பராபரமே! (324)

சிந்தையுமென் போலச் செயலற் றடங்கிவிட்டால்,
வந்ததெலாம் நின்செயலா வாழ்வேன்; பராபரமே! (325)

பந்தமெலாந் தீரப் பரஞ்சோதி நீகுருவாய்
வந்த வடிவை மறவேன்; பராபரமே! (326)

தானந்த மான சகச நிருவிகற்ப
ஆனந்த நிட்டையரு ளையா! பராபரமே! (327)

அல்லலெல்லாந் தீரவெனக் கானந்த மாகவொரு
சொல்லை, என்பால் வைத்ததையென் சொல்வேன்? பராபரமே.
சிந்தை மயக்கமறச், சின்மயமாய் நின்றவுன்னைத்
தந்தவுனக் கென்னையுநான் தந்தேன்; பராபரமே! (329)
மைகாட்டு மாயை மயக்கமற, நீகுருவாய்க்
கைகாட்ட வுங்கனவு கண்டேன்; பராபரமே! (330)
மால்வைத்த சிந்தை மயக்கறஎன் சென்னிமிசை
கால்வைக்க வுங்கனவு கண்டேன்; பராபரமே. (331)
மண்ணான மாயையெல்லாம் மாண்டுவெளி யாகஇருங்
கண்ணார வுங்கனவு கண்டேன்; பராபரமே! (332)
மண்ணீர்மை யாலே மயங்காதுன் கையாலென்
கண்ணீர் துடைக்கவுநான் கண்டேன்; பராபரமே! (333)
உள்ள துணரா வுணர்விலிமா பாவியென்றோ
மெள்ளமெள்ளக் கைநெகிழ விட்டாய்; பராபரமே! (334)
எல்லா நினதுசெயல் என்றெண்ணு மெண்ணமுநீ
அல்லா லெனக்குளதோ ஐயா! பராபரமே! (335)
பந்த மயக்கிருக்கப் பற்றொழிந்தேன் என்றுளறும்
இந்த மயக்க மெனக்கேன்? பராபரமே! (336)
காட்சியெல்லாங் கண்ணைவிடக் கண்டதுண்டோ? யாதினுக்கு
மாட்சி யுனதருளே அன்றோ? பராபரமே! (337)
எட்டுத் திசையுமொன்றாய், இன்பமாய், நின்றவுன்னை
விட்டுப் பிரியவிடம் வேறோ? பராபரமே! (338)
பிறியா துயிர்க்குயிராய்ப் பின்னமற வோங்குஞ்
செறிவே! அறிவே! சிவமே! பராபரமே! (339)
ஏதேது சொன்னாலும் எள்ளளவு நீயிரங்காச்
சூதே தெனக்குளவு சொல்லாய்? பராபரமே! (340)
கற்பனையாப் பாடுகின்றேன்; கண்ணீருங் கம்பலையுஞ்
சொற்பனத்துங் காணேனென்; சொல்வேன்! பராபரமே! (341)



வன்பொன்று நீங்கா மனதிறப்ப, மாறுப்பே
ரன்பொன்றும் போதுமெனக் ஐயா! பராபரமே! (342)
ஏதுந் தெரியா எளியேனை வாவெனநின்
போதநிலை காட்டிற் பொறாதா? பராபரமே! (343)
ஓரம லெல்லா மொழிந்தேற்குன் தெய்வவருள்
நாரா திருக்கத் தகுமோ? பராபரமே! (344)
மோனந் தருஞான மூட்டி, எனக்குவட்டா
ஆனந்த வாழ்க்கை அருளாய்! பராபரமே! (345)
வாடுமுகங் கண்டென்னை வாடாம லேகாத்த
நீடுங் கருணை நிறைவே! பராபரமே! (346)
புந்தியினால் நின்னடியைப் போற்றுகின்ற மெய்யடியார்
சிந்தையிறப் போநின் றியானம்; பராபரமே! (347)
உனக்குவமை யாக்கருணை யுள்ளவரும், வன்மைக்
கெனக்குவமை யானவரு மில்லை; பராபரமே! (348)
தாயிருந்தும் பிள்ளை தளர்ந்தாற்போல், எவ்விடத்தும்
நீயிருந்து நான்றளர்ந்து நின்றேன்; பராபரமே! (349)
வாயாற் கிணறுகெட்ட வாறேபோல், வாய்பேசிப்
பேயானார்க் கின்பமுண்டோ? பேசாய், பராபரமே! (350)
பாவமென்று லேதும் பயமின்றிச் செய்யஇந்தச்
சீவனுக்கார் போதந் தெரித்தார்? பராபரமே! (351)
இன்ப நிருவிகற்ப மின்றேதா; அன்றெனிலோ
துன்பம் பொறுப்பரிது சொன்னேன்; பராபரமே! (352)
கற்குநிலை கற்றால் கருவியவி மாகருளாய்
நிற்குநிலை கற்பதுவே நீதம்; பராபரமே! (353)
காய்ச்சச் சுடர்விடும்பொற் கட்டிபோல், நின்மலமாய்ப்
பேச்சற் றவரே பிறவார்; பராபரமே! (354)
பற்றொழிந்து, சிந்தை பதைப்பொழிந்து, தானேதா
னற்றிருப்ப [illegible]? பராபரமே! (355)

உருவெளிதான் வாதனூ ருத்தமர்க்கல் லால்இனமுங்
குருவழிநின் றார்க்குமுண்டோ? கூறாய்; பராபரமே! (356)

தேகமியா தேனுமொரு சித்திபெறச் சீவன்முத்தி
யாகுநெறி நல்லநெறி ஐயா! பராபரமே! (357)

உலகநெறி போற்சடலம் மோயஉயிர் முத்தி
இலகுமெனல் பந்த இயல்போ? பராபரமே! (358)

பரமாப் பரவெளியாப் பார்ப்பதல்லால், மற்றெவர்க்குந்
திரமேது மில்லை; நன்றாய்த் தேர்ந்தேன்; பராபரமே! (359)

தேடுவேன் நின்னருளைத் தேடுமுன்னே யெய்தின், நீடு
மாடுவேன்; ஆனந்த மாவேன்; பராபரமே! (360)

உள்ளங் குழைய, உடல்குழைய, உள்ளிருந்த
கள்ளங் குழைய, என்று காண்பேன்? பராபரமே! (361)

பட்டப் பகல்போலப் பாழ்த்தசிந்தை மாளின்எல்லாம்
வெட்டவெளி யாக விளங்கும்; பராபரமே! (362)

பார்க்கினனுப் போற்கிடந்த பாழ்ஞ்சிந்தை மாளின், என்னை
யார்க்குச் சரியிடலா மையா? பராபரமே! (363)

பாட்டுக்கோ, அன்பினுக்கோ, பத்திக்கோ, அன்பர்தங்கள்
நீட்டுக்கெல் லாங்குறுகி நின்றாய்? பராபரமே! (364)

முத்தாந்த வித்தே! முளைக்குநில மாயெழுந்த
சித்தாந்த மார்க்கச் சிறப்பே! பராபரமே! (365)

உன்னு வெளியாய், உறங்காத பேருணர்வாய்,
என்னுவிக் குள்ளே யிருந்தாய்; பராபரமே! (366)

தத்துவமெல் லாமகன்ற தன்மையர்க்குச் சின்மயமாம்
நித்த முத்த! சுத்த நிறைவே! பராபரமே! (367)

உள்ளக் கொதிப்பகல உள்ளுள்ளே யானந்த
வெள்ள மலர்க்கருணை வேண்டும்; பராபரமே! (368)

என்னைப் புறப்பதரு ளின்கடனும் என்கடனும்
நின்னிற் பணியறவே நிற்கை; பரா—— ! (369)



தானேயா நன்னிலையைத் தந்தவரு ளானந்த
வானே! மனாதீத வாழ்வே! பராபரமே! (370)

மண்ணாதி பூதமெல்லாம் வைத்திருந்த நின்னிறைவைக்
கண்ணாரக் கண்டு களித்தேன்; பராபரமே! (371)

அறியாமை யீதென் றறிவித்த வன்றேநான்,
பிரியா அருள்நிலையும் பெற்றேன்; பராபரமே! (372)

தீதெனவு நன்றெனவுந் தேர்ந்து, நான் தேர்ந்தபடி
ஏது நடக்கவொட்டா தென்னே! பராபரமே! (373)

கண்டவறி விகண்டா காரமென மெய்யறிவிற்
கொண்டவர்க்கே முத்தி கொடுப்பாய்; பராபரமே! (374)

ஈறுக வல்வினைநான் என்னுமல், இன்பசுகம்
பேறும் படிக்கடிமை பெற்றேன்; பராபரமே! (375)

பெற்றா ரனுபூதி, பேசாத மோனநிலை
கற்றார் உனைப்பிரியார் கண்டாய்; பராபரமே! (376)

நீயேநா னென்று நினைப்பு மறப்புமறத்
தாயே யனைய அருள் தந்தாய்; பராபரமே! (377)

சஞ்சலமற் றெல்லாநீ தானென் றுணர்ந்தேன்; என்
அஞ்சலியுங் கொள்ளாய், அரசே! பராபரமே! (378)

பூதமுதல் நாதவரை பொய்யென்ற மெய்யரெல்லாங்
காதலித்த இன்பக் கடலே! பராபரமே! (379)

வாக்குமன மொன்றுபட்ட வார்த்தையல்லால், வெவ்வேறாய்ப்,
போக்குடைய வார்த்தை பொருந்தேன்; பராபரமே! (380)

வன்மையின்றி யெல்லா மதித்துணர்வாய்க் காகெடுவேன்
தன்மையொன்றுந் தோயாத் தடையோ? பராபரமே! (381)

பத்தர்சித்தர் வாழி! பரி பக்குவர்கள் வாழி! செங்கோல்
வைத்தவர்கள் வாழி! குரு வாழி! பராபரமே! (382)

கல்லாதே னானுங் கற்றுணர்ந்த மெய்யடியார்
சொல்லாலே நின்னைத் தொடர்ந்தேன்; பராபரமே! (383)

சொல்லிறப்பச் சற்குருவாய்த் தோன்றிச் சுகங்கொடுத்த
நல்லவர்க்கே கொத்தடிமை நான்காண்; பராபரமே! (384)

முத்திக்கு வித்தான மோனக் கரும்புவழி
தித்தித் திடவிளைந்த தேனே! பராபரமே! (385)

நித்திரையும் பாழ்த்த நினைவுமற்று நிற்பதுவோ,
சுத்தவருள் நிலைநீ சொல்லாய்? பராபரமே! (386)

மண்ணுமறி கடலு மற்றுளவும் எல்லாமுன்
கண்ணி லிருக்கநான் கண்டேன்; பராபரமே! (387)

பூட்டிவைத்து வஞ்சப் பொறிவழியே யென்றனைநீ
ஆட்டுகின்ற தேதோ? அறியேன்; பராபரமே! (388)

பொய்யுணர்வாய் இந்தப் புழுக்கூட்டைக் காத்திருந்தேன்
உய்யும் வகையு முளதோ? பராபரமே! (389)

---

## பைங்கிளிக்கண்ணி.

அந்தமுத லாதி யளவாமல் என்னறிவில்
சுந்தரவான் சோதி துலங்குமோ? பைங்கிளியே! (1)

அகமேவு மண்ணலுக்கென் அல்லலெல்லாஞ் சொல்லிச்
சுகமான நீபோய்ச் சுகங்கொடுவா, பைங்கிளியே! (2)

ஆவிக்கு ளாவியெனு மற்புதனார் சிற்சுகந்தான்
பாவிக்குங் கிட்டுமோ சொல்லாய்நீ? பைங்கிளியே! (3)

ஆருமறி யாமலெனை யந்தரங்க மாகவந்து
சேரும் படியிறைக்குச் செப்பிவா, பைங்கிளியே! (4)

ஆறாத கண்ணீர்க்கென் அங்கபங்க மானதையுங்
கூறாத தென்னோ? குதலைமொழிப் பைங்கிளியே! (5)

இன்பருள ஆடையழுக் கேறுமெமக் கண்ணல்சுத்த
அம்பரமா மாடை யளிப்பானோ! பைங்கிளியே! (6)



உன்னாமல் ஒன்றிரண்டென் றோராமல் விட்டுநெறி
சொன்னான் வரவும்வகை சொல்லாய்நீ! பைங்கிளியே! (7)

ஊருமிலார் பேருமிலார் உற்றார்பெற் றாருடனே
ஆருமிலா ரென்னை அறிவாரோ? பைங்கிளியே! (8)

ஊனைப் பாராமலெனக் குள்ளகத்து நாயகனார்
தேனைப்பார்த் தாற்கருணை செய்வாரோ? பைங்கிளியே! (9)

என்று விடியு மிறைவாவோ என்றென்று
நின்றநிலை யெல்லாம் நிகழ்த்தாய்நீ; பைங்கிளியே! (10)

எந்த மடலூடு மெழுதா இறைவடிவைச்
சிந்தைமட லாவெழுதிச் சேர்ப்பேனோ? பைங்கிளியே! (11)

கண்ணுண்மணி போலின்பங் காட்டி, எனைப்பிரிந்த
திண்ணியரு மின்னம்வந்து சேர்வாரோ? பைங்கிளியே! (12)

ஏடார் மலர்சூடேன், எம்பெருமான் பொன்னடியாம்
வாடா மலர்முடிக்கு வாய்க்குமோ? பைங்கிளியே! (13)

கல்லேன் மலரேன் கனிந்தவன்பே பூசையென்ற
நல்லோர்போ லாவெனையு நாடுவரோ? பைங்கிளியே! (14)

கண்டதனைக் கண்டு, கலக்கந் தவிரெனவே
விண்டபெரு மானையுநான் மேவுவனோ! பைங்கிளியே! (15)

காணாத காட்சி கருத்துவந்து காணாமல்
வீணாள் கழித்து மெலிவேனோ? பைங்கிளியே! (16)

காந்த மிரும்பைக் கவர்ந்திழுத்தா லென்னஅருள்
வேந்த னெமையிழுத்து மேவுவனோ?. பைங்கிளியே! (17)

காதலால் வாடினதுங் கண்டிலையே, எம்மிறைவர்
போதரவா யின்பம் புசிப்பேனோ? பைங்கிளியே! (18)

கிட்டிக்கொண் டன்பருண்மை கேளாப் பலவடிகொள்
பட்டிக்கு மின்பமுண்டோ? சொல்லாய்நீ! பைங்கிளியே! (19)

கிட்டாராய் நெஞ்சிற் கிளர்வார் தழுவவென்றால்
[illegible] ? பைங்கிளியே! (20)

கூறுங் குணமுமில்லாக் கொள்கையினர் என்கவலை
ஆறும் படிக்கு மணைவாரோ? பைங்கிளியே! (21)

சின்னஞ் சிறியேன்றன் சிந்தைகவர்ந் தாரிறைவர்
தன்னந் தனியே தவிப்பேனோ? பைங்கிளியே! (22)

சிந்தை மருவித் தெளிவித் தெனையாள
வந்தகுரு நாதனருள் வாய்க்குமோ? பைங்கிளியே! (23)

சொல்லிறந்து நின்ற சுகரூபப் பெம்மானை
அல்லும் பகலு மணைவேனோ? பைங்கிளியே! (24)

தற்போதத் தாலே தலைகீழ தாகவைய
நற்போத இன்புவர நாட்செலுமோ? பைங்கிளியே! (25)

தன்னை யறியுந் தருணந் தனிற்றலைவர்
என்னை யணையர்தவண்ண மெங்கொளித்தார்? பைங்கிளியே! ()

தாங்கரிய மையலெல்லாந் தந்தெனைவிட் டின்னருளாம்
பாங்கியைச்சேர்ந் தாரிறைக்குப் பண்போசொல்? பைங்கிளியே!

தாவியதோர் மர்க்கடமாந் தன்மைவிட்டே அன்னைவிடத்
தோவியம்போ னிற்கினெனை யுள்குவரோ? பைங்கிளியே! (28)

தீராக் கருவழக்கைத் தீர்வையிட்டங் கென்னையினைப்
பாரேறு தாண்டானைப் பற்றுவனோ? பைங்கிளியே! (29)

தூங்கிவிழித் தென்னபலன்? தூங்காமற் றூங்கிநிற்கும்
பாங்குகண்டா லன்றோ பலன்காண்பேன்? பைங்கிளியே? (30)

தொல்லைக் கவலை தொலைத்துத் தொலையாத
எல்லையிலா இன்பமய மெய்துவனோ? பைங்கிளியே! (31)

நன்னெஞ்சத் தன்பரெல்லாம் காதலாச்சேர்ந் தின்பமணைந்தார்
வன்னெஞ்சத் தாலேநான் வாழ்விழந்தேன்; பைங்கிளியே! ()

நானே கருதினவா நாடகஞ்செய் யாவிருந்தால்
தானே யணைவரவர் தன்மையென்னோ! பைங்கிளியே (33)

நீர்க்குமிழி போன்றவுட னிற்கையிலே, சாசுவதஞ்
சேர்க்கவறி யாமல் திகைப்பேனோ? பைங்கிளியே! (34)



நெஞ்சகத்தில் வாழ்வார் நினைக்கின்வே றென்றணையார்
வஞ்சகத்தா ரல்லரவர் மார்க்கமென்னோ? பைங்கிளியே! (35)

பன்முத் திரைச்சமயம் பாம்படக்கல் லாலடிவாழ்
சின்முத் திரையாசைச் சேர்வேனோ? பைங்கிளியே! (36)

பச்சைகண்ட நாட்டிற் பறக்குமுனைப் போற்பறந்தேன்;
இச்சையெல்லா மண்ணற் றியம்பிவா! பைங்கிளியே! (37)

பாசப்பந்தஞ் செய்தத்துன்பம் பாராமல் எம்மிறைவர்
ஆசைதந்த துன்பமதற் காற்றேனன்; பைங்கிளியே! (38)

பாராசைபற்றிறையைப் பற்றறநான் பற்றிநின்ற
பூராய மெல்லாம் புகன்றுவா; பைங்கிளியே! (39)

பேதைப் பருவத்தே பின்றொடர்ந்தென் பக்குவமுஞ்.
சோதித்த வண்ணம்வந்து தோய்வாரோ? பைங்கிளியே! (40)

பைம்பயிரை நாடுமுன்போற் பார்பூத்த பைங்கொடிசேர்
செம்பயிரை நாடித் திகைத்தேனன்; பைங்கிளியே! (41)

பொய்க்கூடு கொண்டு புலம்புவனோ! எம்மிறைவர்
மெய்க்கூடு சென்று விளம்பிவா; பைங்கிளியே! .. (42)

பொய்ப்பணிவேன் படனைப் பொருட்படுத்தி அண்ணலென்,
பான்,மெய்ப்பணியுந்தந்தொருகான்மேவுவனோ? பைங்கிளியே!

மண்ணுறங்கும் விண்ணுறங்கு மற்றுளவெ லாமுறங்குங்
கண்ணுறங்கே னெம்மிறைவர் காதலால், பைங்கிளியே! (44)

மட்டுப் படாத மயக்கமெல்லாந் தீரவென்னை
வெட்டவெளி வீட்டிலண்ணல் மேவுவனோ? பைங்கிளியே! ()

மாலை வளர்த்தென்னை வளர்த்திறைவர் பன்னெறியாம்
பாலை வனத்தில்விட்ட பாவமென்னோ! பைங்கிளியே! (46)

மெய்யினோய் மாற்றவுழக மெத்தவுண்டெம் மண்ணறந்த
மையனோய் தீர்க்க மருந்துமுண்டோ? பைங்கிளியே! (47)

மேவுபஞ்ச வண்ணமுற்றாய், வின்சிறைபா லல்லலுற்றாய்,
பாவிபஞ்ச வண்ணம் பகர்ந்துவா; பைங்கிளியே! (48)

வாய்திறவா வண்ணமெனை வைத்தாண்டார்க் கென்றுபரை
நீதிறவாச் சொல்லி நிசமாக்காண்; பைங்கிளியே! (49)

வாட்டப் படாத மவுனவின்பங் கையாலே
காட்டிக் கொடுத்தானைக் காண்பேனோ? பைங்கிளியே! (50)

வாரா வரவாக வந்தருளு மோனருக்கென்
பேராசை யெல்லாம்போய்ப் பேசிவா; பைங்கிளியே! (51)

விண்ணவர்தம் பாலமுதம் வேப்பங்கா யாகவென்பால்
பண்ணியதெம் மன்னன்மயல் பார்த்தாயோ? பைங்கிளியே! ()

விண்ணுள் வெளியுடங்கி வேறற்ற தென்ன அருள்
கண்ணு ளடங்கிடவுங் காண்பேனோ? பைங்கிளியே! (53)

விண்ணூர் நிலவுதவழ் மேடையிலெல் லாருமுற
மண்ணான வீட்டிலென்னை வைத்ததென்னோ? பைங்கிளியே! ()

உள்ளத்தி னுள்ளே யொளித்திருந்தென் கள்ளமெல்லாம்
வள்ளலறிந் தாலெனக்கு வாயுமுண்டோ? பைங்கிளியே! (55)

ஆகத்தை நீக்குமுன்னே, ஆவித் துணைவரைநான்
தாகத்தின் வண்ணந் தழுவேனோ? பைங்கிளியே! (56)

தானே சுபாவந் தலைப்படினுன் ஞான
வானு னவரும் வருவாரோ? பைங்கிளியே! (57)

கள்ளத் தலைவரவர் கைகாட்டிப் பேசாமல்
உள்ளத்தில் வந்த உபாயமென்னோ? பைங்கிளியே! (58)

---

## எந்நாட்கண்ணி.

### தெய்வவணக்கம்.

நீர்பூத்த வேணி நிலவெறிப்ப மன்றாடுங்
கார்பூத்த கண்டனையான் காணுநா ளெந்நாளோ! (1)

பொன்னூறு மன்றுண்மணிப் பூவைவிழி வண்டுசுற்றும்
என்னா ரமுதினைநா னிச்சிப்ப தெந்நாளோ! (2)



நீக்கிமலக் கட்டறுத்து நேரே வெளியிலெம்மைத்
தூக்கிவைக்குந் தாளைத் தொழுதிடுநா ளெந்நாளோ! (3)

கருமுகங்காட் டாமலென்றுங் கர்ப்பூரம்வீசுந்
திருமுகமே நோக்கித் திருக்களிப்ப தெந்நாளோ! (4)

வெஞ்சே லனும்விழியார் வேட்கைநஞ்சுக் கஞ்சினரை
அஞ்சே லெனுங்கைக் கபயமென்ப தெந்நாளோ! (5)

ஆறு சமயத்து மதுவதுவாய் நின்றிலங்கும்
வீறுபரை திருத்தாண் மேவுநா ளெந்நாளோ! (6)

பச்சைநிற மாய்ச்சிவந்த பாகங் கலந்துலகை
இச்சையுட னின்றுனை யாங்காண்ப தெந்நாளோ! (7)

ஆதியந்தங் காட்டா தகண்டிதமாய் நின்றுணர்த்தும்
போதவடி வானடியைப் போற்றுநா ளெந்நாளோ! (8)

கங்கை நிலவுசடைக் காட்டானைத் தந்தையெனும்
புங்கவெண்கோட் டானைபதம் புந்திவைப்ப தெந்நாளோ! (9)

அஞ்சுமுகங் காட்டாம லாறுமுகங் காட்டவந்த
செஞ்சரணச் சேவடியைச் சிந்தைவைப்ப தெந்நாளோ! (10)

நந்தையிரு தாடொனித்துத் தம்பிரான் றாள்சேர்ந்த
எந்தையிரு தாளிணைக்கே யின்புறுவ தெந்நாளோ! (11)

---

## குருமரபின்வணக்கம்.

துய்யகாமலரால் சொல்லாமல் சொன்னஉண்மை
ஐயனைக்கல் லால்அரசை யமணைவ தெந்நாளோ? (1)

சிந்தையினுக் கெட்டாத சிற்சுகத்தைக் காட்டவல்ல
நந்தியடிக் கீழ்க்குடியாய் நாமணைவ தெந்நாளோ? (2)

எந்தை சனற்குமா ரனிளமை யாட்கொள்வான்
வந்த தவத்தினரை வாழ்த்துநா ளெந்நாளோ? (3)

பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதன்அருள் மேவுநா ளெந்நாளோ? (4)

பாதிவிருத் தத்தால்இப் பார்விருத்த மாகஉண்மை
சாதித்தார் பொன்னடியைத் தான்பணிவ தெந்நாளோ? (5)

சிற்றம்பல மன்னுஞ் சின்மயராந் தில்லைநகர்க்
கொற்றங் குடிமுதலைக் கூறுநா ளெந்நாளோ? (6)

குறைவில்அருள் ஞானமுதல் கொற்றங் குடியடிகள்
நறைமலர்த்தாட் கன்புபெற்று நாமிருப்ப தெந்நாளோ? (7)

நாளவங்கள் போகாமல் நன்னெறியைக் காட்டிஎமை
ஆளவந்த கோலங்கட் கன்புவைப்ப தெந்நாளோ? (8)

என்னறிவை உள்ளடக்கி, என்போல் வருமவுனி
தன்னறிவுக் குள்ளேநான் சாருநா ளெந்நாளோ? (9)

ஆறொன்றை நாடினதற் காறுமுண்டாம் என்றெமக்குக்
கூறு மவுனியருள் கூடுநா ளெந்நாளோ? (10)

நில்லாமல் நின்றருளை, நேரேபார் என்றவொரு
சொல்லால், மவுனியருள் தோற்றுநா ளெந்நாளோ? (11)

வைதிகமாஞ் சைவ மவுனிமவு னத்தளித்த
மெய்திகழ்ந்தென் அல்லல் விடியுநா ளெந்நாளோ? (12)

வாக்கு மனமற்ற மவுனிமவு னத்தருளே
தாக்கவுமென் அல்லலெல்லாந் தட்டழிவ தெந்நாளோ? (13)

## அடியார்வணக்கம்.

வெம்பந்தந் தீர்த்துலகாள் வேந்தன் திருஞான
சம்பந் தனையருளால் சாருநா ளெந்நாளோ? (1)

ஏரின் சிவபோகம் இங்கிவற்கே யென்னஉழ
வாரங்கொள் செங்கையர்தாள் வாரம்வைப்ப தெந்நாளோ? (2)

பித்தரிறை யென்றறிந்து பேதைபால் தூதனுப்பு
வித்ததமிழ்ச் சமர்த்தர் மெய்புகழ்வ தெந்நாளோ? (3)

போதவூர் நாடறியப் புத்தர்தமை வாதில்வென்ற
வாதவூ ரையனன்பை வாஞ்சிப்ப தெந்நாளோ? (4)



ஓட்டுடன் பற்றின்றி உலகைத் துறந்த செல்வப்
பட்டினத்தார் பத்ரகிரி பண்புணர்வ தெந்நாளோ? (5)

கண்டதுபொய் யென்றகண்டா காரசிவ மெய்யெனவே
விண்டசிவ வாக்கியர்தாள் மேவுநா ளெந்நாளோ? (6)

சக்கர வர்த்தி தவராச யோகியெனும்
மிக்கதிரு மூலனருள் மேவுநா ளெந்நாளோ? (7)

கந்தரனு பூதிபெற்றுக் கந்தரனு பூதிசொன்ன
எந்தையருள் நாடி இருக்குநா ளெந்நாளோ? (8)

எண்ணரிய சித்த ரிமையோர் முதலான
பண்ணவர்கள் பத்தருள் பாலிப்ப தெந்நாளோ? (9)

## யாக்கையைப் பழித்தல்.

சுக்கிலமு நீருஞ் சொரிமலமு நாறுமுடல்
புக்குழலும் வாஞ்சையினிப் போதுமென்ப தெந்நாளோ? (1)

நீர்க்குமிழி பூணமைத்து நின்றாலு நில்லாமெய்
பார்க்கு மிடத்திதன்மேற் பற்றறுவ தெந்நாளோ? (2)

காக்கைநரி செந்நாய் கழுகொருநாள் கூடியுண்டு
தேக்குமிருந் தாமுடலைச் சீயென்ப தெந்நாளோ? (3)

செங்கிருமி யாதி செனித்தசென்ம பூமியினை
இங்கெனுட லென்னும் இழுக்கொழிவ தெந்நாளோ? (4)

தத்துவர்தொண் ணூற்றறுவர் தாமாய்வாழ் இந்நாட்டைப்
பித்தனு னென்னும் பிதற்றொழிவ தெந்நாளோ? (5)

ஊனென்றி நாத னுணர்த்துமதை விட்டறிவே
நானென்ற பாவிதலை நாடுநா ளெந்நாளோ? (6)

வேலையிலாவேதன் விதித்த இந்த்ர சாலவுடல்
மாலை வியாபார மயக்கொழிவ தெந்நாளோ? (7)

ஆழ்ந்து நினைக்கில் அரோசிகமாம் இவ்வுடலில்
வாழ்ந்துபெறும் பேற்றை மதிக்குநா ளெந்நாளோ? (8)

மும்மலச் சேறான முழுக்கும்பி பாகமெனும்
இம்மலக் காயத்துள் இகழ்ச்சிவைப்ப தெந்நாளோ? (9)
நாற்றமிகக் காட்டு நவவாயில் பெற்றபசுஞ்
சோற்றுத் துருத்தி சுமையென்ப தெந்நாளோ? (10)
உருவிருப்ப வுள்ளேதா னூறுமலக் கேணி
அருவருப்பு வாழ்க்கையைக்கண் டஞ்சாநா ளெந்நாளோ? (11)

## மாதரைப்பழித்தல்.

மெய்விசு நாற்றமெல்லாம் மிக்கமஞ்ச ளான்மறைத்துப்,
பொய்விசும் வாயார் புலையொழிவ தெந்நாளோ? (1)
திண்ணியநெஞ் சப்பறவை சிக்கக் குழற்காட்டிற்
கண்ணிவைப்போர் மாயங் கடக்குநா ளெந்நாளோ? (2)
கண்டுமொழி பேசிமனங் கண்டுகொண்டு கைவிலையாக்
கொண்டுவிடு மானார்பொய்க் கூத்தொழிவ தெந்நாளோ? (3)
காமனைவா வென்றிருண்ட கண்வலையை வீசுமின்னார்
நாம மறந்தருளை நண்ணுநா ளெந்நாளோ? (4)
கண்களில் வெண்பூளை காப்பக் கருமையிட்ட
பெண்கண் மயல்தப்பிப் பிழைக்குநா ளெந்நாளோ? (5)
வீங்கித் தளர்ந்து விழுமுலையார் மேல்வீழ்ந்து
தூங்குமதன் சோம்பைத் துடைக்குநா ளெந்நாளோ? (6)
கச்சிருக்குங் கொங்கை கரும்பிருக்கு மின்மாற்றம்
வைச்சிருக்கு மாதர் மயக்கொழிவ தெந்நாளோ? (7)
பச்சென்ற கொங்கைப் பசப்பிப்பா ழானமயல்
நச்சென் றறிந்தருளை நண்ணுநா ளெந்நாளோ? (8)
உந்திச் சுழியா லுளத்தைச் சுழித்தகனை
தந்தித் தனத்தார் தமைமறப்ப தெந்நாளோ? (9)
தட்டுவைத்த சேலை கொய்சகத்திற் சிந்தையெல்லாங்
கட்டிவைக்கு மாயமின்னார் கட்டழிவ தெந்நாளோ? (10)



ஆழாழி யென்ன அளவுபடா வஞ்சநெஞ்சப்
பாழான மாதர்மயல் பற்றொழிவ தெந்நாளோ? (11)
தூயபனித் திங்கள் சுடுவதெனப் பித்தேற்றும்
மாயா மடவார் மயக்கொழிவ தெந்நாளோ? (12)
காழைக் குறும்புசெயு மேற்றிழையார் மோகமெனும்
பாழைக் கடந்து பயிராவ தெந்நாளோ? (13)
விண்டு மொழிகுளறி வேட்கைமது மொண்டுதரும்
தொண்டியர்கள் கட்கடையிற் சற்றொழிவ தெந்நாளோ? (14)
மெய்யிற் றெம்பிறக்க மேவுமின்பம் போல்மாதர்
பொய்யிலின் பின்றென்று பொருந்துநா ளெந்நாளோ? (15)

## தத்துவமுறைமை.

ஐம்பூதத் தாலே அலக்கழிந்த தோஷமற
சம்பூத நாதனரு ளெய்துநா ளெந்நாளோ? (1)
சத்தமுத லாம்புலனிற் சஞ்சரித்த கள்வரெனும்
பித்தர்பயந் தீர்ந்து பிழைக்குநா ளெந்நாளோ? (2)
நாளும் பொறிவழியை நாடாத வண்ணமெமை
ஆளும் பொறியா லருள்வருவ தெந்நாளோ? (3)
வாக்காதி யானகன்ம மாயைதம்பால் வீண்காலம்
போக்காம லுண்மை பொருந்துநா ளெந்நாளோ? (4)
மனமான வானரக்கைம் மாலையா காமல்
எனையா ளடிகளடி யெய்துநா ளெந்நாளோ? (5)
வேட்டைப் புலப்புலையர் மேவாத வண்ணமனக்
காட்டைத் திருத்திக் களைகாண்ப தெந்நாளோ? (6)
வந்து பிறப்பிறப்பை யுற்றுவிடா தெந்தையருள்
வந்து பிறக்க மனமிறப்ப தெந்நாளோ? (7)
புத்தியெனுந் துத்திப் பொறியரவின் வாய்த்தேரை
ஒத்துவிடா தெந்தையரு ளோங்குநா ளெந்நாளோ? (8)

ஆங்கார மென்னுமத யானைவா யிற்கரும்பாய்
ஏங்காம லெந்தையரு ளெய்துநா ளெந்நாளோ? (9)
சித்தமெனும் பௌவத் திரைக்கடலில் வாழ்துரும்பாய்
நித்தமலை யாதருளி னிற்குநா ளெந்நாளோ? (10)
வித்தியா தத்துவங்க ளேழும் வெருண்டோடச்
சுத்தபர போகத்தைத் துய்க்குநா ளெந்நாளோ? (11)
சுத்தவித்தை யேமுதலாத் தோன்றுமோ ரைந்துவகைத்
தத்துவத்தை நீங்கியருள் சாருநா ளெந்நாளோ? (12)
பொல்லாத காமப் புலைத்தொழிலில் என்னறிவு
செல்லாமல் நன்னெறியில் சேருநா ளெந்நாளோ? (13)
அடிகளடிக் கீழ்க்குடியா யாம்வாழா வண்ணங்
குடிகெடுக்கும் பாழ்மடிமைக் கூறொழிவ தெந்நாளோ? (14)
ஆனபுறக் கருவி யாறுபத்து மற்றுளவும்
போனவழி யுங்கூடப் புன்முளைப்ப தெந்நாளோ? (15)
அந்தகனுக் கெங்குமிரு ளானவா றுவறிவில்
வந்தவிருள் வேலை வடியுநா ளெந்நாளோ? (16)
புன்மலத்தைச் சேர்ந்துமல போதம் பொருந்துதல்போய்
நின்மலத்தைச் சேர்ந்துமல நீங்குநா ளெந்நாளோ? (17)
கண்டுகண்டுந் தேறுக் கலக்கமெல்லாந் தீர்வண்ணம்
பண்டைவினை வேரைப் பறிக்குநா ளெந்நாளோ? (18)
பைங்கூழ் வினைதான் படுசாவி யாகவெமக்
கெங்கோன் கிரணவெயி லெய்துநா ளெந்நாளோ? (19)
குறித்தவித மாகியாற் கூடும்வினை யெல்லாம்
வறுத்தவித்தாம் வண்ணமருள் வந்திடுநா ளெந்நாளோ? (20)
சஞ்சிதமே யாதி சரக்கான முச்சேறும்
வெந்தபொரி யாகவருண் மேவுநா ளெந்நாளோ? (21)
தேகமுத லுன்காத் திரண்டொன்றாய் நின்றிலகும்
மோகமிகு மாயை முடியுநா ளெந்நாளோ? (22)



சத்தமுதலாத் தழைத்திங் கெமக்கு ணர்த்துஞ்
சுத்தமா மாயை தொடக்கறுவ தெந்நாளோ? (23)
எம்மைவினையை இறையை எம்பால் காட்டாத
அம்மை திரோதை அகலுநா ளெந்நாளோ? (24)
நித்திரையாய் வந்து நினைவழிக்குங் கேவலமாஞ்
சத்துருவை வெல்லுஞ் சமர்த்தறிவ தெந்நாளோ? (25)
சன்னல் பின்னலான சகலமெனுங் குப்பையிடை
முன்னவன்ஞா னக்கனலை மூட்டுநா ளெந்நாளோ? (26)
மாயா விகார மலமொழிசுத் தாவத்தை
தோயா வருளைத் தொடருநா ளெந்நாளோ? (27)

## தன்னுண்மை.

உடம்பறியு மென்னுமந்த வூழலெல்லாந் தீரத்
திடம்பெறவே யெம்மைத் தெரிசிப்ப தெந்நாளோ? (1)
செம்மையறி வாலறிந்து தேகாதிக் குள்ளிசைந்த
வெம்மை புலப்படவே யாமறிவ தெந்நாளோ? (2)
தத்துவமாம் பாழ்ந்த சடவுருவைத் தான்சுமந்த
சித்துருவாம் எம்மைத் தெரிசிப்ப தெந்நாளே? (3)
பஞ்சப் பொறியையுயி ரென்னும் அந்தப் பஞ்சமறச்
செஞ்செவே யெம்மைத் தெரிசிப்ப தெந்நாளோ? (4)
அந்தக் கரணமுயி ராமென்ற அந்தரங்க
* சிந்தை யழியவெம்மைத் தேர்ந்தறிவ தெந்நாளோ? (5)
முக்குணத்தைச் சீவனென்னும் மூடத்தை விட்டருளால்
அக்கணமே யெம்மை யறிந்துகொள்வ தெந்நாளோ? (6)
காலையுயி ரென்னுங் கலதிகள்சொற் கேளாமல்
சீலமுட னெம்மைத் தெளிந்துகொள்வ தெந்நாளோ? (7)
வான்கெடுத்துத் தேடு மதிகேடர் போலவெமை
† நான்கெடுத்துத் தேடாமல் நன்கறிவ தெந்நாளோ? (8)

* 'சிந்தைக் கணத்தி லெம்மை' என்றும்
† 'நாய்கெடுத்து' என்றும் பாடமுண்டு.

## அருளியல்பு.

ஈனந் தருநா டிதுவெமக்கு வேண்டாமென்
ஞானந்த நாட்டி லவதரிப்ப தெந்நாளோ? (1)

பொய்க்காட்சி யான புவனத்தை விட்டருளாம்
மெய்க்காட்சி யாம்புவன மேவுநா ளெந்நாளோ? (2)

ஆதியந்தங் காட்டாமல் அம்பரம்போ லெங்குநிறைந்த
நீதி லருட்கடலைச் சேருநா ளெந்நாளோ? (3)

எட்டுத் திசைக்கீழ்மே லெங்கும் பெருகிவரும்
வெட்டவெளி விண்ணாற்றின் மெய்தோய்வ தெந்நாளோ? (4)

சூதான மென்று சுருதியெல்லா மோலமிடு
மீதான மானவெற்பை மேவுநா ளெந்நாளோ? (5)

வெந்துவெடிக் கின்றசிந்தை வெப்பகலத் தண்ணருளாய்
வந்து பொழிகின்ற மழைகாண்ப தெந்நாளோ? (6)

சூரியர்கள் சந்திரர்கள் தோன்றாச் சுயஞ்சோதிப்
பூரணதே யத்திற் பொருந்துநா ளெந்நாளோ? (7)

கன்றுமன வெப்பக் கலக்கமெலாந் தீரவருள்
தென்றல்வந்து வீசுவெளி சேருநா ளெந்நாளோ? (8)

கட்டுநமன் செங்கோல் கடாவடிக்குங் கோலாக
வெட்ட வெளிப்பொருளை மேவுநா ளெந்நாளோ? (9)

சாலக் கபாடந் தடைதீர வெம்பெருமான்
ஓலக்க மண்டபத்து ளோடுநா ளெந்நாளோ? (10)

விண்ணவன்தா னென்னும் விரிநிலா மண்டபத்தில்
தண்ணீ ரருந்தித் தளர்வொழிவ தெந்நாளோ? (11)

வெய்ய புவிபார்த்து விழித்திருந்த அல்லலறத்
துய்ய அருளிற் றுயிலுநா ளெந்நாளோ? (12)

வெய்ய பிறவிவெயில் வெப்பமெலாம் விட்டகல,
ஐய னடிநீழ லணையுநா ளெந்நாளோ? (13)



வாதைப் பிறவி வலைகடலை நீந்த ஐயன்
பாதப் புணையிணையைப் பற்றுநா ளெந்நாளோ? (14)

ஈனமில்லா மெய்ப்பொருளை இம்மையிலே காணவெளி
ஞானமெனும் அஞ்சனத்தை நான்பெறுவ தெந்நாளோ? (15)

எல்லா மிறந்தவிடத் தெந்தைநிறை வாழ்வடிவைப்
புல்லாமல் புல்லிப் புணருநா ளெந்நாளோ? (16)

சடத்துளுயிர் போலெமக்குத் தாணுயிராய் ஞான
நடத்துமுறை கண்டுபணி நாம்விடுவ தெந்நாளோ? (17)

எக்கனுமரந் துன்ப இருள்கடலை விட்டருளாம்
மிக்ககரை யேறி வெளிப்படுவ தெந்நாளோ? (18)

---

## பொருளியல்பு.

கைவிளக்கின் பின்னேபோய்க் காண்பார்போன் மெய்ஞ்ஞான
மெய்விளக்கின் பின்னேபோய் மெய்காண்ப தெந்நாளோ? (1)

கேடில்பசு பாசமெல்லாங் கீழ்ப்படவுந் தானேமேல்
ஆடுஞ் சுகப்பொருளைக் கண்புறுவ தெந்நாளோ? (2)

ஆணவத்தை நீக்கி அறிவூடே ஐவகையாக்
கண்ணவத்தைக் கப்பாலைக் காணுநா ளெந்நாளோ? (3)

நீக்கப் பிரியா நினைக்கமறக் கக்கூடாப்
போக்கு வரவற்ற பொருளணைவ தெந்நாளோ? (4)

அண்டருக்கும் எய்ப்பில்வைப்பாம் ஆரமுதை என்னகத்தில்
கண்டுகொண்டு நின்று களிக்குநா ளெந்நாளோ? (5)

காட்டுந் திருவருளே கண்ணாகக் கண்டுபா
வீட்டின்ப மெய்ப்பொருளை மேவுநா ளெந்நாளோ? (6)

நானான தன்மை நழுவியே எவ்வுயிர்க்குந்
தானான உண்மை தனைச் சாருநா ளெந்நாளோ? (7)

சிந்தை மறந்து திருவருளாய் நிற்பவர்பால்
வந்தபொரு ளெம்மையுந்தான் வாழ்விப்ப தெந்நாளோ? (8

எள்ளுக்குள் எண்ணெய்போ லெங்கும் வியாபகமாய்
உள்ளவொன்றை உள்ளபடி யோருநா ளெந்நாளோ ? (9)

அருவுருவ மெல்லா மகன்றதுவா யான
பொருளெமக்கு வந்து புலப்படுவ தெந்நாளோ ? (10)

ஆரணமுங் காணா அகண்டிதா காரபரி
பூரணம்வந் தெம்மைப் பொருந்துநா ளெந்நாளோ ? (11)

சத்தொடுசித் தாகித் தயங்கியவா னந்தபரி.
சுத்த அகண்டசிவந் தோன்றுநா ளெந்நாளோ ? (12)

எங்கெங்கும் பார்த்தாலும் இன்புருவாய் நீக்கமின்றித்
தங்குந் தனிப்பொருளைச் சாருநா ளெந்நாளோ ? (13)

அடிமுடிகாட் டாதசுத்த அம்பரமாஞ் சோதிக்
கடுவெளிவந் தென்னைக் கலக்குநா ளெந்நாளோ ? (14)

ஒன்றனையுங் காட்டா உளத்திருளைச் சூறையிட்டு
நின்றபராஞ் சோதியுட னிற்குநா ளெந்நாளோ ? (15)

எந்தச் சமய மிசைந்துமறி வூடறிவாய்
வந்தபொரு ளேபொருளா வாஞ்சிப்ப தெந்நாளோ ? (16)

எவ்வாறிங் குற்றுணர்ந்தார் யாவ ரவர்தமக்கே
அவ்வாறாய் நின்றபொருட் கன்புவைப்ப தெந்நாளோ ? (17)

பெண்ணா ணலியெனவும் பேசாம லென்னறிவின்
கண்ணூடே நின்றவொன்றைக் காணுநா ளெந்நாளோ ? (18)

நினைப்பு மறப்புமற நின்றபராஞ் சோதி
தனைப்புல்மா என்னறிவிற் சந்திப்ப தெந்நாளோ ? (19)

## ஆனந்தவியல்பு.

பேச்சு மூச்சில்லாத பேரின்ப வெள்ளமுற்று
நீச்சுநிலை காணாம லிற்குநா ளெந்நாளோ ? (1)

சித்தந் தெளிந்தோர் தெளிவிற் றெளிவான
சுத்த சுகக்கடலுள் தோயுநா ளெந்நாளோ ? (2)



சிற்றின்ப முண்டீழ் சிதையநா னந்தக்கடல்போல்
முற்றின்ப வெள்ளமெனை மூடுநா ளெந்நாளோ ? (3)

எல்லையில்பே ரின்பமயம் எப்படியென் றோர்தமக்குச்
சொல்லறியா ஊமர்கள்போற் சொல்லுநா ளெந்நாளோ ? (4)

அண்டாண்ட கோடி யனைத்து முகாந்தவெள்ளங்
கொண்டதெனப் பேரின்பங் கூடுநா ளெந்நாளோ ? (5)

ஆதியந்த மில்லாத ஆதி யனாதியெனுஞ்
சோதியின்பத் தூடே துளையுநா ளெந்நாளோ ? (6)

சாலோக மாதி சவுக்கியமும் விட்டகம்பால்
மேலான ஞானவின்ப மேவுநா ளெந்நாளோ ? (7)

தற்பரத்தி னுள்ளேயுஞ் சாலோக மாதியெனும்
பொற்பறிந்தா னந்தம் பொருந்துநா ளெந்நாளோ (8)

உள்ளத்தி னுள்ளேதா னூறுஞ் சிவானந்த
வெள்ளந் துளைந்து விடாய்தீர்வ தெந்நாளோ ? (9)

கன்னலுடன் முக்கனியுங் கற்கண்டுஞ் சீனியுமாய்
மன்னுமின்ப வாரமுதை வாய்மடுப்ப தெந்நாளோ ? (10)

மண்ணாதி யென்ற மயக்கமெல்லாந் தீர்ந்திடவும்
விண்ணா டெழுந்தசுக மேவுநா ளெந்நாளோ ? (11)

கானற் சலம்போன்ற கட்டுமிலைப் பொய்நீச
வானமுத வாவி மருவுநா ளெந்நாளோ ? (12)

தீங்கரும்பென் றுமினியா, தின்று வினிப்பனபோல்
பாங்குறும்பே ரின்பம் படைக்குநா ளெந்நாளோ ? (13)

புண்ணியபா வங்கள் பொருந்தாமெய் யன்பரெல்லாம்
கண்ணியபே ரின்பசுக சம்மனைவ தெந்நாளோ? (14)

## அன்புநிலைமை.

தக்கரவி கண்ட சரோருகம்போல் என்னிதயம்
மிக்கவருள் கண்டு விகசிப்ப தெந்நாளோ ? (1)

வானமுகில் கண்ட மயூரபக்ஷி போல், ஐயன்
ஞானநடங் கண்டு நடிக்குநா ளெந்நாளோ ? (2)

சந்திரனை நாடுஞ் சகோரபக்ஷி போலறிவில்
வந்தபரஞ் சோதியையாம் வாஞ்சிப்ப தெந்நாளோ ? (3)

குத்திரமெய்ப் புற்றகத்துக் குண்டலிப்பாம் பொன்றாட்டுஞ்
சித்தனையென் கண்ணால் தெரிசிப்ப தெந்நாளோ (4)

அந்தரத்தே நின்றாடும் ஆனந்தக் கூத்தனுக்கென்
சிந்தை சிறைகொடுத்துச் சேவிப்ப தெந்நாளோ ? (5)

கள்ளனிவ னென்றுமெள்ளக் கைவிடுதல் காரியமோ?
வள்ளலே யென்று வருந்துநா ளெந்நாளோ ? (6)

விண்ணாடர் காணா விமலா ! பரஞ்சோதி !
அண்ணா ! 'வா வா'என் றரற்றுநா ளெந்நாளோ? (7)

ஏதேது செய்தாலும் என்பணிபோய் நின்பணியாம்
'மாதேவா' என்று வருந்துநா ளெந்நாளோ ? (8)

பண்டுங்கா ணேனுன் பழம்பொருளை இன்றுமுனைக்
கண்டுங்கா ணேனெனவுங் கைகுவிப்ப தெந்நாளோ ? (9)

பொங்கேத மான புழுக்கமெலாந் தீர 'இன்பம்
எங்கேயெங்கே' என் றிரங்குநா ளெந்நாளோ? (10)

கடலின்மடை கண்டதுபோல் கண்ணீர் ஆறாக
உடல்வெதும்பி மூர்ச்சித் துருகுநா ளெந்நாளோ ? (11)

புலர்ந்தேன் முகஞ்சருகாய்ப் போனே னிறக்காண
அலர்ந்தேனென் றேங்கி அழுங்குநா ளெந்நாளோ ? (12)

புண்ணீர்மை யாளர் புலம்புமா போற்புலம்பிக்
கண்ணீருங் கம்பலையுங் காட்டுநா ளெந்நாளோ ? (13)



போற்றேனென் றாலுமென்னைப், புந்திசெய்யும் வேதனைக்கிங்
'காற்றேனாற் றேன்' என் றரற்றுநா ளெந்நாளோ? (14)

பொய்முடங்கும் பூமிசில போட்டலறப் பூங்கமலன்
கைமுடங்க நான்சனனக் கட்டறுவ தெந்நாளோ ? (15)

கற்குணத்தைப் போன்றவஞ்சக் காரர்களைக் கோவாமல்
நற்குணத்தார் கைகோத்து நான்திரிவ தெந்நாளோ ? (16)

கட்டனமா மாயைச் சுழனிக்கி 'அந்தரமே
விட்டனையோ' என்று வியக்குநா ளெந்நாளோ ? (17)

---

## அன்பர்நெறி.

அத்துவா வெல்லா மடங்கச்சோ தித்தபடி
சித்துருவாய் நின்றார் தெளிவறிவ தெந்நாளோ ? (1)

மூச்சற்றுச் சிந்தை முயற்சியற்று முதறிவாய்ப்
பேச்சற்றோர் பெற்றவொன்றைப் பெற்றிடுநா ளெந்நாளோ ? (2)

கோட்டாலை யான குணமிறந்த நிர்க்குணத்தோர்
தேட்டாலே தேடுபொருள் சேருநா ளெந்நாளோ ? (3)

கெடுத்தே பசுத்துவத்தைக் கேடிலா வானந்தம்
அடுத்தோர் டுத்தபொருட் கார்வம்வைப்ப தெந்நாளோ? (4)

கல்கண்டா லோடுகின்ற காக்கைபோற் பொய்மாயச்
சொல்கண்டா லோடுமன்பர் தோய்வறிவ தெந்நாளோ? (5)

மெய்த்தகுலங் கல்வியுடன் வேடமெல்லாம் ஓடவிட்ட
சித்தரொன்றுஞ் சோரச் செயலறிவ தெந்நாளோ ? (6)

குற்றச் சமயக் குழும்புடைந்து தற்போதம்
அற்றவர்கட் கற்றபொருட் கன்புவைப்ப தெந்நாளோ ? (7)

தர்க்கமிட்டுப் பாழாஞ் சமயக் குதர்க்கம்விட்டு
நிற்குமவர் கண்டவழி நேர்பெறுவ தெந்நாளோ ? (8)

வீறியவே தாந்தமுதல் மிக்க கலாந்தவரை
ஆறுமுணர்ந் தோருணர்வுக் கன்புவைப்ப தெந்நாளோ ? (9)

கண்டவிட மெல்லாங் கடவுண்மய மென்றறிந்து
கொண்டநெஞ்சர் நேயநெஞ்சிற் கொண்டிருப்ப தெந்நாளோ?
பாக்கியங்க ளெல்லாம் பழுத்துமனம் பழுத்தோர்
நோக்குந் திருக்கூத்தை நோக்குநா ளெந்நாளோ? (11)
எவ்வுயிருந் தன்னுயிர்போ லெண்ணுந் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப தெந்நாளோ? (12)

## அறிஞருரை.

இருநிலனாய்த் தீயாகி யென்றதிருப் பாட்டின்
பெருநிலையைக் கண்டுணர்ந்து பேச்சறுவ தெந்நாளோ? (1)
அற்றவர்கட் கற்றசிவ னாமென்ற அத்துவித
முற்றுமொழி கண்டருளின் மூழ்குநா ளெந்நாளோ? (2)
தானென்னை முன்படைத்தா னென்ற தகவுரையை
நானென்று முண்மைபெற்று நாமுணர்வ தெந்நாளோ? (3)
என்னுடைய தோழனுமா மென்றதிருப் பாட்டின்
நன்னெறியைக் கண்டுரிமை நாஞ்செய்வ தெந்நாளோ? (4)
ஆருடனே சேரு மறிவென்ற அவ்வுரையைத்
தேரும் படிக்கருடான் சேருநா ளெந்நாளோ? (5)
உன்னிலுன்னு மென்ற உறுமொழியா லென்னிதயந்
தன்னிலுன்னி நன்னெறியைச் சாருநா ளெந்நாளோ? (6)
நினைப்பறவே தானினைந்தே னென்றநிலை நாடி
அனைத்துமா மப்பொருளி லாழுநா ளெந்நாளோ? (7)
சென்றுசென் றேயணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாகி
நின்றுவிடு மென்றநெறி நிற்குநா ளெந்நாளோ? (8)
ஆதியந்த மில்லா அரியபரஞ் சோதியென்ற
நீதிமொழி கண்டதுவாய் நிற்குநா ளெந்நாளோ? (9)
பிறிதொன்றி லாசையின்றிப் பெற்றிருந்தே னென்ற
நெறியுடையான் [illegible]



திரையற்ற நீர்போற் றெளியவெனத் தேர்ந்த
உரைபற்றி யுற்றங் கொடுங்குநா ளெந்நாளோ? (11)
அறியா வறிவி லவிழ்ந்தேற வென்ற
நெறியா முறையுணர்ந்து நிற்குநா ளெந்நாளோ? (12)
எனக்குனீ யென்று மியற்கையாப் பின்னும்
உனக்குநா னென்ற வுறுதிகொள்வ தெந்நாளோ? (13)
அறிவை யறிவதுவே யாகும் பொருளென்
றறுதிசொன்ன வுண்மையினை யோருநா ளெந்நாளோ? (14)

## நிற்குநிலை.

பண்ணினிசை போலப் பரமன்பா லின்றதிறல்
கண்ணியரு ளாகி யிருக்குநா ளெந்நாளோ? (1)
அறிவோ டறியாமை யற்றறிவி னூடே
குறியி லறிவுவந்து கூடுநா ளெந்நாளோ? (2)
சொல்லான் மனத்தாற் றொடாச்சகம் பூரணத்தில்
நில்லா நிலையாய் நிலைநிற்ப தெந்நாளோ? (3)
செங்கதிரின் முன்மதியந் தேசடங்கி நின்றிட்போல்
அங்கணனார் தாளி லடங்குநா ளெந்நாளோ? (4)
வானூ டடங்கும் வளிபோல வின்புருவாந்
தோனூ டடங்குங் குறிப்பறிவ தெந்நாளோ? (5)
செப்பரிய தண்கருணைச் சிற்சுகனார் பூரணத்தில்
அப்பினிடை யுப்பா யணையுநா ளெந்நாளோ? (6)
தூயவறி வான சுகரூப சோதிதன்பால்
தீயினிரும் பென்னத் திகழுநா ளெந்நாளோ? (7)
நிதனையாக் கர்ப்பூர தீபமென நானகண்ட
சோதியுட னொன்றித் துரிசறுவ தெந்நாளோ? (8)
ஆராருங் காணாத அற்புதனார் பொற்படிக்கீழ்
நீரார் நிழல்போ னிலவுநா ளெந்நாளோ? (9)

எட்டத் தொலையாத வெள்ளைபிரான் சந்நிதியில்,
பட்டப் பகல்விளக்காப் பண்புறுவ தெந்நாளோ? (10)

கருப்புவட் டை வாய்மடுத்துக் கண்டார்காப் போல
விருப்புவட்டா இன்புருவை மேவுநா ளெந்நாளோ? (11)

அச்சப் புலனாற் சுழலாமற் றண்ணருளால்
உச்சிக் கதிர்ப்படிக மொவ்வுநா ளெந்நாளோ? (12)

இம்மா னிலத்தி லிருந்தபடி யேயிருந்து
சும்மா விருக்கத் தொடருநா ளெந்நாளோ? (13)

கானவனூர் தன்னைப்பெய்திக் கண்டமெனா அண்டமெங்கும்
ஞானமத யானை நடத்துநா ளெந்நாளோ? (14)

ஒன்றிரண்டு மில்லதுவா யொன்றிரண்டு முள்ளதுவாய்
நின்ற சமத்துநிலை நேர்பெறுவ தெந்நாளோ? (15)

பாச மகலாமற் பதியிற் கலவாமல்
மாசில் சமத்துமுத்தி வாய்க்குநா ளெந்நாளோ? (16)

சிற்றறிவு மென்னச் சிதைத்தெம்மான் பேரறிவை
உற்றறியா வண்ணமறிந் தோங்குநா ளெந்நாளோ? (17)

தந்திரத்தை மந்திரத்தைச் சரினையை யாமறிவென்
றெந்தையுணர் வேவடிவா யெய்துநா ளெந்நாளோ? (18)

போக்குவர வற்றவெளி போனிறைந்த போதநிலை
நீக்க மறக்கூடி நினைப்பறுவ தெந்நாளோ? (19)

காண்பானுங் காட்டுவதுங் காட்சியுமாய் நின்றவந்த
வீண்பாவம் போவதுவாய் மேவுநா ளெந்நாளோ? (20)

வாடாதே நாளுமாய் மாயாதே யெங்கோனை
நாடாதே நாடி நலம்பெறுவ தெந்நாளோ? (21)

ஆடலையே காட்டியெம தாடலொழித் தாண்டான்பொன்
தாள்தலைமேற் சூடித் தழைக்குநா ளெந்நாளோ? (22)

மேலொடுகீ ழில்லாத வித்தகனார் தம்முடனே
பாலொடுநீர் போற்கலந்து பண்புறுவ தெந்நாளோ? (23)



அறியா தறிந்தெம்மையாள் அண்ணலைநா மாகக்
குறியாத வண்ணங் குறிக்குநா ளெந்நாளோ? (24)

ஓராமல் மந்திரமு முன்னாம லெம்பானைப்
பாராமற் பார்த்துப் பழகுநா ளெந்நாளோ? (25)

ஊன்பற்று மென்றே றெவுபற்றும் பூரணன்பால்
வான்பற்றுங் கண்போல் மருவுநா ளெந்நாளோ? (26)

ஆண்டான் மவுனி அளித்தவறி வாலறிவைத்
தாண்டாமற் றாண்டித் துலங்குநா ளெந்நாளோ? (27)

ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோ டத்துவிதஞ் சாருநா ளெந்நாளோ? (28)

---

## நிலைபிரிந்தோர் கூடுதற்குபாயம்.

கன்மநெறி தப்பில் கடுநரகென் றெந்நாளும்
நன்மைதரு ஞானநெறி நாமணைவ தெந்நாளோ? (1)

ஞானநெறி தானே நழுவிடினு முப்பதத்துள்
ஆனமுத்தி நல்குமென அன்புறுவ தெந்நாளோ? (2)

பன்மார்க்க மான பலவடிபட் டேனுமொரு
சொன்மார்க்கங் கண்டு துலங்குநா ளெந்நாளோ? (3)

அத்துவித மென்ற அன்னியசொற் கண்டுணர்ந்து
சுத்த சிவத்தைத் தொடருநா ளெந்நாளோ? (4)

கேட்டன் முதனான்கிலே கேடிலா நாற்பதமும்
வாட்ட மறவெனக்கு வாய்க்குநா ளெந்நாளோ? (5)

என்னதியா னென்பதற் கெவ்விடமு மென்றுசான்
சந்நிதியாக் கண்டுநிட்டை சாதிப்ப தெந்நாளோ? (6)

நாம்பிரம மென்று நடுவேயொன் றுண்டாமல்
தெம்பியெல்லா மொன்றாய்த் திகழுநா ளெந்நாளோ? (7)

முச்சகமே யாதி முழுதுமகண் டாகார
சச்சிதா னந்தசிவந் தானென்ப தெந்நாளோ? (8)

எவ்வடிவும் பூரணமா மெந்தையுரு வென்றிசைந்த
அவ்வடிவுக் குள்ளே யடங்குநா ளெந்நாளோ? (9)

சிந்தித்த தெல்லாஞ் சிவபூ ரணமாக
வந்தித்து வாழ்த்தி வணங்குநா ளெந்நாளோ? (10)

தாங்கியபார் விண்ணாதி தானேநா னக்கினியாய்
ஓங்கு மியோகவுணர் வுற்றிடுநா ளெந்நாளோ? (11)

ஆசனமூர்த் தங்க ளறவகண்டா காரசிவ
பூசைசெய ஆசை பொருந்துநா ளெந்நாளோ? (12)

அஞ்செழுத்தி னுண்மை அதுவான அப்பொருளை
நெஞ்சழுத்தி ஒன்றாகி நிற்குநா ளெந்நாளோ? (13)

அவ்வுயிர்போ லெவ்வுயிரு மானபிரான் தன்னடிமை
எவ்வுயிரு மென்றுபணி யாஞ்செய்வ தெந்நாளோ? (14)

தேசிகர்கோ னான திறன்மவுனி நந்தமக்கு
வாசி கொடுக்க மகிழுநா ளெந்நாளோ? (15)

குருலிங்க சங்கமாக் கொண்டதிரு மேனி
அருள்மயமென் றன்புற் றருள்பெறுவ தெந்நாளோ? (19)

---

## காண்பேனோவென் கண்ணி.

சிந்திக்குந் தோறுந் தெவிட்டா வமுதே! என்
புந்திக்குள் நீதான் பொருந்திடவுங் காண்பேனோ? (1)

கேவலத்தி னான்கிடந்து கீழ்ப்படா இன்பஅருள்
காவலன்பா லொன்றிக் கலந்திடவுங் காண்பேனோ? (2)

துரியங் கடந்தவொன்றே! தூவெளியாய் நின்ற
பெரியநிறைவே! உனைநான் பெற்றிடவுங் காண்பேனோ? (3)

மாசற்ற வன்பர்நெஞ்சே, மாறாத பெட்டகமாத்
தேசுற்ற மாமணிநின் தேசினையுங் காண்பேனோ? (4)

மாயா விகார மலமகல வெந்தைபிரான்
நேயானு பூதி நிலைபெறவுங் காண்பேனோ! (5)



பொய்யுலகும் பொய்யுறவும் பொய்யுடலும் பொய்யெனவே
மெய்யநினை மெய்யெனவே மெய்யுடனே காண்பேனோ? (6)

வாலற்ற பட்டமென மாயா மனப்படலங்
காலற்று வீழவுமுக் கண்ணுடையாய்! காண்பேனோ? (7)

உள்ளும் புறம்பும் ஒருபடித்தாய் நின்றுசகங்
கொள்ளும் படிக்கிறைநீ கூட்டிடவுங் காண்பேனோ? (8)

காட்டுகின்ற முக்கட் கரும்பே! கனியே! என்
ஆட்ட மெல்லாந் தீரவுன தாடலையுங் காண்பேனோ? (9)

தூங்காமற் றூங்கிச் சுகப்பெருமா னின்னிறைவில்?
நீங்காம னிற்கு நிலைபெறவுங் காண்பேனோ? (10)

வாதவூ ராளிதனை வான்கருணை யாய்விழுங்கும்
போதவூ ரேறேநின் பொன்னடியுங் காண்பேனோ? (11)

சாட்டையிலாப் பம்பரம்போ லாடுஞ் சடசால
நாட்டமற எந்தைசுத்த ஞானவெளி காண்பேனோ? (12)

மன்றாடும் வாழ்வே! மரகதஞ்சேர் மாணிக்கக்
குன்றே! நின் றாட்கீழ்க் குடிபெறவுங் காண்பேனோ? (13)

பொய்யென் றறிந்துமெமைப் போகவொட்டா தையா! இந்த
வையங் கன்மயக்க மாற்றிடவுங் காண்பேனோ? (14)

தாயினு நல்ல தயாளுவே! நின்னையுன்னித்
தீயின்மெழு கொத்துருகுஞ் சிந்தைவரக் காண்பேனோ? (15)

என்செயினும் என்பெறினும் என்இறைவா! ஏழையன்யான்
நின்செயலென் றுன்னு நினைவுவரக் காண்பேனோ? (16)

எள்ளத் தனையு மிரக்கமிலா வன்பாவி
உள்ளத்தும் எந்தை உலாவிடவுங் காண்பேனோ? (17)

வஞ்சகத்துக் காலயமாம் வல்வினையேன், ஆ! கெடுவேன்;
நெஞ்சகத்தில் ஐயாநீ! நேர்பெறவுங் காண்பேனோ? (18)

தொல்லைப் பிறவித் துயர்கெடவும் எந்தைபிரான்
மல்லற் கருணை வழங்கிடவுங் காண்பேனோ? (19)

வாளாருங் கண்ணார் மயற்கடலி லாழ்ந்தேன், சற்
றாளாக எந்தை அருள்செயவுங் காண்பேனோ? (20)

பஞ்சாய்ப் பறக்குநெஞ்சப் பாவியை நீ கூவி, ஐயா!
'அஞ்சாதே' என்றினி யருள்செயவுங் காண்பேனோ? (21)

ஆடுகின்ற சாடி அலமந் துழன்றுமனம்
வாடுமென்னை, ஐயா! நீ வாவெனவுங் காண்பேனோ? (22)

சிட்டர்க் கெளிய சிவனேயோ, தீவினையேன்
மட்டற்ற வாதை மயக்கறவுங் காண்பேனோ? (23)

உண்ணின் றுணர்த்தும் உலப்பிலா வொன்றே! நின்
தண்ணென்ற சாந்தவருள் சார்ந்திடவுங் காண்பேனோ? (24)

ஓடுங் கருத்தொடுங்க உள்ளுணர்வு தோன்றநினைக்
கூடும் படிக்கிறை நீ கூட்டிடவுங் காண்பேனோ? (25)

வாக்கான் மனத்தான் மதிப்பரியாய் நின்னருளை
நோக்காம னோக்கிநிற்கும் நுண்ணறிவு காண்பேனோ? (26)

இவ்வுடம்பு நீங்குமுனே எந்தாய்கேள் நின்னருளாம்
அவ்வுடம்புக் குள்ளே அவதரிக்கக் காண்பேனோ? (27)

சித்தமாய் ஒன்றாய் நிரஞ்சனமாய், நிர்க்குணமாஞ்
சுத்தவெளி நீ! வெளியாய்த் தோன்றிடவுங் காண்பேனோ? (28)

கண்ணிறைந்த மோனக் கருத்தே! என் கண்ணே! என்
உண்ணிறைந்த மாயை யொழிந்திடவுங் காண்பேனோ? (29)

அத்தா! விமலா! அருளாளா! ஆனந்த
சித்தா! எனக்குன்னருள் செய்திடவுங் காண்பேனோ? (30)

வீணே பிறந்திறந்து வேசற்றே னையமறக்
காணா நிறைநின் கருணைபெறக் காண்பேனோ? (31)

சட்டையொத்த இவ்வுடலைத் தள்ளுமுன்னே நான்சகச
நிட்டையைப்பெற் றையா! நிருவிகற்பங் காண்பேனோ? (32)

எல்லாந் தெரியு மிறைவனே நல்லவெல்லாஞ்
சொல்லாமுன் நீதான் தொகுத்திரங்கக் காண்பேனோ? (33)



அண்டபகி ரண்ட மனைத்து மொருபடித்தாக்
கண்டவர்கள், கண்டதிருக் காட்சியையுங் காண்பேனோ? (34)

ஊனிருந்த காய முடனிருப்ப, எந்தைநின்பால்
வானிருந்த தென்னவுநான் வந்திருக்கக் காண்பேனோ? (35)

நினையத் தினையுந் தெளிவரியாப் பாவியேன்
நினைவிற் பரம்பொருளை நேர்பெறவுங் காண்பேனோ? (36)

அன்பமெனுந் நிட்டையிற்றாங் குறையிட வையாவே!
இன்பவெள்ளம் வந்தென் னெதிர்ப்படவுங் காண்பேனோ? (37)

---

## ஆகாதோவென் கண்ணி.

கல்லாத நெஞ்சங் கரைந்துருக வெத்தொழிற்கும்
வல்லாய்நின் இன்பம் வழங்கினு லாகாதோ? (1)

என்னை அறிய எனக்கறிவாய் நின்றருள்நின்
தன்னையறிந் தின்பநலஞ் சாரவைத்தா லாகாதோ? (2)

பொய்ம்மயமே யான புரைநீக்கி யெந்தைஇன்ப
மெய்ம்மயமாய் வந்தென்னை விழுங்கவைத்தா லாகாதோ? (3)

மட்டிலாச் சிற்சுகமாம் வாழ்வே! நின் இன்பமயஞ்
சிட்டர்போல் யானருந்தித் தேக்கவைத்தா லாகாதோ? (4)

அத்தா! நின் பொற்றா ளடிக்கே அனுதினமும்
பித்தாகி இன்பம் பெருகவைத்தா லாகாதோ? (5)

மெல்லியலார் மோக விழற்கிறைப்பேன் ஐயா! நின்
எல்லையிலா னந்தநலம் இச்சித்தா லாகாதோ? (6)

சட்டமுகா வென்னுமுடன் குறையிட்டா னந்தமயக்
கட்டழகா நின்னைக் கலக்கவைத்தா லாகாதோ? (7)

சோதியே! சுத்தச் சுகவடிவே! தூவெளியே!
ஆதியே! நின்னை யறியவைத்தா லாகாதோ? (8)

நேசஞ் சிறிதுமிலேன் நின்மலனே! நின்னடிக்கே
வாசஞ் செயஇரங்கி வாவென்றா லாகாதோ? (9)

என்னறிவுக் குள்ளே இருந்ததுபோல் ஐயாவே ;
நின்னறிவி னின்னுடன்யா னிற்கவைத்தா லாகாதோ? (10)

ஆதிப் பிரானேயென் அல்ல லிருளகலச்
சோதிப்ர காசமயந் தோன்றுவித்தா லாகாதோ? (11)

ஆசைச் சுழற்கடலி லாழாமல், ஐயா! நின்
நேசப் புணைத்தா ணிறுத்தினா லாகாதோ? (12)

பாசநிக ளங்களெல்லாம் பஞ்சாகச் செஞ்செலே
ஈச! நினை வாவேவந் திரக்கினா லாகாதோ? (13)

ஓயாவுள் ளன்பர் உருகிவாய் விட்டரற்றிச்
சேயாகி யெந்தை நின்னைச் சேரவைத்தா லாகாதோ (14)

ஆதியாம் வாழ்வாய் அகண்டிதமாய் நின்றபரஞ்
சோதி! நீ யென்னைத் தொழும்பனென்றா லாகாதோ? (15)

விண்ணூறத் தண்ட விழிபோற் பரஞ்சோதி!
கண்ணூற நின்னிறைவைக் காணவைத்தா லாகாதோ (16)

சேராமற் சேர்ந்துநின்ற சின்மயனே! மெய்மயத்தைப்
பாராமற் பாரெனநீ பகுதப்வைத்தா லாகாதோ? (17)

கண்ணாடி போலவெல்லாங் காட்டுந் திருவருளை
யுண்ணாடி ஐயா! உருகவைத்தா லாகாதோ? (18)

மூலவிருள் கால்வாங்க மூதறிவு தோன்ற, அருட்
கோலம் வெளி யாகவெந்தை கூவித்தா லாகாதோ? (19)

சாற்றரிய இன்பவெள்ளந் தாக்குமதில் நீமுனைக்கில்
ஊற்றமுறு மென்ன, அதி லுண்மைசொன்னா லாகாதோ? (20)

கையுங் குவித்திரண்டு கண்ணருவி பெய்யவருள்
ஐய! நின்தாள் கீழ அடிமைநின்றா லாகாதோ? (21)

## இல்லையோ வென்கண்ணி.

ஏதுந் தெரியா தெனைமறைத்த தொல்லிருளை
நாத! நீ நீக்கவொரு ஞானவிளக் கில்லையோ? (1)

பணியற்று நின்று பதைப்பறநான் கண்ணுள்
மணியொத்த சோதி! இன்ப வாரியெனக் கில்லையோ? (2)

எம்மா லறிவதற வாய்ப்பெருமான்! யாதுமின்றிச்
சும்மா இருக்கவொரு சூத்திரந்தா னில்லையோ? (3)

நாய்க்குங் கடையானேன் நாதா! நின் னின்பவெள்ளம்
வாய்க்கும் படிமேலோர் மந்திரந்தா னில்லையோ? (4)

ஊனாக நிற்கு முணர்வைமறந் தையா! நீ
தானாக நிற்கவொரு தந்திரந்தா னில்லையோ? (5)

அல்லும் பகலும் அகண்டமாய் மேவி உனைநான்
புல்லும் படியெனக்கோர் போதகந்தா னில்லையோ? (6)

## வேண்டாவோ வென்கண்ணி.

கண்டவடி வெல்லாநின் காட்சியென்றே கைகுவித்துப்
பண்டுநின்று நின்றனையான் பார்த்திருக்க வேண்டாவோ? (1)

வாதனையோ டாடி மனப்பாம்பு மாளவொரு
போதனைதந் தையா புலப்படுத்த வேண்டாவோ? (2)

தன்னை யறியத் தனியறிவாய் நின்றருளும்
நின்னை யறிந் தென்னறிவை நீக்கிநிற்க வேண்டாவோ? (3)

அள்ளக் குறையா அகண்டிதா னந்தமெனும்
வெள்ளமெனக் கையா! வெளிப்படுத்த வேண்டாவோ? (4)

அண்டனே! அண்ட அமுதே! என் ஆருயிரே!
தொண்டனேற் கின்பந் தொகுத்திரங்க வேண்டாவோ? (5)

பாராதே நின்று பதையாதே சும்மாநான்
வாரா மௌனமும் வழிகாட்ட வேண்டாவோ? (6)

## நல்லறிவேயென்கண்ணி.

எண்ணிறைந்த மென்மைபலித் தெவ்வுயிர்க்கு மவ்வுயிராய்க்
கண்ணிறைந்த சோதியைநாங் காணவா நல்லறிவே! (1)
சித்தான நாமென் சடத்தைநா மென்னுமென்றுஞ்
சத்தான வுண்மைதனைச் சாரவா நல்லறிவே! (2)
அங்குமிங்கு மெங்குநிறை அற்புதனார் பொற்பதத்துப்
பங்கபத்துள் வண்டாய்ப் பயன்பெறவா நல்லறிவே! (3)
கான்றசோ றென்னவிந்தக் காசினிவாழ் வத்தனையுந்
தோன்ற வருள்வெளியிற் றோன்றவா நல்லறிவே! (4)

---

## பலவகைக் கண்ணி.

என்னரசே! கேட்டிலையோ? என்செயலோ, யாதுமிலை.
தன்னரசு நாடாகித் தத்துவங்கூத் தாடியதே! (1)
பண்டொருகால் நின்பாற் பழக்கமுண்டோ! எந்தைநினைக்
கண்டொருகாற் போற்றக் கருத்துங் கருதியதே! (2)

### வேறு.

கண்டனவே காணுமன்றிக் காணாவோ காணா; என்
கொண்டறிவேன்? எந்தை! நினைக் கூடுங் குறிப்பினையே! (3)
கல்லா லடியில்வளர் கற்பகமே! மெய்யாவோர்?
பொல்லா வினைக்குப் பொருத்தந்தான்; சொல்லாயே! (4)
தப்பிதமொன் றின்றியது தானாக நிற்க, உண்மை
செப்பியது மல்லால் என் செய்வரியது தொட்டனையே! (5)

### வேறு.

மாசான நெஞ்சனிவன் வஞ்சனென்றோ வாய்திறந்து
பேசா மௌனம் பெருமான் படைத்ததுவே! (6)
கற்பதெல்லாங் கற்றறுக்கக் கண்ணுடையாய் [illegible]
நிற்பதுகம் [illegible]



முன்னாளில் நம்ம முயன்றோ விலனென்றோ?
என்னாளில் எந்தாய் இரங்கா திருந்ததுவே! (8)

### வேறு.

நெஞ்சகமே வீடாக் கொண்டாய் என்னுடைய
வஞ்சகமுங் கண்டதுகாய்! வாய்க்குமோ தெய்வமே (9)

### வேறு.

பள்ளங்க டோறும் பரந்த புனல் போலுலகில்
உள்ளம் பரந்தால், உடையாய்! என் செய்வேனே? (10)
முன்னினைவாகப் பின்மறைக்கு மூடவிருள்; ஆ! கெடுவேன்
என்னினைக்க? என்மறக்க? எந்தை பெருமானே! (11)
வல்லாளா! மோனா! நின் வான்கருணை என்னிடத்தே
இல்லாதே போனால் நானெவ்வண்ண முய்வேனே! (12)

### வேறு.

வாக்கு மனமுமா மௌனமுற்ற எந்தை! நின்னை
நோக்கு மௌனமிக்க ஞாலறிவி லுண்டாமோ? (13)
ஒன்றாய்ப் பலவா யுலகமெங்குந் தானேயாய்,
நின்றாய்! ஐயா! எனை நீ நீங்கற் கெளிதாமோ? (14)
ஆவித் துணையே! அருமருந்தே! என்றனை நீ
கூவியழைத் தின்பங் கொடுத்தாற் குறைவாமோ? (15)
எத்தனையோ நின்னினையாட் டெந்தாய்கேள்! இவ்வளவென்
றத்தனையு மென்னாலறியுந் தரமாமோ? (16)
தேடுவார் தேடுஞ் சிவனேயோ! நின்றிருத்தாள்
கூடுவான் பட்டதுயர் கூறற் கெளிதாமோ? (17)

### வேறு.

பற்றினதைப் பற்றுமெந்தாய்! பற்றுவிட்டாற் கேவலத்தில்
உற்றுவிடும் நெஞ்சமுனை யொன்றிநிற்ப தெப்படியோ? (18)
ஒப்பிலா வொன்றே! நின் உண்மையொன்றுங் காட்டாமல்
பொய்ப்புவியை மெய்போற் புதுக்கிவைத்த தென்னையோ? ()

காலால் வழிநடவுங் காலத்தே கண்மூளைத்தார்ப்
பேரலே, எனதறிவிற் போந்தறிவாய் நில்லாயோ? (20)
தன்னரசு நாடாந் தடசால பூமியினை
என்னரசே! என்னை யுடைமையாக நாட்டினையோ? (21)

## வேறு.

திங்களமு தாயின் திருவாக்கை விட்டரசே!
பெரங்கு விடமனைய பொய்ந்நூல் புலம்புவனோ? (22)
உன்னவுன்ன என்னையெடுத் துள்ளிழுக்கு நின்னிறைவை
இன்னமின்னங் காணாம லேக்காய் சுழல்வேனோ? (23)
ஆரா வமுதனைய ஆனந்த வாரியென்பால்
காராமல், ஐயா நீ தள்ளிவிட வந்ததென்னோ? (24)

---

## நின்றநிலை.

நின்றநிலை யெதிலையா வைத்தா னந்த
நிலைதானே நிருவிகற்ப நிலையுமாகி,
என்றுமழி யாதஇன்ப வெள்ளந் தேக்கி
இருக்கவெனைத் தொடர்ந்துதொடர்ந் திழுக்கு மந்தோ?
இருக்காதி மறைமுடிவுஞ் சிவாக மாதி
இதபமுங்கை காட்டெனவே யிதபத் துள்ளே
ஒருக்காலே உணர்ந்தவர்கட் கெக்கா லுந்தான்
ஒழியாத இன்பவெள்ள மூலமா நிற்கும். (2)
கற்றதுங்கேட் டதுந்தானே யேதுக் காகக்
கடாபடமென் றுருட்டுதற்கோ? கல்லா லெம்மான்
குற்றமறக் கைகாட்டுங் கருத்தைக் கண்டு
குணங்குறியற் றின்பநிட்டை கூட வன்றோ? (3)

## பாடுகின்றபனுவல்.

பாடுகின்ற பனுவலோர்கள்
தேடுகின்ற செல்வமே!
நாடுகின்ற ஞானமன்றில்
ஆடுகின்ற அழகனே! (1)
அத்தனென்ற நின்னையே,
பத்திசெய்து பனுவலால்
பித்தனின்று பேசவே
வைத்ததென்ன வாரமே! (2)
சிந்தையன்பு சேரவே,
வந்துநின்னை நாடினேன்;
வந்துவந்துள் இன்புமே
தந்திரங்கு தானுவே! (3)
அண்டரண்டம் யாவுநீ
கொண்டுநின்ற கோலமே
தொண்டர்கண்டு சொரிகணீர்
கண்டுநெஞ்சு கரையுமே! (4)
அன்னைபோல அருள்மிகுந்த
மன்னுஞான நாதனே!
என்னையே யெனக்களித்த
நின்னையானு நினைவனே! (5)

---

## ஆனந்தக்களிப்பு.

சங்கர சங்கர சம்பு - சிவ
சங்கர சங்கர சங்கர சம்பு.

ஆதி அநாதியுமாகி - எனக், கானந்தமாயறி வாய்நின்
றிலங்கும், சோதிமௌனியாய்த் தோன்றி - அவன், சொல்லாத
வார்த்தையைச் சொன்னாண்டி தோழி!—சங்கர சங்கர சம்பு.

சொன்னசொல் லேதென்றுசொல்வேன்! - என்னைச்,
சூதாய்த்தனிக்கவே சும்மாவிருத்தி, முன்னிலை சுட்டயில்
லாதே - சுக, முற்றச்செய்தேயெனைப் பற்றிக்கொண்டாண்டி!—
சங்கர சங்கர சம்பு. (2)

பற்றிய பற்றறவுள்ளே - தன்னைப், பற்றச்சொன்னான்
பற்றிப் பார்த்தவிடத்தே, பெற்றதை யேதென்றுசொல்வேன் -
சற்றும், பேசாதகாரியம் பேசினான்றோழி!—சங்கர சங்கர
சம்பு. (3)

பேசாவிடும்பைகள் பேசிச் - சுத்தப், பேயங்கமாகிப் பிதற்
றித்திரிந்தேன், ஆசா பிசாசைத்துரத்தி - ஐய, னடியிணைக்
கீழே யடக்கிக்கொண்டாண்டி!—சங்கர சங்கர சம்பு. (4)

அடக்கிப் புலனைப்பிரித்தே - அவ, னாகியமேனியில்
அன்பை வளர்த்தேன், மடக்கிக்கொண்டானென்னைத் தன்னாட்
சற்றும், வாய்பேசாவண்ண மாயஞ்செய்தாண்டி!—சங்கர சங்
கர சம்பு. (5)

மரபைக்கெடுத்தனன் கெட்டேன் - இத்தை, வாய்விட்டுச்
சொல்லிடின் வாழ்வெனக்கில்லை, கரவுபுருஷனு மல்லன் - என்
னைக், காக்குந்தலைமைக் கடவுள்காண்மின்னே!—சங்கர சங்கர
சம்பு. (6)

கடலின் மடையுடைந்ததென்ன - இரு, கண்களுமானந்தக்
கண்ணீர்சொரிய, உடலும் புளகிதமாக - என, துள்ளமுருக
வுபாயஞ்செய்தாண்டி!—சங்கர சங்கர சம்பு. (7)

உள்ளது மில்லதுமாகி - முன், உணர் வதுவாயுன் னுளங்
கண்டதெல்லாம், தள்ளெனச் சொல்லியென்னையன் - என்னைத்,
தானாக்கிக்கொண்ட சமர்த்தைப்பார்தோழி!—சங்கர சங்கர
சம்பு. (8)

பாராதி பூதமேயல்லை - உன்னிப், பாரிந்திரியங் கரணமே
யல்லை, யாரா யுணர்வுநீயென்றான் - ஐயன், அன்பாயுரைத்த
சொல்லானந்தந்தோழி!—சங்கர சங்கர சம்பு. (9)

அன்பருக் கன்பானமெய்யன் - ஐயன் ஆனந்தமோன
அருட்குருநாதன், தன்பாதஞ் சென்னியில்வைத்தான் - என்
னைத், தானறிந்தேன்மனந் தானிறந்தேனே!—சங்கர சங்கர
சம்பு. (10)



இறப்பும் பிறப்பும்பொருந்த - எனக், கெவ்வணம் வந்த
தென்றெண்ணியான்பார்க்கில், மறப்பு நினைப்புமாய் நின்ற -
வஞ்ச, மாயாமனத்தால் வளர்ந்ததுதோழி!—சங்கர சங்கர
சம்பு. (11)

மனதேகல் லாலெனக்கன்றோ - தெய்வ, மௌனகுரு
வாகி வந்துகைகாட்டி, எனதாம் பணியறமாற்றி - அவ, னின்
னருள் வெள்ளத் திருத்திவைத்தாண்டி!—சங்கர சங்கர சம்பு.

அருளால் எவையும்பாரென்றான் - அத்தை, அறியாதே
சுட்டியென் னறிவாலேபார்த்தேன், இருளான பொருள்கண்ட
தல்லால் - கண்ட, என்னையுங்கண்டில னென்னேடிதோழி!—
சங்கர சங்கர சம்பு. (13)

என்னையுந் தன்னையும்வேறா - உள்ளாத், தென்னாதவண்ண
மிரண்டறநிற்கச், சொன்னது மோவொருசொல்லே - அந்த,
சொல்லால்விளைந்த சுகத்தையென் சொல்வேன்!—சங்கர சங்
கர சம்பு. (14)

விளையுஞ் சிவானந்தபூமி - அந்த, வெட்டவெளி நண்ணித்
துட்டவிருளாங், கலையைக்களைந்துபின் பார்த்தேன் - ஐயன்,
கலையன்றி வேறொன்றுங் கண்டிலன்தோழி!—சங்கர சங்கர
சம்பு. (15)

கண்டார் நகைப்புயிர்வாழ்க்கை - இரு, கண்காணநீங்கவுங்
கண்டோந்துயிறன், கொண்டார்போற் போனாலும்போகும் -
இதிற், குணமேது நலமேது கூறாய்நீதோழி!—சங்கர சங்கர
சம்பு. (16)

நலமேது மறியாதவென்னைச் - சுத்த, நாதாந்தமோனமா
நாட்டானந்தசஞ், சலமேது மில்லாமலெல்லாம் - வல்லான்,
தாளாலென்றலைமீது தாக்கினான்தோழி!—சங்கர சங்கர சம்பு.

தாக்கல் ஆனந்தசோதி - அது, தன்னிற்சிறிய வெனைத்
தன்னருளாற், போக்கு வரவற்றிருக்கும் - சுத்த, பூரணமாக்கி
னான் புதுமைகாண்மின்னே!—சங்கர சங்கர சம்பு. (18)

ஆக்கியளித்துத் துடைக்குந் - தோழி, யத்தனைவைத்து யெள் ளத்தனையேனுந், தாக்கறநிற்குஞ் சமர்த்தன் - உள்ள, சாக்ஷியைச்சிந்திக்கத் தக்கதுதோழி !—சங்கர சங்கர சம்பு.

சிந்தைபிறந்ததுமாங்கே - அந்தச், சிந்தையிறந்து தெளிந் ததுமாங்கே, எந்தநிலைகளு மாங்கே - கண்ட, யான்றானிரண் டற் றிருந்ததுமாங்கே !—சங்கர சங்கர சம்பு. (20)

ஆங்கென்றுமீங்கென்றுமுண்டோ - சச்சி, தானந்தசோதி யகண்டவடிவாய், ஓங்கிநிறைந்தது கண்டாற் - பின்னை, யொன் றென்றிரண்டென் றுரைத்திடலாமோ !—சங்கர சங்கர சம்பு.

என்றுமழியுமிக் காயம் - இத்தை, யென்றைக்குமெய்யென் றிருந்தீர் குலவீர், ஒன்றுமறியாத நீரோ - யம, னோலைவந் தால் சொல்ல உத்தரமுண்டோ !—சங்கர சங்கர சம்பு. (22)

உண்டோ நமைப்போலவஞ்சர் - மல, முறிந்ததும்பு முட லைமெய்யென்று, கொண்டோ பிழைப்பதிங்குயிர் - அருட், கோலத்தைமெய்யென்று கொள்ளவேண்டாவோ !—சங்கர சங் கர சம்பு. (23)

வேண்டா விருப்பும் வெறுப்பும் - அந்த, வில்லங்கத்தா லே விளையுஞ்சனனம், ஆண்டானுரைத்த படியே - சற்று, மசையா திருந்துகொள் ளறிவிலிநெஞ்சே !—சங்கர சங்கர சம்பு. (24)

அறிவாரு மில்லையோ ? ஐயோ ! - என்னை, யாரென்றறி யாதவங்கதேசத்தில், வறிதேகாமத்தீயிற் சிக்கி - உள்ள, வான் பொருடோற்கவோ வந்தேனன்றோழி !—சங்கர சங்கர சம்பு.()

வந்தவாறை மறந்து - மிக்க, மாதர்பொன்பூமி மயக்கத்தி லாழும், இந்தமயக்கை யறுக்க - எனக், கெந்தைமெய்ஞ்ஞான வெழில்வாள்கொடுத்தான் !—சங்கர சங்கர சம்பு. (26)

வாளாருங் கண்ணியர்மோகம் - யம, வாதைக்கணிலைவார்க் குமெய்யென்றோ, வேளா ளவனுமெய்விட்டான் - என்னின், மிக்கோர் துறக்கை விதியன்றோ தோழி !—சங்க ...



விதிக்கும் பிரபஞ்சமெல்லாஞ் - சுத்த, வெயின்மஞ்ச ளென்னவே வேதாகமங்கள், மதிக்கு மதனைமதியார் - அவர்க், மார்க்கந்துன்மார்க்கஞ் சன்மார்க்கமோமானே !—சங்கர சங் கர சம்பு (28)

துன்மார்க்க மாதர்மயக்கம் - மனத், தூயர்க்குப் பற்றாது சொன்னேன்சனகன், தன்மார்க்க நீதிதிட்டாந்தம் - அவன், றானந்தமான சதானந்தனன்றோ !—சங்கர சங்கர சம்பு. (29)

அஃதென்றும் ஆமென்றுமுண்டோ ?—எனக், கானந்தம் வேண்டி யறிவாகிச்சற்றே, நின்றாற்றெரியுமெனவே - மறை, நீதியெய்மாதி நிகழ்த்தினன்றோழி !—சங்கர சங்கர சம்பு. ()

---

## அகவல்

திருவருள் ஞானஞ் சிறந்தருள் கொழிக்குங்
குருவடி வான குறைவிலா நிறைவே !
நின்ற வொன்றே ! நின்மல வடிவே !
குன்றாப் பொருளே ! குணப்பெருங் கடலே !
ஆதியு மந்தமு மானந்த மயமாஞ்
சோதியே ! சத்தே ! தொலைவிலா முதலே !
சீர்மலி தெய்வத் திருவரு ளதனாற்
பார்முத லண்டப் பரப்பெலாந் தருவி
அண்டச முதலா மெண்டரு நால்வகை
எழு பிறவியி லெழுவா றாங்கு
மனந்த யோனியி னினம்பெற மல்க
அனுமுத லசல மான வாக்கையுங்
கணமுத லாவிற் கற்ப காலமுங்
கன்மப் பகுதித் தொன்மைக் கீடா
வினைப்பொழு தேனு நடங்கென வறிவிலா
தழை யுயிர்த்திரள் வாழ வமைத்தனை
எவ்வுட லெடுத்தா லவ்வுடல் வாழ்க்கை

இன்ப மெனவே துன்ப மிலையெனப்
பிரியா வண்ண முரிமையின் வளர்க்க
ஆதா வாகக் காதலு மளித்திட்
டேக மின்றிப்பே தேக னானென
அறிவு போலறி யாமை யியக்கிக்
காலமுங் கன்மமுங் கட்டுங் காட்டியே
மேலு நரகமு மேதகு சுவர்க்கமும்
மாலற வகுத்தனை யேனும் வண்ண
மமையாக் காதலிற் சமய கோடி
அறம்பொரு ளாதி திறம்படு நிலையிற்
குருவா யுணர்த்தி யொருவர்போ லனைவருந்
தத்த நிலையே முத்தி முடிவென
வாத தர்க்கமும் போத நூல்களும்
நிறைவிற் காட்டியே குறைவின்றி வயங்க
அங்கங்கு நின்றனை யெங்கு மாகிச்
சமயா தீதத் தன்மை யாகி
இமையோர் முதலிய யாவரு முனிவருந்
தம்மைக் கொடுத்திட் டெம்மை யாளென
வேசற் றிருக்க மாசற்ற ஞான
நலமுங் காட்டினை ஞானமி லேற்கு
நிலையுங் காட்டுத னின்னருட் கடனே.

---

## வண்ணம்.

அருவென் பனவுமன்றி உருவென் பனவுமன்றி,
அகமும் புறமுமன்றி, முறைபிற மாது
குறியுங் குணமுமன்றி, நிறைவுங் குறைவுமன்றி,
மறையொன் றெனவிளம்ப விமலம தாகி,
அசலம் பெறவுயர்ந்து, விபுலம் பெறவளர்ந்து,
சபலஞ் சபலமென்று மறிவினர் காண,
ஞானவெளியிடைமேவுமுயிராய்—



அனலொன் றிடவெரிந்து புகைமண் டிடுவதன்று,
புனலொன் றிடவமிழ்ந்து முடிவில தாதை
சருவும் பொழுதயர்ந்து, சலனம் படுவதன்று,
சமர்கொண் டழிவதன்றெ ரியல்பின தாகும்
அவனென் பதுவுமன்றி, அவளென் பதுவுமன்றி,
அதுவென் பதுவுமன்றி, எழில்கொ டுலாவும்
அருநிலையறி யாத படியே— (௮)

இருளென் பதுவுமன்றி, ஒளியென் பதுவுமன்றி,
எவையுந் தனுளடங்க வொருமுத லாகும்
உளதென் பதுவுமன்றி, இலதென் பதுவுமன்றி,
உலகந் தொழவிருந்த அயன்முத லோர்கள்
எவருங் கலைகொண்டு, சமயங் களில்விழுந்து
சுழலும் பொழுதிரங்கி அருள்செயு மாறு
கூறரியசக மாயையறவே—

எதென் பதைவிகழ்ந்த அறிவின் றிரளினின்று
மறிவொன் றெனவிளங்கு முபயம தாக
அறியுந் தரமுமன்று, பிறியுந் தரமுமன்று,
அசரஞ் சரமிரண்டு மொருபடி யாகி,
சதுசந் ததநிறைந்த தெருவின் தனைமறந்த
தெதுமங் காசுபங்கொள் சுகவடி வாகும்
யாதுபரமதைநாடி யறிநீ— (௯)

பருவங் குலவுகின்ற மடமங் கையர்தொடங்கு
கபடந் தனில்விழுந்து கெடுநினை வாகி,
வலையின் புடைமறிந்த மறியென் றவசமுண்டு
வசனந் திரமுமின்றி, அவரித ழூறல்
பகருந் தொழிலிணங்கி, இரவும் பகலுமின்சொல்
பகரும் படிதுணிந்து குழலழ காக
மாலைவகைபல சூடிடுடனே—

பதுமத் தனியிசைந்த முலையென் றதைபுகந்து
வரிவண் டெனவுழன்று கலிலென வாடுஞ்
சிறகின் னொலிசிலம்பு புனைதண் டை கண்முழங்கும்
ஒலிநன் றெனமகிழ்ந்து, செவிகொளா நாதி
பசுமஞ் சளின்வியந்த மணமுந் திடமுகந்து,
பவமிஞ் சிடவிறைஞ்சி, வரிசையி னோடு
காலின்மிசைமுடி சூடிமயலாய்— (௨

மருளுந் தெருளுரும்லந்து கதியென் பதைமறந்து,
மதனன் சலதிபொங்க விரணம தான
அளிபுண் டலைவலைந்து, விரல்கொண் டுறவளிந்து,
சூதஞ் சுகமிதென்று பரவச மாகி
மருவுந் தொழின்மிகுந்து, தினமுந் தினமும்விஞ்சி
வளரும் பிறைகுறைந்த படிமதி சோர
வார்ந்ரமதென மேனிதிரையாய்—

வயதும் பட்டெழுந்து, பிணியுந் திமிதிமென்று
வரலுஞ் செயலழிந்து விருமலு மாகி,
அனமுஞ் செலுதலின்றி, விழியுஞ் சுடர்களின்று,
முகமுங் களைகளின்று, சரியென நாடி.
மனையின் புறவிருந்த வின்முங் குலைகுலைந்து,
கலக்குஞ் செயலிருண்ட யமன்வரும் வேளை
யதுதுணைபழி காரமனமே. (௧)

ஆ பாடல் 1452.

தாயுமான்சுவாமிகள் பாடல்.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

# தொகுசகம்.

(இது பின்னர்க் கிடைத்த பிரதி யொன்றிற் காணப்படுகின்றது.)

தத்துவம்வே றென்னைவே றாக்கியரு டந்ததிலே
உற்றுணர்வும் வேண்டாவெள் ளோரிரண்டு மூன்றினையும்
நித்தியமென் றேகாட்டி நில்லாம லில்லெனவே
தத்துவத்தோ டத்துவிதந் தந்தாயு மானவனே. (௧)

நந்தமதென் றெண்ணி நலிக்கவுடல் வேறாக்கி
வந்தபொரு ளுன்னதல்ல வென்றெனது வல்லமைபு
முந்தளக்கன் றெல்லா நமதென்றே யுட்புகுந்த
தந்தையுநீ மற்றுமரு ளாந்தாயு மானவனே ! (௨)

பந்தாடு மாபோற் பதிந்தகருப் பட்டேற்குச்
சிந்தா மணியாய்ச் செகந்தனிலே தீவகம்போல்
வந்தான் மறைசைநகர் மற்றுமோர் மெய்கண்ட
சந்தானத் தானத் தவத்தாயு மானவனே! (௩)

பின்னைத்தா னொன்றினையுங் காட்டாத பேரிருளின்
உன்னைத்தான் கண்ணிலர்போ லொன்றாகித் தானழன்ற
